தேவாரம் உணர்த்தும் வழிபாடு



முனைவர் கோ.ப. நல்லசிவம்

உ

திருச்சிற்றம்பலம்

தேவாரம் உணர்த்தும் வழிபாடு

முனைவர் கோ.ப. நல்லசிவம்


வெளியீடு
பேராசிரியர் த.கோ. பரமசிவனார் நினைவு அறக்கட்டளை
926, மணிகர்ணீசர் கோயில் தெரு
கீழராச வீதி, தஞ்சாவூர் - 613 001

2008

நூல் விவர அட்டவணை

நூலின்பெயர்	:	தேவாரம் உணர்த்தும் வழிபாடு **Devaram Unarttum Vazhipadu**
நூலாசிரியர்	:	முனைவர் கோ.ப. நல்லசிவம் **Dr.G.P. Nallasivam**
மொழி	:	தமிழ் - Tamil
பொருள்	:	சமயம் - Religion
வெளியீடு	:	பேராசிரியர் த.கோ. பரமசிவனார் நினைவு அறக்கட்டளை, 926, மணிகர்ணீசர் கோயில் தெரு, கீழராச வீதி, தஞ்சாவூர் - 1.
கைபேசி	:	94435-64626
பதிப்பு	:	முதற் பதிப்பு
ஆண்டு	:	திருவள்ளுவராண்டு 2039 (மே, 2008)
தாள்	:	என்.எஸ். மேப்லித்தோ
நூல் அளவு	:	1X8 டெம்மி
பக்கங்கள்	:	XXI+240
படிகள்	:	1000
எழுத்து அளவு	:	12 புள்ளி
விலை	:	ரூ.150/-
கணினியாக்கம்	:	பாமொழி கணிப்பொறியகம், 11, பாரதி நகர், தமிழ்ப் பல்கலைக்கழக அஞ்சல், தஞ்சாவூர்-613 010.
அச்சாக்கம்	:	சபா நாயகம் பிரிண்டர்ஸ் 176, கீழரத வீதி, சிதம்பரம் - 1. தொ.பே. 223040, 223020

காணிக்கை



பேராசிரியர் த.கோ. பரமசிவனார்
திருவடி மலர்களுக்கு...

உள்ளுறை

அணிந்துரை

வாழ்த்துரை

மதிப்புரை

கருத்துரை

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

என்னுரை

1.	திருமுறைகளில் தேவாரம்	1
2.	தேவாரம் சுட்டும் திருக்கோயில்கள்	20
3.	தேவாரத்தில் வழிபாடு	51
4.	காலச்சூழலும் அறிவுறுத்தலும்	120
5.	வழிபாடும் கலைகளும்	146
6.	வழிபாடும் சமூகமும்	179
7.	வழிபாடும் யாத்திரையும்	199
	பயன்பட்ட நூல்கள்	211
	பின்னிணைப்புகள்	
	1. தேவாரத் தலங்கள்	222
	2. தேவார வைப்புத் தலங்கள்	232
	சொல்லடைவு	237

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	-	அகநானூறு
ஆ.இ.	-	ஆண்டு இல்லை
உ.ஆ.	-	உரையாசிரியர்
எழுத்து.	-	எழுத்ததிகாரம்
ஏ.கலி.நா.பு.	-	ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்
கண.பு.	-	கணநாத நாயனார் புராணம்
கு.ஆ.	-	குறிப்புரை ஆசிரியர்
சம்.	-	சம்பந்தர்
சிலம்பு.	-	சிலப்பதிகாரம்
சுந்.	-	சுந்தரர்
சொல்.	-	சொல்லதிகாரம்
தி.ஞா.பு.	-	திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்
தி.நா.பு.	-	திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்
தொல்.	-	தொல்காப்பியம்
நற்.	-	நற்றிணை
நா.தி.பி.	-	நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
நாவு.	-	நாவுக்கரசர்
நூ.	-	நூற்பா
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
ப.ஆ.	-	பதிப்பாசிரியர்
பதி.	-	பதிப்பு
பரி.	-	பரிபாடல்
ப.வி.இ.	-	பதிப்பு விளக்கம் இல்லை
பா.	-	பாடல்
பா.அ.	-	பாடலடி
புறம்.	-	புறநானூறு
மணி.	-	மணிமேகலை
ed.	-	*Editor*
p.	-	*Page*
pp.	-	*Pages*

முனைவர் சி. சுப்பிரமணியம்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
தமிழ்நாடு - இந்தியா.

அணிந்துரை

சங்கத் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழர் வழிபாட்டு மரபுகளையும் மீட்டுருவாக்கம் செய்த பெருமை பக்தி இலக்கியங்களாம் திருமுறைகளுக்கு உண்டு. அதிலும் குறிப்பாக மூவர் பாடிய தேவாரம் சிறந்த இடத்தைப் பெறுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் எனும் சமயக்குரவர் மூவரும் தமிழ் வழிபாட்டையும், தமிழர் வாழ்வியல் நெறிகளையும் விதந்தோதி வலியுறுத்தினர். 'பக்தி இயக்கம்' என்றே அவர்கள் வாழ்ந்த காலம் வரலாற்றில் குறிக்கப்பெறுகிறது.

நம் தாய்மொழியாம் தமிழுக்குத் தேவாரம் தரும் அடைமொழிகளைப் போல வேறு எந்த இலக்கியத்திலும் பார்க்க முடியாது. சான்றாக, சந்தமலிதமிழ், ஒண்தமிழ், செந்தமிழ், தீந்தமிழ், திருநெறிய தமிழ், வண்டமிழ், தண்டமிழ், இன்தமிழ், நற்றமிழ், அருந்தமிழ், சீர்மிகுத்த தமிழ், இசைத்தமிழ் என வருவனவற்றைச் சுட்டலாம். இறைவனையே தமிழாகக் கண்டு போற்றிய தன்மை தேவாரத்தில்தான் முதன்முதலாகப் பார்க்க முடிகிறது.

இறைவன் தமிழாக இருப்பதோடு மட்டுமல்லாமல் தமிழ் பாடுவோர்க்கு இம்மை, மறுமை எனப்படும் இரண்டிலும் இன்பத்தை அருளுபவனாகவும் இருப்பதைத் தேவார மூவர் பதிவு செய்துள்ளனர்.

அருட்செல்வத்தை மட்டுமல்லாமல் பொருட் செல்வத்தையும் தமிழ் மொழியால் இறைவனிடமிருந்து பெற்றுத் தரமுடியும் என்பதற்குத் தேவாரப் பாடல்கள் சான்று பகர்கின்றன. அதனால்தான் திருஞானசம்பந்தர் 'விலையுடை அருந்தமிழ்' எனத் தமிழை விளித்துள்ளார்.

இத்தகைய பெருமைமிகு தேவாரத்தில் **தேவாரம் உணர்த்தும் வழிபாடு** எனும் தலைப்பில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தொன்மைச் சமயமான சைவ சமயத்தில் தேவார காலத்தில் வழிபாடுகள் எவ்வாறு நிகழ்ந்துள்ளன? யாரால் நிகழ்த்தப்பட்டன? எப்படி நிகழ்த்தப்பட்டன? என்ற வினாக்களுக்கு விடையாக, விளக்கமாக, ஐயம்திரிபற இந்நூல் ஆசிரியரால் தேவாரச் சான்றுகள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூல் திருமுறைகளில் தேவாரம், தேவாரம் சுட்டும் திருக்கோயில்கள், தேவாரத்தில் வழிபாடு, காலச்சூழலும் அறிவுறுத்தலும், வழிபாடும் கலைகளும், வழிபாடும் சமூகமும், வழிபாட்டில் யாத்திரை எனும் ஏழு இயல்களைக் கொண்டுள்ளது. இதில் தேவாரத்தில் வழிபாடு, காலச் சூழலும் அறிவுறுத்தலும், வழிபாடும் சமூகமும் எனும் மூன்று இயல்கள் குறிப்பிடத்தக்கவை. காரணம், நூலின் மையப் பொருளை, நூற்றுக்கும் மேற்பட்ட சான்றாதாரங்களைக் கொண்டு நிறுவும் தகைமை பெற்று இவை விளங்குகின்றன.

நூலாசிரியர் முனைவர் கோ.ப. நல்லசிவம் அவர்கள் அரிதின் முயன்று, பன்னாள் இரவு பகல் பாராது உழைத்து உருவாக்கியுள்ள அரும்படைப்பு இந்நூல். திருக்கோயில்களில் 'தமிழால் வழிபடத்தடை' என்று இருந்த காலச் சூழலில் தொடங்கப்பட்ட இவ் ஆய்வு நூல், தேவார காலத்தில் தமிழாலேயே வழிபாடுகள் நிகழ்ந்துள்ளன என்பதை நிறுவி நிறைவு செய்யப் பட்டுள்ளது. மேலும் இந்நூலின் வழி, தேவார காலத்தில்

திருக்கோயில் கருவறைக்குள் அனைவரும் சென்று இறைத் திருமேனியைத் தாமாகவே எந்த விதமான இடையீடுமின்றி வழிபட்டுள்ளனர் என்பதையும் உணரமுடிகிறது.

தமிழ் வழிபாட்டிற்கும், அனைவரும் அர்ச்சகராகலாம் எனும் கொள்கைக்கும் இந்நூல் வரலாற்றுச் சான்றுகளின் வழி வலுசேர்த்துள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழ் வழிபாடு செய்வோர், தமிழ் ஆதரவாளர்கள், மொழிப்பற்றுடையோர் ஒவ்வொருவர் கைகளிலும், இல்லங்களிலும் இருக்க வேண்டிய சிறந்த நூல் இது.

முனைவர் கோ.ப. நல்லசிவம் பாராட்டிற்குரியவர். இதுபோன்ற பல ஆய்வு நூல்களை அவர் தொடர்ந்து உருவாக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

தஞ்சாவூர்
22.4.2008

22.4.2008.

(சி. சுப்பிரமணியம்)

முனைவர் க. பாஸ்கரன்
பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
தமிழ்நாடு - இந்தியா

வாழ்த்துரை

செம்மொழியாம் தமிழ் மொழியே திருக்கோயில்களில் வழிபாட்டு மொழியாக அமைந்திட வேண்டும் என்று போராட வேண்டிய இன்றைய காலச் சூழலில் முனைவர் கோ.ப. நல்லசிவம் என்னும் நல்ல தமிழ்மகன் எழுதிய தேவாரம் உணர்த்தும் வழிபாடு என்னும் இந்நூல் வெளிவருதல் பாராட்டுதற்குரியது; மகிழ்ச்சிக்குரியது. சமயம் என்பது பக்குவப்பட்ட வாழ்வினை வாழ வழிகாட்டும் நெறிமுறைமை. அந்நெறியினை அகவாழ்விலும் புறவாழ்விலும் போற்றி ஒழுகப்படவேண்டியது அனைவரின் கடமையாகும். அந்நிலையில், அகவாழ்வு, புறவாழ்வு என்ற இரு நிலைகளிலும் நம்மை - நம் ஆன்மாவை இசைவாய் பெரும் உண்மைப் பொருளாம் இறையுடன் ஒன்ற வைக்கும் ஆலயத்தில் 'வழிபாடு' என்னும் நெறியே அமைகிறது. இவ்வழிபாடு இல்ல வழிபாடு, ஆலய வழிபாடு, கூட்டு வழிபாடு என மூவகைப்படும் என்பர். இதில் இல்ல வழிபாடு என்பது அகவாழ்விலும், கூட்டு வழிபாடு என்பது புறவாழ்விலும் மையமாக அமைகின்ற நிலையில் ஆலய வழிபாடே அகவாழ்வு, புறவாழ்வு என்ற இரண்டிற்கும் அடிப்படையாய் அமைந்திருக்கின்றது. இந்நிலையில் ஆலய வழிபாடு சமுதாயத்தில் ஒரு முக்கிய செயற்பாடாகவே அமையும். அதனால்தான் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றனர் ஆன்றோர்.

வழிபாடு என்பது அடிப்படையில் ஒரு வகை விருப்பத்தின் வெளிப்பாடே என்பர். "வழிபாட்டில் மனத்தின் இனிய

ஒத்துழைப்பு இல்லாமல் உதடுகள் வெற்றி பெற முடியாது" என்று ஹெர்ரிக் என்பார் கூறுவார். அதுபோன்றே பிரான்ஸிஸ் ரௌஸ் என்பார், "வழிபாடு இறைவனிடம் அனுப்பப்பெறும் இனிய தூதர்" தெளிவுறுத்துவார். வழிபாடு என்பது மனத்துடன் தொடர்புடையது என்று நம் சைவத் திருமுறைகளும் வலியுறுத்தும். "நினைக்கும் நெஞ்சினுள்ளார்", "சிந்திப்பார் சிந்தையுள்ளார்", "அடியார் தம் மனத்திலுள்ளார்", "கொண்டாடும் அடியவர் தம் மனத்தான் கண்டாய்" என்றெல்லாம் அப்பர் பெருமான் கூறியுள்ளவையே சிறு சான்றாகும். இப்படிப்பட்ட மனத்தோடு தொடர்புடையது வழிபாடு என்னும் நிலையில் அதற்குச் சற்றும் குறையாத வகையில் தொடர்புடையது மொழியாகும். மொழி என்பது எண்ணங்களின் வெளிப்பாடு என்பது மட்டுமல்ல; இறை என்னும் உயரிய உண்மைப் பொருளுடன் தொடர்பினை ஏற்படுத்தும் வழிமுறையாகும். மொழி எனின் அது தாய்மொழிதான். எனவே தமிழ் நாட்டில் திருக்கோயில் வழிபாடு என்பது தாய்மொழியாம் தமிழ்மொழியில்தான் இருத்தல் வேண்டும் என்பது இன்றைய தமிழ்ச் சான்றோர்கள், ஆர்வலர்களின் பெருவிருப்பம். எல்லாம் வல்ல இறைவனின் நல் விருப்பமும் அதுவே. இதனைத் திருமுறைப் பாடல்கள் எடுத்தியம்பியும் ஒருசிலர் அதற்குத் தடையாக இருக்கின்ற வேதனையான சூழலில்தான் முனைவர் கோ.ப. நல்லசிவம் உண்மைக் கருத்துக்களை வலியுறுத்தும் இந்நூல், தாய்மொழிக்கு முரண்பட்ட கருத்துக்களைக் கூறிவருவோருக்குச் சிறந்த விடையாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதற்காக முனைவர் கோ.ப. நல்லசிவத்தினைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

வாழ்க அவர்தம் தமிழ்ப்பணி! சைவத்திருப்பணி!!

அன்புடன் வாழ்த்தும்,

(ஒப்பம்) 22/4/08

தஞ்சாவூர்
22.4.2008

(க. பாஸ்கரன்)

பேராசிரியர் டாக்டர் சோ. ந. கந்தசாமி
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி., டிப்.மொழியியல்,
டிப்.வடமொழி, பிரவீன் (இந்தி)
61, ஐந்தாம் தெரு, நடராசபுரம் (தெற்கு)
தஞ்சாவூர் - 613 007.

மதிப்புரை

தேனினும் இனிய தீந்தமிழில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய அருளாளர் மூவரும் அருளிச் செய்த பண் சுமந்த பாடல்களின் தொகுதியை 'மூவர் தமிழ்' என்று அவ்வைப்பிராட்டி பாராட்டினார். மூவரின் பதிகங்களில் ஈடுபாடுமிக்க தாயுமானவர், 'மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர் சொலும் தமிழ்' எனப் போற்றினார். தேவாரம் என்ற திருப்பெயர் அப்பரின் பதிகங்களை முதலில் சுட்டியது. சம்பந்தரின் பதிகங்களைத் திருக்கடைக்காப்பு என்றும், சுந்தரரின் பதிகங்களைத் திருப்பாட்டு என்றும் வழங்கி வந்தனர். ஆயினும் காலப் போக்கில் மூவரின் திருப்பதிகங்களையும் தேவாரம் என்னும் திருப்பெயரால் வழங்கும் மரபு நிலைபெற்றது.

பல்லவர் காலத் தமிழகத்தில் புறச்சமயங்களாகிய சமணமும், சாக்கியமும் தமிழகமெங்கும் பரவத் தலைப்பட்டன. இவ்விரு நெறிகளும் தமிழ் இலக்கிய ஆக்கத்திற்குப் பணிபுரிந்தன என்பது உண்மையே. எனினும் தமிழ் மக்களின் வாழ்வியல், பண்பாடு, நம்பிக்கை உள்ளிட்ட பல கூறுகள் பாதிப்புற்றன. இந்நிலையில் தமிழர் நெறியைக் காக்கவும், தமிழர் பண்பாட்டை பேணவும், வாழ்க்கையில் நம்பிக்கையூட்டவும் பக்தியியக்கம் தோன்றியது. பக்தி இயக்கத்தின் தளபதிகளாக சம்பந்தரும் அப்பரும் திகழ்ந்தனர். இவ்விருவரையும் வழிகாட்டிகளாகக் கொண்டு சுந்தரர் பதிகப் பெருவழியைப் பேணி வளர்த்தார். இம்மூவரும் தமிழலக்கிய

வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. புதிய புதிய யாப்பு வடிவங்கள், இலக்கிய வகைகள், அணி வகைகள் இவர்களால் அறிமுகமாயின. இவர்தம் அருளிச் செயல்கள் ஓதுவார் உள்ளத்தை உருக்க வல்லன; நன்னெறி உய்ப்பன; நம்பிக்கை தருவன; இறைவனையும் ஏவல் கொண்டன; பல அற்புதங்களை ஆற்றிய சிறப்பும் இவர்தம் திருப்பதிகங்களுக்கு உண்டு.

கி.பி.7,8ஆம் நூற்றாண்டுகளில் தமிழக மக்கள் மேற்கொண்ட வாழ்வியல், வழிபாடு, நம்பிக்கைகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்குத் தேவாரத் திருப்பதிகங்கள் சிறந்த ஆவணங்களாக அமைந்துள்ளன. தேவாரத் திருமுறை குறித்துப் பல்வேறு நூல்கள் எழுதப்பெற்றிருப்பினும், தேவாரம் உணர்த்தும் வழிபாடு என்னும் பொருண்மையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இளம் பேராசிரியர் முனைவர் கோ.ப. நல்லசிவம் வரைந்துள்ள இந்நூல் பல வகையாலும் சிறப்புப் பொருந்தியது.

இத்தலைப்பினைத் தேர்ந்துகொண்ட இந்நூலாசிரியர் ஆய்வுக்குத் தேவையான அடிப்படை ஆதார நூல்களையும், துணைமை ஆதார நூல்களையும் நுணுகி நோக்கித் தரவுகளைத் தொகுத்தும் வகுத்தும் இந்நூலினை உருவாக்கியிருத்தல் குறிப்பிடத்தக்கது. ஏழு இயல்களில் இந்நூல் அமைந்துள்ளது. முதல் இயலில் தேவாரம் குறித்த அறிமுகச் செய்திகள் தக்க மேற்கோள்களுடன் விளக்கப்பெற்றுள்ளன. பன்னிரு திருமுறைகளில் தேவாரம் பெற்றுள்ள சிறப்பிடம், தேவாரம் என்ற சொற்பொருண்மை, தேவாரப் பண்கள், அவற்றுக்குரிய இராகங்கள், பண்முறை, தலமுறைப் பதிப்புகள், தேவாரத் திரட்டுகள் பற்றிய செய்திகள் சுருக்க விளக்கமாகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் இயல் தேவாரத் திருப்பதிகங்கள் சுட்டும் திருக்கோயில்கள் பற்றிய ஆய்வாக விளங்குகிறது. இப்பகுதியில் வரலாற்று நோக்கில் திருக்கோயில்களின் வளர்ச்சி நிலையும்,

பல்லவ வேந்தர்கள், பாண்டிய வேந்தர்கள் ஆகியோர் ஆற்றிய கோயிற்பணிகள் சுட்டப்பெறுகின்றன. அப்பர் பெருமான் பெருக்காறு சடைக்கணிந்த எனத் தொடங்கும் தாண்டகத்தில் தொகுத்துக் கூறும் கோயில் வகைகளைத் தேவாரப் பகுதிகளில் இனங்கண்டு வரலாற்று நோக்கிலும், கோயிற்கலை நோக்கிலும் இந்நூலாசிரியர் தக்க சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார்.

ஆங்கிலத்தில் உருவாக்கப்பெற்றுள்ள பிரிட்டானியா கலைக்களஞ்சியம் தமிழ் மக்களை, *Temple Building Race* என்று பாராட்டுதல் இயைபு கருதி இங்குச் சுட்டுதல் தகும். தமிழ் மக்களின் இறை நம்பிக்கையும், வழிபாட்டு நெறியும், மொழிப் பற்றும் ஒருங்கே விரவி விளங்கும் பாங்கினை, தேவாரத்தில் வழிபாடு என்னும் இயல் தெளிவுறுத்துகிறது. தமிழர்தம் பண்பாட்டினைப் புலப்படுத்தும் பாங்கில் அவர்தம் வழிபாட்டுநெறி அமைந்துள்ளது. மலர் வழிபாடுதான் தமிழர்களின் தனிச் சிறந்த வழிபாட்டு முறையாகும். தேவாரப் பதிகங்களில் சுட்டப்பெறும் பல்வேறு மலர் வகைகளையும், அவற்றின் தன்மைகளையும், அவற்றைத் தனியாகவும், மாலையாகவும் இறைவனுக்குக் காணிக்கையாக்கி வழிபடும் மெய்யன்பர்களின் மனத்தூய்மையினையும் இவ்வியல் தெளிவுறுத்துகிறது. ஆனைந்தினால் நீராட்டுதல், கனிகளைப் படைத்தல், தீபதூப வழிபாடு, விளக்கேற்றி வழிபடல், ஆடிப்பாடி வழிபடுதல் - இங்ஙனம் பல்வேறு பக்திப் புலப்பாட்டு வழிபாட்டு முறைகளையும் அவற்றால் மக்கள் பெறும் பயன்களையும் இவ்வியல் விளக்குகிறது.

வழிபாட்டில் திருவைந்தெழுத்து ஓதுதல், பாடல்களை ஓதுதல் இரண்டும் சிறப்பிடம் பெறுவன. அகவழிபாட்டையும், கூட்டு வழிபாட்டையும் பல்வேறு திருவிழாக்கள் எடுத்து வழிபாடு புரிதலையும் இவ்வியல் அகச்சான்றுகளுடன் விளக்குதல் அறியத்தக்கது.

தேவாரம் காட்டும் வழிபாட்டு நெறியில் ஆடவர்க்கு ஒப்பாக மகளிரும் இடம்பெறுகின்றனர். தெய்வங்களும்

இடம்பெறுகின்றனர். அறிவிற் குறைபாடுடைய பறவைகள், விலங்குகள் உள்ளிட்ட அஃறிணை உயிர்கள் கூட அரனை வழிபட்டு உய்தி பெற்ற பாங்கினைத் தேவாரம் புலப்படுத்துகிறது. இதனைத் தொடர்ந்து வரும் பகுதியில் தேவாரம் தோன்றிய காலச் சூழலும் மக்களுக்குத் தேவார ஆசிரியர்கள் உணர்த்தும் அரிய தகவுகளும் நன்நெறிகளும் விளக்கப்பெறுகின்றன. மனித நேயமும், சமத்துவமும் வலியுறுத்தப்பெறுகின்றன. முழுமுதற் கடவுளைப் போற்றுதலையே தேவாரம் புலப்படுத்துகிறது.

வழிபாட்டிற்கும் கலைகளுக்கும் உள்ள தொடர்பு அதனை அடுத்து ஆராயப்பெற்றுள்ளது. சங்க காலத்தில் வேந்தர்களின் வெற்றியைப் பாணரும் விறலியரும் பாடியாடி மகிழ்வித்தனர். ஆயினும், தேவார காலத்தில் பரம்பொருளின் திருமுன்னர் அவனுடைய பொருள்சேர் புகழைப் பண்ணார்ந்த தமிழில் பாடியும் அகமகிழ்ந்து ஆடியும் தமிழன்பர்கள் தங்கள் பக்திப் பெருக்கினை வெளிப்படுத்தினர். தேவார ஆசிரியர் தமிழிசைக் கலையை வளர்த்த சிறப்பிற்குரியவர்கள். திருப்பதிகங்களில் காணப்படும் இசைக்குறிப்புகள், பண்கள், சந்தங்கள், தாளங்கள், இசைக்கருவிகள் குறித்த விரிவான ஆய்வு இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வழிபாட்டிற்கும் மக்கட் சமுதாயத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை எடுத்துரைக்கும் பாங்கில் அடுத்த பகுதி இடம்பெறுகிறது. அருள் உள்ளம் கொண்டவர்கள் மக்கட் பணியை இறைவன் தொண்டாக எண்ணினர். சமுதாயத்தில் ஏற்படும் அவலங்களைக் களையவும் பசி, பிணி ஆகிய துயரங்களைத் துடைக்கவும், தேவார மூவரும் தொண்டாற்றிய திறனை இவ்வியல் புலப்படுத்துகிறது. மனிதப் பிறப்பின் மாண்பினையும், வாய்மை, ஈதல், கொல்லாமை, கள்ளாமை, இன ஒருமைப்பாடு ஆகிய உயர் தகவுகளை வழிபாட்டின் மூலம் மக்கள் மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற அற நிலையினை மேலும் இவ்வியல் தெளிவுறுத்துகிறது.

எங்கும் பரவியிருக்கும் பரம்பொருளைப் பல தலங்களுக்கும் பயணம் சென்று பரவுதல் வழிபாட்டின் ஒரு கூறாக இந்நூலின் நிறைவுப் பகுதி எடுத்துரைக்கிறது. இத்தகைய புனித யாத்திரையினால் மனித குலம் முழுமையினையும் கண்ணாரக் காணவும், அவர்தம் பண்பு நலன்களை அறிந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது. அன்றியும் பல்வேறு பகுதிகளிலும் வழிபாடு தொடர்பாக மக்கள் மேற்கொண்டொழுகும் நெறியினையும், கோயிற்கலை அமைப்பினையும், விரிந்த உள்ளத்தினையும் இத்தகு புனித பயணத்தினால் அன்பர்கள் அடையக் கூடும்.

திருமுறை நெறியினை வாழ்வியலாகக் கொண்ட மரபில் வந்த இந்நூலாசிரியர் இளமை முதலாகவே தேவார திருப்பதிகங்களைத் தக்க ஓதுவார்களிடம் பண்ணழகோடு பாடும் பயிற்சி நிரம்பப் பெற்றவர். தாம் கற்ற கல்வி நிறுவனங்களுக்குப் பல பெருமைகளைச் சேர்த்தவர். முதுகலைப் பட்டம் முதல் நிலையில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றவர். கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய பல்வேறு போட்டிகளில் பல முதற் பரிசுகளை வென்றவர். பல கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளை அளித்தவர். தொடர்ந்து திருமுறை உணர்த்தும் தத்துவக் கோட்பாடுகளை ஆராய்ந்து வருபவர். இலக்கியம், சமயம், தத்துவம் ஆகிய துறைகளில் ஈடுபாடு மிக்கவர். இவர்தம் ஆய்வு முயற்சியை உவந்து பாராட்டி, தொடர்ந்து பல நூல்களைப் படைக்க வேண்டும் என்று உளங்கனிந்து வாழ்த்துகிறேன்.

தஞ்சாவூர்
22.4.2008

சோ. ந. கந்தசாமி

(சோ.ந. கந்தசாமி)

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

முனைவர் ந. முருகேசன்
தமிழ் இணைப்பேராசிரியர்
ஸ்ரீ கா.சு.சு. கலைக்கல்லூரி
திருப்பனந்தாள் - 612 504.

கருத்துரை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், தத்துவ மையத்தில், விரிவுரையாளராகப் பணிபுரியும் முனைவர் கோ.ப. நல்லசிவம் என் அருமை மாணவர். அவர், பக்தி உணர்வும் திருமுறைகளில் ஈடுபாடும் கொண்டவர். திருமுறைகளை முறையாகப் பயின்று ஓதி உணர்ந்தவர்; கேட்பார் உருகும் வண்ணம் அவற்றைப் பாடுவதில் வல்லவர்.

என் மேற்பார்வையில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்கும் முனைவர் பட்டத்திற்கும் ஆய்வு மேற்கொண்ட காலத்தில், கோ.ப. நல்லசிவத்தின், ஆய்வு நோக்கையும் புலமை நலத்தையும் கண்டு பாராட்டியுள்ளேன். தரவுகளைத் தேடுவதிலும், கிடைத்த தரவுகளை முறைப்படுத்திக் கொண்டு உணர்த்துவதிலும் தேர்ந்தவர்.

அவர்தம் பன்னாள் உழைப்பு, **தேவாரம் உணர்த்தும் வழிபாடு** என்ற தலைப்பில் சிறந்த நூலாகியுள்ளது. திருமுறைகளில் தேவாரப் பாக்களின் இடம், தேவாரப் பாக்கள் சுட்டும் கோயில்கள், கோயில்கள் மூலம் வளர்ந்த கலைகள், தேவார ஆசிரியர்கள் உணர்த்தும் வழிபாட்டு நெறிகள், தேவாரப் பாக்களில் இடம்பெறும் சமுதாயச் சிந்தனைகள் ஆகியவற்றை நன்கு புலப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

காலச் சூழலும் அறிவுறுத்தலும் என்ற தலைப்பில் உள்ள செய்திகள் பயன்மிக்கவை. தேவார மூவர் காலஃ சூழல்

நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேவாரம் பாடியோர் திருவுள்ளக் குறிப்புகள் சான்றுகளுடன தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. இது, ஆன்மிகவாதிகள் கூர்ந்து படிக்க வேண்டிய பகுதியாகும்.

தேவாரம் பாடிய கவிஞர்கள், வழிபாட்டில் ஈடுபடும் அடியார்கட்கு, தொண்டு நெறியே முக்கியம் என்று கருதியதையும், கருதியதோடு தொண்டு புரிந்ததையும், ஆசிரியர் விளக்கியுள்ள அருமை பாராட்டத்தக்கது. ஆன்மிகம் என்ற போர்வையில், ஊரையடித்து உலையில்போடும் உன்மத்தர்கள் கவனமாகப் படிக்க வேண்டும் இதனை.

தன்னல மறுப்பும் பொதுநல ஆர்வமும் தேவார ஆசிரியர்கள்பால் இருந்தமையும், அவர்கள் தாமாகவே சென்று தொண்டாற்றிய அருமையும் உணர்த்தப்படுவதோடு, அந்நிலைக்கு இறையடியார்கள் ஊக்கப்படுத்தப்படுவதும் வரவேற்கத் தக்கதாகும்.

சமுதாயத்தைக் கொடுமைப்படுத்தி அமைதியைக் குலைக்கும் சாதிவெறி கூடாது என்பதையும், மனித நேயமே இறைவழிபாட்டின் அடிப்படை என்பதையும், தேவாரப் பாடல்கள் மூலம் ஆசிரியர் விளக்கியுள்ளமை நோக்கத்தக்கது.

சிறப்புமிக்க நூலைப் படைத்துள்ள ஆசிரியர் கோ.ப. நல்லசிவம், மேலும் பல நூல்கள் எழுதி, இலக்கிய உலகில் விளங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

திருப்பனந்தாள்
22.4.2008

(ந. முருகேசன்)

என்னுரை

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

- திருநாவுக்கரசர்

தமிழிலக்கிய வரலாற்றில் திருமுறைகள் முக்கியமானவை யாகும். சிவபரம் பொருளைப் போற்றித் தமிழர்களின் தொன்மைச் சமயமான சைவத்தை வளர்த்த அருட்கவிஞர்களின் படைப்புகள் திருமுறைகளாகும்.

சங்கம் மருவிய காலத்தில் சமண பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. புறச்சமயத்தவர்கள் இல்லறத்தை இழித்துப் பேசி, பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்று பழித்தனர். பெண்கள் ஆண்களாகப் பிறப்பெடுத்தே முக்திக்கு முயலவேண்டும் என்றனர். வினைப்பயனுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கடுந்துறவுக்கு வழிகாட்டினர். நம்பிக்கைத் தளர்ச்சி ஏற்பட்டுத் தமிழ் மக்கள் மயங்கினர். இந்நிலையில் சிவபெருமானை வழிபட்டு, வினை நீக்கம் பெற்று, இனிது வாழலாம் என்று கூறித் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வழி நடத்தினர் திருமுறைக் கவிஞர்கள்.

தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்க் கலைகளையும் பாதுகாத்துப் புத்துயிர் ஊட்டியவர்களில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இம்மூவர் பாடியருளிய தேவாரப் பாடல்களில் அவர்கள் உணர்த்தும் வழிபாட்டை வெளிப்படுத்தும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

தேவாரம் உணர்த்தும் வழிபாட்டை ஆய்வு செய்வதன் மூலம் தேவார மூவர் காலத்து வழிபாட்டு முறைகளையும், காலச் சூழலையும், இன்று வழிபாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் உணர்ந்து கொள்ளலாம் என்பது இந்நூலின் நோக்கமாகும். திருக்கோயில்களில் வழிபாடு செய்வது எப்படி? யார்? என்ற சிக்கல்கள் எழுந்துள்ள இக்காலச் சூழ்நிலையில் இந்நூல் அருளாளர்களின் அடிச்சுவட்டில் அவர்கள் உணர்த்திய கருத்தை எடுத்தியம்புகின்றது.

இந்நூலுக்கு முன்னோடி ஆய்வுகளாக பேராசிரியர் க. வெள்ளைவாரணனாரின் திருமுறை வரலாறு, பேராசிரியர் முனைவர் சோ.ந. கந்தசாமி அவர்களின் திருமுறை இலக்கியம், மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியாரின் திருமுறைத் திருநெறி, முனைவர் டி.பி. சித்தலிங்கனாரின் சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் ஆகிய நூல்களும்; பேராசிரியர் முனைவர் த.கோ. பரமசிவனாரின் ஆய்வுக் கட்டுரைகளும் அமைந்துள்ளன.

இந்நூல், திருமுறைகளில் தேவாரம், தேவாரம் சுட்டும் திருக்கோயில்கள், தேவாரத்தில் வழிபாடு, காலச் சூழலும் அறிவுறுத்தலும், வழிபாடும் கலைகளும், வழிபாடும் சமூகமும், வழிபாடும் யாத்திரையும் என ஏழு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு எளியோர்க்கும் விளங்கும் வண்ணம் மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

தேவாரம் உணர்த்தும் வழிபாடு எனும் தலைப்பில் இந்நூலினை எழுதப் பணித்த என்னுடைய தந்தையார் அமரர் பேராசிரியர் முனைவர் த.கோ. பரமசிவனார் திருவடிகளுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்நூலிற்கு அழகானதொரு அணிந்துரை அளித்து இச்சிறியவனையும் பெருமைப்படுத்திய தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்த தமிழ்ப் பல்கலைக்கழக மதிப்புயர் பதிவாளரும் நான்

சார்ந்திருக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையத்தின் இயக்குநருமாகிய பேராசிரியர் முனைவர் க. பாஸ்கரன் அவர்களுக்கும், அற்புதமான ஆய்வுரையை மதிப்புரையாக வழங்கிச் சிறப்பித்துள்ள முதுபெரும் பேராசிரியர் முனைவர் சோ.ந. கந்தசாமி அவர்களுக்கும், நல்லதொரு கருத்துரை வழங்கிய திருப்பனந்தாள் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் ந. முருகேசன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூலினைச் சிறந்த முறையில் உருவாக்குவதற்கு நாளும் துணை நின்று என்னை ஊக்கப்படுத்திய என்னுடைய தாயார் திருமதி. ப. நல்லநாயகி அவர்களுக்கும், என் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. ந. கிருத்திகா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலாக்கத்திற்குத் தேவையான நூல்களை அவ்வப்போது வழங்கி ஊக்கப்படுத்திய முனைவர் மோ.கோ. கோவைமணி அவர்களுக்கும், இந்நூலைச் சிறந்த முறையில் கணினியில் அச்சேற்றிக் கொடுத்த தஞ்சாவூர் பாமொழி கணிப்பொறியகத்தாருக்கும், அழகுற அச்சிட்டு வழங்கிய சிதம்பரம் சபாநாயக அச்சக உரிமையாளர் திரு.இரா. கௌதம சங்கர் மற்றும் அச்சகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தோன்றாத்துணையாக இருந்து, அருள்பாலித்து இந்நூல் சிறந்த முறையில் வெளிவருவதற்குப் பேரருள்புரிந்த சிவபரம் பொருளின் திருவருளை நினைந்து நினைந்து வணங்கி நிறைவடைகிறேன்.

தஞ்சாவூர்
22.4.2008 **கோ.ப. நல்லசிவம்**

திருமுறைகளில் தேவாரம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயம் தொன்மையும் சிறப்பும் உடையதாகும். சைவ சமய அருளாளர்கள் சிவபெருமானைப் போற்றியும், சைவ சமயத் தத்துவங்களை விளக்கியும், சிவபிரான் எழுந்தருளியுள்ள தலங்களையும் அவற்றின் பெருமைகளையும் விதந்துரைத்தும் பாடிய பாடல்கள் தோத்திரங்கள் ஆகும்.

இத்தோத்திரங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. இத்தொகுப்புப் பற்றியும், தொகுப்பில் மூவர் பாடிய தேவாரப் பாடல்களின் இடம் பற்றியும் ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

திருமுறை

'திருமுறை' என்பது திரு+முறை என்னும் சொற்களின் கூட்டாகும். திருமுறை என்பதற்கு உயரிய சிவஞானச் செல்வத்தை மக்கள் அடைவதற்கு வழிகாட்டும் நூல் என்பது பொருள். முறை என்னும் சொல்லுக்கு நூல் என்பது பொருளாகும்[1]

திருவாகிய இறைவன் முன்னிலையில் நேரிடையாக முறையிட்டு ஓதப்பட்டமையால் திருமுறை என்பர்.[2]

க. வெள்ளைவாரணனார், "உலக மக்களுக்கு எக்காலத்தும் திருத்தகவிற்றாகிய உள்ள நிலைமையை வழங்குவதற்கு உரிய அருள்நூல் திருமுறைகள்"[3] என்று விளக்கியுள்ளார்.

திருமுறை என்ற சொல் திருமந்திரத்தில்,

"பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்"[4]

என்று இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டுக்களில், திருமுறை என்னும் சொல், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில்தான் முதன் முதலாகக் காணப்படுகிறது.[5]

'திருமுறை எழுதுவோர் வாசிப்போர்' எனச் சேக்கிழார் எடுத்தாள்கிறார்.[6]

மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக்கு முன்னர் மூவர் பாடிய தேவாரப் பாடல்களைத் 'திருப்பதிகம்' என்ற சொல்லால் குறிப்பிட்டனர்.[7]

திருமுறை கண்டது

திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசனை புரிந்த ஆதி சைவக் குடும்பத்தைச் சேர்ந்த நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு சோழ மன்னன் இராசராசன், தில்லையில் பூட்டிய அறையில் கிடந்த திருமுறைச் சுவடிகளைத் தேடிக் கண்டு வெளியிட்டான் என்று திருமுறைகண்ட புராணம் விளக்கியுள்ளது.

திருமுறை கண்ட மன்னன்

திருமுறை கண்ட சோழன் யார் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. திருத்தொண்டர் புராண வரலாறு வழி தஞ்சை இராசராசேச்சுரத் திருக்கோயிலைக் (பெருவுடையார்) கட்டிய முதலாம் இராசராசனே திருமுறை கண்ட சோழ மன்னன் என்று கருத இடமுளது.[8]

நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் தம்மை அன்புடன் ஆதரித்து வந்த ஆதித்தன் என்னும் பெயருடைய சோழ மன்னனைப் பாராட்டிக் கூறியிருப்பதாலும்,[9] இராசராசன் காலத்துக்கு முன்னரே மூவருடைய திருப்பதிகங்களும் கோயில்களில் பாடப்பட்டுள்ளன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளமையாலும்[10] பரகேசரி விசயாலய சோழன் மகனாகிய முதலாம் ஆதித்த சோழனே திருமுறை கண்ட சோழ மன்னனாவான் என்று ஆய்வு செய்து எழுதியுள்ளனர்.[11]

பண்ணடைவு

நம்பியாண்டார் நம்பியும் திருமுறை கண்ட சோழனும் இறைவன் அருளாணையின் வண்ணம், திருஞானசம்பந்தருடன் யாழ் மீட்டித் திருத்தல யாத்திரை மேற்கொண்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில்வந்த திருவெருக்கத்தம்புலியூரைச் சேர்ந்த மாதரசியின் உதவியால் தேவாரப் பாடல்களுக்குப் பண்ணடைவு செய்தனர்.[12]

வகுத்தது

திருமுறைகளை வகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார். திருமுறை கண்ட புராணம், முதல் 11 திருமுறைகளையும் வகுத்தவர் நம்பியாண்டார் நம்பி என்று குறிப்பிட்டுள்ளது. திருமுறை கண்ட சோழன் வேண்டுகோளின் வண்ணம், தாம் இயற்றிய நூல்களையும் 11ஆம் திருமுறையில் சேர்த்து வகைப்படுத்தினார் என்றும் கூறியுள்ளது.

ஆயினும், ஒன்பதாம் திருமுறையில் வழங்கும் திருவிசைப்பாப் பதிகங்களை இயற்றிய சில ஆசிரியர்கள் நம்பியாண்டார் நம்பி காலத்திற்குப் பிற்பட்டவர்கள் ஆதலாலும், தாம் மதித்துப் போற்றும் முன்னோர் பனுவல்களுடன் தம் நூல்களையும் சேர்த்து ஒரு திருமுறையாக்கி இருக்க மாட்டார் ஆதலாலும், எட்டு முதல் உள்ள திருமுறை வகுப்பு நம்பியாண்டார் நம்பியால் அமைக்கப்பட்டதன்று என்று க. வெள்ளைவாரணனார் பன்னிரு திருமுறை வரலாற்றில் ஆய்வு செய்து எழுதியுள்ளார்.[13] எனவே, மூவர் பாடிய தேவாரப் பாடல்களை மட்டும் நம்பியாண்டார் நம்பி ஏழு திருமுறைகளாக வகுத்தார் என்று உணரலாம்.

பகுப்பு முறை – காரணம்

திருஞானசம்பந்தரே முதன் முதலாகத் 'தோடுடைய செவியன்' என இறைவனைப் பாடியமையாலும், இறைவன் திருவடியில் அவரே முதலில் கலந்தவர் என்பதாலும் அவரது திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக வ தக்கப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர் திருநல்லூர்ப் பெருமணத்தில் இறைவன் திருவடியில் கலந்த பின்னரே, திருப்புகலூரில் திருநாவுக்கரசர் இறைவனடியில் கலந்தவராதலால் அவரது பாடல்கள் திருஞானசம்பந்தர் அருளிய திருமுறைகளையடுத்து நான்கு முதல் ஆறு வரையுள்ள திருமுறைகளாகவும், இருவருக்கும் காலத்தால் பிற்பட்ட சுந்தரர் திருப்பதிகங்கள் அவற்றிற்குப் பின்னர் ஏழாம் திருமுறையாகவும் வகுக்கப்பெற்றன. தேவார ஆசிரியர் மூவருக்கும் ஒருவன் பின் ஒருவராகச் சிவபதமடைந்த கால முறையே இத்தகைய வரிசை முறைக்குக் காரணம் என்று அறிஞர் கருதுவர்.[14]

பன்னிரு திருமுறைகள்

திருஞானசம்பந்தர் பாடிய முதல் மூன்று திருமுறைகள் 'திருக்கடைக் காப்பு' என்ற பெயராலும், திருநாவுக்கரசர் பாடிய நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகள் 'தேவாரம்' என்ற பெயராலும், சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறை 'திருப்பாட்டு' என்ற பெயராலும், மாணிக்கவாசகர் பாடிய எட்டாம் திருமுறை திருவாசகம், திருக்கோவையார் என்ற பெயராலும், கருவூரார், சேந்தனார் முதலிய ஒன்பதின்மர் பாடிய ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்ற பெயராலும், திருமூலர் பாடிய பத்தாம் திருமுறை திருமந்திரம் என்ற பெயராலும், திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் முதலிய பன்னிருவர் பாடிய திருமுறை பதினோராம் திருமுறை என்ற பெயராலும், சேக்கிழார் பாடிய பன்னிரண்டாம் திருமுறை திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) என்ற பெயராலும் வழங்கப்படுகின்றன.

திருமுறைக் கவிஞர்கள்

பன்னிரு திருமுறைகளையும் பாடியருளியவர்கள் 27 பேர் ஆவர். இதனைப் பழைய பாடலொன்று,

"திருஞான சம்பந்தர் வாகீசர் சுந்தரர்
திருவாத வூரர் மற்றைத்
திருமாளி கைத்தேவர் சேந்தனார் கருவூரர்
தெள்ளுபூந் துருத்தி நம்பி
வருஞான கண்டரா தித்தார் வேணாட்டடிகள்
வாய்ந்த திருவாலி யமுதர்
மருவுபுரு டோத்தமர் சேதிராயர் மூலர்
மன்னுதிரு ஆல வாயார்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர்கீரர் கல்லா டனார்
ஒண்கபிலர் பரணர்மெய் உணரிளம் பெருமானொ(டு)
ஓங்கும் அதிரா வடிகளார்
திருமேவு பட்டினத் தடிகளொடு நம்பியாண்டார்
நம்பி சேக்கி ழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத் தன்மை யோரே."[15]

என்று தொகுத்துக் கூறியுள்ளது. இப்பாடலின் மூலம், 1. திருஞான சம்பந்தர், 2. திருநாவுக்கரசர், 3. சுந்தரர், 4. மாணிக்கவாசகர், 5. திருமாளிகைத் தேவர், 6. சேந்தனார், 7. கருவூரார், 8. பூந்துருத்தி நம்பிகாட நம்பி, 9. கண்டராதித்தர், 10. வேணாட்டடிகள், 11. புருஷோத்தமர், 12. சேதிராயர், 13. திருமூலர், 14. திருவால வாயுடையார், 15. காரைக்காலம்மையார், 16. ஐயடிகள் காடவர்கோன், 17. சேரமான் பெருமாள், 18. நக்கீரர், 19. கல்லாடர், 20. கபில தேவர், 21. பரணதேவர், 22. இளம்பெருமானடிகள், 23. அதிராவடிகள், 24. பட்டினத்தார், 25. திருவாலியமுதனார், 26. நம்பியாண்டார் நம்பி, 27. சேக்கிழார் முதலியோர் திருமுறை ஆசிரியர்கள் என உணரலாம்.

பன்னிரு திருமுறைப் பாடல் தொகை

திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகங்கள் பதினாறாயிர மெனவும், திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகங்கள்

நாற்பத்தொன்பதினாயிரமெனவும் சுந்தரர் பாடிய திருப்பதிகங்கள் முப்பத்தெண்ணாயிரமெனவும் திருமுறை கண்ட புராணம் குறிப்பிடுகிறது.[16]

"கூற்றாயின வென்ன எடுத்துக் கோதில்
ஒருமானைத் தரிக்கும் ஒருவரையுங் காறும்
ஒருநாற்பத் தொன்பதினா யிரம தாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப்
பிஞ்ஞகனார் அடியிணைகள் பெற்றுள் ளாரே"[17]

"தோடுடைய செவியன்முதல் கல்லூ ரென்றும்
தொடைமுடிவாப் பரசமயப் தொகைகள் மாளப்
பாடினார் பதிகங்கள் பரவி லொன்றாம்
பதினாறா யிரமுளதாப் பகரு மன்றே"[18]

"........... பித்தா வென்னும்
இன்பமுதல் திருப்பதிகம் ஊழி தோறும்
ஈறாய் முப்பத்தெண்ணா யிரம தாக
முன்புபுகன் றவர்நொடித்தான் மலையிற் புக்கார்"[19]

என்பன திருமுறை கண்ட புராணத் தொடர்கள்.

திருமுறை கண்ட புராணக் கருத்தில் மாறுபடும் க. வெள்ளை வாரணனார், "திருமுறை கண்ட புராணத்துள் வரும் எண்ணிக்கைகள் பதிகங்கள் அல்ல. அவை பாடல் தொகையே ஆகும். அவ்வகையில் திருஞானசம்பந்தர் 1600 பதிகங்களும், திருநாவுக்கரசர் 4900 பதிகங்களும், சுந்தரர் 3800 பதிகங்களும் பாடியருளினார்களெனவும் அம்மூவரும் அருளிச் செய்த திருப் பதிகங்களின் தொகை 10300 எனவும், அவற்றின் பாடல் தொகை 103000 எனவும் கூறுதல் ஏற்புடையதாகும்"[20] என்று கூறும் கருத்து பொருத்தமானதாகும்.

திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் 384ம், திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் 310ம், சுந்தரர் தேவாரப் பதிகங்கள் 100ம் நம்பியாண்டார் நம்பிகளால் தொகுக்கப்பட்டனவென்று,

"பண்புற்ற திருஞானசம் பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்து நான்கினால் இலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினால்
வண்பெற்ற முறையொன்று நூற்றினால் வன்றொண்டர்"[21]

என்ற பாடல் உணர்த்தும்.

பன்னிரு திருமுறையுள் இன்றுள்ள பாடல்கள்

முதல் திருமுறையில் 98 தலங்களுக்கும் 136 பதிகங்களில் 1469 பாடல்களும், இரண்டாம் திருமுறையில் 90 தலங்களுக்கும் 122 பதிகங்களில் 1331 பாடல்களும், மூன்றாம் திருமுறையில் 84 தலங்களுக்கும் 125 பதிகங்களில் 1347 பாடல்களும் உள்ளன. பாடல்களின் எண்ணிக்கை 4158 ஆகும்.

நான்காம் திருமுறையில் 50 தலங்களுக்குப் 113 பதிகங்களில் 1070 பாடல்களும், ஐந்தாம் திருமுறையில் 76 தலங்களுக்கு 100 பதிகங்களில் 1015 பாடல்களும், ஆறாம் திருமுறையில் 65 தலங்களுக்குத் 99 பதிகங்களில் 981 பாடல்களும் உள்ளன. மொத்த பாடல்களின் எண்ணிக்கை 3066 ஆகும்.

ஏழாம் திருமுறையில் 96 தலங்களுக்கு 100 பதிகங்களில் 1026 பாடல்கள் உள்ளன.

எட்டாம் திருமுறை திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டு நூல்களின் தொகுப்பாகும். திருவாசகம் 51 பதிகங்களில் 649 பாடல்களைக் கொண்டது. திருக்கோவையார் 400 பாடல்களை உடையது.

ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா 28 பதிகங்களும், திருப்பல்லாண்டு 1 பதிகமும் உள்ளன. 14 தலங்களுக்கு 303 பாடல்கள் உள்ளன.

பத்தாம் திருமுறையில் (திருமந்திரம்) 3047 பாடல்கள் உள்ளன. 3000 பாடல்கள் என்பது வழக்கு. கூடுதலாகவுள்ளவை மிகைப்பாடல்கள் ஆகும்.

பதினோராம் திருமுறையில் 40 பிரபந்தங்கள் 1402 பாடல்கள் கொண்டனவாக உள்ளன.

பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியராணம் 2 காண்டங்கள், 13 சருக்கங்கள் கொண்டது. 4286 பாடல்கள் உள்ளன.

ஆய்வில் எடுத்துக்கொண்ட மூவர் பாடல்களின் கூடுதல் 8250 ஆகும்.[22]

பதினோராம் திருமுறையுள் உள்ள பிரபந்தங்கள்

எண்.	சிற்றிலக்கியம்	ஆசிரியர் பெயர்
1.	திருமுகப் பாசுரம்	திருவாலவாயுடையார்
2.	திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்	காரைக்காலம்மையார்
3.	திருவிரட்டைமணிமாலை	காரைக்காலம்மையார்
4.	மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை	கபிலதேவர்
5.	சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை	கபிலதேவர்
6.	திருநாரையூர் விநாயகர் இரட்டைமணிமாலை	நம்பியாண்டார் நம்பி
7.	அற்புதத் திருவந்தாதி	காரைக்காலம்மையார்
8.	பொன்வண்ணத்தந்தாதி	சேரமான்பெருமாள்
9.	கயிலைபாதி காளத்திபாதி	நக்கீரதேவர்
10.	சிவபெருமான் திருவந்தாதி	கபிலதேவர்
11.	சிவபெருமான் திருவந்தாதி	பரணதேவர்
12.	திருவேகம்பமுடையார் திருவந்தாதி	பட்டினத்தார்
13.	திருத்தொண்டர் திருவந்தாதி	நம்பியாண்டார் நம்பி
14.	ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி	நம்பியாண்டார் நம்பி

15.	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	நக்கீரதேவர்
16.	திருவாரூர் மும்மணிக்கோவை	நக்கீரதேவர்
17.	மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை	அதிராவடிகள்
18.	திருக்கழுமல மும்மணிக்கோவை	பட்டினத்தார்
19.	திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	பட்டினத்தார்
20.	ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை	நம்பியாண்டார் நம்பி
21.	சிவபெருமான் மும்மணிக்கோவை	இளம்பெருமானடிகள்
22.	திருக்கைலாய ஞான உலா	சேரமான் பெருமாள்
23.	திருவீங்கோய் எழுபது	நக்கீரதேவர்
24.	திருவெழுகூற்றிருக்கை	நக்கீரதேவர்
25.	பெருந்தேவபாணி	நக்கீரதேவர்
26.	கோபப்பிரசாதம்	நக்கீரதேவர்
27.	கார் எட்டு	நக்கீரதேவர்
28.	போற்றிக்கலி	நக்கீரதேவர்
29.	திருமுருகாற்றுப்படை	நக்கீரதேவர்
30.	திருக்கண்ணப்ப தேவர் திருமறம்	நக்கீரதேவர்
31.	திருக்கண்ணப்ப தேவர் திருமறம்	கல்லாட தேவர்
32.	கோயில் நான்மணிமாலை	பட்டினத்தார்
33.	திருவொற்றியூர் ஒருபா ஒருபது	பட்டினத்தார்
34.	ஆளுடைய பிள்ளையார் உலாமாலை	நம்பியாண்டார் நம்பி
35.	நாவுக்கரசர் ஏகதசமாலை	நம்பியாண்டார் நம்பி

36.	ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்	நம்பியாண்டார் நம்பி
37.	ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை	நம்பியாண்டார் நம்பி
38.	கோயில் திருப்பண்ணியர் விருத்தம்	நம்பியாண்டார் நம்பி
39.	திருச்சண்பை விருத்தம்	நம்பியாண்டார் நம்பி
40.	ஷேத்திரத் திருவெண்பா	ஐயடிகள்காடவர்கோன்

திருமுறையுள் தேவாரம்

சைவ சமய எழுச்சிக்குக் காரணமான மூவர் பாடல்கள் திருமுறைத் தொகுப்பில் முக்கியமானவைகளாக உள்ளன. தொடக்கத்தில் திருஞானசம்பந்தர் பாடல்களைத் 'திருக்கடைக் காப்பு' என்றும், திருநாவுக்கரசர் பாடல்களைத் 'தேவாரம்' என்றும், சுந்தரர் பாடல்களைத் 'திருப்பாட்டு' என்றும் வழங்கினர். பின்னர் மூவரும் பாடிய பாடல்களைத் தேவாரம் எனச் சுட்டும் வழக்கம் ஏற்பட்டது. தேவாரம் என்ற தொடரைத் தேவ+ஆரம் எனப் பிரித்து இறைவனுக்கு மாலையாக அமைந்தது என்றும், தே+வாரம் எனப் பிரித்துத் தெய்வத்தினிடத்து அன்பை விளைவிப்பது என்றும் இருவகையாகப் பொருள் கூறுவர்.

தேவாரம் - சொல் வழக்கு

இரட்டைப் புலவர்கள் தாம், முதன் முதலில் மூவர் திருப்பதிகங்களைத் 'தேவாரம்' என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளனர்.

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்"[23]

என்பது இரட்டைப் புலவர் வாக்கு.

சைவ எல்லப்ப நாவலரும் மூவர் திருப்பதிகங்களையும் சேர்த்துத் தேவாரம் என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

"வாய்மை வைத்த சீர்த்திருத்
தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள்
எம்உயிர்த் துணையே"[24]

என்பன அவர் பாடல் வரிகள்.

மூவர் திருப்பதிகங்களும் இறை வழிபாட்டில் பாடப் பெற்று வந்தமை பற்றிக் கி.பி.14ஆம் நூற்றாண்டு முதல் அப்பதிகங்கள் 'தேவாரம்' என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகின்றனவென்றும், அதற்குமுன் அப்பதிகங்கள் 'தேவாரம்' என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்தனவென்பதற்குக் கல்வெட்டுக்களிலோ அன்றி இலக்கியங்களிலோ சான்றுகள் கிடைக்கவில்லை யென்றும் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் தாம் எழுதிய தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது.[25]

13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாரங்கதேவர் என்னும் வடநாட்டு இசை நூலாசிரியர் மூவர் திருப்பதிகங்களில் காணும் தமிழ்ப் பண்களைத் 'தேவார வர்த்தநீ என்று தமது 'சங்கீத ரத்னாகரம்' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.[26]

தேவாரம் – பொருள் விரிவு

மூவர் திருப்பாடல்களைச் சுட்டத் தோன்றிய தேவாரம் என்ற சொல் வழக்கு, வேறு சில பொருள்களுக்கும் இடம் தந்தது.

கி.பி.11ஆம் நூற்றாண்டுக்குப் பின் தேவாரம் என்ற சொல் 'வழிபாடு' என்னும் பொருளில் வழங்குகிறது.[27]

வீட்டில் ஆராதிக்கப்படும் 'கடவுள்' என்ற பொருளிலும் தேவாரம் என்ற சொல் வழக்கு பயிலத் தொடங்கியது. இதனைத் தமிழ்ப் பேரகராதி "Deity worshipped privately in a house கிருகாராதனக் கடவுள், உம்முடைய தேவாரமோ"[28] (ஈடு, 6,8,10) என்று உணர்த்தியுள்ளது.

பூசைக்குரிய ஆன்மார்த்த மூர்த்தத்தைச் சுட்டத் 'தேவாரம்' என்ற சொல் வழக்கத்திற்கு வந்தது. இதனைத் தமிழ்ப் பேரகராதி, "*Tevara - tevar, n* < தேவாரம்' + *Idols and other Objects worshipped by an individual in private;*[29] ஆன்மார்த்த பூசைக்குரிய மூர்த்தம். பெரிய பெருமாளுக்குத் தேவார தேவராக எழுந்தருளுவித்த தேவர் "[30] என்று புலப்படுத்தியுள்ளது.

செப்பேட்டுப்பணி

தேவாரப் பதிகங்களை முதற்குலோத்துங்கச் சோழனின் படைத்தலைவன் மணவிற்கூத்தன் காலிங்கராயன், செப்பேடு களில் எழுதிப் பாதுகாத்தான். தமிழர்களின் வாழ்வில் திருமுறையின் செல்வாக்கிது.[31]

தேவாரப் பண்கள்

தேவாரப் பாடல்கள் அனைத்தும் இறைவன் முன்னிலையில் நேரிடையாக இசைக்கப்பட்டவை. இசைக்கப் பட்ட அப்பாடல்களுக்கு அவற்றின் இசைத் தன்மைக் கேற்பப் பண்களை அமைத்தனர். அவை பிற்காலத்தில் இராகங்க ளாயின.

மூவர் தேவாரத்தில் மொத்தம் 23 பண்கள் காணப்படு கின்றன. திருஞானசம்பந்தர் பாடிய முதல் திருமுறையில், நட்டபாடை (நைவளம்), தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி எனும் ஏழு பண்களும், இரண்டாம் திருமுறையில் இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி எனும் ஆறு பண்களும், மூன்றாம் திருமுறையில் கந்தார பஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி எனும் ஒன்பது பண்களும் உள்ளன.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் நான்காம் திருமுறையில் கொல்லிப்பண், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி,

காந்தார பஞ்சமம், பழந்தக்கராகம், பழம்பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி எனும் பத்துப் பண்கள் காணப்படுகின்றன.

சுந்தரர் தேவாரத்தில் (ஏழாம் திருமுறை) இந்தளம், தக்கராகம், நட்டராகம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், பழம்பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், பியந்தை காந்தாரம், காந்தார பஞ்சமம், நட்டபாடை, புறநீர்மை, சீகாமரம், குறிஞ்சி, கௌசிகம், செந்துருத்தி, பஞ்சமம் எனும் பதினேழு பண்கள் காணப்படுகின்றன.

"செந்துருத்திப்பண்" சுந்தரர் மட்டுமே பாடியுள்ளார்.[32]

முதல் திருமுறையில் இடம்பெறும் யாழ்முரி எனும் குறிப்பமைந்த பதிகத்திற்குரிய பண்ணாக மேகராகக் குறிஞ்சி குறிப்பிடப் பெற்றாலும், இன்று வழக்கத்தில் அப்பதிகம் 'அடாணா' எனும் கர்னாடக இசை இராகத்தில் பெரும்பாலோரால் பாடப்பெறுகிறது.[33]

ஐந்தாம் திருமுறைக்கெனப் பண்கள் இல்லை. இருப்பினும் இந்தளப் பண்ணிலேயே இத்திருக்குறுந்தொகைப் பாடல்களைப் பாடுதல் மரபாக உள்ளது. இன்று பல இராகங்களில் கச்சேரிகளில் இசைக்கப்படுதல் குறிக்கத்தக்கது.[34]

ஆறாம் திருமுறையாகிய திருத்தாண்டகப் பாடல்கள் விருத்தமாகப் பாடுதலே (சுத்தாங்கம்) தொன்று தொட்ட மரபாயுளது. இதனை இன்று அரிகாம்போதி எனும் கர்நாடக இசையில் அடக்குவர். இப்பாடல்களும் இன்று பல இராகங்களில் இசைக்கப்படுகின்றன.[35]

தேவாரப் பண்களும் இராகங்களும்

மூவர் தேவாரத்தில் இடம்பெறும் தமிழ்ப் பண்களை இன்றைய இசையுலகில் பாடப்பெறும் இராகங்களில் அடக்கிக் கூறுவர். அவை பின்வருமாறு:-

எண்.	பண்	இராகம்
1.	நட்டபாடை	கம்பீர நாட்டை
2.	தக்கராகம்	காம்போதி
3.	பழந்தக்கராகம்	சுத்தசாவேரி/ஆரபி
4.	தக்கேசி	காம்போதி
5.	குறிஞ்சி	அரிகாம்போதி
6.	வியாழக்குறிஞ்சி	செளராஷ்ட்டிரம்
7.	மேகராகக்குறிஞ்சி	நீலாம்பரி
8.	இந்தளம்	மாயமாளவகௌளை
9.	சீகாமரம்	நாதநாமக்கிரியை
10.	காந்தாரம்	நவரோசு
11.	பியந்தைக் காந்தாரம்	நவரோசு
12.	நட்டராகம்	பந்துவராளி
13.	செவ்வழி	எதுகுல காம்போதி
14.	காந்தார பஞ்சமம்	கேதார கௌளை
15.	கொல்லி	நவரோசு
16.	கொல்லிக் கௌவாணம்	நவரோசு
17.	கௌசிகம்	பயிரவி
18.	பஞ்சமம்	ஆகிரி
19.	சாதாரி	பந்துவராளி
20.	பழம்பஞ்சுரம்	சங்கராபரணம்
21.	புறநீர்மை	பூபாளம்
22.	அந்தாளிக் குறிஞ்சி	சாமா
23.	செந்துருத்தி	மத்தியமாவதி

தேவாரப் பதிப்பு முறைகள்

மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களை இரண்டு வகையாகப் பதிப்பித்துள்ளனர். அவை,

1. பண்முறை
2. தலமுறை

என்பதாகும். பண்முறை என்பது மூவர் பதிகங்களில் உள்ள பண்களை வரிசைப்படுத்தி ஒவ்வொரு பண்ணுக்குமுரிய பதிகங்களைத் தொகுத்து ஏழு திருமுறைகளாக வகைப்படுத்துவ தாகும்.

தலமுறை எனப்படுவது, திருப்பதிக்கோவையில் குறிக்கப்பெறும் கோயில் (சிதம்பரம்/தில்லை), திருவேட்களம் என்ற தல வரிசை முறையை ஒட்டி வகைப்படுத்துவதாகும்.

இன்றைய பதிப்புகள், தலமுறைப் பகுப்பு முறையிலேயே பேரளவில் உள்ளன. பண்முறைப் பதிப்பே பழங்காலப் பகுப்பாகும்.[36]

இந்நாளில் மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் ஒருசேர 'மூவர் தேவாரம்' என்ற பெயரில் ஒரே நூலாகவும், திருஞானசம்பந்தர் தேவாரம் (முதல் மூன்று திருமுறைகள்), திருநாவுக்கரசர் தேவாரம் (4,5,6 திருமுறைகள்), சுந்தரர் தேவாரம் (7ஆம் திருமுறை) எனத் தனித்தனியாகவும் பதிப்பிக்கின்றனர். இவை மூலங்கள் மட்டும் இடம்பெறும் பதிப்பாகவும் (காசி மடம், சமாஜப் பதிப்புகள்), உரையுடன் கூடிய பதிப்பாகவும் (வர்த்தமானன் பதிப்பு), மூலம், உரை, ஆராய்ச்சியுடன் கூடிய பதிப்பாகவும் (தருமையாதீனப் பதிப்பு) பதிப்பிக்கப்பெற்றுள்ளன.

தேவாரத் திரட்டுகள்

மூவர் தேவாரம் முழுமையும் ஓத முடியாதவர்கள், சில பதிகங்களை மட்டும் ஓதிப் பலன் பெறுவ்தற்காகத் தேவாரத் திரட்டுகளும் வெளியிடப் பட்டுள்ளன.

அகத்தியர் தேவாரத் திரட்டு, தமிழ் வேதத் திரட்டு, இம்மையே நன்மை தரும் திருமுறைத் திருப்பதிகங்கள், தினசரி வழிபாடு, தேவார அருண்முறைத் திரட்டு, அற்புதத் தேவாரத் திரட்டு, கயிலைமாமுனிவர் தேவாரத் திரட்டு, திருவையாற்றின்

ஏழூர்த் தேவாரத் திருப்பதிகங்கள் முதலிய திரட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

தொகுப்புரை

- ❖ சைவ சமயம் தொன்மையும் சிறப்பும் உடையதாகும். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. சிவபெருமானைப் போற்றிப் பாடிய அருளாளர் பாடல்கள் திருமுறைகளாகும்.
- ❖ சைவத் திருமுறைகள் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். திருமுறை எனும் சொல் இறைவன் முன்பு நேரிடையாக முறையிட்டு ஓதப்பட்டது; திருத்தகவிற்றாகிய, உள்ள நிலைமையை வழங்குவதற்குரிய அருள் நூல் எனும் பொருள்களைக் கொண்டதாகும்.
- ❖ மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில்தான் முதன்முதலாகத் திருமுறை என்னும் சொல் காணப்பட்டுள்ளது.
- ❖ சோழமன்னன் முதல் இராசராசன் திருமுறைச் சுவடிகளைத் தேடித் தொகுத்து வெளியிடச் செய்தான் என்று திருமுறைகண்ட புராணம் விளக்கியுள்ளது.
- ❖ முதலாம் ஆதித்த சோழனே திருமுறைகண்ட மன்னன் என்ற கருத்தும் நிலவுகிறது.
- ❖ திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளைத் தொகுத்தவர் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி ஆவார்.
- ❖ தேவாரப் பாடல்களுக்கு, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த திருவெருக்கத்தம் புலியூரைச் சேர்ந்த மாதரசியின் உதவியால் பண் அடைவு செய்யப்பட்டது.
- ❖ பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளில்

திருஞானசம்பந்தர் பாடல்களும், நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளில் திருநாவுக்கரசர் பாடல்களும், ஏழாம் திருமுறையாக சுந்தரர் பாடல்களும், எட்டாம் திருமுறையாக மாணிக்கவாசகர் பாடல்களும், ஒன்பதாம் திருமுறையாக ஒன்பதின்மர் பாடிய பாடல்களும், பத்தாம் திருமுறையாக திருமூலர் பாடிய பாடல்களும், பதினோராம் திருமுறையாகப் பன்னிருவர் பாடல்களும், பன்னிரண்டாம் திருமுறையாகச் சேக்கிழார் பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

- ❖ மூவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 1,03,000 ஆகும். இன்று கிடைத்துள்ளவை 8,252 பாடல்கள் ஆகும்.
- ❖ மூவர் பாடிய பாடல்கள் தேவாரம் என அழைக்கப்படுகின்றன. 'தேவாரம்' என்ற சொல்லுக்கு இறைவனுக்கு மாலையாக அமைந்தது என்பது பொருளாகும். மேலும் வழிபாடு, கடவுள் என்ற பொருள்களும் உண்டு.
- ❖ 'தேவாரம்' என்ற சொல்லை முதன் முதலில் இரட்டைப் புலவர்களே பயன்படுத்தியுள்ளனர்.
- ❖ மூவர் தேவாரத்தில் மொத்தம் 23 பண்கள் காணப்படுகின்றன.
- ❖ மூவர் தேவாரத்தைப் பண்முறை, தலமுறை என்று இரண்டு வகைகளாகப் பதிப்பித்துள்ளனர். பண்முறைப் பதிப்பே பழங்காலப் பகுப்பாகும். மேலும் குறிப்பிட்ட சில பதிகங்களைத் தொகுத்தும் 'தேவாரத் திரட்டுகள்' பல வெளிவந்துள்ளன.

குறிப்புகள்

1. சோ.ந. கந்தசாமி, திருமுறை இலக்கியம், ப.6.
2. மேலது, ப.6.
3. க. வெள்ளைவாரணம், பன்னிரு திருமுறை வரலாறு, தொகுதி 1, ப.1.
4. திருமந்திரம், பா.1067.
5. க. வெள்ளைவாரணம், பன்னிரு திருமுறை வரலாறு, தொகுதி 1, ப.6.
6. பெரியபுராணம், கண.பு., பா.3
7. ந.வீ. ஜெயராமன், திருமுறைச் செல்வம், ப.10.
8. க வெள்ளைவாரணம், பன்னிரு திருமுறை வரலாறு, தொகுதி 1, ப.7.
9. திருத்தொண்டர் திருவந்தாதி, பா.50, 65.
10. ந.வீ. ஜெயராமன், திருமுறைச் செல்வம், ப.12.
11. மேலது, ப.12.
12. திருமுறை கண்ட புராணம், பா.32,34.
13. க. வெள்ளைவாரணம், பன்னிரு திருமுறை வரலாறு, தொகுதி 1, பக்.25-26.
14. கே.எஸ். சீனிவாச பிள்ளை, தமிழ் வரலாறு, ப.66.
15. தனிப்பாடல், பன்னிரு திருமுறை, தருமையாதீனப் பதிப்பு, முகவுரை.
16. திருமுறை கண்ட புராணம், பா.14-16.
17. மேலது, பா.15.
18. மேலது, பா.14.
19. மேலது, பா.16.
20. க. வெள்ளைவாரணம், பன்னிரு திருமுறை வரலாறு தொகுதி 1, ப.27.
21. திருமுறை கண்ட புராணம், பா.25.

22. சைவ சமய வரலாறும், பன்னிரு திருமுறை வரலாறும், பக்.6-7.
23. மேலது, ப.35.
24. மேலது, ப.35.
25. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழிலக்கிய வரலாறு, ப.66.
26. க. வெள்ளைவாரணம், பன்னிரு திருமுறை வரலாறு தொகுதி 1, ப.35.
27. மேலது, ப.36.
28. தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், ப.2069
29. மேலது, ப.2069.
30. S.I.I., vo.iv, No.225.
31. க. வெள்ளைவாரணம், பன்னிரு திருமுறை வரலாறு தொகுதி 1, ப.55.
32. திருப்பனந்தாள் சோ. முத்துக்கந்தசாமி ஓதுவார் (நேர் காணல்), நாள்.20.01.2004.
33. மேலது, நாள்.20.01.2004.
34. மேலது, நாள்.20.01.2004.
35. சைவ சமய வரலாறும், பன்னிரு திருமுறை வரலாறும், பக்.18-20.
36. ந.வீ. ஜெயராமன், திருமுறைச் செல்வம், ப.20.

தேவாரம் சுட்டும் திருக்கோயில்கள்

தேவாரம் உணர்த்தும் திருக்கோயில் வழிபாடு பற்றி ஆய்வு செய்யும் போது, சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து திருக்கோயில்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றையும், அவற்றின் வகைகளையும் சான்றுகளுடன் அறிந்து கொள்வது அவசியமாகிறது. சங்க காலம், சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், நாயக்க, மராட்டிய மன்னர்கள் காலம் எனப் பல கட்டங்களில் திருக்கோயில் அமைப்புகள் வளர்ச்சி பெற்றன; வகைகள் பெருகின. அதனை விளக்கி, தேவாரம் சுட்டும் திருக்கோயில்களைப் புலப்படுத்துதல் இவ்வியலின் நோக்கமாகும்.

கோயில் - விளக்கம்

பழங்காலத்தில் கோயில் என்ற சொல் அரசர் இருப்பிடமான அரண்மனையைக் குறித்தது. பிற்காலத்தில் இறைவனது அமைவிடத்தையும் அச்சொல் குறித்தது. பழங்காலத்தில் அரசனையே இறைவனாக மக்கள் கருதினர்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்"[1]

என்று வள்ளுவர் பாடியுள்ளது நோக்கத்தக்கது. பக்தி இலக்கியங்கள் தோன்றிய காலத்திலும் அரசனை இறைவனாகப் பார்த்தனர்.

"திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே"[2]

எனவரும் பாசுர வரி சிந்திக்கத்தக்கது.

சமுதாயத்தில் வழிபாடு, வழிபாடு செய்யும் இடம் ஆகியவை காலப் போக்கில் முக்கியத்துவம் பெற்றன. வழிபாட்டுக்குத் தெய்வத் திருமேனிகளை அமைத்தும், சிவலிங்கங்களை அமைத்தும் கட்டிடங்கள் கட்டினர். அக்கட்டிடங்களை, கோயில்கள் என்றும் கோட்டங்கள் என்றும் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன.

"வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலும்"[3]

"அணங்குடை முருகன் கோட்டத்து"[4]

"உருகெழு திறல்உயர் கோட்டத்து"[5]

எனவரும் சங்க இலக்கிய வரிகள் குறிப்பிடத்தக்கன.

கோயில் - கோவில் - விளக்கம்

கோயில், கோவில் இரண்டு சொற்களும் இன்று வழக்கத்தில் உள்ளன. சங்க இலக்கியங்கள், திருமுறைகள், பிற்காலச் சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றில் 'கோயில்' என்ற சொல்லே ஆளப்பெற்றுள்ளது.

இலக்கண விளக்கம்

கோ+இல் எனப் பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டால், 'கோ' என்ற ஓகார இறுதி ஓரெழுத்தொருமொழி முன்னர் 'இல்' என்ற சொல் புணரும் போது,

"இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்"[6]

என்ற தொல்காப்பிய இலக்கணப்படி இயல்புப் புணர்ச்சியாக, கோ+இல் ---> கோயில் என்றே புணரும்.

"இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை உயிர்வரின் வவ்வும்"[7]

என்ற நன்னூல் இலக்கணப்படி, கோ+இல் என்ற புணர்ச்சிக் கிடையில் உடம்படு மெய்யாக வகரம் தோன்றும். இவ்விதிப்படி கோ+இல் ---> கோவில் என்று புணரும்.

பொருள் வேறுபாடு இல்லாத காரணத்தால் இன்று வழக்கத்தில் இரண்டு சொற்களுமே உள்ளன.

கோயில் என்ற சொல்லே இந்நூலில் பயன்படுத்தப் படுகிறது.

பழங்காலக் கோயிலமைப்புகள்

தொல்காப்பியர் குறிப்பிடும் 'கந்தழி'[8] என்பதைக் கட்டுத் தறி எனப் பொருள் கொள்ள இடமுண்டு. கட்டுத்தறி என்பது சிவலிங்கத்தைக் குறிக்கும் சொல்லாகும். தறி, கம்பம் முதலிய சொற்கள் தேவார ஆசிரியர் காலத்தில் சிவலிங்கத்தைக் குறிப்பனவாக இடம்பெற்றன.

"கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே"[9]

"கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே"[10]

இத் தேவாரத் தொடர்களைத் தொல்காப்பியக் கந்தழியோடு ஒப்பிட்டாய்ந்தால் சிவலிங்க வழிபாட்டின் தொன்மையை உணர முடியும்.

பழங்காலத்தில் மரத்தடிகள், ஆற்றோரங்கள் முதலிய இடங்கள் கோயில்களின் அமைவிடங்களாக விளங்கின. இதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் கிடைக்கின்றன.

"கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி"[11]

"தெய்வம் சேர்ந்த பராரை வேம்பு"[12]

என்பன நோக்கத்தக்கதாகும்.

சுடுமண், களிமண் கோட்டங்கள் இருந்தமையை,

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மறுகுசேர் மாடத்து"[13]

"சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்"[14]

என்ற சங்க இலக்கிய வரிகள் புலப்படுத்துகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் கோயில்கள்

சங்கம் மருவிய கால இலக்கியங்களாகிய சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கோயில்கள் பற்றிய செய்திகள் காணக் கிடைக்கின்றன.

"நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்"[15]

என்று ஊர்காண் காதையிலும்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்"[16]

என்று இந்திர விழவூரெடுத்த காதையிலும் சிவபெருமான் கோயில் சுட்டப்பெறுகிறது. மேலும்,

"அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்"[17]

"உவணச் சேவல் உயர்ந்தோன் நியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவல் கொடியோன் கோட்டம்"[18]

என, இந்திர விழவூரெடுத்த காதை, ஊர் காண் காதைகளில் இடம்பெறும் தொடர்கள் செவ்வேள், திருமால் கோயில்கள் இருந்தமையைப் புலப்படுத்துகின்றன. இக்கோயில்கள் தவிர, அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம், புகர் வெள்ளை நகர்தங் கோட்டம், பகல் வாயில் உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க் கோட்டம், வேற்கோட்டம், வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம் எனப் பல கோயில்கள் கனாத்திறம் உரைத்த காதையில் சுட்டப்படுகின்றன. இவற்றின் பெயர்களையன்றி, அமைப்புகள் குறித்தும், வகைமைகள் குறித்தும் செய்திகளை அறிய முடியவில்லை.

குடைவரைக் கோயில்கள்

பல்லவ மன்னர்கள் தம் காலத்தில் மலைகளைக் குடைந்து கோயில்களை உருவாக்கினர். இக்கற்கோயில்கள் குடைவரைக்

கோயில்கள் என்று அழைக்கப்பட்டன. குடைவரைக் கோயில்கள் தவிர இரதங்கள், கற்றளிகள் எனப் பெயர் கொண்ட கோயில்களும் உருவாக்கப்பட்டன. பழங்காலத்தில் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலியவற்றால் அமைக்கப்பட்ட கோயில்கள், பல்லவர்கள் காலத்தில்தான் கற்களால் அமைக்கப் பட்டன. இச்செய்தி, பல்லவர்காலக் கல்வெட்டுக்களில் காணக்கிடைக்கின்றது.

முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்த மண்டகப்பட்டு என்னும் இடத்தில் அமைந்துள்ள குடைவரைக் கோயிலின் கல்வெட்டு, அக்கோயிலைச் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலியவற்றைக் கொண்டு அமைக்காது முற்றிலும் கருங்கல்லால் அமைக்கப்பெற்றதைக் கூறுவது ஈண்டு சிந்திக்கத் தக்கது.[19]

அவ்வகையில், மண்டகப்பட்டு இலக்கிதன் குடைவரை, பல்லாவரம் பஞ்சபாண்டவர் குடைவரை, மாமண்டூர் உருத்திர வாளீச்சரக் குடைவரை, மாமண்டூர்க் குடைவரை, குரங்கணில் முட்டம் கல்மண்டபக் குடைவரை, வல்லம் வசந்தேச்சரம் கோயில், மகேந்திரவாடி மகேந்திர விஷ்ணு கிருகம், தவளவானூர் சந்திர மல்லன் கோயில், சீயமங்கலம் அவனி பாசனன் கோயில், திருச்சிராப்பள்ளி லலிதாங்குரன் கோயில், விளாப்பாக்கம் பஞ்சபாண்டவர் கோயில், அரகண்ட நல்லூர் முடிவுறா மண்டபம், சித்தன்னவாசல் சமணக் கோயில், திருக்கோகர்ணம் சிவன் கோயில் ஆகிய பதினான்கு கோயில்கள் முதலாம் மகேந்திரவர்மன் உருவாக்கியவையாகும்..[20]

நரசிம்மவர்மன் காலத்துக் கோயில்கள்

முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த முதலாம் நரசிம்ம வர்மன், மாமல்லபுரம் கோனேரி சிவன் மண்டபம், வராக மண்டபம், மகிஷாசுரமர்த்தினி குடைவரை, இராமானுச மண்டபம், சாளவன் குப்பம் யாளி மண்டபம், மகிஷாசுரன் சிறு குடைவரை போன்றனவும், மாமல்லபுரம் துரோபதை தேர், அருச்சுனன் தேர், பீமன் தேர், தருமராசன்

தேர், சகாதேவன் தேர், கணேசர் தேர், வலையன் குட்டை தேர், பிடாரி தேர்கள்(2)[21] போன்ற ஒற்றைக்கல் தேர்களையும் உருவாக்கினான்.

இராசசிம்மன் எழுப்பிய கோயில்கள்

பனைமலைத் தாலகிரீஸ்வரர் கோயில், மாமல்லபுரம் சிவன்கோயில், முகுந்த நாயனார் கோயில், கடற்கரைக் கோயில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் முதலியன இராசசிம்மன் எழுப்பிய கோயில்களுள் குறிப்பிடத்தக்கனவாகும்.[22]

தனித்தன்மைகள்

பல்லவர் காலக் குடைவரைக் கோயில்கள், மண்டபங்கள் ஆகியவை பல்லவ மன்னர் ஒவ்வொருவர் காலத்திலும் சில தனித்தன்மைகளுடன் உருவாக்கப்பட்டன. தனித்தன்மையைக் 'கலைப்பாணி' என்ற சொல்லால் குறிப்பர்.

மகேந்திரவர்மன் கலைப்பாணி

முதலாம்மகேந்திரவர்மன் 'சைத்தியகாரி' (கோயில்களை யமைத்தவன்) என்ற விருதுப் பெயரைக் கொண்டவன்.[23] இவனுடைய ஆட்சிக் காலத்தில் பலவிதமான கலையம்சங்கள் கோயில் கட்டுமான அமைப்பில் ஏற்படுத்தப் பட்டன.

தூண்கள்

மகேந்திரவர்மன் காலத்துத் தூண்கள் மேல், நடு, அடிப்பகுதி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மேற்பகுதி மற்றும் அடிப்பகுதி நான்கு பக்கமுள்ள சதுரமாகவும், நடுப்பகுதி எண்பட்டைகள் கொண்டதாகவும் அமைக்கப்பட்டன.

துவாரபாலகர்

மகேந்திரவர்மன் காலத்துத் துவாரபாலகர் உருவங்கள் (கோயில் கருவறையின் வெளிப்புற வாயிலில் இருமருங்கிலும் உள்ளவை) பக்க வாட்டில் திரும்பியிராது எதிர்ப்பார்வை கொண்டவையாகும்.

மகரத்தோரணம்

மகரத்தோரணங்கள் அல்லது திருவாசிகள் இரண்டு வளைவு உள்ளன வாக உருவாக்கப்பட்டன.

கருவறை

கருவறைகளில் குழவிக்கல் போன்ற உருண்டையான இலிங்கங்கள் அமைக்கப்பட்டன. இலிங்கத்தின் பின்புறம் உள்ள சுவர் வெறுமையாக இருக்கும்.

நரசிம்மவர்மன் கலைப்பாணி

மாமல்லன் என்றழைக்கப்பட்ட முதலாம் நரசிம்மவர்மன் ஆட்சிக் காலத்தில் மாமல்லபுரத்திலேயே பல கோயில்கள், மண்டபங்கள், ஒற்றைக்கல் தேர்கள் முதலியன பெரும்பாலும் அமைக்கப்பட்டன.

தூண்கள்

நரசிம்மவர்மன் காலத்துத் தூண்கள், நிமிர்ந்து அமர்ந்த சிங்கங்கள் தூண்களைத் தலையில் தாங்குவது போல் அமைக்கப்பட்டன. தூண்களின் மேற்பகுதியில் கலசம், தாடி, கும்பம், பலகை போன்ற அலங்கார வேலைப் பாடுகள் அமைக்கப்பட்டன.

துவாரபாலகர்

துவாரபாலகர் உருவங்கள் பக்கவாட்டில் திரும்பி நிற்குமாறு அமைக்கப்பட்டன.

சோமாஸ்கந்தர் உருவம்

சிவன், பார்வதி இருவரும் அமர்ந்த நிலையிலும் நடுவில் முருகன் குழந்தை வடிவில் நின்ற நிலையிலும் அமைக்கப்பட்ட திருவுருவம் 'சோமாஸ் கந்தர்' என்று அழைக்கப்படுகிறது. நரசிம்மவர்மன் காலத்துக் கோயில் கருவறையில் சிவலிங்கத் திருமேனிக்குப் பின்புறமுள்ள சுவரில் இக்காட்சி அமைக்கப்பட்டது.

இராசசிம்மன்

இராசசிம்மன் கட்டிய கோயில்களின் தோற்றம் தேர் அமைப்பு கொண்டதாக இருக்கும். கட்டிடத்தின் மூன்று பக்கங் களிலும் மிகப் பெரிய மாடக்குழிகள் காணப்படும். மற்ற அமைப்புகள் அனைத்தும் நரசிம்மவர்மன் கலைப்பாணியை ஒத்து அமைக்கப்பட்டன.

முற்காலப் பாண்டியர் காலக் கோயில்கள்

பல்லவர் காலத்தில், பாண்டியர் தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டனர். இவர்கள் காலத்திலும் ஏராளமான குடைவரைகள், கற்றளிகள் எடுப்பிக்கப்பட்டன. இவை ஆனைமலை, திருமெய்யம், குன்றக்குடி, மலையடிப்பட்டி, குன்னாண்டார் கோயில், குடுமியான்மலை, கழுகுமலை, திருப்பரங்குன்றம், திருமால்புரம், பனங்குடி, பிள்ளையார்ப்பட்டி போன்ற இடங்களில் காணப்படுகின்றன.

பல்லவர், முற்காலப் பாண்டியர் தவிரத், தேவார மூவர் காலத்திற்கு முன்பு, கரிகாற்சோழன், சோழன் கோச்செங்கணான் முதலிய முற்காலச் சோழ மன்னர் பலரும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கோயில்களை எடுப்பித் துள்ளனர். இச்செய்திகளைத் தேவார மூவர் தம் திருப்பதிகங்களில் பதிவு செய்துள்ளனர். இவற்றுள், தேவார மூவர் பாடியுள்ள கோயில் வகைகள் இங்கு ஆராயப்படுகின்றன.

தேவாரம் சுட்டும் திருக்கோயில்கள்

தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்கள் (கோயில்கள்) 275 என்று தொகுத்துள்ளனர்.[24] அவை காவிரி தென்கரைத் தலங்கள், காவிரி வடகரைத் தலங்கள், பாண்டி நாட்டுத் தலங்கள், நடுநாட்டுத் தலங்கள், தொண்டை நாட்டுத் தலங்கள், சேரநாட்டுத் தலம், வடநாட்டுத் தலங்கள், ஈழநாட்டுத் தலங்கள், கொங்கு நாட்டுத் தலங்கள், துளுவ நாட்டுத் தலம் என்று வரிசைப்படுத்தப் பட்டுள்ளன .

திருக்கோயில் வகைகள்

திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் திருக்கோயில் வகைகளைச் சுட்டிப் பாடியுள்ளார். அப்பாடல் பின்வருமாறு:-

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே"[25]

இப்பாடல் மூலம் பெருங்கோயில், கரக்கோயில், மாடக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் ஆகிய எட்டு கோயில் வகைகளை உணர முடிகிறது.

1. **பெருங்கோயில்**

யானை ஏற முடியாத உயரமான மேடைமேல் கட்டப்படும் கோயில் பெருங்கோயில் எனப்படும். இக்கோயில்கள் மாடக்கோயில் என்றும் கூறப்படும். பொதுவாக பெருங்கோயில் என்பதை,

"மலைகள் அல்லது உயர்ந்த மேடைகள் மீது எழுப்பப்படும் கோயில்கள் பெருங்கோயில்கள் எனப்படும்"[26]

"கருவறை கீழே அமையாது மேல் நிலையில் இருந்தால் அது மாடக் கோயில் என்று அழைக்கப்படும்"[27]

என்று விளக்குவர். இவ்வகைக் கோயில்கள் எழுபது சோழ மன்னன் கோச்செங்கணான் எடுப்பித்தான் என்று தேவார மூவரும், திருமங்கை ஆழ்வாரும் பதிவு செய்துள்ளனர். சோழன்

கோச்செங்கணான் முற்பிறவியில் சிலந்தியாகப் பிறந்து, சிவலிங்கத்தின் மீது பந்தர் அமைத்து வழிபட்டதாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

"சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இறந்த போதே கோச்செங்க ணானு மாகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே"[28]

"..... தன்வாய் நூலினாற் பந்தர் செய்ய
முரணிலாச் சிலந்தி தன்னை முடியுடை மன்ன னாக்கித்
தரணிதா னாள வைத்தார் சாய்க்காடு மேவி னாரே"[29]

"கோடுயர் வெங்களிற்றுத் திகழ்
கோச் செங்கணான் செய்கோயில்
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில்"[30]

முதலிய தேவாரப் பாடலடிகள் உறுதி செய்கின்றன.

2. கரக்கோயில்

தேர் வடிவமாகச் சக்கரங்களோடு கட்டப்பட்ட கோயில் கரக்கோயில் ஆகும்.[31] இத்தகைய கரக்கோயில் ஒன்று காட்டு மன்னார் கோயிலுக்குத் தெற்கே உள்ள மேலைக் கடம்பூரில் உள்ளது. திருநாவுக்கரசர்,

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே"[32]

என்ற பாடலில் இவ்வகையைச் சுட்டிப் பாடியுள்ளார். இப்பாடல் உள்ள பதிகம் முழுவதும் இக்கோயில் வகையைக் குறிப்பிட்டுள்ளது.

அமைப்பு

மேலைக் கடம்பூரில் அமைந்துள்ள கரக்கோயில் தோற்றத்தைக் கொண்டே இதனமைப்பை விளக்கலாம்.

இக்கோயில் குதிரைகள் பூட்டிய தேர் போன்ற அமைப்பில் உள்ளது. இது சோழர் காலத்தில் புதுப்பிக்கப் பட்டுள்ளது என்பது அதன் சிற்பக் கலை அமைப்பு வெளிப் படுத்துகிறது.

புராணச் செய்திகள்

புராண அடிப்படையில் இக்கரக்கோயில் இந்திரன் வழிபட்ட தலமாகக் கூறப்படுகிறது. இந்திரன் பெற்ற வரத்தினால் அமுதம் இத்தலத்தில் ஊற்றெடுத்ததென்பர். இத்திருக்கோயிலின் மாட்சியுணர்ந்த இந்திரன் தன் கரத்தால் அகழ்ந்து கொண்டு போக முயன்றிருக்கின்றான். ஆனால், அவனால் எடுக்க இயலவில்லை. எனவேதான், இது கரக்கோயில் எனப் பெயர் பெற்ற தென்பர்.[33] திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

"கணங்கள் போற்றிசைக்கும் கரக்கோயில்"[34]

எனப் பாடியுள்ளதால் பூதகணங்கள் வழிபட்ட செய்தியும் இத்தலம் தொடர்பான புராணச் செய்தியோடு கிடைக்கின்றது.

மேலைக்கடம்பூர் என அழைக்கப்படும் இத்தலம் கல்வெட்டில் உத்தம சோழ சதுர்வேதிமங்கலம் எனப் பதியப்பெற்றுள்ளது.[35]

இத்தலத்தில் பெரியபுராணத்தில் இடம்பெறும் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் கோயில் சுவர்ச் சிற்பங்களாக மூன்று பக்கங்களிலும் இரண்டு வரிசைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

தம் வாழ்நாள் முழுதும் தொண்டு நெறியாம் உழவாரப் பணி செய்து முத்தி பெற்ற திருநாவுக்கரசர் இத்தலத்துத் தேவாரத்தில்தான் தம் வாழ்நாள் குறிக்கோளைப் பதிவு செய்துள்ளார் என்பது மற்றொரு சிறப்பாகும். அப்பாடலடி,

"என்க டன்பணி செய்து கிடப்பதே"[36]

என்பதாகும்.

3. மாடக்கோயில்கள்

கருவறை கீழ்த்தளத்தில் இல்லாமல் மேல்தளத்தில் இருக்கும் கோயில்களுக்கு மாடக்கோயில்கள் என்று பெயர் என்பார் டாக்டர் இரா. நாகசாமி.[37]

மாடக்கோயில், விமான வகையுள் யானை தூங்குவது போல் அமைப்பது தூங்கானைமாடக் கோயிலமைப்பு ஆகும். இது வடமொழியில் 'கஜ பிருஷ்டம்' என அழைக்கப்படுகிறது. இவ்வகை விமான அமைப்பினை, பெண்ணாகடத்தில் உள்ள (திருத்தூங்கானை மடம) சிவன் கோயிலில் காணலாம்.

4. ஞாழற் கோயில்

மரச் சோலைகளின் நடுவே அமைக்கப்படும் கோயில் ஞாழற் கோயில் எனப்படும். ஞாழல் என்பது ஒருவகை மரமாகும். திருநாவுக்கரசர் தேவாரத்தில் 'கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்' என்ற அடைமொழியோடு இக்கோயில் சுட்டப்பட்டுள்ளது.

"பாதிரிப்புலியூர்த் திருக்கடை ஞாழற் பெருமானடிகளுக்கு" எனவரும் கல்வெட்டுச் சான்றிலிருந்து, திருப்பாதிரிப் புலியூரிலுள்ள கோயில் முதலில் ஞாழற் கோயிலாக இருந்திருக்க வேண்டும்" என யு. சுப்பிரமணியன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[38]

5. கொகுடிக் கோயில்

கொகுடி என்பது முல்லைக் கொடியில் ஒரு வகையாகும். இவ்வகை முல்லைக்கொடி மிகுதியாக அமைந்தவிடத்தில் உள்ள கோயில் கொகுடிக் கோயில் என அழைக்கப்பட்டது. சீர்காழிக்கு மேற்கே உள்ள திருக்கருப்பறியலூரில் உள்ள கோயில் கொகுடிக் கோயிலாகச் சுந்தரர் தேவாரத்தில் சுட்டப் பட்டுள்ளது. அப்பாடல்,

"................. கருப்பறி யலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட
மயில்ஆடுங் கொகுடிக் கோயில்"[39]

என வருகிறது. இப்பதிகம் முழுவதும் இக்குறிப்பு காணப்படுகிறது.

6. இளங்கோயில்

பழைய கோயிலைப் புதுப்பித்து, குடமுழுக்குப் பெரு விழாவினை நிகழ்த்தும் காலம் வரையிலான இடைப்பட்ட காலத்தில் அக்கோயிலுக்கு அருகே தற்காலிகமாக இறைவனை (மூலவரை ஆவாகணம் செய்தல்) எழுந்தருளுவித்து வழிபாட்டினைத் தடையின்றித் தொடர்ந்து நடைபெறச் செய்யும் கோயில் இளங்கோயில் எனப்படும். இதனை வடமொழியில் 'பாலாலயம்' என அழைப்பர். இன்றும் இவ்வழக்கம் நடைமுறையில் உள்ளது குறிக்கத்தக்கதாகும்.

இவ்வகையில் பழைய கோயில் புதுப்பிக்கப்பட்டு, குடமுழுக்கு நிகழ்ந்தவுடன் அத்தற்காலிக இளங்கோயிலை எடுத்து விடுவது மரபு. சில இடங்களில் அதனைத் தனிக் கோயிலாக வழிபடும் வழக்கமும் இருந்து உள்ளமை தெரிகிறது. திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில்,

"தோற்றுங் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மியச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையரற்
கேற்றங் கோயில்கண் டீர்இளங் கோயிலே"[40]

என்ற பாடல் தொடங்கும் பதிகம் முழுவதும் பதிவு செய்துள்ளார்.

7. மணிக்கோயில்

மணிக்கோயில் அமைப்பு குறித்த விளக்கம் இதுவரை தெளிவாகக் கிடைக்கப்பெறவில்லை.[41] ஆயின், திருஞான சம்பந்தர் திருவாலவாய்த் திருப்பதிகமொன்றில்,

"குணங்கொடு பணியும் குலச்சிறை குலாவுங்
கோபுரஞ் சூழ்மணிக் கோயில்"[42]

என்ற குறிப்பு காணப்படுகிறது. இதன்வழி, கோபுர அமைப்புடன் கூடிய கோயிலை இவ்வகையெனக் கொள்ளுதற்கு இடமுளது. நம்பியாண்டார் நம்பிகள், கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தத்தில்,

"................ தில்லை தன்னுள்

செற்றரு மாமணிக் கோயிலில் நின்றது தேவர்கணம்"[43]

என்று குறிப்பிடுகின்றார். இவ்விரண்டு சான்றுகளை மட்டுங் கொண்டு மணிக்கோயில் அமைப்பினை முழுமையாக அறிந்துகொள்ள இயலவில்லை.

8. **ஆலக்கோயில்**

ஆலமரத்தடியில் எழுப்பப்படும் கோயில் ஆலக்கோயில் எனப்படும். இவ்வகையும் பழமையானதாகும். சங்க இலக்கியங்களில் பல பெயர்களால் சுட்டப்பெறும் சிவபெருமானின் வடிவங்களில் ஒன்று ஆலமர் செல்வன் என்பதாகும். சான்றுகளாக,

"ஆல்கெழு கடவுட் புதல்வ"[44]

"ஆல் அமர் செல்வன் அணிசால் பெருவிறல்"[45]

எனவரும் சங்க இலக்கியத் தொடர்களைச் சுட்டலாம். தொடக்க காலத்தில் ஆலமரத்தரடியில் நிறுவப்பட்ட இறைத் திருமேனியைச் சுற்றிப் பிற்றைக் காலங்களில் எழுப்பப்பட்டவை ஆலக்கோயில்களாயின எனக் கருதலாம். இதற்குச் சான்றுகளாக, பல மரத்தடிக் கோயில்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தமையும், பின்னர் அவை கற்கோயில்களாக அமைக்கப்பட்ட செய்திகளும் இன்று கிடைக்கின்றன. திருமறைக்காடு, தில்லைவனம், திருவாலங்காடு, திருவெண்காடு, திருப்பனந்தாள் முதலிய தலப்பெயர்கள் இறைத் திருமேனிசள்

காடுகளிலும், மரத்தடியிலும் நிறுவப்பட்டமையை உணர்த்து கின்றன.[46]

இலிங்கத்தைச் சுற்றிக் கருவறை தனியாக அமைக்கப் பட்ட பின்னர் அம்மரம் தலத்துக்குரிய மரமாகக் கொள்ளப்பட்டது. தென்னிந்தியாவில் உள்ள எல்லாப் பழைய கோயில்களுக்கும் ஒவ்வோர் தலமரம் உண்டு.[47]

இச்சான்றுகளை ஆதாரமாகக் கொண்டால் ஆலக் கோயில் என்ற வகையும் இவ்வடிப்படையிலேயே ஏற்பட்டிக்க வேண்டும் என்பது புலனாகிறது.

ஆகமங்களும் திருக்கோயில்களும்

ஆகமம் என்ற சொல்லுக்குத் "தொன்று தொட்டு வரும் அறிவு" என்பது பொருளாகும்.[48]

மேலும், 1. இரகசியம், 2. மந்திரம், 3. மூர்த்தி, 4. ஆலயம் ஆகிய முறைகளில் விரித்துக் கூறும் தொகுதியின் பெயராக மரபால் அதற்குப் பொருள் கொள்ளப்படுகிறது.

சேந்தன் திவாகரம்,

"ஆகமம் பனுவல் ஆருடம் சமயம் சூத்திரம்
ஐந்தும் நூலினைத் துலக்கும்"[49]

என ஆகமத்திற்குப் பொருள் கூறுகிறது.

ஆகமம் என்பதற்கு, 'தோன்றியம்' (புதிதாகத் தோன்றியது) என்று பாவாணர் கருத்துரைக்கின்றார்.[50]

நச்சினார்க்கினியர், "அறிவர் உரைகளை" ஆகமங்கள் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.[51]

ஆகம வகைகள்

ஆகமங்கள் என்ற சொல் பொதுவாகத் திருக்கோயில்களை அமைப்பது குறித்த இலக்கணங்களை வரையறுத்துக் கூறுகின்றன. இவ் ஆகமங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்.

1. சிவ/சைவ ஆகமங்கள்
2. வைணவ ஆகமங்கள்
3. சக்தி ஆகமங்கள்

1. சிவ/சைவ ஆகமங்கள்

சிவாகமங்கள் 28 என்பர். காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் உள்ள இராசேந்திரவர்மன் என்ற மன்னனால் பொறிக்கப்பட்ட சாசனமொன்றில் 28 ஆகமங்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இச்சாசனம் கி.பி.5ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டதாகும்.[52] அவை, 1. காமிகம், 2. யோகஜம், 3. சிந்தியம், 4. காரணம், 5. அசிதம், 6. தீப்தம், 7. சிக்ஷமம், 8. புட்கரம், 9. அம்ஸிமான், 10. சுப்பிரபேதம், 11. பஜயம், 12. நிச்வாசம், 13. சுவாயம்புவம், 14. அக்னேயம், 15. வீரம், 16. ரௌரவம், 17. விமலம், 18. சந்திருளம், 19. பிம்பம், 20. புரோத்சிதம், 21. லசிதம், 22. சித்தம், 23. சந்தானம், 24. சர்மபாத்தம், 25. பாரமேசுரம், 26. கிரணம், 27. வாதுளம், 28 மகுடம் என்பனவாகும்.

இவ் இருபத்தெட்டு ஆகமங்களில் காமிகம், காரணம், வாதுளம், சுப்பிரபேதம், புட்கரம் ஆகிய ஐந்து ஆகமங்கள் மட்டுமே கிரந்த எழுத்தில் அச்சிடப்பெற்றுள்ளன. மற்ற இருபத்து மூன்று ஆகமங்களும் ஆங்காங்கே எடுத்தாளப்படுகின்றனவே யன்றி முழுமையாக அச்சிடப்படவில்லை. “அடி பிறழாத முதல் ஆகமங்கள் இன்று நடைமுறையில் இல்லை. சைவ ஆகமங் களில் காமிக ஆகமம் மட்டுமே அடிக்கடி எடுத்தாளப்படுகிறது” என்று குறிப்பிட்டுள்ளார் கு.ச. ஆனந்தன்.[53]

ஆகமங்கள் யாரால், எப்போது, எங்கே எழுதப்பட்டவை என்பதற்கு வரலாற்று அடிப்படையிலான சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை.[54]

மாணிக்கவாசகர் ஆகமங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, சிவனே ஆகமங்களை அருளியதாகவும், அவனே ஆகமமாக விளங்குகின்றதாகவும் திருவாசகத்தி'ல் பாடியுள்ளார்.

இதனை,

"மன்னுமாமலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்"[55]

"ஆகம மாகி நின்றண் ணிப்பான்"[56]

என்னும் தொடர்களால் அறியலாம்.

ஆகமங்கள் அனைத்தும் தமிழர்களுக்கே உரிய அறிவு நூல்களாகவும், வழிபாட்டு நூல்களாகவும் இருந்தன. அவற்றை வடமொழியில் வடமொழிவாணர்கள், அவர்களுக்கே உரிய பாங்கில் மொழிபெயர்த்துக் கொண்டு விட்டனர்.[57]

ஆகமங்கள் கூறும் திருக்கோயில் அமைப்பு முறைகள் தமிழர்களுடையன என்பதற்குத் தமிழகத் திருக்கோயில்களே சான்றுகளாகும் ஏனெனில், வடமொழி வழங்கும் வடமாநிலங்களில் இத்தகைய தென்னக அமைப்பிலான பழைய கோயில்களையும், சடங்குகளையும் காணமுடியாது. தமிழ் நாட்டில் மட்டுமே ஆகம முறைப்படி, கோயில்கள் கட்டப்பட்டு வழிபாடுகள் நடத்தப்பெறுகின்றன.

ஆகமங்கள் கூறும் வழிபாட்டு முறை பூச்சார்த்தி வணங்கு வதையும் நீராட்டி வழிபடுதலையும் நெறியாகக் குறிக்கிறது.[58]

அவ்வகையில் உருவானதே,

பூ + செய் ---> பூசை ---> பூஜை ---> பூஜா (வடமொழியில்) என்பதாகும். இதனைப், 'பூவை நிலை' என்று தொல்காப்பியரும் பதிவு செய்துள்ளார்.[59]

வடமொழிச் சடங்குகள் வேள்வித் தீ வளர்த்து வழிபடுதலையே பெரும்பான்மையும் குறிப்பிடுகின்றன. எனவே, பூ வழிபாட்டை முன்னிறுத்தும் ஆகமங்கள் வடமொழிக்குரியன வாக இருக்க முடியாது.

ஆகமங்கள் குறிப்பிடும் பல நடைமுறைகள் தமிழ் நாட்டு வழிபாட்டு முறைக்குப் பொருந்தாமல் விளங்குவதற்குக் காரணம்,

அவை பல கால கட்டங்களில் பல விதமான திரிபுகளுக்கு உட்படுத்தப்பட்டமையாகும் காலந்தோறும் பல இடைச்செருகல்கள் நிகழ்ந்திருக்க வாய்ப்புகள் உண்டு.

மூல ஆகமம் முழுமையாகக் கிடைக்காத நிலையில் மேற்சொன்ன கருத்துக்களை நிறுவுதல் சற்றுக் கடினமெனினும் தேவாரப் பாடல்கள் தம் காலத்துத் திருக்கோயில் வழிபாட்டைப் பற்றித் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. ஆனால், தேவார ஆசிரியர்களின் நோக்கம் வழிபாட்டு முறைகளைப் பதிவு செய்வது மட்டுமே என்ற நிலையில், திருக்கோயில் வகைகளின் பெயர்களை மட்டுமே நம்மால் அறிய முடிகிறது. அன்றி அவற்றின் அமைப்பு குறித்த செய்திகளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

ஆகமங்கள் குறிப்பிடும் இலக்கணம்

ஆகமங்கள், திருக்கோயில்கள் எவ்வெவ் வகையால், வடிவங்களால், எப்படிப்பட்ட அடிப்படையில், எங்கெங்கு நிறுவ வேண்டும் என்று குறிப்பிடுகின்றன. கோயிலினுள் இறைத் திருவுருவங்கள் எவ்வெவ்வாறு அமைய வேண்டும் என்பதையும், அளவு, முறை, அமைப்பு, இடம் முதலிய இலக்கணங்களையும் ஆகமங்கள் கூறுகின்றன.

பழங்காலத்தில் கோயில்கள் கற்களால் அமைக்கப்பெற வில்லை. மரம், சுடுமண், சுதை போன்றவற்றாலேயே பெரும் பாலான கோயில்கள் அமைக்கப் பட்டன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தில்தான் கற்களால் ஆன குடைவரைக் கோயில்களை அமைத்தான் எனக் கல்வெட்டுக்கள் கூறு கின்றன.[60]

மாமல்லன் நரசிம்மன், இராசசிம்மன் காலத்தில் எடுப்பித்த கோயில்கள் தாம் இறைவன் எழுந்தருளியுள்ள கருவறையும், முன்மண்டபம் போன்ற அமைப்பும் கொண்டு திகழ்ந்தன.

சோழர்கள் காலத்திலிருந்துதான் மண்டபங்கள், சுற்றாலைகள் (பிரகாரங்கள்) அமைக்கும் வழக்கங்கள் வளர்ச்சி பெற்றன.

இவ்வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது தேவார காலக் கோயில்கள் ஆகமங்கள் கூறும் முழுமையான அமைப்பில் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம் இன்றும் தேவார காலக் கோயில்கள் உள்ளன. அவற்றின் அமைப்பு மற்றும் வழக்காறு களைப் பார்க்கும் போது தேவார கால முறைமைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகவுள்ளது. இன்றைய தேவார காலக் கோயில்களில் அம்பிகை, கணபதி, முருகன், சப்த மாதர்கள், நவகிரகங்கள், சோமாஸ்கந்தர், நடராசர், சூரியன், பைரவர், கஜலட்சுமி, அன்ன பூரணி, ஐயப்பன், ஆஞ்சநேயர் முதலிய தெய்வங்களின் சன்னதிகள் இடம்பெறுகின்றன. இவற்றின் அமைப்புகளும், கல்வெட்டுக்களும் ஒவ்வொன்றிலிருந்து ஒவ்வொன்று முற்றிலும் மாறுபடுகிறது.

மேலும், நான்குகால், நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்கள், நிருத்த மண்டபம், மகா மண்டபம், தேவாசிரிய மண்டபம், அரங்க மண்டபம், கலியாண மண்டபம் போன்ற பல மண்டபங்கள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நோக்கினால், அவை பல காலங்களில், பல்வேறு அரசர்களால், செல்வந்தர்களால் அமைக்கப்பட்ட திருப்பணிகள் என்பதைத் தெளிவாக உணர முடியும். இதனைக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

எனவே, சிவலிங்கத் திருமேனி மற்றும் சில இறைத் திருமேனிகள் மட்டுமே தேவார காலத்தைச் சார்ந்தவையாகும். பின்னர் வந்த அரசர்கள் அச்சிவலிங்கத்தைச் சுற்றியிருந்த சுவர்களை எல்லாம் கருங்கல் சுவர்களாக மாற்றித் திருப்பணி செய்துள்ளனர் என்பது புலனாகிறது.

கருவறையைச் சுற்றியுள்ள கருங்கற் சுவர்களில் எழுதப்பட்டுள்ள அவ்வவ்வரசுகளின் கல்வெட்டுக்களே இக்கருத்துக்குச் சான்றாகும்.

தேவார மூவர் சிவலிங்கத் திருமேனியைக் கண்டே மாகேசுவர வடிவங் களைப் பாடினர். சில திருக்கோயில்களில் சில சிவ வடிவங்கள் இருந்தன.

தேவார மூவர், தேர்த்திருவிழா, பல்லக்குத் திருவிழா முதலியவற்றைக் குறிப்பிடுவதால், சில திருக்கோயில்களில் உற்சவத் திருமேனிகள் இருந்துள்ளன என்பது புலனாகிறது. காரணம், மூலவராக விளங்கும் சிவலிங்கத்தைத் திருவீதிகளில் உலாவாகக் கொண்டு செல்ல முடியாது. எனவே, உலோகத்தா லான சில உற்சவத் திருமேனிகள் வழிபாட்டில் திருக்கோயில் களில் இருந்துள்ளமை தெரிகிறது.

சிவலிங்கத் திருமேனிக்கு மட்டுமே கோயில் அமைக்கும் வழக்கம் ஆதியில் பெரும்பான்மையாக இருந்துள்ளது. காஞ்சிபுரம் (காமகோட்டம்), மதுரை போன்ற மிகச் சில கோயில்களில் மட்டுமே அம்பிகை வழிபாடு தனித்துச் சுட்டப் படுகிறது. சோழப் பெருவேந்தர்கள் காலம் முதலே, அம்பிகைக்குத் தனிக் கோயில்கள் சிவன் கோயில்களில் அமைக்கப்பட்டன.[61]

எனவே, தேவார மூவர் வழிபட்ட கோயில்கள் இன்று பல மாற்றங்களை அடைந்துள்ளன என்பது ஐயத்திற்கு இடமின்றி புலப்படுகிறது.

திருக்கோயில் அமைப்பு

மண்ணாலும் சுட்ட செங்கல்லாலும் எடுப்பிக்கப்பட்ட கோயில்கள் மண்டளிகள் எனவும், மலையில் குடையப்பட்ட கோயில்கள் குடபோகம் (குடைவரை) எனவும், தனிப்பாறைகளில் குடைவிக்கப்பட்ட கோயில்கள் மலைதளிகள் எனவும், கருங்கற்களை அடுக்கிக் கட்டப்பட்ட கட்டுமான கோயில்கள் கற்றளிகள் எனவும் வழங்கப்பட்டன.[62]

கருவறையின் மேற்பரப்பில் உயர்ந்த அமைப்பை விமானம் என்பர். இது மூன்று வகைப்படும். அவை,

1. திராவிடம் - எட்டுப் பட்டையுள்ள சிகரம்
2. நாகரம் - சதுரச் சிகரம்
3. வேசரம் - வட்டச் சிகரம்

என்பனவாகும். இவை தவிர, தமிழகத்தில் மேலும் சில சிறப்பு அமைப்புகளைத் தேவார காலத்திலேயே அமைத்துள்ளனர். அவை,

1. தூங்கானை மாடக்கோயில்

யானை ஒன்று படுத்திருப்பது போல அமைக்கப்படும் சிகர அமைப்பினைத் தூங்கானை மாடம் என்பர். இது வடமொழியில் 'கஜபிருஷ்டம்' என அழைக்கப்படுகிறது. இவ்வகை விமான அமைப்பினைப் பெண்ணாகடத்தில் உள்ள சிவன் கோயிலில் காணலாம். திருநாவுக்கரசர் இக்கோயிலை,

"துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே"[63]

என்று குறிப்பிட்டுள்ளார்.

2. சதுர முகடு, நீண்ட சதுர முகடு ஆகியவற்றை முறையே கூடம், சாலை என்பது மரபு. பெரும்பாலும் சபை, அம்பலம் எனப்படுவது சாலைமுகடாகவே அமைக்கப்பெறும். இவ்வகையினைத் தில்லைக்கோயிலில் காணலாம்.

தில்லையம்பலம் ஆதி காலத்திலேயே பொன்னால் வேயப்பட்டது என்பதற்குத் தேவாரத்தில் சான்றுகள் உள்ளன. திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

"முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலம்"[64]

எனப் பதிவு செய்துள்ளார்.

இவ்வகைச் சிறப்பு விமான அமைப்புகளை ஆகமங்களும் குறித்து உள்ளன. அவை,

1. கயிலாசம்
2. மந்தரம்
3. கஜபிருஷ்டம்
4. நளிநகம்
5. பிரலிநகம்

என்பனவாகும்.

திருக்கோயில் அமைப்பின் தத்துவம்

நம் முன்னோர் நமது உடம்பைத்தான் ஆலயமாக வெளியே அமைத் திருக்கின்றார்கள். மனித உடலில் உள்ள தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு, மச்சை, மேதை, சுவேத நீர் முதலிய எழுவகைத் தாதுக்களைப் போன்றே செங்கல், வெண்கல், கருங்கல், சுண்ணம், மணல், நீர், காரம் என்னும் எழுவகைப் பொருட்களைக் கொண்டு கோயில்களை அமைத்தனர். பிண்டத்தில் உள்ளதுதான் அண்டத்தில் உள்ளது. நம்முடைய உடலில் இதய கமலம் தான் கருவறை ஆகும். இதனையே திருமூலர்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானாற்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"[65]

என்று குறிப்பிடுகிறார்.

நம் உடம்பு அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்னும் ஐந்துவித கோசங்களால் ஆனது. இது ஆலயத்திலுள்ள ஐந்து பிரகாரங்களைக் குறிக்கும்.[66]

நம் உடம்பில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று ஆறு ஆதாரங்கள் உண்டு. அவை கோயிலிலுள்ள கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், அபிஷேக மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்னும் ஆறு மண்டபங்களைக் குறிக்கும்.

திருக்கோயிலில் கொடியேறினால்தான் சுவாமி புறப்பாடு நிகழும். அதுபோல நம்முடைய உடம்பிலே முதுகுத் தண்டுதான் கொடிமரம். முதுகுத் தண்டில் 32 இணைப்புகள், கொடிமரத்தில் 32 கட்டுகள் இருக்கும். கொடி மரத்தில் தர்ப்பைக் கயிற்றையும் ஒரு துணியையும் வளைத்து வளைத்துக் கொடி ஏற்றுவார்கள். சுசும்னா நாடி வழியாக பிராண வாயுவை ஆறாதாரங்களின் வழியே சகஸ்ராரத்துக்கு மேலே கொண்டு போகும் நம் உடல் செயல்பாடுதான் கொடியேற்றம்.[67]

ஆகமங்கள் குறிப்பிடும் திருக்கோயில் அமைப்பியல்

ஆகமங்கள் கோயில்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்துள்ளன. சிவன், திருமால், விநாயகன், முருகன் கோயில்கள் கிழக்குத் திசை நோக்கியும், காளி கோயில் வடதிசை நோக்கியும் அமைக்க வேண்டும்.[68]

பன்னிரு பூமிகள்

ஆலயத்திற்கு நிலத்தேர்வு செய்தல் முதன்மையான பணியாகும். நிலத்தைப் பன்னிரு பூமியாகப் பிரிப்பர். அவை சைவ பூமி, பிரும்ம பூமி,விஷ்ணு பூமி, இந்திர பூமி, பசு புமி, வாயு பூமி, வருண பூமி, இராட்சச பூமி, பைசாச பூமி, ஆக்நேய பூமி என்பனவாகும். இவற்றுள் சைவ பூமியே ஆலயம் அமைப்பதற்கு உகந்ததாகும். இதன் பின்னர் சில நடைமுறைகளை மேற்கொள்வர். அவை,

1. திக்பரிச்சேதம் (திசையறிதல்)
2. பதவிந்யாசம் (பகுதிகளாகப் பிரித்தல்)
3. பலிகர்மவிதானம் (பலி கொடுத்தல்)
4. கர்ப்பவிந்நியாசம் (கருவறை அமைத்தல்)
5. இஷ்டகநியாசம் (இஷ்டகம் - செங்கல், இக்கல்லை வைத்துக் கட்டப்படும் கிரியை).[69]

கோயில் அமைப்பில் பின்பற்றப்படும் அளவுகள்

ஒவ்வொரு கோயிலுக்கும் உரிய வெவ்வேறு அளவை முறைகளைப் பரமாணுவிலிருந்து தொடங்குகின்றன வாஸ்து நூல்கள்.[70]

பரமாணுவில் தொடங்கி, 8 நெற்கள் கொண்ட ஒரு அங்குலம் வரையில் கணக்கிடுவர். இது மானாங்குலம் எனச் சிற்ப நூல்களால் அழைக்கப்படு கிறது. அங்குலம் என்பது விரலையும் குறிக்கும். இவ்வளவுகளைக் கொண்டு இரண்டு முழங்கள் நடைமுறையில் பின்பற்றப்படுகின்றன. அவை சிதம்பர முழம் (25 விரல் நீள அளவுடையது). தஞ்சை முழம் (24 விரல் நீள அளவுடையது)[71] ஆகும்.

தென்னிந்தியக் கோயில் இலக்கணம்

தென்னிந்தியக் கோயில்களில் பெரும்பாலானவை பின்வரும் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை.

1. அதிட்டானம் - அடித்தளம்
2. பிட்டி - சுவர்
3. பிரஸ்தரம் - சுவரின் மேற்பலகை (கூரை)
4. கிரீவம் - கழுத்துப் பகுதி
5. சிகரம் - கழுத்துப் பகுதிக்கு மேல் அமையும் உருண்டையான அமைப்பு
6. ஸ்தூபி - கலசம்/கும்பம்.[72]

இவ் ஆறு உறுப்புகளும் கருவறையில் அமைவதாகும்.

கருவறையின் மேல் அமையும் பகுதி விமானம் எனப்படும். இவ் விமானத்தில் பல வகைகள் காணப்படுகின்றன. குறிப்பாக, அஷ்டாங்க, ஷடாங்க விமானங்களைச் சிறப்பாகக் காட்டுவர். ஒருதளத்தைக் கொண்டு அமைவது ஷடாங்க விமானம், ஒன்றன்மேல் ஒன்றாக மூன்று தளங்களையுடையது அஷ்டாங்க விமானமாகும்.[73]

கருவறையைச் சுற்றி ஒன்று முதல் ஏழு பிரகாரங்கள் வரை அமைக்கப் பெறும். கடைசியாக இடம்பெறும் பிரகாரத்தின் மதில் சுவரின் மீது கோபுரம் அமைக்கப்படும்.

கருவறையின் சுற்றுச் சுவரில் சிவன் கோயில்களில் பொதுவாகத் தென்திசையில் தட்சிணாமூர்த்தியும் (ஆலமர் செல்வன்), மேற்கே லிங்கோத் பவரும் (அண்ணாமலையார்), வடக்கே பிரமனும், துர்க்கையும் இடம் பெறுவர். மேற்கே லிங்கோத்பவருக்கு மேலே விமானத்தில் திருமால் திருவுருவம் அமைந்திருக்கும். விமானத்தின் கிரீவப் பகுதியில் நான்கு திசையிலும் நந்தி உருவம் அமைக்கப்பட்டிருக்கும்.

கருவறைக்கு அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் தென்திசை நோக்கி நடராசர் சன்னிதியும், மகாமண்டபத்தில் அம்மன் சன்னதியும் இடம்பெறும். பிரகாரங்களில் முருகன், விநாயகர், கஜலட்சுமி, நவக்கிரகங்கள் முதலிய பரிவார தெய்வங்களும், 63 நாயன்மார்களும் வரிசையாக இடம்பெறும்.

கருவறைக்கு நேரே கீழே நந்தியும் அதையடுத்துப் கொடிமரம், பலிபீடம் முதலியன அமைக்கப்பட்டிருக்கும்.

மதில் சுவரில் அமையும் கோபுரங்கள் கோயில்களின் அமைப்பிற்கேற்பப் பல நிலைகளுடன் அமைக்கப்பெற்றிருக்கும். நிலைகள் ஒற்றைப்படையில் அமைக்கப்படும். இக்கோபுர அமைப்பில் பல புராணக் காட்சிகள் பொம்மைகளாக இடம்பெறும். இக்கோபுரங்கள் பின்வரும் உறுப்புக்களைக் கொண்டவை. அவை,

1. பஞ்சரம் (கர்ணக் கூட்டிற்கும் சாலைக்குமிடையே யுள்ள பகுதி)
2. கோஷ்ட பஞ்சரம் (தேர் போல மாடக்குழி யுடையது)
3. கும்ப பஞ்சரம் (கலச வடிவிலுள்ளது)

4. சாலை (நிலைகளின் நடுவில் அமைந்துள்ள அறைகள்)
5. அக்கரப்பட்டியல் (வாயில்)[74]

என்பன.

கோயிலுக்குள் அமையும் புற உறுப்புகள்

1. மண்டபங்கள் மற்றும் பாகசாலை (மடைப்பள்ளி)
2. கிணறுகள்
3. சுரங்கங்கள்
4. பொக்கிஷ அறை
5. தானியக் கிடங்கு
6. மருத்துவ சாலை
7. யாக சாலை
8. நந்தவனம்
9. கோசாலை (பசுமடம்)
10. திருச்சுற்று மாளிகை.

மேற்கண்ட ஆகமங்கள் கூறும் அமைப்புகள் இன்றைய கோயில்களில் காணப்படுகின்றன. தேவாரம் குறிப்பிடும் எழுவகைக் கோயில்களுள் தூங்கானை மாடக் கோயில், கரக்கோயில் குறித்த விளக்கங்கள் இன்று முழுமையாகக் கிடைக்கின்றன. மற்ற ஞாழற்கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் குறித்த கட்டுமான அமைப்பு குறித்த விளக்கங்களோ, ஆகம விதிகளோ முழுமையாகக் கிடைக்கவில்லை.

தேவார மூவர் சுட்டிய திருக்கோயில்களில் எத்தகைய ஆகம விதிகள் பின்பற்றப்பட்டன என்பதற்குத் தகுந்த சான்றுகள் தேவாரப் பாடல்களில் கிடைக்கப்பெறவில்லை. ஆனால், திருக்கோயில் வழிபாட்டு முறைகளை முழுமையாகப் பதிவு செய்துள்ளனர்.

தொகுப்புரை

- இதுகாறும் ஆய்வு செய்து தொகுத்த தகவல்களின் படி இவ்வியலில், சங்க காலத்திற்கு முற்பட்ட காலந்தொட்டே கோயில்கள் இருந்தமையைச் சங்கப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.
- இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு போன்றன நாளடைவில் தனியானதொரு கோயிலமைப்பைப் பொது இடத்தில் அமைத்து வழிபடும் வழக்கமாக மாறியிருக்கக் கூடும் எனவும் அறியமுடிகிறது.
- சிலம்பு, மணிமேகலை முதலிய சங்கம் மருவிய காலத்து இலக்கியங்கள் சிவன், திருமால், இந்திரன் முதலிய தெய்வ வழிபாடுகளும், கோயில்களும் இருந்தமையைச் சுட்டுகின்றன.
- சங்கம் மருவிய காலத்தை அடுத்த களப்பிரர் ஆட்சிக் காலமான இருண்ட காலத்தில் நடைபெற்ற வழிபாடுகள், கோயில்கள், பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை அறியப் போதுமான சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை.
- சோழன் கோச்செங்கணான் எனும் முற்காலச் சோழன் எழுபது மாடக் கோயில்களைத் தமிழகத்தில் கட்டினான் என்ற செய்தி மூவர் தேவாரம் மற்றும் திருமங்கை யாழ்வார் பாசுரத்தின் மூலம் அறியப்படுகிறது.
- பல்லவர்கள் தமிழகத்தின் வடக்கிலும் முற்காலப் பாண்டியர்கள் தெற்கிலும் குடைவரைக் கோயில் களையும், மலைக்கோயில்களையும், கட்டுமானக் கோயில்களையும் கி.பி.6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் ஏற்படுத்தினர்.

- மாமல்லபுரம், மண்டகப்பட்டு, காஞ்சிபுரம் முதலிய ஊர்களில் காணப்படும் கோயில்கள் மூலமும், கல்வெட்டுச் செய்திகள் மூலம் பெறப்படுகிறது.
- தேவாரத்தில் பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், மாடக்கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் ஆகிய எட்டு வகைகள் காணக்கிடைக்கின்றன. ஆனால், இவற்றின் கட்டுமான அமைப்பு குறித்தோ, வழிபாட்டு வேறுபாடுகள் குறித்தோ தேவாரத்தில் செய்திகள் இல்லை.
- திருக்கோயில் அமைப்புகளை ஆகமங்கள் குறிப்பிட்டுள்ளன. சைவ ஆகமங்கள் மொத்தம் 28. இவற்றில் ஐந்து ஆகமங்களே முழுமையாகக் கிடைத்துள்ளன.
- திருக்கோயில் அமைப்பு மனித உடலின் அமைப்பைப் போன்றதே ஆகும். தென்னிந்தியக் கோயில்கள் பெரும்பாலும் அதிட்டானம், பிட்டி, பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி எனும் ஆறு உறுப்புகளைக் கொண்டவையாகும்.
- திருக்கோயில்களுக்குள் பத்து புற உறுப்புகள் அமைந்துள்ளன. தேவார மூவர் காலத்தில் இன்றுள்ள முழுமையான திருக்கோயில் அமைப்புகள் இல்லை.

குறிப்புகள்

1. திருக்குறள், 388.
2. நாலாயிரத் திவ்விய பிரபந்தம், நம்மாழ்வார் திருமொழி, பா.2454.
3. புறநானூறு, பா.241.
4. மேலது, பா.29.
5. பட்டினப்பாலை, பா.அ.36.
6. தொல். எழுத்து., நூ.294.
7. நன்னூல். எழுத்து., நூ.162.
8. தொல்., நூ.1034.
9. திருநாவுக்கரசர் தேவாரம், 6:61:1.
10. சுந்தரர் தேவாரம், திருக்கச்சி ஏகம்பம், பா.1.
11. புறநானூறு, பா.260.
12. அகநானூறு, பா.309.
13. மேலது, பா.167.
14. மேலது, பா.290.
15. சிலம்பு. ஊர் காண் காதை, பா.அ.7.
16. மேலது, இந்திர விழவூரெடுத்த காதை, பா.அ.169.
17. மேலது, பா.அ.170-172.
18. மேலது, ஊர்காண் காதை, பா.அ.8-10.
19. தமிழ்நாட்டு வரலாறு தொகுதி 1, தமிழ் வளர்ச்சிக் கழகம், ப.139.
20. கோயிற்கலை, அழகப்பா பல்கலைக்கழகம், ப.3.
21. மேலது, ப.5.
22. மேலது, ப.6.
23. தமிழ்நாட்டு வரலாறு தொகுதி 1, தமிழ்வளர்ச்சிக் கழகம், ப.144.
24. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் கலைக்களஞ்சியம், ப.195
25. திருநாவுக்கரசர் தேவாரம், 6:71:5.
26. அரங்கன், ஆலய வழிபாடு, ப.28

27. தி. இராசமாணிக்கம், தென்னிந்திய சிற்பங்களும் கோயில்களும், ப.82.
28. திருநாவுக்கரசர் தேவாரம், 4:49:4.
29. மேலது, 4:65:3.
30. சுந்தரர் தேவாரம், 7:37:11.
31. யு. சுப்பிரமணியன், தமிழர் சமயம், தமிழகத்துக் கோயில்கள், ப.47.
32. திருநாவுக்கரசர் தேவாரம், 5:19:9.
33. செ. வைத்தியலிங்கம், தமிழகக் கவின்கலை மாட்சி, ப.64.
34. திருநாவுக்கரசர் தேவாரம், 5:19:10.
35. செ. வைத்தியலிங்கம், தமிழகக் கவின்கலை மாட்சி, ப.65.
36. திருநாவுக்கரசர் தேவாரம், 5:19:9.
37. செ. வைத்தியலிங்கம், தமிழகக் கவின்கலை மாட்சி, ப.61.
38. மேலது, ப.47.
39. சுந்தரர் தேவாரம், 7:12:1.
40. திருநாவுக்கரசர் தேவாரம், 5:11:1.
41. யு. சுப்பிரமணியன், தமிழர் சமயம், தமிழகத்துக் கோயில்கள், ப.48
42. திருஞானசம்பந்தர் தேவாரம், திருஆலவாய், பா.4.
43. நம்பியாண்டார் நம்பி, கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம், பா.67.
44. நக்கீரர், திருமுருகாற்றுப்படை, பா.அ.256.
45. கலித்தொகை, பா.30.
46. ந.சி. கந்தையா, தமிழர் சமயம், ப.41.
47. மேலது, ப.41.
48. கு.ச. ஆனந்தன், தமிழ் வழிபாடு தமிழர் பிறப்புரிமை, ப.25.
49. மேலது, ப.25.
50. மேலது, ப.25.
51. மேலது, ப.25.

52. ந.சி. கந்தையா, தமிழர் சமயம், ப.49.
53. கு.ச. ஆனந்தன், தமிழ் வழிபாடு தமிழர் பிறப்புரிமை, ப.27.
54. மேலது, ப.27.
55. திருவாசகம், கீர்த்தித் திருஅகவல், பா.அ.9-10.
56. மேலது, சிவபுராணம், பா.அ.4.
57. கு.ச. ஆனந்தன், வழிபாட்டில் வல்லாண்மை, பாவலரேறு பெருஞ்சித்திரனார், அணிந்துரை.
58. மேலது, ப.13.
59. தொல். நூ.1006.
60. கு.ச. ஆனந்தன், தமிழ் வழிபாடு தமிழர் பிறப்புரிமை, ப.52.
61. மேலது, ப.52.
62. மேலது, ப.52.
63. திருநாவுக்கரசர் தேவாரம், 4:109:1.
64. மேலது, 5:2:8.
65. திருமூலர், திருமந்திரம், பா.1823.
66. கிருபானந்தவாரியார், ஆலயம் ஏன்?, ப.8.
67. மேலது, ப.8.
68. கோயிற்கலை, அழகப்பா பல்கலைக்கழகம், ப.21.
69. மேலது, ப.22.
70. மேலது, ப.23.
71. மேலது, ப.24.
72. மேலது, ப.25.
73. மேலது, ப.26.
74. மேலது, ப.28.

தேவாரத்தில் வழிபாடு

வழிபாடு என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி, வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசை, வழக்கம், சமயக் கோட்பாடு என்று பொருள் தருகிறது.[1] இதனைக் கொண்டு வழிவழியாக வரும் சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி, வணங்குதல், பூசனை செய்தல் இரண்டையும் வழிபாடு எனக் கொள்ளலாம். இத்தகைய வழிபாடு குறித்து மூவர் முதலிகள் குறிப்பிடும் வகைகள், வழிமுறைகள் ஆகியவற்றை விளக்குவது இவ்வியலின் நோக்க மாகும்.

வழிபாட்டில் நால்வகை நெறிகள்

சைவ சமயச் சாத்திரங்கள் இறைவழிபாட்டில் நால்வகை நெறிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றைக் காட்டுகின்றன.

1. சரியை நெறி

சரியை என்பது சரீரத்தை அடிப்படையாகக் கொண்டது. சரீரம் என்பது உடலைக் குறிப்பதாகும். வடசொல்லிலிருந்து இது பெறப்பட்டதால் சரியை எனப்பட்டது. இதற்கு நேரான தமிழ்ச்சொல் 'தொண்டு நெறி' என்பது ஆகும். குறிப்பாக, உடல்தொண்டை இது பற்றி நிற்கும்.

இந்நெறியின் கீழ், திருக்கோயிலை வலம் வருதல், திருக்கோயி லுக்குப் பூமாலை தொடுத்தளித்தல், திருக்கோயிலைத் துப்புரவு செய்தல் (அலகிடல், மெழுகிடல்), விளக்கிடுதல், திருமஞ்சன நீர் எடுத்தல், தீப தூபங்களிடுதல், நந்தவனம், பசுமடம் அமைத்தல், ஆடிப்பாடி வழிபடுதல் போன்ற செயல்கள் அடங்கும்.[2]

2. கிரியை நெறி

கிரியை என்பது ஐம்புலன்களில் வாயினால் வழிபடுவது. ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுதல், திருமுறைகளை நாள்தோறும் பாராயணம் செய்தல், தோத்திர, சாத்திரக் கருத்துக்களைப் பிறர்க்கு எடுத்துரைப்பது முதலியன. இவை கிரியை நெறியின் கீழ் அடங்கும்.[3]

3. யோக நெறி

யோகம் என்பது மனத்தினால் வழிபாடு செய்வது. இஃது, இறைவனின் வடிவத்தை மனத்தில் வைத்துத் தியானிப்பது. இஃது 'ஆத்மார்த்தம்' என்று கூறப்படும் உள்ளார்ந்த (அக) பூசையாகும். உருத்திராக்க மாலை (அக்க மாலை) கொண்டு ஐந்தெழுத்து மந்திரத்தை மனத்தால் எண்ணுதலும் யோக நெறியின் பாற்படும்.[4]

4. ஞான நெறி

இறைவனை ஞானமாகிய பேரறிவால் வழிபடுவது. சரியை, கிரியை, யோகம் என்ற மூவகை வழிபாடுகளையும் தவறாமல் அவ்வவற்றுக்குரிய முறைப்படி செய்வோர்க்கு இறைவன் குருவடிவாக வந்து ஞானத்தை உணர்த்துவான். எனவே, இறைவன் குருவடிவில் மானுடச் சட்டை தாங்கி வருவதால் குரு பீடத்தில் இருப்போரை வணங்குவதும், வழிபடுவதும் அவரிடம் ஞானோபதேசம் பெற்று உய்தலும் ஞானநெறி எனப்படுகிறது.[5]

நால்வகை நெறிகளைக் கீழ்க்கண்டவாறு கூறுவர்.

1.	சரியை நெறி	-	தாச மார்க்கம்
2.	கிரியை நெறி	-	சற்புத்திர மார்க்கம்
3.	யோக நெறி	-	சக மார்க்கம்
4.	ஞான நெறி	-	சன்மார்க்கம்

இதனைச் சிவஞான சித்தியார்,

"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க் கம்என்றும் சங்கரனை அடையும்
நன்மார்க்க நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வார்"

என்று புலப்படுத்துகிறது.[6]

இந்நெறிகளைக் கடைபிடித்துய்ந்ததாகச் சைவ சமயக் குரவர் நால்வரையும் குறிப்பிடுவர்.

1. திருநாவுக்கரசர் - சரியை நெறி
(தாசமார்க்கம் - தொண்டு நெறி)

2. திருஞானசம்பந்தர் - கிரியை நெறி
(சற்புத்திர மார்க்கம் - மகன்மை நெறி)

3. சுந்தரர் - யோக நெறி
(சகமார்க்கம் - தோழமை நெறி)

4. மாணிக்கவாசகர் - ஞான நெறி
(சன்மார்க்கம் - குரு மாணவ நெறி)

திருமுறைகளிலும் பிற தோத்திர, சாத்திர நூல்களிலும் இந்நெறிகளுக்குப் பலவிடங்களில் சான்றுகள் கிடைக்கின்றன.

நால்வகை நெறிகளின் விரிவு

நால்வகை நெறிகள் ஒவ்வொன்றும் நான்கு நான்காக உள்ளன.

1. சரியை
   அ. சரியையில் சரியை
   ஆ. சரியையில் கிரியை
   இ. சரியையில் யோகம்
   ஈ. சரியையில் ஞானம்

2. கிரியை
   அ. கிரியையில் சரியை
   ஆ. கிரியையில் கிரியை
   இ. கிரியையில் யோகம்
   ஈ. கிரியையில் ஞானம்

3. யோகம்
   அ. யோகத்தில் சரியை
   ஆ. யோகத்தில் கிரியை

இ. யோகத்தில் யோகம்
ஈ. யோகத்தில் ஞானம்

4. ஞானம்
அ. ஞானத்தில் சரியை
ஆ. ஞானத்தில் கிரியை
இ. ஞானத்தில் யோகம்
ஈ. ஞானத்தில் ஞானம்

எனப் பதினாறாக இந்நால்வகை நெறிகள் விரியும். சமயக் குரவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நெறியைப் பின்பற்றினாலும் அவர்களுடைய திருமுறைகளில் நால்வகை நெறிகளும் புலப்படுத்தப்பட்டுள்ளன.

நால்வகை நெறிகளின் சாரம்

மனம், வாக்கு, காயம் இவற்றால் இறைவனை வழிபட வேண்டும் என்பதே இந்நால்வகை நெறிகளின் சாரமாகும். அதற்காகவே இம் மானுடப் பிறவி வாய்த்துள்ளது. இக்கருத்தை,

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலு மூவர் ஒன்றையு முணரா ரந்தோ"

என்று சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது.[7]

முத்தி நிலைகள்

இந்நால்வகை நெறிகட்கு நான்கு முத்தி நிலைகளைச் சிவஞான சித்தியார் கூறுகிறது.

"...... முத்திகள்சா லோக்கியசா மீப்ய
சாரூப்ய சாயுச்ய மென்றுசூர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தா லெய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபத மென்பர்"[8]

இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

	நெறி	முத்திநிலை	விளக்கம்
1.	சரியை	சாலோகம்	இறைவன் உலகு அடைதல்
2.	கிரியை	சாமீபம்	இறைவன் அருகிலிருத்தல்
3.	யோகம்	சாரூபம்	இறைவன் உருவைப் பெறுதல்
4.	ஞானம்	சாயுச்சியம்	இறைவனோடு இரண்டறக் கலத்தல்

திருமூலரும் நால்வகை முத்தி நிலைகளைக் குறிப்பிடு கின்றார்.[9]

திருக்கோயில் வழிபாட்டில் சரியை நெறி பெறும் இடம்

நால்வகை நெறிகளையும் சுட்டும் திருமந்திரம், சரியை என்பதைக் கோயில் வழிபாட்டில் வைத்து விளக்குகிறது.

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே"

என்பது அத்திருமந்திரப் பாடலாகும்.[10] இப்பாடலின் மூலம் பல தலங்களுக்கு யாத்திரையாகச் சென்று திருக்கோயில்களை வழிபடவேண்டும் என்பதும் துதிப்பாடல்களைப் பாடிப் பணிய வேண்டும் என்பதும் புலனாகிறது.

சரியை நெறிக்கு விரிவான விளக்கத்தைச் சிவஞான சித்தியார் கூறுகிறது. அவ்விளக்கமும் திருக்கோயில் வழிபாட்டையே முன்னிறுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது. அப்பாடல்,

"தாதமார்க் கஞ்சாற்றில் சங்கரன்றன் கோயில்
தலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சார்த்திப்
போதுகளுஞ் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதர்க்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்

தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்திருவே டங்கண்டா லடியேன் செய்வதி
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுலகி ருப்பர்"

என்பதாகும்.[11] இப்பாடலின் மூலம் கோயிலில் அலகிடுதல், மெழுகிடுதல், மலர் பறித்தல், தொடுத்தல், புகழ்ந்து பாடுதல், விளக்கிடுதல், நந்தவனம் அமைத்தல், சிவனடியார்களைப் பணிதல், அவர்கட்குப் பணிசெய்தல் போன்றன சரியையின் பாற்படும் என உணரலாம்.

இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் சென்று வழிபடும் நெறியும் சரியை நெறியாகும் என்பது திருமூலர் கருத்தாகும்.

"சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவர் ஆயினோர்
சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே"[12]

என்பது திருமந்திரம். திருமந்திர உரையாசிரியர்களுள் ஒருவரான சி. அருணைவடிவேலு முதலியார் இந்நெறியினை "நெடுந்தொலைவான நாட்டிலும் சென்று மூர்த்தி, தலம், தீர்த்தங்களை முறைப்படி வணங்கியவரே சரியை நெறி முற்றியவர்" எனப் புலப்படுத்துகின்றார்.[13]

அடியார் தொண்டும் சரியையே

'நடமாடும் கோயில்' என்று திருமூலரால் குறிக்கப் பெறும் அடியார் களுக்குச் செய்யும் தொண்டும், அவர்களின் தொண்டுக்கு உறுதுணையாய் நிற்றலும் சரியையே என்கின்றன சாத்திர நூல்கள்.[14] சிவஞான போதத்தில்,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரோடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே"[15]

எனவரும் பாடலை நோக்கும் போது சிவனடியார்களையும் சிவமாகவே பாவித்துத் தொண்டு புரிதலும், தொழுதலும் வழிபாடே என்பது புலனாகிறது. எனவே, சரியை நெறி என்பது திருக்கோயில் வழிபாட்டோடு நிற்காமல் மக்கள் தொண்டு, அடியார் தொண்டு எனப் பரந்த எல்லையைக் கொண்டதாகிறது.

முழுப்பார்வையில் திருக்கோயில் வழிபாட்டில் சரியை என்பதை திருக்கோயிலை அலகிடுதல், மெழுகிடுதல், தூய்மை செய்தல், மலர் கொய்தல், மலர் தொடுத்தல், விளக்கிடுதல், முட்புதர்களை அகற்றுதல், ஆடுதல், பாடுதல், திருமஞ்சன நீர் கொணர்தல், பசுமடம், நந்தவனம் அமைத்தல், திருக்கோயிலை வலம் வருதல், வலம் வருவதற்குப் பாதை யமைத்துக் கொடுத்தல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல், தூபமிடல், விளக்கிடல், எண்ணெய், நெய் முதலாயின வழங்குதல், பறை, பம்பை, கோடு, பேரிகை, துடி, முழா, தாரை, கொம்பு முதலிய இசைக்கருவிகள் செய்து தருதல், கோரோசனை, பஞ்சகவ்வியம் முதலிய தருதல், தலயாத்திரை மேற்கொண்டு வழிபாடியற்றல் போன்றவை யாகும்.

அடியார் தொண்டில் சரியை என்பது சிவ அடியார் களையும் சிவமாகவே பாவித்து அவர்கட்குத் தொண்டு செய்தலைப் பற்றி நிற்கிறது. அவ்வகையில் அடியார்களுக்கு உண்கலம் தருதல், உணவிடல், உற்றுழி உதவுதல், உறு பொருள் கொடுத்தல், ஆடை தருதல், ஆடை துவைத்துத் தருதல், அடியார் பணிகேட்டு நிற்றல், அடியார்கட்குத் தேவையான வழிபாட்டுப் பொருள்களை வழங்குதல், அவர்தம் பணிகளுக்குத் துணை நிற்றல் போன்றவை அடங்கும்.

மேற்கூறியவற்றையெல்லாம் தேவாரம் சுட்டும் திருக்கோயில் வழிபாட்டில் காணலாம்.

வழிபாட்டில் மலர்

திருக்கோயில் வழிபாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது மலர் வழிபாடாகும். இம்மலர் வழிபாடு

சங்க காலந் தொட்டே இருந்துளது. சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் இம்மலர் வழிபாட்டைப் பதிவு செய்துள்ளன.

"பரவியும் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் உருவின் கடவுள் பேணி"[16]

"நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய்"[17]

"பூப்பலி விட்ட கடவுளை"[18]

"..... குருந்தே முல்லை என்று
இந்நான்கு அல்லது பூவும் இல்லை"[19]

"கடவுள் காந்தள்"[20]

எனவரும் சங்கப் பாடலடிகள் மலர் வழிபாட்டை உணத்து கின்றன.

தேவாரம் சுட்டும் மலர்கள்

சங்க கால வழிபாட்டு மரபுகளை மீட்டுருவாக்கம் செய்து வளர்த்தவர்கள் தேவாரம் பாடிய மூவர் ஆவர். எனவே, பழங் காலத்து வழிபாட்டு மரபில் சிறப்பிடம் பெற்ற மலர் வழிபாட்டைத் தேவார மூவரும் விதந்தோதுகின்றனர். பல்வகை மலர்களைத் தனித்தனியாகவும், குறிப்பிட்ட சில மலர்களை ஒரு தொகுப்பாகவும் கூறியுள்ளனர். தொடுத்த மலர்களை, இண்டை, மாலை, கண்ணி, தார் என வகைப்படுத்திப் புகன்றுள்ளனர். புறநானூறு குறிப்பிடும் கொடிப்பூ, கோட்டுப்பூ, நிலப்பூ, நீரப்பூ (புறம்.335) என்ற நிலைகளிலும் சுட்டியுள்ளனர்.

தேவாரம் பதிவு செய்துள்ள மலர்கள்

தாமரை (1:32:2), கரந்தை (1:36:2), நந்தி வட்டம் (4:84:8), கொன்றை (4:89:5), துழாய் (4:89:9), வன்னி (நெய்த்தானம், நாவு.), ஊமத்தம் (4:89:5), கூவிளம் (4:89:5), செண்பகம் (5:11:4), மல்லிகை (4:43:8), எருக்கு (5:95:5), குரவம் (ஒற்றியூர் 'பரவை', நாவு.), கோங்கம் (ஒற்றியூர் 'பரவை', நாவு.),

அடும்பு (திருக்காட்டுப்பள்ளி, நாவு.), நொச்சியம் பச்சிலை (நன்னிலம், சுந்.), தும்பை ஆகியன.

அட்டமா மலர்கள்

1. செந்தாமரை, 2. நீலோத்பலம், 3. செண்பகம், 4. புன்னை, 5. நந்தியாவட்டை, 6. அலரி (அரளி), 7. வெள்ளெருக்கு, 8. பாதிரி ஆகியன.

கோட்டுப்பூ வகைகள்/இலைகள்

வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, கோங்கு, மந்தாரை, மாவிலிங்கை, நொச்சி, பன்னீர், அகில், மா, அசோகு, பாதிரி, வெள்ளெருக்கு, இலந்தை, பலாசு, நுணா, நறவம், புன்னை, விளா, மருது, கொன்றை, நெல்லி, குரா, செருந்தி, கிளுவை, குருந்து, வில்வம், நாவல் ஆகியன.

கொடிப்பூ, இலைகள்

காந்தள், மல்லிகை, முல்லை, மௌவல், வெற்றிலை, தாளி, கருங்காக் கொன்றை, வெண்காக் கொன்றை, குருக்கத்தி, இருவாட்சி, கொகுடி, பிச்சி ஆகியன.

நீர்ப்பூ

செந்தாமரை, வெண்தாமரை, செங்கழுநீர், நீலோத்பலம், கருநெய்தல், வெண்நெய்தல், அல்லி ஆகியன.

நிலப்பூ, இலைகள்

பட்டி, நாயுருவி, கண்ணுப்பூ, பச்சை, செவ்வந்தி, தும்பை, வெட்டி, மருக்கொழுந்து, சிவகரந்தை, விஷ்ணு கரந்தை, துளசி, செம்பரத்தை, கொக்கிறகு, அனிச்சம், நந்தியாவட்டை, கரு ஊமத்தை, பொன்னாவரை ஆகியன.

அட்டபத்திரம்

வில்வம், துளசி, நீர்முள்ளி, நாயுருவி, விளா, வன்னி, நெல்லி, அருகு ஆகியன.

நிர்மாலியம் ஆகாத மலர், இலைகள்

வில்வம்	- ஆறுமாதம்
துளசி	- 12 நாட்கள்
நீலோத்பலம், தாமரை	- 7 நாட்கள்
அரளி	- 3 நாட்கள்

இவைகளைப் பயன்படுத்திய பின்னரும் கழுவி மீண்டும் பூசிக்கலாம்.

பூக்களின் நிலைகள்

பூக்களை அரும்பு, போது, மலர் என்று பொதுவாக மூன்றாகப் பிரிப்பர். மொக்கு, முகை, மொட்டு, அலர் போன்ற வழக்காறுகளும் உள்ளன. மலர்களின் இத்தனை நிலைகளையுமே தேவாரம் சுட்டியுள்ளது.

	நிலை	தேவாரச் சான்றுகள்
1.	அரும்பு	"அரும்பொடு மலர்கள் கொண்டு"[21]
		"அரும்பற் றப்பட ஆய்மலர்"[22]
2.	போது	"போதொடு நீர்சுமந் தேத்தி"[23]
3.	மலர்	"விரிமலர் ஆயன தூவி"[24]
		"சுரும்பார் விண்டமலர்"[25]
		"வண்டு லாமலர் கொண்டு"[26]
		"சுரும்பார் மலர்"[27]
		"விண்ட மாமலர்"[28]
4.	அலர்	"வாசமிக் கலர்கள் கொண்டு"[29]
		".... அலர்ந்தகொன்றை, ஏடமர் சடையர்"[30]
		"அலர் கொண்டுமுன வந்திறைஞ்ச"[31]
		"முகை நறுமலர்"[32]

மலரின் தன்மைகள்

மலர் வழிபாட்டின் சிறப்பும் முக்கியத்துவமும் பாடிய தேவார மூவர் அம்மலர் வழிபாட்டிற்குரிய மலர்கள் எத்தன்மைத்தாய் இருக்க வேண்டும் என்பதையும் பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

1. மலர்கள் தூயதாய் இருக்கவேண்டும்
2. குளிர்ச்சி பொருந்தியதாக இருக்கவேண்டும்
3. நறுமணம் உடையனதாய் இருக்கவேண்டும்
4. தேன் மிக்கதாய் இருக்கவேண்டும்
5. காலை, மாலை நேரங்களில் பறித்ததாய் இருக்கவேண்டும்
6. இலையோடு கூடியதாகவும் இருக்கலாம்.

இக்கருத்துகளுக்குப் பின்வரும் பாடலடிகள்,

"விண்டலர்ந்து நாறுவதோர் வெள்ளெருக்க நாண்மலர்"[33]

"காலை எழுந்து கடிமலர் தூயனதாம் கொணர்ந்து"[34]

"வாச நாண்மலர் கொண்டடி வைகலும்"[35]

"தொழுது தூமலர் தூவி"[36]

"பூத்தேர்ந்தாயன கொண்டு பொன்னடி"[37]

"இலையார் மலர்கொண்டு"[38]

"வெறியார் மலர் கொண்டு"[39]

"விரைகமழ் மாமலர் தூவி"[40]

"மட்டுலாம் மலர்கொண்டு"[41]

"தணிஆர் மலர்கொண்டு"[42]

ஆகியன சான்றுகளாகும்.

வழிபாட்டில் மலர்களைப் பயன்படுத்தும் முறைகள்

மலர்களைப் பறித்துத் தனித்தனியாகவும், இதழ்க ளாகவும், பல மலர்களைக் கலந்தும், மாலையாகத் தொடுத்தும், இண்டை, கண்ணி, தார் என்ற நிலைகளில் கட்டியும் வழிபடும் வழக்காறுகள் தேவார மூவர் காலத்து இருந்தன.

தாமரை மலரை முழுமையாகவும், இதழ்களைப் பிரித்தும், கொன்றை மலரைக் கொத்தாகவும், மல்லிகையை இண்டை யாகவும், தனிமலர்களைத் தூவியும் வழிபாட்டில் பயன்படுத்தி யுள்ளனர். இவ்வழிபாட்டு மரபுகள் பின்வருமாறு:

தூவி வழிபடுதல்

தனித்தனியாக மலர்களைத் தூவி வழிபாடு செய்த மரபுகளையும் தேவாரம் சுட்டுகிறது. சான்றுகளாக,

"கார்இடு மாமலர் தூவி"

"இனமலர் ஏய்ந்த தூவி"

"தளைஅவிழ் மாமலர் தூவி"

"தடமலர் ஆயின தூவி"

"சயவிதி மாமலர் தூவி"[43]

"வண்ணநன் மலர்கள் தூவி"[44]

என வருவனவற்றைக் காட்டலாம்.

தொடுத்த மலர்

தேவார மூவர் காலத்தில் தனித்தனி மலர்களைத் தொடுத்தும் வழிபாடு செய்துள்ளனர். சான்றுகளாக,

"தொடைஆர் மாமலர் கொண்டு"[45]

"துலக்கின் நன்மலர் தொடுத்தால் தூயவிண் ணேறலாரும்"[46]

"தொடுத்த நன் மாலை யேந்தி"[47]

"...... பன் மாலையால்"[48]

என வருவனவற்றைச் சுட்டலாம்.

இண்டை

இண்டை எனப்படுவது தலைமாலை வகையுள் ஒன்றாகும். இதனை மூவர் தேவாரம்,

"சுரும்பார் மலர் இண்டை கட்டி"[49]

"வண்டு லாமலர் கொண்டு வளர்சடைக்கு
இண்டை மாலை புனைந்தும்"[50]

"இண்டை கட்டி இணையடி யேத்தியும்"[51]

"கட்டார்ந்த இண்டை கொண்டு"[52]

என்று சுட்டிப் பாடுகிறது.

கண்ணி

கண்ணியென்பதும் மாலை கட்டுவதில் ஒரு வகை யாகும். இவ்வகை தேவாரத்துள்,

"மல்லிகைக் கண்ணியோடு மாமலர்க் கொன்றை சூடி"[53]

என இடம்பெறுகிறது.

பிணையல்

முடியப்பெற்ற மாலை 'பிணையல்' எனப்படும். இதனை நாவுக்கரசர்,

"...... கொன்றை, பிணை யல் சேர்சடை"[54]

என்று குறிப்பிட்டுள்ளார்.

தார்

தார் என்பது முடியப்பெறாத மாலையாகும். இறைத் திருமேனியின் இருபுறமும் தொங்கவிடப்படும் அமைப்புடையது. இவ்வகையை,

"தாரும்தண் கொன்றையும்"[55]

என்று தேவாரம் குறிப்பிட்டுள்ளது.

மேற்கூறப்பெற்ற இவைகளெல்லாம் மலர்களைப் பல வகைகளாகப் பயன்படுத்தும் வழிபாட்டு முறைகளை எடுத்துக் கூறும் சான்றுகளாகும்.

மலர் வழிபாட்டு வகைகள்

மலர்களைத் தனித்தனியே தூவி வழிபடுவதும், இண்டை, பிணையல், மாலை, தார் எனத் தொடுத்து வழிபடுவதும் ஆகிய நிலைகள் உள்ளன. அவ்வழிபாட்டில் ஈடுபடும் போது கைக் கொள்ள வேண்டிய முறைகளும் இடம்பெறுகின்றன. அவை:

- கூட்டாக மலர் வழிபாடு செய்தல்
- திருமஞ்சன நீரொடு மலரையும் உடன் எடுத்துச் செல்லுதல்
- காலை, மாலை இருவேளையும் வழிபாட்டோடு மலரையும் இணைத்தல்
- சந்தனம், நறுமணப்புகை (தூபம்) வழிபாட்டுப் பொருட்களோடு மலர்களையும் சேர்த்தல்
- சொன்மாலையோடு பூமாலையும் வழிபாட்டில் ஒருங்கு செய்தல்
- ஆர்வத்தோடு/விருப்பத்தோடு மலர்வழிபாடு செய்தல் வேண்டும்
- வாழ்த்தில் மலரைப் பயன்படுத்துதல்
- ஐந்தெழுத்து மந்திரம் (நமசிவாய) சொல்லி மலர் வழிபாடு செய்தல்
- அன்புடன் நெக்குருகு நெஞ்சத்துடன் மலர் வழிபாடு செய்தல்

❖ வேதம் ஓதி மலர் வழிபாடு செய்தல்

என்பனவாகும். இக்கருத்துக்கள் மூவர் தேவாரத்தில் உள்ளன. சான்றாக,

"முறையின பலசொல்லி ஒண்
மலர் சாந்துஅவை கொண்டு"[56]

"கரவுஇன் றிநன்மா மலர்கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்"[57]

"..... கொய் மலரால்
ஏல இண்டை கட்டி நாமம்
இசைய எப்போதும் ஏத்தும்"[58]

"போதும் சாந்தும் புகையும்"[59]

"போதொடு நீர்சுமந்து ஏத்திக்"[60]

"தொடர்தா மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற"[61]

"அருப்பொடு மலர்கள் கொண்டங்கே
ஆர்வத்தை உள்ளே வைத்து"[62]

"ஓதிமா மலர்கள் தூவி"[63]

"இச்சையால் மலர்கள் தூவி"[64]

"பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே"[65]

என்பவற்றைக் கூறலாம்.

வழிபாட்டில் திருமஞ்சனம்

மூவர் தேவாரம் உருவ வழிபாட்டையும் அருவுருவ வழி பாட்டையும் வலியுறுத்தும் நோக்கம் கொண்டது. அவ்வழிபாடு கருவறையில் இருக்கும் மூலவர் மற்றும் மண்டபம், திருச்சுற்றுகளில் இடம்பெறும் உலோகத் திருமேனிகளை உள்ளடக்கியதாகும் மூலவர் எனப்படும் கருவறையுள் இடம்பெறும்

இறைத் திருமேனியை அசைக்க இயலாவண்ணம் நிலத்தோடு வைத்து, எட்டு வகை மருந்துகளால் ஆன கலவையைப் பற்றாசாகப் பயன்படுத்தி அமைத்திருப்பர்.

உற்சவத் திருமேனி எனப்படும் உலோகத் திருமேனிகள் நகர்த்தும் நிலையிலும், விழாக்காலங்களில் பல்லக்கு, தேர், சப்பரம் முதலியவற்றில் வைத்து அலங்கரித்துத் திருவீதி உலா நிகழ்த்தும் வண்ணம் அமைந்திருக்கும். உற்சவத் திருமேனிகள் ஐம்பொன் திருமேனிகளாகவும் செப்புத் திருமேனிகளாகவும் அமையும். தேவார ஆசிரியர்கள் குறிப்பிடும் தேர்த்திருவிழா, திருவீதி உலா போன்றவைகள் மூலம் அவர்கள் காலந்தொட்டும்/ அவர்கட்கு முந்திய காலந்தொட்டும் இவ்வுற்சவத் திருமேனிகள் இருந்துள்ளமை புலப்படுகிறது.

மூலவர் மற்றும் உற்சவத் திருமேனிகளைத் திருமுழுக் காட்டுதல் பண்டைக் காலம் தொட்டு இருந்துள்ளது. இறைவன் திருமேனியைத் திருமுழுக் காட்டுதற்குத் தண்ணீர அடிப்படை ஆதாரமாகிறது. இன்று வழக்கிலிருக்கும் அபிடேகம்/ அபிஷேகம், திருமஞ்சனம் போன்ற சொற்கள் தேவாரத்தில் இடம்பெறவில்லை. மூவர் தேவாரத்திலும் ஆட்டுதல், ஆடுதல் எனும் பொதுவினைச் சொற்களையே காணமுடிகிறது. இப்பொது வினைச் சொற்களோடு திருமுழுக்குக்குப் பயன்படும் பொருட்களை இணைத்துப் பாடியுள்ளனர்.

திருமுழுக்காட்டி வழிபாடு செய்யும் இம்மரபிற்கு அடிப்படையாக மூவரும் தண்ணீரையே விதந்து பாராட்டிக் கூறுகின்றனர்.

இன்று ஆகமங்கள் கூறும் சோடச உபசாரங்களில் (16 வகை வழிபாட்டு வரிசைகள்) ஐந்தாவதாக ஸ்நானம் என்ற பெயரில் திருமுழுக் காட்டுதல் இடம் பெறுகிறது.[66]

நீராட்டுதல்

மூவர் தேவாரம் காட்டும் நீராட்டுதல் எனும் வழிபாட்டு முறை மிகவும் எளிமையானது. இவ்வழிபாட்டை யாவரும்

செய்யலாம். அடியார்கள் தாமாகவே திருக்கோயிலை அடைந்து இறைத்திருமேனிகளை நீராட்டி யுள்ளனர் என்பது மூவர் தேவாரத்தின் மூலம் அறியலாகும் மிக முக்கியமான செய்தி யாகும். பரார்த்த பூசை என்று குறிப்பிடப்பெறும் திருக்கோயில் வழிபாட்டில் இந்நீராட்டைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளமை ஈண்டு குறிக்கத் தக்கது. இன்று பேசப்பெறும் ஆகமங்கள், நடைமுறைகள் திருக்கோயில் வழிபாட்டில் புகுந்த சூழலில் இன்றைய தமிழகத் திருக்கோயில்களில், மூவர் பாடிய தலங்களில் இந்நிலையைக் காணமுடியாது.

இவ்வழிபாட்டை மகளிரும் செய்துள்ளனர் என்பதற்கும் தேவாரத்தில் சான்றுகள் உள்ளன. அவை பின்வருமாறு:

"தடங்கொண் டதொர்தா மரைப்பொன் முடிதன்மேல்
குடங்கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்து ஆட்ட"[67]

"பொன்னியல் நறுமலர் புனலொடு தூபஞ்
சாந்தமும் ஏந்திய கையின ராகிக்
கன்னியர் நாடொறும் வேடமே பரவுங் கழுமலம்"[68]

இதுபோன்று வருமிடங்களிலெல்லாம் 'ஆட்ட', 'ஆட்டி' போன்ற வினைச் சொற்களைக் கூர்ந்து நோக்கும் போது இவை அடியார் களால் தாமாகவே செய்யப் பெற்றுள்ளன என்பது போதரும்.

திருமுழுக்காட்டுதற்குப் பயன்படும் பொருள்கள்

திருமுழுக்காட்டுதற்குப் பயன்படும்/பயன்படுத்திய பொருள்களை மூவர் தேவாரம் பதிவு செய்துள்ளது. அவற்றைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

நீர்

திருமுழுக்காட்டில் முதன்மை பெறுவது நீர் ஆகும். நீராட்டு ஒன்றே முழுமையான, எளிமையான திருமுழுக்கு எனக் காட்டியுள்ளனர். இவை,

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்"[69]

"போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார்
அவர்பின் புகுவேன்"[70]

"இட்டுக் கொள்வன பூவுள நீருள"[71]

"பத்தரோடுபல ரும்பொலியம் மலர்
அங்கைப் புனல் தூவி"[72]

"நிறைபுனல் கொடுதனை நினைவொடு
நியதமும் வழிபடும் அடியவர்"[73]

எனவரும் பாடல் வரிகளால் புலனாகும்.

பால், தயிர், நெய்

திருமுழுக்கில் நீருக்கு அடுத்து முக்கியத்துவம் பெறுவன பால், தயிர், நெய் என்பனவாகும். இவை தனித்தனியே பலவிடங்களில் தேவாரத்துள் காணக் கிடைக்கின்றன.

"பாலும் நெய்யும் தயிரும் பயின்றாடி"[74]

"மாணி பால்கறந் தாட்டி வழிபட"[75]

"ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்"[76]

"நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தானம் எனீரே"[77]

"நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
நித்தம் பூசனை செய்ய லுற்றார்"[78]

"நெய்யும் பாலுங் கொண்டாட்டி"[79]

எனவருமிடங்கள் மேற்சொன்ன கருத்தை நிறுவும்.

ஆனைந்து

பால், தயிர், நெய் என பசுவின் பொருள்களைத் தனித் தனியே திருமுழுக்கில் பயன்படுத்தியதோடு ஆனைந்து எனப்படும் (பஞ்சகவ்யம்) கலவையையும் சிறப்பாக இவ்வழிபாட்டில் பயன்படுத்தியுள்ளனர். இக் கலவையில் இடம்பெறும் பசுவின் பொருட்களும் அளவுகளும் வருமாறு:

1.	பால்	-	1 பங்கு
2.	தயிர்	-	3/4 பங்கு
3.	நெய்	-	1/2 பங்கு
4.	பசுவின் சாணம்	-	1/4 பங்கு (கோமயம்)
5.	பசுவின் சிறுநீர்	-	1/4 பங்கு (கோசலம்)

இவற்றை முறைப்படி கலந்து தயாரிக்கப்படும் திருமுழுக்காட்டுப் பொருள் ஆனைந்து எனப்படும். இக்கலவை சிறந்த மருந்து என்பதும் ஈண்டு குறிக்கத் தக்கதாகும்.

இக்கலவையைக் கொண்டு திருமேனிகளைத் திருமுழுக் காட்டி உள்ளனர் என்று மூவரும் பாடியுள்ளனர். மூவர் தேவாரம் விதந்து போற்றும் முழுமுதற் பரம்பொருளாம் சிவபெருமானே இவ் ஆனைந்தை விரும்பி ஆடுகின்றான் என்ற கருத்தும் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளது.

"ஆனஞ்சாடும் முடியடிகள் வேடங்களே
ஆனிடை அஞ்சும் கொண்டு அன்பினால் அமர ஆட்டி"[80]

"ஆவின் மேவிய ஐந்தமர்ந்து ஆடுவான்"[81]

"ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்"[82]

"பால்நெய்சேர் ஆனஞ்சும் ஆடி கண்டாய்"[83]

"அஞ்சும் கொண்டு ஆடுவர்"[84]

"பாலொடு ஆனஞ்சும் ஆட்டுகந் தானை"[85]

என வரும் பாடலடிகளில் 'ஆட்டி' என வரும் சொல் திருமுழுக்கில் அடியவர்கள் ஆனைந்தைப் பயன்படுத்தி உள்ளதும், ஆடி, ஆடுவான் என வரும் சொற்கள் இறைவன் ஆனைந்தை விரும்பி ஏற்கிறான் என்பதும் தெளிவாகிறது. மூவர் தேவாரம் குறிப்பிடும் 'ஆனைந்து' இன்றைய திருக்கோயில் திருமுழுக் காட்டில் பயன்படுத்துவது இல்லை.

தேன், இளநீர், கரும்புச்சாறு

திருமுழுக்கில் தேன், இளநீர், கரும்புச்சாறு போன்றனவும் இடம் பெற்றுள்ளன. இதனை,

"தேனையாடு முக்கண்ணரோ"

"தேன்நெய் பால்தயிர் ஆட்டுகந் தானே"

"தேன்நெய்பால் தயிர் தெங்கிளநீர் கரும்பின் தெளி"[86]

"நெய்யினொடு பால்இளநீர் ஆடினான் காண்"[87]

என வரும் பாடல் வரிகளால் உணரலாம்.

நறுமணப் பொருட்கள், பழங்கள்

திருமுழுக்கில், வெட்டிவேர், விளாமிச்சை வேர், ஜாதி பத்திரி, ஏலம், மஞ்சள், கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், சந்தனம் போன்ற நறுமணப் பொருட்களைத் தண்ணீரில் இட்டும், மஞ்சள், சந்தனம், குங்குமம் போன்ற பொருட்களைத் தனித் தனியாகவும் பயன்படுத்தியுள்ளனர். பன்னீரும் இன்றைய திருமுழுக்கில் இடம் பெற்றுள்ளது. மூவர் தேவாரம் இம்மணப் பொருட்கள் கலந்த நீரை வெறிநீர் என்றும் வாசநீர் என்றும் பதிவு செய்துள்ளன.

"வீடுடன் எய்துவார் விதியென்று சென்று
வெறிநீர் தெளிப்ப"[88]

"சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த"[89]

"வாசநலஞ் செய்து"[90]

"குங்குமக் குழம்பு சாத்தி"[91]

என்பன தேவாரப் பாடலடிகள். இம்மணப்பொருட்களுள் ஒன்றாக, கஸ்தூரியும் இடம்பெற்றுள்ளது. சம்பந்தர் கஸ்தூரியைச் சுட்டி,

"நாவிவாய்ச் சாந்துளும் பூவுளும் ஞானநீர்
தூவிவாய் பெய்துநின் றாட்டுவார் தொண்டரே"[92]

என்று பாடியுள்ளார். நாவிவாய்ச் சாந்து என்பதற்குப் புனுகு என்று பொருள் கொள்வாரும் உளர்.

பழங்கள்

பழங்களும் திருமுழுக்குப் பொருள்களுள் சுட்டப்படுகின்றன. பழங்கள் எனப் பொதுவாகவே குறித்துள்ளனர். இன்று மா, பலா, வாழை, தேன், கரும்புச் சர்க்கரை இவை ஐந்தும் சேர்த்து ஐந்தமுதாகத் (பஞ்சாமிர்தமாக) திருமுழுக்கில் பயன்படுத்துகின்றனர்.93 இவ்வமைப்பு மூவர் காலத்தில் இல்லை. பழங்களைப் பயன்படுத்தியுள்ள செய்தி மட்டும் உள்ளது.

"பழத்தினால் பயின்று ஆட்டி"[94]

என்பது தேவாரப் பாடலடி.

திருநீறு

சைவ சமய அடையாளங்களில் ஒன்று திருநீறு பூசிக்கொள்வது. இத் திருநீற்றினைக் கொண்டு இறைத் திருமேனியைத் திருமுழுக்காட்டியுள்ளனர். சிவபெருமான் தன்மேனியில் பூசியுள்ள திருநீறு என்பது சுடுகாட்டுச் சாம்பலாகும்.[95] இன்றும் இதனைக் கொண்டு வடநாட்டில் திருமுழுக்கு செய்யப்படுகிறது. அர்த்த சாம பூசையில் சுடுகாட்டுச் சாம்பல் திருமுழுக் காட்டுப் பொருளாக இடம்பெறுகின்றது.[96] தமிழகத்தில் பசுவின் சாணத்தில் இருந்து தயாரிக்கப்படும் திருநீறே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

"நீறு திருமேனிமிசை யாடி"[97]

"நீறேறு திருமேனி யுடையான் கண்டாய்"[98]

"வெண்பொடி ஆடியை"[99]

எனப் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

தீப தூப வழிபாடு

வழிபாட்டில் திருமுழுக்கு, மலர் வழிபாடு ஆகிய வற்றுக்கு அடுத்த நிலையில் இடம்பெறுவது தீப மற்றும் தூப வழிபாடு ஆகும். தீப வழிபாடு என்பது விளக்கேற்றி வழிபடு வதைக் குறிக்கும். இறைவனை ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதி வடிவாக அடியார்கள் கண்டனர். எனவே, சோதி வடிவில் இருக்கும் இறைவனை, சோதி ஏற்றி வழிபடுவதைச் சிறப்பு என்று கொண்டனர். தீபத்தையே மலர், தூப வழிபாடு செய்து வணங்கும் வழக்கமும் இருந்துள்ளது. தூப வழிபாடு என்பது பல நறுமணப் புகைகளை உண்டாக்கி அதன் மூலம் வழிபடுவதைக் குறிக்கும். இவ்விரு வழிபாட்டையுமே தேவார மூவர் விதந்து போற்றியுள்ளனர்.

இன்றுள்ள 16 வகை தீபங்கள்

1. தூபம்
2. ஒருமுக தீபம்
3. அடுக்கு தீபம்
4. நாக தீபம்
5. ரிஷப தீபம்
6. புருஷமிருகாதீபம்
7. சூல தீபம்
8. ஆமை தீபம்
9. கஜ தீபம்
10. புலி தீபம்
11. சிம்ம தீபம்
12. கொடி தீபம்
13. மயில் தீபம்
14. பூரணகும்ப தீபம்
15. நட்சத்திர தீபம்
16. மேரு தீபம்

இந்தப் பதினாறு வகைத் தீபங்களோடு 16 வகைப் பேறுகளையும் இணைத்துக் கூறும் வழக்கமும் உள்ளது.[100]

தீபத்துக்கு உரிய எண்ணெய்கள்

1. பசுநெய்
2. ஆமணக்கு எண்ணெய்
3. நல்லெண்ணெய்
4. தேங்காய் எண்ணெய்
5. வேப்ப எண்ணெய்

6. மேற்கண்ட ஐந்து எண்ணெய்க் கலவை
7. வேம்பு, இலுப்பை எண்ணெய்க் கலவை

பிற எண்ணெய்களைப் பயன்படுத்துவதை தீப நூல்கள் வரவேற்க வில்லை.[101]

தீப வழிபாட்டிற்கு உரிய திரிகள்

1. செந்தாமரைத் திரி
2. பஞ்சுத் திரி
3. வாழைத் தண்டு(நார்) திரி
4. வெள்ளருக்கன் திரி
5. சிகப்பு நூல்
6. புதுமஞ்சள் துணி
7. புதுவெள்ளைத் துணி

விளக்கு வகைகள்

மண், உலோகம், கருங்கல், பிறவகைக் கற்கள் ஆகியவற்றாலான விளக்குகள் திருக்கோயில் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன/பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று எலுமிச்சம் பழத்தோலும் விளக்காக வேண்டுதல் குறித்துப் பயன்படுத்தப்படுகிறது. மா விளக்கு வழிபாடும் உள்ளது.

தேவாரம் குறிப்பிடும் தீப வழிபாடு

இன்று வழிபாட்டில்/வழக்கத்தில் உள்ள தீப வகைகள், திரி வகைகள், எண்ணிக்கைகள், எண்ணெய் வகைகள் மூவர் தேவாரத்தில் குறிப்பிடப் பெற வில்லை. ஆனால், தீப வழிபாடு என்று பொதுவாகப் பல இடங்களில் சுட்டப்பெறுகிறது. தீப வழிபாட்டுப் பயனும் பலவிடங்களில் கூறப்பட்டு உள்ளது. கார்த்திகை விளக்கீடு என்று ஒரு விழா மூவர் தேவாரத்தில் சிறப்பிக்கப்படுகிறது.

தீப வழிபாடு இடம்பெறும் தேவாரத் தொடர்கள்

தீப தூப வழிபாடுகள் பின்வருமாறு பலவிடங்களில் மூவர் தேவாரத்தில் சுட்டப்படுகின்றன.

"விரும்புமின் விளக்குத் தூபம்"[102]

"விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இட"[103]

"............தீபம் காட்டித்
தொழுமவர்க்கு அருள்கள் செய்து"[104]

"விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞானமாகும்"[105]

திருவாரூரில் நமிநந்தி அடிகள் எனும் நாயனார் நீரால் விளக்கிட்ட வரலாற்றையும் தேவாரம் பதிவு செய்துள்ளது. இதனை,

"ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பி நந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியு மன்றே"[106]

என்ற பாடலடிகளால் உணரலாம்.

ஆடிப்பாடி வழிபடல்

இறைவன்மேல் கொண்ட அளவற்ற அன்பின் காரண மாக, அடியார்கள், இறைவன் புகழைப் பாடியும் ஆடியும் வழிபடுதல் நெடுங்காலமாக நம் நாட்டில் உள்ளது. இறைவன் புகழைப் பக்தியின் காரணமாக, இசையுடன் பாடுகின்றபோது, தன்னை மறந்து ஆடத்தோன்றும். இப்படிப் பாடி ஆடுதல், பக்தி இயக்கக் காலத்தில் தோன்றி வளர்ந்தது. இவ்வழக்கம் வட இந்தியாவிலும் பின்னர் பரவியது.

மூவர் தேவாரம் ஆடிப்பாடி வழிபடுதலைச் சிறப்பாகக் கூறியுள்ளது. வினைநீக்கம் பெறுவதற்கும், நிலையான மன அமைதியைப் பெறுவதற்கும் ஆடிப்பாடி வழிபடுதல் சிறந்த வழி என்றும் விதந்தோதுகின்றது.

"அழுவல் லவர்ஆ டியும் பாடி
எழுவல் லவர்எந் தைஅடிமேல்"[107]

"மனத்தகத் தோர்பாடல் ஆடல்
பேணி இராப் பகலும்"[108]

"பத்தர்கள் பாடி ஆட"[109]

"தொண்டர்கள் பாடி யாடித்
தொழுகழல் பரம னார்"[110]

"தொழுதெழுந்து ஆடிப்பாடித் தோத்திரம் பலவும் சொல்லி"[111]

"ஆடிப் பாடிஅண் ணாமலை கைதொழ"[112]

"ஆடிப்பாடி அழுது நெக்கங்கு
அன்புடையவர்க்கு இன்பம்"[113]

"ஆடுமின் அன்புடையீர் பழமண்ணி"[114]

"பறையாத வல்வினைகள் பறைந்தொழியப்
பன்னாளும் பாடி யாடி"[115]

"பாடிஆ டும்பத்தர்க்கு அன்புடை யானை"[116]

ஆடு மாறு வல்லார்
அவரே அழகியரே"[117]

"பரிசினால்அடி போற்றும் பத்தர்கள்
பாடிஆடப் பரிந்து நல்கினீர்"[118]

"தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி"[119]

எனவரும் மூவர் தேவாரப் பாடலடிகள் நோக்கத் தக்கவையாகும்.

பாடி வழிபடல்

ஆடுதலோடு பாடியும் வழிபடுதலை இணைத்துப் போற்றியுள்ள தேவாரம், பாடி வழிபடுதலைத் தனியாகவும் பலவிடங்களில் சிறப்பித்துக் கூறுகிறது. பாடுதல் ஒன்றே வழிபாட்டின் முழுப்பயனையும் அளிக்க வல்லது என்றும், வினை நீக்கம் பெற பாடுதலே சிறந்த வழி என்றும், இம்மைப் பிறவியில் எல்லா நலன்களையும், மறுமையில் முத்தியாக வீடுபேற்றையும்

பாடுதல் ஒன்றே வழங்கிவிடும் சிறப்பினது என்று பாடி வழிபடுதலைச் சிறப்பிக்கின்றனர். பெரியபுராணத்துள் சுந்தரர் வரலாற்றில் இறைவனே சுந்தரரைப் பாடுக எனப் பணித்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

"அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"[120]

என வரும் பாடலில் இறைவனுக்குச் செய்யும் அருச்சனை முதலான அனைத்துக் கிரியைகளுமே பாடல் பாடுதலிலேயே அடங்கிவிடுகின்றன என்ற கருத்தும் உள்ளார்ந்து உள்ளது.

எப்படிப் பாடுவது?

அன்பு மேலீட்டினால் இறைவனை ஒன்றியிருந்து நினைந்து பாட வேண்டும். குரல் வளம், கவி வளம், இசையறிவு இல்லாவிடினும் அன்பு கொண்டு பாடினால் இறைவன் அப்பாடலை மகிழ்ந்து ஏற்பான் என்கிறார் திருஞானசம்பந்தர். அப்பாடல்,

"கோழை மிடறாகக் கவிகோளும் இலவாக
ஏழை யடியார் யாவை சொனசொல் மகிழும் ஈசன்"[121]

என்பதாகும். மேலும், வாயாரப் பாடுதல், நினைந்துருகிப் பாடுதல், அளப்பில கீதம் சொல்லிப் பாடுதல், பண்ணோடு பாடுதல், பத்திமையால் பாடுதல், தாளத்தோடு பாடுதல், தமிழோடு இசை பாடுதல், வாழ்த்திப் பாடுதல், வரிமுரி பாடுதல், மலர்கள் தூவிப் பாடுதல், இரவும் பகலும் பாடுதல், ஏழிசை யால் பாடுதல், திருநாமம் சொல்லிப் பாடுதல், சந்தத்தோடு பாடுதல் என்று பாடுதலில் பல நிலைகளையும் பதிவு செய்துள்ளனர். சான்றுகளாக,

"வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்"[122]

"பண்ணியல் பாடல்அ றாத ஆவூர்ப்"[123]

"பண்ணும்பதம் ஏழும்பல
ஓசைத்தமிழ் அவையும்
உள்நின்றதொர் சுவையும்உறு
தாளத்துஒலி பலவும்"[124]

"தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"[125]

"பண்பொருந்த இசைபாடும் பழனம்சேர்"[126]

"பரவுகொப் புளித்த பாடல் பண்ணுடன் பத்தர் ஏத்த"[127]

"பண்ணிடைச் சுவைகள் பாடி
ஆடிடும் பத்தர்க்கு"[128]

"பண்ணொடு பாடல்தன்னைப் பரவுவார் பாங்கராகி"[129]

"ஏழினின் னிசையி னாலும்
இறைவனை ஏத்த"[130]

"பத்தர் தாம்பலர் பாடிநின்
றாடும் பழம்பதி"[131]

"பண்ணார் பாடல் அறாத
படிறன்தன் பனங்காட்டூர்"[132]

"பண்ணிசை யார்மொழி யார்பலர் பாட"[133]

"வாக்கென்னும் மாலை கொண்டு
உன்னை என்மனத்து ஆர்க்கின்றேன்"[134]

என வரும் பாடலடிகளைக் கூறலாம்.

பாடல் பாடுவதால் கிடைக்கும் பயன்

திருஞானசம்பந்தரும், சுந்தரரும் தம் பதிகங்களைப் பாடுவோர் பெறும் பலன்களைக் கூறியுள்ளனர். இக்குறிப்புகள், பொதுவாக, இறைவனைப் பாடுவதால் பெறும் பலன்களாகவும் கொள்ளலாம்.

"பண்ணியல் பாடல்வல் லார்கள்
பழியொடு பாவமி லாரே"[135]

"பண்ப யன்சொலிப் பாட வல்லவர்
விண்ப யன்கொளும் வேட்கை யாளரே"[136]

"அணிகொண்ட பத்தும் இசைபாடு பத்தர்
அகல்வானம் ஆள்வர் மிகவே"[137]

"பந்தனுரை செந்தமிழ்கள் பத்துமிசை கூர
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே"[138]

"ஆங்கமர் வெய்திய ஆதியா கஇசை வல்லவர்
ஓங்கம ராவதி யோர்தொழச் செல்வதும் உண்மையே"[139]

"பங்கம்நீங்கப் பாடவல்ல பத்தர்கள் பாரிதன்மேற்
சங்கமோடு நீடி வாழ்வர் தன்மையி னாலவரே"[140]

"சாயடைந்த ஞானமல்கு சம்பந்தன் இன்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே"[141]

"பாடல்பத் தும்பாட வல்லார் பாவம் பறையுமே"[142]

என வரும் திருஞானசம்பந்தர் தேவாரத் திருக்கடைக்காப்பு அடிகளையும்,

"நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே"[143]

"அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே"[144]

"பண்ணு மாகவே பாடும்..."[145]

"வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான்"[146]

"வலஞ்செய் வார்களும் வாழ்த்திசைப் பாக்களும்
நலஞ்செய் வாரவர் நன்னெறி நாடியே"[147]

என வரும் திருநாவுக்கரசர் தேவாரப் பாடலடிகளையும்,

"பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்"[148]

"விருந்தாய சொல்மாலை கொண்டேத்தி வினைபோக"[149]

"புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்"[150]

என வரும் சுந்தரர் தேவாரப் பாடலடிகளையும் கொள்ளலாம்.

இக்கருத்துக்கள் மூலம் வழிபாட்டில் ஒரு அங்கமாக விளங்கும் ஆடலும் பாடலும் அடியார்கள் என்ற நிலையில் முழுமையான வழிபாடாகவே கொள்ளப் பெறுகிறது. இதற்கு (வழிபாட்டிற்கு) முறையான பயிற்சியோ, விதிமுறைகளோ தேவாரத்துள் சுட்டப்பெறவில்லை.

பக்திப் பரவசத்தால் ஆனந்தக் கண்ணீர் அனிச்சைச் செயலாக வருவது போலே ஆடலும் பாடலும் உள்ளார்ந்த பக்தி அனுபவ வெளிப்பாடே என்பது தான் தேவார மூவர் கருத்தாகும்.

பிற வழிபாட்டு முறைகள்

மலர் வழிபாடு, தீபதூப வழிபாடு, ஆடிப்பாடி வழிபடுதல் போன்ற வழிபாட்டு வகைகளைச் சிறப்பாகவும், பொதுவாகவும் குறித்த தேவார மூவர், வேறுசில வழிபாட்டு முறைகளையும் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில்,

- திருக்கோயிலை வலம் வந்து வழிபடுதல்
- அங்கப்பிரதட்சண வழிபாடு (உடலைத் தரைகிடத்தித் திருக்கோயி லைப் புரண்டு வலம் வருதல்)
- வேள்வி செய்து வழிபடுதல்
- தலையால் வணங்குதல்
- நமசிவாய மந்திரம் சொல்லி வழிபடுதல்
- அகவழிபாடு
- ஞான, யோக வழிபாடுகள்
- கூட்டு வழிபாடு
- முப்போதும் வழிபடுதல்
- திசை நோக்கித் தொழுதல்

- ❖ தினமும் வழிபடுதல்
- ❖ அர்ச்சனை வழிபாடு

என்பனவற்றைச் சிறப்பாகப் பலவிடங்களில் குறித்துள்ளனர்.

வலம் வருதல்

திருக்கோயிலை வலம் வருதல், வழிபாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. சங்க இலக்கியங்களிலேயே இதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. இதனை,

"புத்தேளிர் கோட்டம் வலம் செய்து"[151]

"கடவுட் கடிநகர் தோறும் இவனை
வலம் கொளீஇ வாவெனச் சென்றாய்"[152]

எனவரும் வரிகளால் அறியலாம்.

தேவார மூவர் காலத்தில் சிறப்பாக குறிப்பிடப்பெற்ற இவ்வழிபாட்டு முறை, பிற்காலங்களில் வலம் வருதலுக்கென்றே பல்வேறு அரசர்கள் திருக்கோயில்களில் பெரிய திருச்சுற்றுகளை (பிரகாரங்கள்) அமைத்தனர். சான்றுகளாக, தில்லை, திருவாரூர், திருவரங்கம், திருவையாறு, திருவானைக்கா போன்ற தலங்களில் உள்ள திருச்சுற்றுகளைக் குறிப்பிடலாம்.

திருக்கோயிலை வலம் வருதல் தனியானதொரு விழாவாகவே கொண்டாடப் பெறும் அளவிற்குச் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது ஈண்டு குறிக்கத்தக்கது. சான்றாக, ஆண்டுதோறும் நடைபெறும் திருவானைக்கா பஞ்சப்பிரகார விழாவைக் குறிப்பிடலாம்.

திருநாவுக்கரசர் கால்களின் பயனே இறைவன் குடிகொண்டுள்ள திருக்கோயில்களை வலம் வருவதுதான் என்று குறிப்பிட்டுப் பாடுகின்றார். அப்பாடல்,

"ஆக்கை யாற்பயனென் அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யால்அட்டிப போற்றி என்னாதஇவ் ஆக்கை யாற்பயனென்

கால்ளாற் பயனென் கறைக்கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்க ளாற்பயனென்"[153]

எனத் திருஅங்கமாலையில் இடம்பெறுகிறது. மேலும்,

"மாத ரார்வலம் கொள்மறைக் காடர்"[154]

என வரும் பாடலடியையும் சுட்டலாம்.

அங்கப்பிரதட்சணம்

அங்கப்பிரதட்சணம் என்ற வடமொழிச் சொல்லுக்கு உடலைத் தரையில் கிடத்தி, புரண்டு, திருக்கோயிலை வலம் வருதலாகிய வழிபாடு என்பது பொருளாகும். இன்றும் திருக்கோயில்களில் இவ்வகை வழிபாட்டு முறை 'வேண்டுதல்' நிறைவேற்றும் பொருட்டு செய்யப்படுகிறது. தேவார மூவர் காலத்திலும் இவ்வழிபாடு இருந்துள்ளமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. திருநாவுக்கரசரின் தேவாரப் பாடலொன்றில்,

"கூம்பலைச் செய்த கரதலத்து
அன்பர்கள் கூடிப் பன்னாள்
சாம்பரைப் பூசித் தரையிற்
புரண்டுநின் தாள்சரண் என்று"[155]

என இவ்வழிபாடு இடம்பெறுவது குறிக்கத்தக்கது.

வேள்வி செய்து வழிபடுதல்/மறையவர் வழிபாடு

வேள்வி எனப்படுவது தீ வளர்த்து வழிபாடு செய்யும் வழக்கமாகும். இவ் வழிபாடு அந்தணர்களுக்கு உரியதாகத் தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலான பண்டைய நூல்கள் குறிப்பிடுகின்றன. திருவள்ளுவர் அந்தணர் என்ற சொல்லை அறவோர் என்ற பொருளில் பயன்படுத்தி உள்ளார்.[156] வேள்வி செய்து வழிபடும் வழக்கம், தேவாரம் பாடிய மூவர் காலத்திலும் இருந்துள்ளது. சான்றுகளாக,

"கற்றாங் கெரியோம்பின் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய"[157]

"அம்பர மாகி யழலுமிழ் புகையின்
ஆகுதி யால்மழை பொழியும்
உம்பர்க ளேத்தும் ஓமமாம் புலியூர்"[158]

"வேதமும் வேள்வியும் ஓவா
வேட்கள நன்நக ராரே"[159]

"கையினால் எரிஓம்பி மறைவளர்க்கும்
அந்தணர் தம் கருப்ப றியலூர்"[160]

"வேத வேதியர் வேத நீதியர்
ஓதுவார் விரிநீர் வீழிமிழலையூர்"[161]

"நெய்தவழ் முகவரி காவல் ஓம்பு
நேர்புரி நூல்மறை யாளர் ஏத்த"[162]

"தெரிந்த நான்மறை யோர்க்கிடம் "[163]

"மன்னிய மாமறை யோர்மகிழ்ந்து, ஏத்த..."[164]

"பண்புடை நான்மறையோர்
பயின்றேத்திப் பல்கால் வணங்கும்"[165]

எனவரும் தேவாரப் பாடலடிகளைக் காட்டலாம். சிதம்பரம், ஓமாம்புலியூர், திருவேட்களம், திருக்கருப்பறியலூர், திருவீழி மிழலை முதலிய இடங்களில் அந்தணர்கள் வேதம் ஓதி, நெய் சொரிந்து, தீ வளர்த்து வேள்வி செய்தமையை இப்பாடலடிகளால் உணர்ந்து கொள்ளலாம். இவ்வேள்விகளில் உயிர்ப்பலி இடப்படவில்லை என்பது நோக்கத்தக்கது. வேள்விகளில் உயிர்ப்பலி இடும் வழக்கம் வடபுலத்தில் மட்டுந்தான்.

தலையால் வணங்குதல்

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்பது பழமொழி. எனவே, பரம்பொருளாக விளங்கும் இறைவனை தலையால் வணங்குதலைத் தேவார மூவர் மிகவும் போற்று கின்றனர். திருநாவுக்கரசர் திருவங்கமாலையில் முதற்கண் வைத்துப் பாடுவது தலையால் வணங்குவது ஆகும். தலையால்

வணங்குதலென்பது தலையைத் தாழ்த்தி வணங்குதல் என்றும், தலைக்கு மேல் இரு கைகளையும் கூப்பி வணங்குதல் என்றும் பொருள் கொள்ளலாம். இவ்வழிபாடு குறித்து மூவர் தேவாரத்தில்,

"தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து"[166]

"சிலையால் எயில்எய்தான் சிற்றம்பலந் தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே"[167]

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னி...."[168]

"தலையால் தொழுவார் தலையாரே"[169]

"தங்கள் உச்சியால் வணங்கும்
தன்னடி யார்கட்கு"[170]

"தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடி"[171]

"முத்தினைத் தொழுது நாளும்
முடிகளால் வணங்கு வார்க்கு"[172]

"தலையால் தாழும் தவத்தோர்க்கு"[173]

எனப் பலவிடங்களில் குறிப்பிடப்பெறுகிறது. அனைத்திற்கும் மேலானவனாகவும் விண்ணிலிருந்து அருள்பவனாகவும் சிவபிரானை எண்ணி தலைக்கு மேல் கைகூப்பி, தலையைத் தாழ்த்தி வணங்குவது மரபாயிற்று. இங்ஙனம் வழிபடுவது இறைவன் மேல் கொண்ட மரியாதைக்கும் பக்திக்கும் அடையாள மாகும்.

பஞ்சாட்சர மந்திரம் சொல்லி வழிபடல்

சைவ சமயத்தில் 'நமசிவாய' எனும் ஐந்தெழுத்து மந்திரம் மிகவும் உயர்வானது. இதனை, 'நமசிவாய', 'சிவாயநம', 'சிவயசிவ', 'சிவசிவ', 'சிவசி', 'சி' என்றும் பல வகைகளில் சாத்திர நூல்கள் பிரித்துப் பொருள் கூறுகின்றன. தேவார மூவர் 'நமசிவாய' என்பதையும் 'சிவாயநம' என்பதையும் பெரிதும் போற்றுகின்றனர்.

'நமசிவாய' என்பது தூல பஞ்சாட்சரம் என்றும், 'சிவாயநம' என்பது சூக்கும பஞ்சாட்சம் என்றும் சித்தாந்த சாத்திரங்களில் கூறப்படுகின்றன. சைவ சமயச் சின்னங்கள் மூன்றில் ஒன்றாகப் போற்றப்படுவது இம்மந்திரம்

தேவார மூவர் தம் திருப்பதிகங்களில் நமசிவாய, சிவாயநம, ஐந்தெழுத்து, அஞ்சுபதம், எழுத்துஅஞ்சு என்று பாடிப் பஞ்சாட்சரத்தைப் போற்றுகின்றனர்.

ஐந்தெழுத்தைப் போற்றி தேவார மூவரும் 'நமசிவாயத் திருப்பதிகம்' என்று தனியே சிறப்பித்தும் பாடியுள்ளனர்.

நமசிவாய மந்திரம் ஒன்றே பாவம் நீக்கி, இம்மையிலும் மறுமையிலும் எல்லா நலன்களையும் அளிக்கவல்லது என்று உறுதிபடக் கூறியுள்ளனர். சான்றுகளாக,

"நற்றுணை யாவது நமச்சி வாயவே"[74]

"நலம்மிகக் கொடுப்பது நமச்சி வாயவே"[75]

"நல்லக விளக்கது நமச்சி வாயவே"[76]

"நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே"[77]

"நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே"[78]

"அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினால்
பொருந்து நோய்பிணி போகத் துறப்பதோர்
மருந்துமாகுவர்....."[79]

"துஞ்சும் போழ்து நின்னாமத் திருவெழுத்து
அஞ்சும் தோன்ற அருளும்"[80]

"....... சிவாயநம வென்று

நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே"[181]

"................................உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ...."[182]

"படைக்கல மாகஉன் நாமத்து
எடுத்து அஞ்சு என்நாவிற் கொண்டேன்"[183]

"வைத்த பொருள் நமக்காம் என்று சொல்லி மனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாயநம வென்றிருக்கி னல்லால்..."[184]

".......................பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே"[185]

"மந்திரம் நமச்சிவாய ஆக நீறணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும்"[186]

"ஏது மொன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத்து முணர்வார் கட்குப்
பேதி மின்றி அவரவர் உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே"[187]

"அந்தியுள் மந்திரம் அஞ்செழுத் துமே"[188]

"ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே"[189]

"அல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே"[190]

"அம்மையி னுந்துணை அஞ்செழுத் துமே"[191]

"அஞ்செழுத்(து), உற்றன வல்லவர் உம்ப ராவரே"[192]

"அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி"[193]

"நற்றவா உனைநான் மறக்கினும்
சொல்லுநா நமச்சி வாயவே"[194]

முதலிய தேவாரத் தொடர்கள் நோக்கத்தக்கவை. உயிர்க்குத்

துணை, நன்மை தருவது, நாவுக்கு அருங்கலம், ஞானமும் கல்வியும் தருவது, பிணியெல்லாம் போக்குவது, வினை நீக்குவது, பாவம் ஒழிப்பது, அல்லல் கெடுப்பது, தேவராக்குவது பஞ்சாட்சரம் என்று போற்றிப் பாடி அனைவரையும் இம்மந்திரத்தை ஓதுமாறு குறிப்பாக அறிவுறுத்தியுள்ளனர்.

அகவழிபாடு

திருக்கோயில் சென்று வழிபடுதல் புறவழிபாடு; இருந்த இடத்திலேயே இருந்து இறைவனை அகத்துள் வைத்து யோகம், ஞானத்தால் வழிபடுதல் அகவழிபாடு. தேவார மூவர் புறவழிபாடாகிய திருக்கோயில் வழிபாட்டையே பெரிதும் போற்றினாலும் அகவழிபாட்டையும் பாடியுள்ளனர். புறவழிபாடு அகவழிபாட்டிற்கு அழைத்துச் செல்லும் ஒரு படிநிலையாகும். புருவ மத்தி என்று குறிப்பிடப்பெறும் புந்தி வட்டத்தில் இறைவனை மனக்கண்ணால் கண்டு வழிபடுதல் அகவழி பாடாகும். அந்நிலையில் இம்மானுட உடம்பே கோயிலாகவும், உயிரே சிவபரம்பொருளாகவும் மாறிவிடும்.

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பால நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே"[195]

"உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமா காளை தாரை கழலடி காண லாமே"[196]

"...............கடவுளைக் காதலாலே
எல்லியும் பகலும் உள்ளே ஏகாந்த மாக ஏத்தும்"[197]

"புந்திவட்டத் திடைப் புக்குநின் றானை"[198]

"சிந்தையுள் சிவம தானார்"[199]

"தொண்டர் அகமலாற் கோயிலில்லை"[200]

"சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுள் சிவமுமாகி"[201]

"சந்தியானைச் சமாதி செய்வார் தங்கள்
புந்தியானை...."[202]

"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானுந் தொழுவனே"[203]

"முன்னை ஞான முதல்தனி வித்தினைப்
பின்னை ஞானம் பிறங்கு சடையனை
என்னை ஞானத் திருளறுத் தாண்டவன்
தன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே"[204]

"புலன்களைப் போக நீக்கிப் புந்தியை யொருங்க வைத்து
இலங்களைப் போக நின்று இரண்டையும் நீக்கி"[205]

"உயிராவண மிருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணஞ் செய்திட்டு"[206]

என வரும் தேவாரப் பாடல் தொடர்களும், பாடல்களும் அகவழிபாட்டைச் சுட்டுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றில் யோகமும் ஞானமும் அகவழிபாடாகும். யோகமும் ஞானமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதது. ஞானம் பிறக்கும்போது யோகம் கைகூடும். சித்தர்கள் ஞானம் கைகூடிய யோகிகளாவர். அதனால்தான், பிறவழிபாடுகளை விட சித்தர்கள் அகவழிபாட்டைச் சிறப்பித்தனர். தேவார ஆசிரியர்கள் சமய வளர்ச்சியை மனதில் கொண்டு, திருக்கோயில் சென்று வழிபடும் புறவழிபாட்டைப் பெரிதும் போற்றினர்.

கூட்டு வழிபாடு

தனிமனிதன் தன்னுடைய நலத்திற்காக, தன்னுடைய ஆன்ம ஈடேற்றத்திற்காக, மன அமைதிக்காக வழிபடுவது தனிவழிபாடு ஆகும். ஊர், நாடு, உலகம் இவை வளமோடு

நலமாக வாழ்தல் பொருட்டுப் பலரோடு சேர்ந்து வழிபடுவது கூட்டு வழிபாடு. இக் கூட்டு வழிபாடு மிகுந்த பலனை அளிக்க வல்லதாக மூவர் தேவாரத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன. சான்றுகளாக,

"கூடிக் கூடித் தொண்டர் தங்கள்
கொண்ட பணிகுறைப டாமே
ஆடிப் பாடி அழுது நெக்கங்கு
அன்புடை யவர்க்கு இன்பம்"[207]

"அரிய அமுதினை அன்பர்க ளோடு அடைந்து ஆடுதுமே"[208]

"பத்தர்க ணம்பணிந்து ஏத்த வாய்ந்த
பான்மையது"[209]

"நுணங்கும் புரிநூலர்கள் கூடி
வணங்கும் மயிலாடு துறையே"[210]

என வருவனவற்றைக் காட்டலாம். கூடி நின்று செய்யப்படும் கூட்டு வழிபாட்டால் இறையருளை எளிதில் பெறலாம் என்பது சான்றோர்கள் எண்ணம். அதனால், தேவாரம் பாடியோர் இதனைச் சிறப்பித்துக் கூறினர். இந்நாளிலும் கூட்டு வழிபாடு மேன்மை யானது என்று சமய அறிஞர்கள் கூறுவது நினைக்கத்தக்கது.

திசைநோக்கித் தொழுது வழிபடல்

திருக்கோயிலுக்குச் சென்று வழிபட இயலாதவர்கள் இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில் இருக்கும் திசையை நோக்கித் தொழுது தம் வழிபாட்டை நிகழ்த்துவது திசைநோக்கித் தொழுதல் எனப்படும். இவ் வழிபாடும் உயர்ந்ததாகவே தேவார மூவரால் சொல்லப்பட்டுள்ளது. 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற பழமொழியும் திசைநோக்கித் தொழும் வழிபாட்டை உயர்த்தவே தோன்றியது. தேவாரத்துள்,

"..................................ஆரூரைத்
தூரத் தேதொழு வார்வினை தூளியே"[211]

"தில்லைவட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந்து ஓடுதல் உண்மையே"[212]

"திருப்பைஞ் ஞீலி திசைதொழு வார்கள்போய்
இருப்பர் வானவ ரோடுஇனி தாகவே"[213]

என வரும் அடிகளை நோக்கின் திசை நோக்கித் தொழும் வழக்கம் இருந்துள்ளமை புலனாகும். திசைநோக்கித் தொழுவதால் வினை ஓடும்; நன்மை பெருகும் என்பது அருளாளர்கள் நம்பிக்கை.

அர்ச்சனை வழிபாடு

அர்ச்சனை செய்து வழிபாடு செய்வதும் வழிபாட்டில் ஒரு வகையாகும். அர்ச்சனை என்பது இறைவன் பெயர்களைக் கூறி வழிபடுவதாகும். இன்று செய்யப்பெறும் சகஸ்ரநாம (1008 போற்றி) அர்ச்சனை, இலட்சார்ச்சனை, கோடியர்ச்சனை முதலியன தேவார காலத்திலேயே இருந்துள்ளமை அவர்கள் பாடிய தேவாரப் பாசுரங்கள் வழி, குறிப்பாகப் புலனாகிறது. சான்றுகளாக,

"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை"[214]

"ஆயிரம் பேருகந் தானும் ஆரூரமர்ந்த அம்மானே"[215]

"பூவ ணூர்ப்புனி தன்திரு நாமம்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்"[216]

எனவரும் திருநாவுக்கரசர் பாடலடிகளைக் காட்டலாம்.

வழிபடும் காலம்

திருக்கோயில் வழிபாடு செய்ய ஏற்ற காலம் குறித்தும் மூவர் தேவாரத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்கள் இருவேளை (இரவு, பகல்) வழிபாடு, முப்போது வழிபாடு, எப்போதும் வழிபாடு செய்தல் என்ற மூன்று நிலைகளைப் பதிவு செய்துள்ளனர். சிறப்பாக இருவேளை, முப்போது வழிபாடு செய்தலைப் பல இடங்களில் குறித்துள்ளனர். சான்றுகளாக,

"கரவுஇன் றிநன்மா மலர்கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்"[217]

"தெரிகாலே மூன்று சந்தி தியானித்து வணங்க நின்று
திரிகாலங் கண்ட எந்தை திருச்செம் பொன் பள்ளி யாரே"[218]

"சயசய என்றுமுப் போதும் பணிவன"[219]

"முந்திச் சென்றுமுப் போதும் வங்குமின்"[220]

எனவரும் பாடலடிகளைக் காட்டலாம்.

வழிபாட்டில் திருவிழாக்கள்

தனிமனித வழிபாடு, கூட்டு வழிபாடு இவை இரண்டில் கூட்டு வழிபாட்டின் ஒரு நிறைவான நிலையே திருவிழாக்கள் எடுத்து வழிபாடு செய்வதாகும். கருவறையில் உள்ள மூலவரை, செம்பு அல்லது பஞ்சலோ கத்தாலான சிலையில் எழுந்தருளச் செய்த திருமேனி, 'உற்சவர்' என்று அழைக்கப்படுவார்.

திருவிழாக்களில், இவ்வுற்சவரை அலங்கரித்து, வழிபாடு செய்து, வீதி உலாவாகக் கொண்டு வருவது மரபாகும். சில விழாக்களைப் பொதுவாகவும், சில விழாக்களைப் பெயர் குறிப்பிட்டுச் சிறப்பாகவும் தேவார ஆசிரியர்கள் பாடியுள்ளனர்.

திருவிழா எடுப்பதன் நோக்கம்

திருவிழாவில் மூலவர், உற்சவர் வடிவில் எழுந்தருளி, வீதி உலா வரும் போது, திருக்கோயிலுக்குச் சென்று வழிபட முடியாதவர்கள் கூட இறை வழிபாட்டைத் தாம் இருக்குமிடத்தி லேயே செய்ய முடியும். மேலும், இறைவனின் எளிவந்த தன்மையின் வெளிப்பாடாக, உயிர்களின்மேல் அவன் கொண்டுள்ள பேரன்பின் தத்துவார்த்த நிலையாகத் திருவிழாக்களை நம்முன்னோர் ஏற்படுத்தினர்.

இனம், மொழி, தேயம் கடந்த ஒற்றுமை உணர்வை வளர்க்கவும், பக்தி நெறியை ஊட்டவும், ஊக்கப்படுத்தவும், திருவிழாக்கள் மிக முக்கியமான அங்கமாகத் திருக்கோயில் வழிபாட்டில் இடம்பெற்றன.

மூவர் தேவாரத்தில் இடம்பெறும் திருவிழாக்கள்

தேவார மூவர் தம் பதிகங்களில் பல திருவிழாக்களைப் பதிவு செய்துள்ளனர். அவற்றுள்,

1. தேர்த்திருவிழா
2. ஐப்பசி ஓணம்
3. கார்த்திகை விளக்கீடு
4. மார்கழி ஆதிரை
5. தைப்பூசம்
6. மாசிக்கடலாட்டு
7. பங்குனி உத்திரம்
8. அட்டமி நாள்
9. பொன்னூசல்
10. அன்னம்பாலிப்பு
11. பெருஞ்சாந்தி
12. பொற்றாப்பு விழா

என்பனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவற்றுள் தேர்த் திருவிழா பலவிடங்களில் பேசப்பெறுகிறது. திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூர்ப் பதிகத்தில் இத்திருவிழாக்களைப் பதிகம் முழுவதும் நிரல்படப் பாடிப் பதிவு செய்துள்ளார். தேவாரப் பாடல்கள் விழா என்பதைப் பொதுவாகச் சுட்டிக் கூறும் இடங்கள் பல. சான்றுகளாக,

"விழவின் ஓசைஅடி யார்மிடை உற்று
விரும்பிப் பொலிந்து எங்கும்"[221]

"எடுக்கும் விழவும் நன்னாள் விழவும்"[222]

"கொந்துஅணை யுங்குழ லார்விழவில்
கூட்டம் இடைஇடை சேரும் வீதி"[223]

"கோல விழாவின் அரங்கது ஏறி"[224]

"விழவோ டொலி மிகுமங்கையர் தகுமாடக சாலை"[225]

"நடையும் விழவொடு நாள்தொறும்
மல்கும் கழுமலம்"[225]

"திருவினார் செல்வ மல்கு விழாவணி
மருவினார்வலங் கொள்மறைக் காடரோ"[227]

என்ற தொடர்களைச் சுட்டலாம். விழா நன்னாளில் எடுக்கப்படும் என்பதையும் அடியார்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதையும் இத்தொடர்கள் உணர்த்துகின்றன.

சிறப்பு நிலையில்

தேர்த்திருவிழா

திருவிழாக்களில் மிக முக்கியமானதொரு இடத்தைப் பெறுவது தேர்த் திருவிழாவாகும். திருக்கோயிலைச் சுற்றியுள்ள மாட வீதிகளில் இறைவன் தேரில் உலா வருதலாகிய இந்நிகழ்ச்சி மூவர் தேவாரத்தில் சிறப்பாகச் சுட்டப்பெறுகிறது. சான்றுகளாக,

"பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்"[228]

"பாரார் புகழால் பத்தர் சித்தர்
பாடி ஆடவே
தேரார வீதி முழவார் விழவின்
ஒலியும் திசைசெல்ல"[229]

"ஆழித்தேர் வித்தகனை நான்கண்டது ஆரூரே"[230]

"தேரு லாவிய தில்லையுட் கூத்தனை"[231]

"................பவனி வீதி விடங்கனை
மால்விடைமேல் நெடுவீதி போதக் கொண்டார்"[232]

என வருவனவற்றைக் குறிக்கலாம். தேர்த் திருவிழாவிற்கு இறையன்பர்கள் கூட்டம் அதிகம் வரும். ஆடலும் பாடலும் நிறைந்து இத்தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

ஐப்பசி ஓணம்

இது ஐப்பசி மாத ஓண விண்மீனில் கொண்டாடப்பெறும் விழாவாகும். இதனை,

"கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும்"[233]

எனவரும் பாடலடிகளால் அறியலாம்.

கார்த்திகை விளக்கீடு

கார்த்திகை மாதத்தில் நடைபெறும் தீபத் திருவிழா குறிப்பிடத்தக்கது. சங்க காலத்திலிருந்து இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ் விளக்கீடு, பக்தி இயக்கக் காலத்திலும் கொண்டாடப்பட்டதை,

"துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு..."[234]

எனவரும் பாடலால் உணரலாம்.

ஆதிரை நாள்

திருவாதிரை சிவபெருமானுக்கு உகந்த விண்மீன் என்பர். இவ் விண்மீன் வரும் நாள் விழாவாகக் கொண்டாடப்பெறும் சிறப்புடையது. இதனை,

"கார்தரு சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஆதிரை நாள்..."[235]

எனவரும் பாடிலடி கூறுகிறது. இவ் ஆதிரைநாள் விழாவைத் திருநாவுக்கரசர் ஒரு பதிகம் முழுவதும் பாடிச் சிறப்பித்துள்ளார். இப்பதிகம் திருவாதிரைத் திருப்பதிகம் என்றே இடம்பெற்று உள்ளது.

"அத்தன் ஆரூர் ஆதிரைநாள்"

"அணியான் ஆரூர் அதிரைநாள்"

"ஆதி ஆரூர் ஆதிரைநாள்"

"அணங்கன் ஆரூர் ஆதிரைநாள்"

"அலமர் ஆரூர் ஆதிரைநாள்"

"அம்மான் ஆரூர் ஆதிரைநாள்"

"அந்திரன் ஆரூர் ஆதிரைநாள்"

"அடிகள் ஆரூர் ஆதிரைநாள்"

"அன்பன் ஆரூர் ஆதிரைநாள்"

"ஆரூரன் தன் ஆதிரை நாள்"[236]

என்று இவ்விழா சுட்டப்பட்டுள்ளது. திருவாதிரை நோன்பிருந்து கொண்டாடப்படும் விழா இது. இந்நாளிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சிதம்பரத்தில் திருவாதிரை மிகவும் சிறப்பான விழாவாகக் கொண்டாடப் படுகிறது. நடராசப் பெருமான் கருவறையை விட்டு வெளியே வந்து காட்சி கொடுக்கும் விழாவாகும் இது.

தைப்பூச விழா

இவ்விழாவைத் தை மாதம் பூசம் எனும் விண்மீன் வரும் நாளில் கொண்டாடுவர். இவ்விழாவும்,

"நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம்...."[237]

எனத் தேவாரத்தில் இடம்பெறுகிறது.

கடலாட்டு விழா

சங்க காலந்தொட்டே இருந்துவரும் விழா கடலாடுத லாகும். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் 'கடலாடு காதை' என்று ஒரு தனிக் காதையாகவே இது சிறப்பிக்கப்படுகிறது. இது தவிர பெருங்கதை, பரிபாடல்

முதலிய பல இலக்கியங்களிலும் இவ்விழா குறிப்பிடப் பெறுகிறது. தேவாரத்தில்,

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டு"[238]

என்று இவ்விழா சுட்டப்பெற்றுள்ளது.

பங்குனி உத்திரநாள் விழா

இவ்விழா பங்குனி மாத உத்திர விண்மீனில் சிவன் கோயில்களில் கொண்டாடப்பெறும். இவ்விழா,

"கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்"[239]

"பாரூர் பறிப்பத்தம் பங்குனி உத்திரம்"[240]

"ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்தமாக ஒளிதிகழும்"[241]

எனத் தேவாரத்தில் இடம்பெறுகிறது.

அட்டமிநாள் விழா

அட்டமி என்பது ஒரு திதியாகும். இத் திதியில் கொண்டாடும் விழா அட்டமிநாள் விழாவாகும்.

"பண்ணார் பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்"[242]

"தீர்த்தமாம் அட்டமிமுன் சீருடை ஏழுநாளும்
கூத்தராய் வீதி போந்தார் குறுக்கை வீரட்டனாரே"[243]

என்ற பாடலடிகளால் அறியப்படுகிறது.

பொற்றாப்பு விழா

இவ்விழா குறித்த விளக்கம் தேவாரத்தில் இல்லை. பெயர் மட்டும் குறிக்கப்பட்டுள்ளது.

"கற்றோர்கள் ஏத்தும் கபாலீச்சரம் அமர்ந்தான்
பொற்றாப்பு"[244]

என ஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

பெஞ்சாந்தி விழா

பெருஞ்சாந்தி விழா என்பதைக் குடமுழுக்கு விழா என்றே பலரும் பொருள் கொள்கின்றனர். ஆனால் தேவாரத்தில் இதற்குச் சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. 'பெருஞ்சாந்தி' என்று பெயரளவிலேயே இவ்விழா குறிப்பிடப்பெறுகிறது.

"கருஞ்சோலை சூழ்ந்த காபலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ்சாந்தி..."[245]

என்று தேவாரத்துள் இவ்விழா குறிப்பிடப்பெற்றுள்ளது.

வழிபாட்டில் பலவகையினர்

மூவர் தேவாரத்தில் திருக்கோயில் வழிபாட்டைப் பல வகையினரும் செய்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. மனிதர்கள் மட்டுமல்லாது, வானவர்கள், புராண, இதிகாசத் தலைவர்கள், அரக்கர்கள், தெய்வங்கள், நவக்கிரகங்கள், மும்மூர்த்திகளில் சிறப்பாகத் திருமால் ஆகியோர் செய்த வழிபாடு, அஃறிணை உயிர்கள் செய்த வழிபாடு எனப் பல வழிபாடுகளையும் பதிவு செய்துள்ளனர் தேவார மூவர்.

தம்பதியினராய் சேர்ந்து வழிபடல்

மூவர் தேவாரத்தில் தனிமனித வழிபாடு, கூட்டு வழிபாடு என்றெல்லாம் மனிதர்கள் செய்த வழிபாடுகள் குறித்துப் பாடப்பட்டுள்ளன. அதேபோல, கணவன் மனைவியுமாய் சேர்ந்து வந்து திருக்கோயிலை வழிபடுதலையும் சிறப்பாகக் குறித்துள்ளனர். சைவ சமயம் இல்லற வாழ்வை இகழவில்லை; மாறாக ஏற்றுப் போற்றுகிறது. எனவேதான், எக்காலமும் ஞான நிலையில் உள்ள சிவபரம் பொருளையே மாதொரு கூறனாய்க் கண்டு, அக்காட்சியை வடிவத்தைப் பலவிடங்களில் போற்றிப் பாடுகின்றனர். அவ்வகையில் தேவாரத்தில்,

"சூடக முன்கை மடந்தை மார்கள்
துணைவ ரொடும் தொழுது ஏத்தி வாழ்த்த"[246]

"மனம் ஆர்தரு மடவாரொடு
மகிழ் மைந்தர்கள் மலர்தூய்"[247]

என வருமிடங்கள் குறிப்பிடத்தக்கவை. இதன்மூலம் தம்பதியின ராக வந்து வழிபட்டமையை உணர்ந்து கொள்ளலாம். திருமணம் ஆனவர்கள் சேர்ந்து கோயில் சென்று இறைவனை வழிபடுவது சிறப்புமிக்கது.

மகளிர் செய்த வழிபாடு

வழிபாட்டில் சங்க காலந்தொட்டே மகளிர் சிறப்பிடம் பெற்றிருந்தனர். குறிப்பாகப் பக்தி இயக்க காலத்தில் வழிபாட்டிற்குத் துணைபுரிவோராகவும், திருக்கோயில் வழிபாடு செய்பவராகவும் விளங்கியுள்ளனர். இந்நிலைகளை மூவர் பதிகங்கள் பல இடங்களில் சுட்டுகின்றன. சான்றுகளாக,

"வளைபயில் இளையர் ஏத்தும்
வலம்புரித்து அடிகள் தாமே"[248]

"மாதரார் வலங்கொள் மறைக்காடர்"[249]

"கோதையர் இடும்பலி கொள்பரமனிடம்"[250]

"மாழையொண் கண் வளைக்கை நுளைச்சியர் வண்பூந்
தாழைவெண் மடற்கொய்து கொண்டாடு சாய்க்காடே"[251]

எனப் பொதுவாக மகளிர் செய்த வழிபாடுகளைப் பதிவு செய்துள்ளது தேவாரம் தினசரி திருக்கோயில் வழிபாட்டில் உள்ள பல்வேறு உபசாரங்களில் ஆடல்பாடல் ஆகியவற்றை நிகழ்த்துபவராகவும் விளங்கியுள்ளனர். இதனை,

"கன்னியர் ஆடல் கலந்து"[252]

"பண்ணின்நேர் மொழி மங்கைமார் பலர்
பாடி யாடிய ஓசை"[253]

"காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாட"[254]

"........ அருள் செய்வான் அமருங் கோயில்
வலவந்த மடவார்கள் நடமாட முழவதிர"[255]

"மங்கையர் ஆடல் ஓவா மன்னு காரோணத் தானை"[256]

எனவரும் தேவாரப் பாடலடிகளால் அறியலாம்.

மேலும் திருக்கோயில் வழிபாட்டில் இறைத் திருமேனியை முழுக்காட்டி, தீப, தூப வழிபாடு செய்தும், மலர் வழிபாடு செய்தும் பெண்கள் வழிபாடுகள் நிகழ்த்தியுள்ளனர் என்பதற்கும் தேவாரத்தில் சான்று கிடைக்கிறது. இதனை,

"பொன்னியல் நறுமலர் புனலொடு தூபஞ்
சாந்தமும் ஏந்திய கையின ராகிக்
கன்னியர் நாடொறும் வேடமே பரவுங்
கழுமலம் நினையநம் வினைகரி சறுமே"[257]

என்ற பாடல் மூலம் நிறுவலாம்.

வழிபாட்டில் வானவரும் பிறரும்

திருக்கோயில் வழிபாட்டில் வானவர்களும் ஈடுபட்டு இருந்தனர். சித்தர்கள், தானவர் முதலியோரும் வழிபட்டனர்.

"தேவர்கள், தானவர் சித்தர் விச்சா
தரர்கணத் தோடும்சிறந்து பொங்கி
ஆவினில் ஐந்து உகந்து ஆட்டும் கூடல்"[258]

"உம்பரும் நாகர்உல கம்தானும்
ஒலிகடல் சூழ்ந்த உலகத்தோரும்"[259]

"முறையால்மிகு முனிவர் தொழு, முதுகுன்று"[260]

"சைவர் பாசுபதர்கள் வணங்கும்
சண்பை நகரா ரே"[261]

"கைப்போது மலத்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை"[262]

"முந்திய தேவர் கூடி
முறைமுறை இருக்குச் சொல்லி"[263]

"இந்திரன் பிரமன் அங்கி எண்வகை வசுக்க லோடு
மந்திர மறைய தோதி வானவர் வணங்கி வாழ்த்த"[264]

"இந்திர னோடு தேவர் இருடிகள் ஏத்து கின்ற
சுந்தர மானார்"[265]

"சுற்றுமுன் இமையோர் நின்று
தொழுதுதூ மலர்கள் தூவி"[266]

"பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம்பணிவார்"[267]

"வானவர் தானவர் வைகல்
மலர்கொணர்ந்து இட்டிறைஞ்சி"[268]

"அயனொடு மாலிந் திரன்சந்திரா
தித்தர் அமரர் எலாம்
சயசய என்றுமுப் போதும்
பணிவன"[269]

"முப்போ தும்பிர மன்தொழ நின்றவன்"[270]

"சித்தர் கன்னியர் தேவர்கள் தானவர்
பித்தர் நான்மறை வேதியர் பேணிய"[271]

"சித்தர் தேவர்கள் மாலொடு நான்முகன்
பித்தர் சேரமண் கையர் புகழவே"[272]

"மங்கலக்கடி ஈசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வன் விண்ணொடு மன்னும்நேர்"[273]

என வரும் பாடலடிகளைக் கொண்டு, தேவர்கள், தானவர்கள், சித்தர்கள் முதலியோர் வழிபட்டமையை உணர்ந்து கொள்ளலாம்.

திருமால் செய்த வழிபாடு

திருமால் செய்த வழிபாடு பல இடங்களில் பேசப் பெறுகிறது. திருமாலை முதல் சிவபக்தர் என்று கூறுவது சைவ சமயத்தில் உண்டு. அதனால்தான் சிவன் கோயில்களில் விமானத்தின் மேற்குப் புறத்தில் கோஷ்ட மூர்த்தமாக திருமால்

உருவம் இருக்கும். தேவாரத்தில்,

"............... அயன் மாலெனும்
இருவரும் நாடிநின் றேத்துகோ யில்இரா மேச்சுரம்"[274]

"............ அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருஇரா மேச்சு ரத்தை"[275]

"தடமலர் ஆயி ரங்கள் குறைவொன்ற தாக
நிறைவென்று தன்க ணதனால்
உடன்வழி பாடு செய்த திருமாலை
யெந்தை பெருமா னுகந்து மிகவும்
சுடரடி யால்முயன்று சுழல்வித் தரக்கன்
இதயம் பிளந்த கொடுமை
அடல்வலி ஆழி ஆழி யவனுக் களித்த
அவனாம் நமக்கோர் சரணே"[276]

"ஏறுடன் ஏழ டர்த்தான் எண்ணிசூ யிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை அர்ச்சித்தான் அடியி ணைக்கீழ்
வேறுமோர் பூக்கு றைய மெய்ம்மலர்க் கண்ணை மீண்டக்
கூறுமோர் ஆழி ஈந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே"[277]

என வரும் இடங்கள் குறிப்பிடத்தக்கவை. திருமால் சிவவழிபாடு செய்து, சக்கராயுதம் பெற்றது சைவ சமயத்தவரால் சிறப்பித்துப் பேசப்படுவதாகும்.

புராண இதிகாசங்களில் இடம்பெறுவோர் செய்த வழிபாடுகள்

புராண, இதிகாசங்களில் இடம்பெறும் வாலி, சுக்ரீவன், அனுமன், இராவணன், சடாயு, ஜாம்பவான், சம்பாதி, திருமகள், கலைமகள், குபேரன் போன்றோர் சிவவழிபாடு செய்த குறிப்புகளும் தேவாரத்தில் இடம்பெற்று உள்ளன. இதனை,

"நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்னநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே"[278]

"நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க
வாலினாற் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்"[279]

"வாலியார் வணங்கி யேத்தும் திருவையாறு"[280]

"தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே"[281]

முதலிய பாடல் வரிகளால் உணர்ந்து கொள்ளலாம். இதன் மூலம் இராமாயண, மகாபாரத இதிகாசங்களில் குறிப்பிடப்பெறும் நாயகர்கள் சிவவழிபாடு செய்து வழிபட்டமை போதரும்.

நவக்கிரகங்கள் செய்த வழிபாடு

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன்(குரு), வெள்ளி (சுக்கிரன்), சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கோள்கள் சிவன் கோயில்களில் சென்று வழிபாடு செய்துள்ள செய்திகளும் மூவர் தேவாரத்தில் இடம்பெறு கின்றன. இன்று இத்தலங்கள் நவக்கிரகத் தலங்களாகப் போற்றப் படுகின்றன. இச்செய்தியை,

"ஆதித்தன் அங்கி சோமன் அயனொடு மால் புதனும்
போதித்து நின்று லகிற் போற்றிசைத்தார்"[282]

"இயக்கர் கின்னரர் ஞமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கம் இல்புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவர்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
அர்ச்சித் தார்பெறும் ஆரருள்"[283]

எனவரும் பாடல்களால் அறியலாம்.

நவக்கிரகங்கள் பூசித்த பிற தலங்கள்

1. சீர்காழி - சந்திரன், வியாழன், ராகு
2. புள்ளிருக்கு வேளூர் - செவ்வாய், சூரியன்
3. திருநெல்லிக்காவல் - சூரியன், சந்திரன், சனி
4. தேவூர் - வியாழன், சூரியன்

5. திருக்காளத்தி - ராகு, கேது
6. குடந்தைக்காரோணம் - சந்திரன், வியாழன்
7. திருப்பாம்புரம் - ராகு, கேது
8. திருப்பரிதி நியமம் - சூரியன்
9. திருநள்ளாறு - சனி
10. திருநாகேச்சுரம் - ராகு
11. திருவெண்காடு - புதன்
12. கஞ்சனூர் - சுக்கிரன்[284]

அஃறிணை உயிர்கள் செய்த வழிபாடு

திருக்கோயில் வழிபாட்டை மனிதர்கள், வானவர்கள், புராண, இதிகாச நாயகர்கள், நவக்கிரகங்கள் மட்டுமல்லாமல் அஃறிணை உயிர்களும் செய்துள்ளன. இதனையும் மூவர் தேவாரம் பதிவு செய்துள்ளது. அவற்றுள்,

"வித்தகத்தால் வெள்ளானை வள்ள அன்பு
விரிவியவா கண்டதற்கு வீடுகாட்டி"[285]

"பிறையெயிற்று வெள்ளைப் பன்றி பிரியாது
பலநாளும் வழிபட்டேத்தும் சீரவன்காண்"[286]

"புள்ளினம் புகழ் போற்றி பூந்தராய்"[287]

"மந்திவந்து கடுவன்னொடுங் கூடி வணங்கும் வலிதாயம்"[288]

"மந்திஏறி இனமாமலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்கும் கோயில்"[289]

"பூந்தண் நறுவேங்கைக் கொத்திறத்து மத்தகத்திற்
பொலிய ஏந்திக்
கூந்தற் பிடியும் களிறும் உடன் வணங்கும் குறும்பலா"[290]

"புலியும் மானும் அல்லாத சாதிகளும்
அங்கழல் மேல் கைகூப்ப"[291]

எனவரும் பாடலடிகளைக் குறிப்பிடலாம். இதன் மூலம் வெள்ளானை, வெள்ளைப் பன்றி, புள்ளினங்கள், குரங்குகள்,

வேங்கை, புலி, மான் முதலிய அஃறிணை உயிர்கள் வழிபட்ட செய்தி பெறப்படுகிறது.

யானை வழிபட்டமை

திருஆனைக்கா எனும் தலப்பெயரிலேயே யானை இடம்பெற்றிருப்பது நோக்கத்தகுவதாம். இத்தலத்தில் சிலந்தியும் இறைவன் திருமேனியின் மேல் பந்தல் அமைத்து வழிபாடு செய்த பெருமையும் உண்டு. இச்சிலந்தி, வழிபாட்டின் பயனாக மறுபிறவியில் எழுபது மாடக் கோயில்களைக் கட்டிய கோச்செங்கணானாகப் பிறந்தது என்னும் வரலாற்றையும் தேவாரங்கள் பதிவு செய்துள்ளன. சான்றுகளாக,

"சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர்செய்து
உலந்தவன் இறந்த போதே கோச்செங்க ணானுமாக"[292]

"புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயின் நூலால்
பொதுப்பந்தர் அதுஇழைத்துச் சருகால் மேய்ந்த
சித்தியினால் அரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலால் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை விள்ளா அன்பு
விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே"[293]

எனவரும் பாடல்களைக் காட்டலாம்.

தலங்களும் பூசித்த அஃறிணை உயிர்களும்

குரங்கு	- குரக்குகா, குரங்காடுதுறை, குரங்கணில் முட்டம்
அணில்	- குரங்கணில் முட்டம்
நரி	- சிறுகுடி
எருமை	- திருக்கேதாரம்
ஆடு	- திருவாடானை
பன்றி	- திருச்சிவபுரம், அரதைப் பெரும்பாழி

பூனை	-	சிக்கல்
பாம்பு	-	காளத்தி, குடந்தைக் கீழ்க்கோட்டம், நாகேச்சுரம், பாம்புரம், நாகைக்காரோணம்
யானை	-	கானப்பேர், மதுரை, காளத்தி, ஆடானை, ஆனைக்கா
மீன்	-	திருச்சேலூர்
பசு	-	ஆவடுதுறை, ஆவூர், பட்டீச்சரம், பந்தணைநல்லூர்
நண்டு	-	திருந்து தேவன்குடி
எறும்பு	-	திருவெறும்பூர்
நாரை	-	திருநாரையூர்
வண்டு	-	திருவண்டுறை
ஈ	-	ஈங்கோய்மலை
கழுகு	-	கழுக்குன்றம்
சக்கரவாகம்	-	சக்கரப்பள்ளி
புறா	-	புறவம் (சீரகாழி)
மயில்	-	மயிலாடுதுறை[294]

விலங்கின வடிவை வழிபாட்டிற்காகப் பெற்றவர்கள்

மனிதர்களாகப் பிறந்து இறைவழிபாட்டை இடைவிடாது செய்வதற் காகவே விலங்கின வடிவை இறைவனிடம் வேண்டிப் பெற்றவர்களில் புலிக்கால் பெற்ற வியக்கரபாதரும், பாம்புருக் கொண்ட பதஞ்சலியும், கிளி மூக்கு கொண்ட சுக முனிவரும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

அப்பர் கண்ட கயிலைக் காட்சியில் உயிரினங்கள்

அப்பர் பெருமான் கயிலை நாதனைக் காண திருக்கயிலை யாத்திரை மேற்கொண்டு அக்காட்சியை இறைவன் திருவருளால் திருவையாற்றில் கண்டு மகிழ்ந்தார். அந்நிலையில் திருவையாற்றில் பல்வேறு உயிரினங்கள் தம் துணையோடு இறைவனை வழிபட்டுத் திரும்புகின்ற காட்சியைத் தம்

பதிகத்தில் பதிவு செய்துள்ளார். 'மாதர்ப்பிறைக் கண்ணியானை'[295] எனத் தொடங்கும் திருவையாற்றுத் திருப்பதிகம் முழுவதும், யானை (களிறு, பிடி), கோழி (சேவல், பெடை), குயில், மயில், பன்றி, நாரை, மாடு, கிளி முதலிய உயிரினங்கள் இடம்பெறுவது ஈண்டு குறிக்கத்தக்கதாம்.

மனிதர்களன்றிப் பிறர் செய்த வழிபாடுகள் கூறப்படுவதன் நோக்கம்

தேவார மூவர் மனிதர்கள் செய்த திருக்கோயில் வழிபாட்டை மட்டு மல்லாமல், வானவர்கள், புராண இதிகாச நாயகர்கள் செய்த வழிபாடுகள், அஃறிணை உயிர்கள் செய்த வழிபாடுகள் ஆகியவற்றைக் கூறக் காரணம் மக்களுக்குத் தன்னம்பிக்கையூட்டி, வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்து வதற்குத்தான். கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமான், 'உன்னுடைய ஊரில் விரும்பி உறைகிறான்' இவ்வூர் இறைவனைக் காணவும், வழிபடவும் இந்திரன் முதலிய தேவர்கள் வருகிறார்கள் என்றெல்லாம், மூவர் தேவாரம் குறிப்பிட்டு மக்கள் மனதில் அவ்வூர் பற்றி உயர்வான நம்பிக்கையை உருவாக்கிப் பெருமித உணர்வை ஏற்படுத்துகிறது.

வழிபாட்டின் பயனும் வழிபடாதோர் இழிவும்

பல்வகைப்பட்ட வழிபாடுகளைக் குறிப்பிட்ட தேவார மூவர் வழிபாட்டினால் உண்டாகும் பயன்களையும் வழிபடாதோர் இழிவு குறித்தும் தேவாரத்தில் பதிவு செய்துள்ளனர்.

வழிபாட்டின் பயன்

வழிபாடு செய்வதால் பின்வரும் பலன்கள் கிடைக்கும் என மூவர் தேவாரத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன.

"ஏகம்பம் மேவினாரைத் தலையினால் வங்க வல்லார்
தலைவர்க்குத் தலைவர் தாமே"[296]

"தலையால் வணங்குவார் தலையா னார்களே"[297]

"அனுச யப்பட் டதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ ணூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே"[298]

"................... வலஞ்சுழி ஈசனைப்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே"[299]

"நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே"[300]

"நமக்கு நல்லது நல்லம் அடைவதே"[301]

"நல்லம் மேவிய நாத னாடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே"[302]

என வழிபாட்டின் பயன்களை விதந்தோதுகின்றனர். இதன் மூலம் வழிபாடு செய்தால் மனிதரில் தலைமை பெறலாம்; பாவம் கெடும்; வினை ஓடும்; பகை நீங்கும் என்ற செய்திகள் பெறப்படுகின்றன.

வழிபடாதோர் இழிவு

வழிபாட்டின் பயனைக் குறித்த தேவார மூவர், வழிபடாதோர் இழிவையும் பின்வருமாறு சுட்டியுள்ளனர்.

"கோடி காவனைக் கூறாத நாளெல்லாம்
பாடி காவலிற் பட்டுக் கழியுமே"[303]

"புலியூரானைப் பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே"[304]

"கற்றவர் பயிறு நாகைக் காரோணம் கருதி யேத்தப்
பெற்றவர் பிறந்தார் மற்றுப் பிறந்தவர் பிறந்திலாரே"[305]

"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்

அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவ றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே"[306]

எனவரும் பாடல்கள் வழிபடாதோர் இழிவை இடித்துரைக்கின்றன. இப்பாடலடிகள் வழிபாடு செய்யாதவர்கள் பாவத்தின் பிடியில் வீழ்ந்து துன்புறுவர் என்றும், பிறந்ததன் பயனை அடைய முடியாது என்றும், நோய்களால் அவதியுறுவர் என்றும், முக்தி அடையமுடியாது என்றும் உணர்த்துகின்றன.

வழிபடுவதற்குப் பூர்வ புண்ணியம் வேண்டும்

இப்பிறவியில் இறைவனை வணங்குவதற்கும், திருக்கோயில் வழிபாடு செய்வதற்கும் இறைவன் திருவருளும், முன்னைப் பிறவிகளில் புண்ணியம் செய்திருக்கவும் வேண்டும் என்று தேவார மூவர் பதிந்துள்ளனர். சான்றாக,

"எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே"[307]

"என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே
....
மன்னுசோதி நம்பால் வந்து வைகவே"[308]

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே"[309]

என வருவனவற்றைக் காணலாம். மாணிக்கவாசகர் குறிப்பிடும்,

"அவனருளாலே அவன்தாள் வணங்கி"[310]

என்பதும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கதாம்.

தொகுப்புரை

- வழிபாடு என்பது வழிவழியாக வரும் சயமக் கோட்பாடுகளைப் பின்பற்றி, வணங்குதல், பூசனை செய்தல் ஆகிய இரண்டுமாகும்.
- சைவ சமயச் சாத்திரங்கள் இறைவழிபாட்டில் நால்வகை நெறிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன வற்றைக் காட்டுகின்றன.
- நால்வகை நெறிகளைக் கடைபிடித்து, திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் முத்தி பெற்றனர்.
- மனம், வாக்கு, காயம் இவற்றால் இறைவனை வழிபட வேண்டும் என்பதே இந்நால்வகை நெறிகளின் சாரமாகும். அதற்காகவே இம் மானுடப் பிறவி வாய்த்துள்ளது என்று சிவஞான சித்தியார் குறிப்பிட்டு உள்ளது.
- தேவாரத்தில் மலர் வழிபாடு, திருமஞ்சனமாட்டுதல், தீபதூப வழிபாடு, பாடி வழிபடல், ஆடி வழிபடல், பாடல் பாடுவதால் கிடைக்கும் பயன்கள் முதலிய செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன.
- அடியார்கள் தாமாகவே திருக்கோயிலை அடைந்து இறைத் திருமேனிகளை நீராட்டியுள்ளனர் என்பது மூவர் தேவாரத்தின் மூலம் அறியலாகும் மிக முக்கியமான செய்தியாகும்.
- வழிபாட்டு முறைகளாக, வலம் வருதல், அங்கப் பிரதட்சணம், வேள்வி செய்தல், தலையால் வணங்குதல், நமசிவாய மந்திர உச்சாடனம், அகவழிபாடு, ஞான, யோக வழிபாடுகள், கூட்டு வழிபாடு, முப்போது வழிபடுதல், அர்ச்சனை வழிபாடு என்பன சுட்டப் பெற்றுள்ளன.

- வழிபாட்டில் திருவிழாக்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. தேவார மூவர், தேர்த்திருவிழா, ஐப்பசி ஓணம், கார்த்திகை விளக்கீடு, மார்கழி ஆதிரை, தைப்பூசம், மாசிக்கடலாட்டு, பங்குனி உத்திரம், அட்டமி நாள், பொன்னூசல், அன்னம்பாலிப்பு, பெருஞ்சாந்தி, பொற்றாப்பு விழா முதலிய விழாக்களைச் சிறப்பாகச் சுட்டியுள்ளனர்.
- மூவர் தேவாரத்தில், திருக்கோயில் வழிபாட்டை மனிதர் மட்டுமல்லாது, வானவர்கள், புராண இதிகாசத் தலைவர்கள், அரக்கர்கள், தெய்வங்கள், நவக்கோள்கள், மும்மூர்த்திகளில் சிறப்பாக, திருமால் எனப் பல வகையினரும் செய்ததாகக் குறிப்புகள் காணப்படு கின்றன.
- யானை, குரங்கு, அணில், சிலந்தி, எறும்பு, ஈ, பாம்பு, பசு, நாரை, மயில் முதலிய அஃறிணை உயிர்களும் திருக்கோயில் வழிபாட்டைச் செய்துள்ளன.
- வழிபாடு செய்வதால் கிடைக்கும் பயன்களாக வினை நீங்கும், முக்தி கிட்டும், செல்வம், புகழ் கிடைக்கும், பாவம் நீங்கும் முதலியவற்றைத் தேவார மூவர் குறித்துள்ளனர்.
- தேவாரப் பாடல்கள், வழிபாடு செய்யாதவர்கள் பாவத்தின் பிடியில் வீழ்ந்து துன்புறுவர் என்றும், பிறந்ததன் பயனை அடையமுடியாது என்றும், நோய்களால் அவதியுறுவர் என்றும், முக்தி அடைய முடியாது என்றும் உணர்த்துகின்றன.

குறிப்புகள்

1. தமிழ்ப்பேரகராதி, தொகுதி VI, ப.3545.
2. கு. வைத்தியநாதன், சைவசித்தாந்தத் தடைகளும் விடைகளும், ப.89
3. மேலது, ப.89.
4. மேலது, ப.89.
5. மேலது, ப.89.
6. சிவஞான சித்தியார் சுபக்கம், பா.270.
7. மேலது, பா.182.
8. மேலது, பா.270.
9. திருமூலர், திருமந்திரம், பாடல்கள் 1507, 1509, 1510, 1512.
10. மேலது, பா.1445.
11. சிவஞான சித்தியார் சுபக்கம், பா.271.
12. திருமூலர், திருமந்திரம், பா.1447.
13. சி. அருணைவடிவேல் முதலியார் உரை, திருமந்திரம், பா.409.
14. சிவஞான சித்தியார் சுபக்கம், பா.271.
15. சிவஞான போதம், சூ.12.
16. குறிஞ்சிப்பாட்டு, அடி.5-7.
17. முல்லைப்பாட்டு, அடி.8-10.
18. கலித்தொகை, பா.93.
19. புறநானூறு, பா.335.
20. அகநானூறு, பா.152.
21. திருநாவுக்கரசர் தேவாரம்,4: கடவூர் மயானம்:1.
22. திருநாவுக்கரசர் தேவாரம், 4:31:4.
23. மேலது, 4:3:1.
24. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:25:2.
25. சுந்தரர் தேவாரம், 7:2:4.
26. திருநாவுக்கரசர் தேவாரம், 4:20:5.
27. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:114:1.
28. திருநாவுக்கரசர் தேவாரம், 5:7:11.
29. மேலது, 4:61:1.
30. மேலது, 4:72:8.

31. சுந்தரர் தேவாரம், 7:100:7.
32. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:54:4.
33. திருநாவுக்கரசர் தேவாரம், 4:6:2.
34. மேலது, 4:85:1.
35. மேலது, 5:14:1.
36. மேலது, 5:21:8.
37. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:54:1.
38, மேலது, 1:32:5.
39. மேலது, 1:48:10.
40. மேலது, 1:25:2.
41. சுந்தரர் தேவாரம், 7:69:9.
42. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:57:6.
43. மேலது, 1:25:பதிகம் முழுதும்.
44. திருநாவுக்கரசர் தேவாரம், 4:36:9.
45. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:55:2.
46. திருநாவுக்கரசர் தேவாரம், 4:77:3.
47. மேலது, 4:55:2.
48. மேலது, 5:70:3.
49. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:114:1.
50. திருநாவுக்கரசர் தேவாரம், 5:7:3.
51. மேலது, 5:30:10.
52. சுந்தரர் தேவாரம், 7:12:3.
53. திருநாவுக்கரசர் தேவாரம், 4:43:8.
54. மேலது, 4:64:5.
55. சுந்தரர் தேவாரம், 7:44:7.
56. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:12:5.
57. மேலது, 1:38:1.
58. மேலது, 1:53:9.
59 மேலது, 1:57:3.
60. திருநாவுக்கரசர் தேவாரம், 4:3:1.
61. மேலது, 4:7:4.
62. மேலது, 4:31:4.

63. மேலது, *4:63:1.*
64. மேலது, *4:66:1.*
65. மேலது, *5:90:9.*
66. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப.238.
67. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:32:1.*
68. மேலது, *1:79:6.*
69. திருநாவுக்கரசர் தேவாரம், *4:1:6.*
70. மேலது, *4:3:1.*
71. மேலது, *4:3:1.*
72. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:3:1.*
73. மேலது, *1:21:4.*
74. மேலது, *1:28:2.*
75. திருநாவுக்கரசர் தேவாரம், *5:2:4.*
76. திருஞானசம்பந்தர் தேவாரம், *3:1:1.*
77. மேலது, *1:43:1.*
78. சுந்தரர் தேவாரம், *7:5:1.*
79. திருநாவுக்கரசர் தேவாரம், *5:95:4.*
80. திருஞானசம்பந்தர் தேவாரம், *8:50:2.*
81. திருநாவுக்கரசர் தேவாரம், *4:55:3.*
82. மேலது, *4:11:2.*
83. மேலது, *6:23:8.*
84. சுந்தரர் தேவாரம், *7:17:4.*
85. மேலது, *7:61:8.*
86. திருஞானசம்பந்தர் தேவாரம், *2:42:5.*
87. திருநாவுக்கரசர் தேவாரம், *6:52:5.*
88. திருஞானசம்பந்தர் தேவாரம், *2:23:5.*
89. மேலது, *2:40:6.*
90. மேலது, *2:16:3.*
91. திருநாவுக்கரசர் தேவாரம், *4:38:6.*
92. திருஞானசம்பந்தர் தேவாரம், *3:10:3.*
93. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் வழிபாடு, ப.435.
94. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:62:5.*

95. மேலது, 1:1:1.
96. காசி யாத்திரையின் போது நேரில் கண்டது, நாள்: 4.9.1999.
97. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:99:4.
98. திருநாவுக்கரசர் தேவாரம், 6:39:1.
99. சுந்தரர் தேவாரம், 7:81:4.
100. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் வழிபாடு, ப.435.
101. மேலது, ப.503.
102. திருநாவுக்கரசர் தேவாரம், 4:31:1.
103. மேலது, 4:31:4.
104. மேலது
105. மேலது, 4:77:3.
106. மேலது, 4:102:2.
107. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:3:3.
108. மேலது, 1:52:2.
109. திருநாவுக்கரசர் தேவாரம், 4:33:5.
110. மேலது, 4:36:3.
111. மேலது, 4:55:1.
112. மேலது, 5:5:5.
113. சுந்தரர் தேவாரம், 7:5:5.
114. மேலது, 7:14:3.
115. மேலது, 7:12:8.
116. மேலது, 7:23:2.
117. மேலது, 7:17:1.
118. மேலது, 7:88:5.
119. திருநாவுக்கரசர் தேவாரம், 6:31:3.
120. பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா.70.
121. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:71:1.
122. திருநாவுக்கரசர் தேவாரம், 6:8:5.
123. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:8:1.
124. மேலது, 1:11:4.
125. திருநாவுக்கரசர் தேவாரம், 1:1:6.
126. மேலது, 4:12:2.

127. மேலது, *4:24:9.*
128. மேலது, *4:31:2.*
129. மேலது, *4:48:3.*
130. மேலது, *4:79:3.*
131. சுந்தரர் தேவாரம், *7:50:1.*
132. திருஞானசம்பந்தர் தேவாரம், *2:13:1.*
133. சுந்தரர் தேவாரம், *7:11:2.*
134. மேலது, *7:96:4.*
135. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:1:11.*
136. மேலது, *2:3:11.*
137. மேலது, *2:7:11.*
138. மேலது, *2:*திருவிராகம்*:11.*
139. மேலது, *3:7:11.*
140. மேலது, *1:*சிரபுரம்*:11.*
141. மேலது, *1:*திருச்சேய்ஞலூர்*:11.*
142. மேலது,*1:*திருநெடுங்களம்*:11.*
143. திருநாவுக்கரசர் தேவாரம், *4:11:10.*
144. மேலது, *4:77:3.*
145. மேலது, *5:35:3.*
146. மேலது, *6:8:5.*
147. மேலது, *5:71:10.*
148. சுந்தரர் தேவாரம், *7:29:3.*
149. மேலது, *7:29:4.*
150. மேலது, *7:34:1.*
151. கலித்தொகை, பா.82.
152. மேலது, பா.104.
153. திருநாவுக்கரசர் தேவாரம், *4:9:7,8.*
154. மேலது, *5:9:1.*
155. மேலது, *4:99:8.*
156. திருக்குறள், 30.
157. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:80:1.*
158. மேலது, *3:122:2.*

159. மேலது, *1:39:3.*
160. சுந்தரர் தேவாரம், *7:12:6.*
161. மேலது, *7:வீழிமிழலை:10.*
162. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:63:2.*
163. சுந்தரர் தேவாரம், *7:வீழிமிழலை:8.*
164. திருநாவுக்கரசர் தேவாரம், *4:973:9.*
165. சுந்தரர் தேவாரம், *7:16:1.*
166. திருநாவுக்கரசர் தேவாரம், *4:9:1.*
167. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:80:7.*
168. திருநாவுக்கரசர் தேவாரம், *5:90:7.*
169. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:சீர்காழி:6.*
170. மேலது, *1:நள்ளாறு:6.*
171. திருநாவுக்கரசர் தேவாரம், *6:31:3.*
172. சுந்தரர் தேவாரம், *7:20:9.*
173. மேலது, *7:சோற்றுத்துறை:9.*
174. திருநாவுக்கரசர் தேவாரம், *4:11:1.*
175. மேலது, *4:11:6.*
176. மேலது, *4:11:8.*
177. மேலது, *4:11:2.*
178. மேலது, *5:90:2.*
179. மேலது, *5:60:4.*
180. மேலது, *5:27:3.*
181. மேலது, *5:43:6.*
182. மேலது, *4:94:6.*
183. மேலது, *4:81:8.*
184. மேலது, *4:94:5.*
185. மேலது, *4:11:3.*
186. மேலது, *4:77:4.*
187. மேலது, *5:60:1.*
188. திருஞானசம்பந்தர் தேவாரம், *3:22:2.*
189. மேலது, *3:22:3.*
190. மேலது, *3:22:4.*

191. மேலது, *3:22:6.*
192. மேலது, *3:22:11.*
193. சுந்தரர் தேவாரம், *7:ஆரூர்:1.*
194. மேலது, *7:48:1.*
195. திருநாவுக்கரசர் தேவாரம், *4:76:4.*
196. மேலது, *4:75:4.*
197. மேலது, *4:41:3.*
198. மேலது, *4:113:5.*
199. மேலது, *4:29:4.*
200. மேலது, *4:40:8.*
201. மேலது, *4:48:5.*
202. மேலது, *5:44:2.*
203. மேலது, *5:91:3.*
204. மேலது, *5:91:2.*
205. மேலது, *4:32:9.*
206. மேலது, *6:25:1.*
207. சுந்தரர் தேவாரம், *7:5:5.*
208. திருநாவுக்கரசர் தேவாரம், *4:90:8.*
209. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:4:10.*
210. மேலது, *1:29:7.*
211. திருநாவுக்கரசர் தேவாரம், *5:7:9.*
212. மேலது, *5:1:9.*
213. மேலது, *5:41:7.*
214. மேலது, *6:54:8.*
215. மேலது, *4:4:8.*
216. மேலது, *5:65:1.*
217. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:29:1.*
218. திருநாவுக்கரசர் தேவாரம், *4:29:7.*
219. மேலது, *4:100:9.*
220. மேலது, *5:5:9.*
221. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:2:6.*
222. மேலது, *1:42:10.*

223. மேலது, 1:15:5.
224. மேலது, 1:15:9.
225. மேலது, 1:முதுகுன்றம்:7.
226. திருநாவுக்கரசர் தேவாரம், 4:82:8.
227. மேலது, 5:9:7.
228. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:புன்கூர்:7.
229. மேலது, 1:நறையூர்:5.
230. திருநாவுக்கரசர் தேவாரம், 4:19:7.
231. மேலது, 5:2:9.
232. மேலது, 6:96:7.
233. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:47:2.
234. மேலது, 2:47:3.
235. மேலது, 2:47:4.
236. திருநாவுக்கரசர் தேவாரம், 4:21:1-10.
237. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:47:5.
238. மேலது, 2:47:6.
239. மேலது, 2:47:7.
240. திருநாவுக்கரசர் தேவாரம், 4:102:2.
241. மேலது, 6:45:5.
242. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:47:8.
243. திருநாவுக்கரசர் தேவாரம், 4:50:2.
244. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:47:9.
245. மேலது, 2:47:10.
246. மேலது, 1:42:1.
247. மேலது, 1:85:1.
248. திருநாவுக்கரசர் தேவாரம், 4:55:4.
249. மேலது, 5:9:1.
250. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:ஐயாறு:6.
251. மேலது, 2:9:5.
252. மேலது, 2:பிரபுரம்:5.
253. மேலது, 2:சீர்காழி:1.
254. மேலது, 1:ஐயாறு:6.

255. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:130:1.
256. திருநாவுக்கரசர் தேவாரம், 4:71:7.
257. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:79:6.
258. மேலது, 1:7:4.
259. மேலது, 1:7:5.
260. மேலது, 1:முதுகுன்று:5.
261. மேலது, 1:சண்பைநகர்:4.
262. திருநாவுக்கரசர் தேவாரம், 4:7:3.
263. மேலது, 4:29:4.
264. மேலது, 4:65:5.
265. மேலது, 4:33:1.
266. மேலது, 4:73:7.
267. மேலது, 4:90:6.
268. மேலது, 4:93:1.
269. மேலது, 4:100:1.
270. மேலது, 5:6:1.
271. மேலது, 5:51:5.
272. மேலது, 5:87:9.
273. மேலது, 5:73:3.
274. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:8:8.
275. திருநாவுக்கரசர் தேவாரம், 4:61:9.
276. மேலது, 4:14:10.
277. மேலது, 4:49:5.
278. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:84:1.
279. மேலது, 3:40:8.
280. திருநாவுக்கரசர் தேவாரம், 4:39:2.
281. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:16:1.
282. திருநாவுக்கரசர் தேவாரம், 4:36:7.
283. சுந்தரர் தேவாரம், 7:8:6.
284. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் வழிபாடு, ப.406.
285. திருநாவுக்கரசர் தேவாரம், 6:83:6.
286. மேலது, 6:87:6.

287. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:பூந்தராய்:6.
288. மேலது, 1:வலிதாயம்:5.
289. மேலது, 2:64:2.
290. மேலது, 2:71:8.
291. மேலது, 2:72:6.
292. திருநாவுக்கரசர் தேவாரம், 4:49:4.
293. மேலது, 6:83:6.
294. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் வழிபாடு, ப.405.
295. திருநாவுக்கரசர் தேவாரம், 4:3:1.
296. மேலது, 4:44:4.
297. திருஞானசம்பந்தர் தேவாரம்,1:80:7.
298. திருநாவுக்கரசர் தேவாரம், 5:65:6.
299. மேலது, 5:66:1.
300. மேலது, 5:43:2.
301. மேலது, 5:43:4.
302. மேலது, 5:43:6.
303. மேலது, 5:78:6.
304. மேலது, 6:1:1.
305. மேலது, 4:71:8.
306. மேலது, 6:95:6.
307. மேலது, 5:7:2.
308. மேலது, 5:77:2.
309. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:17:1.
310. மாணிக்கவாசகர், திருவாசகம் - சிவபுராணம், அடி.18.

காலச் சூழலும் அறிவுறுத்தலும்

தேவாரம் உணர்த்தும் திருக்கோயில் வழிபாட்டை ஆய்வு செய்யும் போது, அக்காலச் சூழ்நிலையை உணர்ந்து கொள்வது அவசியமாகும். குறிப்பாக, தேவாரம் பாடிய மூவர் வாழ்ந்த காலச் சூழ்நிலையில், திருக்கோயில் வழிபாட்டைக் காண்பது முக்கியமாகும். எனவே, தேவார காலச் சூழ்நிலையை உணர்த்துவது இவ்வியலின் நோக்கமாகும்.

தேவாரம் – காலம்

தேவாரம் பாடியோர் மூவராவர். தேவார மூவரைத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என வரிசைப்படுத்தி னாலும் காலமுறை அடிப் படையில் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் என்றே அமையும்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் இருவரும் சமகாலத்த வர்கள் ஆவர். இவர்கள் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு என்பது அறிஞர்கள் கூற்று.[1]

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்தை அடுத்துத் தோன்றியவர் சுந்தரர் ஆவார். இவரது காலம் கி.பி.எட்டாம் நூற்றாண்டு ஆகும்.[2]

எனவே, தேவாரம் பாடப்பட்ட காலம் கி.பி.ஏழு மற்றும் எட்டாம் நூற்றாண்டாகும்.

தேவார கால அரசுகள்

தேவார மூவர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தின் வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியர்களும் ஆட்சி செய்தனர். சோழர்கள் வலிமை குன்றிச் சிற்றரசர்களாக இருந்தனர். பல்லவர்களில், குணபரன் எனும் சிறப்புப் பெயருடைய

மகேந்திரவர்மனும், நரசிங்க முனையரையனும், பாண்டியர் களிலே மாறவர்மன் அரிகேசரி (கூன்பாண்டியன் ---> நின்றசீர் நெடுமாறன்) எனும் அரசர்கள் குறிப்பிடத்தக்கவராவர். சேரமான் பெருமாள் எனும் சேர மன்னர் ஒருவரும் சுந்தரர் வரலாற்றோடு இணைத்துச் சுட்டப்பட்டுள்ளார்.[3]

அரசு சார்ந்திருந்த சமயம்

பல்லவரும், பாண்டியரும் சமண சமயத்தை ஆதரித்தனர். சமணம் அரசர்கள் ஆதரித்தமையால் செல்வாக்குப் பெற்றது. சமணம் தமிழகத்தில் வலிமை பெற்றுத் திகழ்ந்த காலத்தில் பௌத்த சமயம் ஊடுருவி இருந்தது.[4]

சமயப் பூசல்கள்

சங்கம் மருவிய காலத்திலேயே சமயப் பூசல்கள் தொடங்கி விட்டது. மணிமேகலையில் இடம்பெறும் 'சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை'[5] இக்கருத்தை நிறுவுவதாகும். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசி எனும் நூல் குறித்து வழங்கும் கதையும் ஈண்டு குறிக்கத்தக்கதாகும். 'நீலகேசி' உரையில் குண்டலகேசி என்னும் பௌத்தம் சார்ந்த பெண், 'ஆவணம்' என்னும் நகரில் சமண சமய ஆசிரியரான நாதகுத்தனாரோடு வாதிட்டு வெற்றி பெற்றாள் என்னும் செய்தி காணப்படுகிறது.[6]

தேவார காலத்தும் இச்சமயப் பூசல்கள் தொடர்ந்துள்ளன. சைவம், வைணவம் எனும் இரண்டு சமயங்களும் சமண, பௌத்த சமயங்களோடு போராடி நிலைபெற வேண்டிய நிலை இருந்தது.

பாண்டிமாதேவியின் அழைப்பை ஏற்று, பாண்டிய நாடு சென்ற ஞானசம்பந்தர் சமணர்களோடு வாதிட்டமை சமயப் பூசலின் அடையாளமாகும். இவற்றில் அனல்வாதம், புனல்வாதம் முதலியவை சுட்டத்தக்கவை.

பௌத்தர்களோடு வாதம்

திருஞானசம்பந்தர் திருதெளிச்சேரி எனும் தலத்தை வழிபட்டுச் செல்லும் போது போதிமங்கை என்ற இடத்தில் பௌத்தர்களோடு வாதிட்டதும் குறிப்பிடத்தக்கது.[7]

பக்தி இயக்கம்

தமிழகம் அக்காலத்தில் சமண பௌத்தத் தாக்கத்தால் நிலைதடுமாறி நின்ற நிலையில் தமிழகத்துச் சமயச் சான்றோர் கண்டதே பக்தி இயக்கமாகும். சமண பௌத்த கொள்கைகளை எல்லாம் புறந்தள்ளி, தமிழரின் தொன்மையான வழிபாட்டு முறைகளை மீட்டுருவாக்கம் செய்தது இப்பக்தியியக்கப் பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும். இப்பக்தி இயக்கத்தின் ஆணி வேராக நின்று செயல்பட்டவர்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆவர். இவர்கள் இறை வழிபாட்டுக்கும் சடங்குகளுக்கும் ஒரு பொது நெறியைக் கண்டனர். இந்நெறி, 'இறைவன் அனைவர்க்கும் பொதுவானவன்; அவனை எவரும், எப்படியும் தொழலாம். தொழிலால், குலத்தால், மொழியால் வேறுபட்டாலும் பக்தியால் ஒன்றுபடலாம் எனப் பரப்பியது.

பக்தி இயக்க உணர்வின் படைப்புகளாகத் தேவார, திருவாசக, திவ்விய பிரபந்த நூல்கள் மலர்ந்தன. இப்பக்தி இயக்கத்தால் வீணான சடங்குகள், மூடநம்பிக்கைகள், ஆண், பெண் எனப் பாகுபடுத்தும் கொள்கைகள் அகற்றப்பட்டன. மனித உடம்பு உயர்ந்தது என்னும் நம்பிக்கையை ஏற்படுத்தியது. இறைவழிபாடும், பக்தியும் வீடுபேறடைய எளிமை யான வழி என இப்பக்தியியக்கப் பாவலர்கள் எங்கும் பிரச்சாரம் செய்தனர்.[8] இப்பக்தி இயக்கம் பற்றி, பேரா. த.கோ. பரமசிவம் அவர்கள்,

> பக்தியியக்கச் சான்றோர்; நீ உயர்ந்தவன், உன்னில் இறைவன் தங்குகிறான், நீ வாழும் மண், ஊர் உயர்ந்தது, கயிலையிலும், வைகுண்டத்திலும் இருக்கும் இறைவன் உன் ஊரில் விரும்பி உறைகின்றான். உன்னைச் சுற்றி உள்ள நீர் நிலைகள் புனிதமானவை. கங்கையும், யமுனையும் முனிவர்களும் தேவர்களும் கூட இங்கே நீராடி இங்குள்ள இறைவனை வழிபட்டுள்ளன. ஆன்மாவில் ஆண் பெண் வேறுபாடே இல்லை. எனவே, மகளிரும் ஆடவரைப் போலவே வழிபடலாம். அவர்களும்

இப்பிறவியிலேயே முக்தியடையலாம். எனப் பலவாறு மனித வாழ்க்கையைச் சுயமரியாதை உடைய சிறந்த ஒன்றாகக் காட்டி, வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஊட்டினர். நீ ஒரு பாவி, உன் மூதாதையர் பாவம் செய்தனர், அதனை அனுபவித்தே தீர வேண்டும்; பெண்களுக்கு முக்கி கிடையாது; கலைகள் வெறுக்கத் தக்கவை என மருட்டிய சமயங்களுக்கிடையில், முற்பிறவி வினைகளைக் கூட ஓடச் செய்யலாம்; கரையச் செய்யலாம், முற்றிலுமாக அழிக்கச் செய்யலாம் என்றெல்லாம் இவ்வியக்கம் தெம்பூட்டியது"[9]

என்று குறிப்பிடுவது ஈண்டு சிந்திக்கத்தக்கது.

பக்தி இயக்கம் இறைவனையே ஆணும் பெண்ணுமாகக் கண்டு பாடியது. பக்தியியக்கக் கொள்கைகள் தமிழகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய புரட்சி என்றே கூறலாம்.

சமணர்கள் ஆடையின்றித் திரிந்தனர் என்பதைக் கண்டித்து இழித்துக் கூறவே இறைவன் சிவபெருமான் கோவண ஆடையுடையவன் என்று பாடி, ஆடை அணிவதன் இன்றியமையாமையைப் புலப்படுத்தினர். சான்றுகளாக,

"கோவணங் கொண்டு கூத்தாடும்"[10]

"சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவம்"[11]

"புற்றரவ வம்புலியின் னுரிதோலொடு கோவணமும்
தற்றவன்...."[12]

எனவரும் இடங்களைச் சுட்டலாம்.

சமணம் பெண்களை இழிவாகக் கூறிய நிலையில் இறைவன் பெண்ணாகவும் ஆணாகவும் அலியாவும் உள்ளான் எனக் கூறி வேறுபாட்டை அகற்றினர் பக்தி இயக்கச் சான்றோர். சாள்றுகளாக,

"பெண்ஆண் அலியாகும் பித்தா பிறைசூடீ"[13]

"பெண்ணவனை ஆணவனைப் பேடானானை"[14]

என்ற பாடலடிகளைக் காட்டலாம்.

சமணர்கள் கடுமையான விரதங்களை மேற்கொண்டு உடலை வருத்தித் தவமிருந்தனர். பக்தியிக்கச் சான்றோர் இறைவழிபாடு எளிமையானது என்பதை,

"கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடும் வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும் ஈசன்"[15]

"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒருபச்சிலை"[16]

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"[17]

"பழையதம் அடியார் செய்த பாவமும் பிழையும் தீர்ப்பர்"[18]

என்றெல்லாம் பாடி, மக்களைத் திருக்கோயில் வழிபாட்டிற்கு ஈர்த்தனர்.

மனிதப் பிறவியின் உயர்வு

சமண, பௌத்த சமயங்களெல்லாம் மனிதப் பிறவியைத் தாழ்வாகவும், பாவப் பிறவி என்றும் இழித்துக் கூறிய நிலையில், மனிதப் பிறவி உயர்வானது என்றும், கிடைத்தற்கரியது என்றும் கூறி மக்களிடம் நம்பிக்கையூட்டியது பக்தி இயக்கம். பக்தி இயக்கச் சான்றோர்,

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்"[19]

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"[20]

என்று குறிப்பிட்டுப் பாடினர்.

பக்தி இயக்கப் பாவலர்களைப் போலவே கி.மு.5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க ஞானி 'புரோடேோகோசு' கூறிய '*Man is the Measure of all Things*' என்ற கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.[21]

'பல்வகைச் சாதனைகளுக்கும் உலக வளர்ச்சிக்கும் மனிதப் பிறவி காரணமாக அமைகிறது. பயன்மிக்க வாழ்வினை மேற்கொள்வதற்கே இப் பிறவியைப் பெற்றுள்ளோம் என்று திருமுறை ஆசிரியர்கள் கருதியுள்ளனர்' எனக் குறிப்பிடும் சோ.ந. கந்தசாமி அவர்களின் கருத்தும் சுட்டத்தக்கதாகும்.[22]

மனிதப் பிறவியின் உயர்வையும், முக்கியத்துவத்தையும் உணர்த்திய தேவார மூவர், மனிதன் வாழ்க்கையில் இன்பமாகவும், அறத்துடனும், வாழ்வதற்கும் வழி கூறியுள்ளனர்.

இயந்திர கதியாக அலைந்து கொண்டிருக்கின்ற மனதை அடக்கி, அறிவின்பால் செலுத்த வேண்டும் என்பர். இல்லையேல் பதற்றமும், கவலையுமே வாழ்வில் மிஞ்சும் பதற்றத்தைப் போக்கி, கவலைகள் அண்டாமல் மகிழ்ச்சியாக வாழவும், நிலையில்லா மனதை நிலைபெறச் செய்யவும் திருநாவுக்கரசர் ஒரு பாடலில்,

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடி
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர்செஞ்சடை எம்ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"[23]

என்று வழிகளைக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலின் வழி, சரியையாம் தொண்டு நெறியையும், திருக்கோயில் வழிபாட்டையும் மேற்கொண்டால் மனம் நிலைபெறும், பதற்றம் குறையும் என்பது புலனாகிறது.

வழிபாட்டில் மீட்டுருவாக்கம்

தமிழகத்தில் பக்தி இயக்கம் கண்ட தேவாரக் கவிஞர்கள்

சமண பௌத்த தாக்கங்களிலிருந்து தமிழகத்தை மீட்டனர். தமிழரின் பண்டை வழிபாட்டு முறைகளையும், திருக்கோயில் வழிபாட்டையும் மீட்டுருவாக்கம் செய்தனர்.

திருக்கோயில் வழிபாட்டையும், உருவ வழிபாட்டையும் உயர்த்திப் பாடினர். தம் பாடல்களில், திருக்கோயில் வழிபாட்டை வானவர், தானவர், முதல் ஈ, எறும்பு, யானை முதலிய அஃறிணை உயிரினங்கள் வரை செய்தமையைக் கூறி, அனைவரும் வழிபாடு செய்வது நலம் என வலியுறுத்தினர்.

மேலும், அவர்கள் காலத்தில் மக்களே, திருக்கோயில் களுக்குள் சென்று நேரிடையாக இறைத்திருமேனியை வழிபட்ட செய்தியைப் பதிவு செய்து உள்ளனர். சான்றுகளாக,

"............. பொன்முடி தன்மேல்
குடம்கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்தாட்ட
.... இடை மருது"[24]

"............. பேரருளாளனார் பேணிய கோயில்
பொன்னியல் நறுமலர் புனலொடு தூபம் சாந்தமும்
கன்னியர் நாள்தொறும் வேடமே பரவும் கழுமலம்"[25]

"மாதரொடும் ஆடவர்கள் வந்து அடியிறைஞ்சி
நிறைமாமலர்கள் தூய்க்கோதை........ கோகரணமே"[26]

"போதொடு நீர்சுமந்தேத்துப் புகுவார் அவர்பின் புகுவேன்
.... ஐயாறடைகின்ற போது"[27]

"தொண்டு பாடியும் தூமலர் தூவியும்
இண்டை கட்டி இணையடி ஏத்தியும்
பண்டரங்கள் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டு கொண்டடியேன் உய்ந்து போவனே"[28]

"எட்டு நாள்மலர் கொண்டு அவன்சேவடி
மட்டலர் இடுவார் வினைமாயுமால்

.... கெடில வீரட்டனார்........."[29]

"செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை
தெரிந்த அவரோ(டு)
அந்தமில்கு ணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய
அமர்கின்ற அரனூர்"[30]

என வருவனவற்றைக் காட்டலாம். எனவே, தேவார மூவர் காலத்தில் பெரும்பாலான திருக்கோயில்களில் அடியார்களே நேரிடையாக வழிபட்டுள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ளலாம். ம. பாலசுப்பிரமணிய முதலியார்,

"சிவாச்சாரியார்களின்றி மாதர், ஆடவர் நேரே அபிஷேகம், வழிபாடு முதலியன செய்துள்ளனர்"[31] எனக் குறிப்பிடும் கருத்தும் சுட்டத்தக்கது. மேலும், இது குறித்து மு. தமிழ்க்குடிமகன், "அன்று திருநாவுக்கரசர் ஒரு கோயிலுக்குச் சென்றார், அவர் கோயில் கருவறை வரை சென்று மனமுருகிப் பாடினார். அன்று கருவறைக்குள் அர்ச்சகர்கள் இல்லை. வடமொழி அர்ச்சனை இல்லை. எனவே, திருநாவுக்கரசரோ, திருஞானசம்பந்தரோ இறைவனை நேரடியாக வழிபட்டனர்"[32] எனக் குறிப்பிடும் விளக்கமும் சுட்டத்தக்கதாகும்.

அனைவரும் நேரிடையாக வழிபடலாம் என வலியுறுத்திய காரணம்

தேவார ஆசிரியர்கள், மக்கள் திருக்கோயில்களில் அனைவரும் சென்று நேரிடையாக வழிபட்டதையும், வழிபடலாம் என்பதையும் பல இடங்களில் வலியுறுத்திக் கூறுகின்றனர். இதற்கு முக்கியமான காரணங்கள், திருக் கோயில்களைப் பிற சமயங்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கவும், சைவ பக்தியும் உருவ வழிபாடும் தழைத்தினிது ஓங்கவும், மனித நேயம் சிறக்கவுமே ஆகும். திருநாவுக்கரசர் காலத்தில் பழையாறை வடதளியில் ஒரு சிவன் கோயில் சமணர்களால் மறைக்கப்பட்டதும், திருநாவுக்கரசர் உண்ணாவிரத மிருந்த வரலாற்றுச் செய்தி வழி புலனாகிறது.[33]

குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே (இன்றுள்ளது போல்) திருக்கோயில் உள்சென்று நேரிடையாக, வழிபாடு செய்ய வேண்டும் என்ற நிலையிருந்தால் சமுதாயத்தை விட்டுத் திருக்கோயில்கள் நிலை ஒதுங்கியிருக்கும். பிற சமயத் தாக்குதல்களும் அதிகமாகி இருக்கும். இச்சூழ்நிலையைத் தவிர்த்துத் திருக்கோயிலை மக்களோடு இணைக்கவே பக்தி இயக்கப் பாவலர் இதனை வலியுறுத்திப் பாடினர் எனலாம். மேலும் இன்றுள்ள ஆகம விதிகளோ, நடைமுறைகளோ, திருக்கோயில் அமைப்புகளோ தேவார மூவர் காலத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை.[34] தேவார மூவர் பாடிய பின்னரே அக்கோயில்கள் பாடல்பெற்ற கோயில்களாயின, வளர்ச்சி பெற்றன.

தேவார மூவருக்குப் பின் வந்த அரசர்களே அவ்வக் கோயில்களின் சிறப்பினையுணர்ந்து மாட கோபுரங்களையும், பெரிய பிரகாரங்களையும், சுற்றுச் சுவர்களையும், சன்னதிகளையும் ஏற்படுத்தினர். இச்செய்தியை அவ்வக் கோயில்களில் காணப்படும் அவ்வரசர்களின் கல்வெட்டுக்கள் நமக்குக் காட்டுகின்றன.

பிற சமயத் தாக்குதல்களினால் தமிழகம் பக்தி இயக்கம் கண்டது போலவே, வட இந்தியாவிலும் இசுலாமியர்களிட மிருந்து இந்துக் கோயில் களைக் காப்பாற்றப் பல புரட்சிகள் நடந்தன. அங்கும் அனைவரும் இறைத்திருமேனியைத் தொட்டு வழிபட அனுமதிக்கப்பட்டனர். இன்றும் இந்த நடைமுறை வழக்கத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில்தான் ஆகமம், வேதம் என்றெல்லாம் பிற்காலத்தில் திருக்கோயில் வழிபாட்டில் புகுத்தி ஒரு சாரார் மட்டுமே திருக்கோயில் வழிபாட்டைச் செய்ய வேண்டும் என்று மாற்றிவிட்டனர்.

சுந்தரர் காலத்திற்குப் பின் தமிழகத்தில் சைவம், வைணவம் முதலிய தொன்மை சமயங்கள் தழைத்தோங்கிய நிலை ஏற்பட்டது. தமிழ் மன்னர்களின் ஆட்சியில் திருக்கோயில் வளர்ச்சியடைந்தன. மன்னர்கள் பலரும் பல நிவந்தங்களைத்

திருக்கோயில்களுக்கு வழங்கிப் பாதுகாத்தனர். அமைதியான சூழ்நிலையும், பாதுகாப்பும் திருக்கோயில்களுக்குக் கிடைத்த பின்பு தேவார மூவர் கால நடைமுறைகளும், பாதுகாப்பு நடவடிக்கையான அனைவரும் வழிபடலாம் என்ற நிலையும் மெல்ல மெல்ல மாறின.

உருவ வழிபாடு

உருவ வழிபாடு அக்காலத்தில் மிகுதியாக இருந்தது. அருவுருவம் எனப்படும் சிவலிங்க வழிபாடும் புராண, இதிகாசங்களில் வரும் சிவபெருமானுடைய உருவத் திருமேனிகள் வழிபாடும் தேவாரக் கவிஞர்கள் காலத்தில் அதிகமாக இருந்தன. உருவ வழிபாடு பக்திக்கு அடிப்படையாகும். பக்தியில் நம்பிக்கை ஏற்படுத்துவது உருவ வழிபாடுதான். உருவ வடிவத்தினைச் சகளத் திருமேனி என்றும், அருவுருவ வடிவத்தினைச் சகள நிட்களத் திருமேனி என்றும் குறிப்பர்.[35]

மூவர் தேவாரத்துள், சோமாஸ்கந்தர் (சிவன், உமை நடுவில் முருகன் உள்ள வடிவம்), நடராசர் (ஆடல் வல்லான்), ரிஷபாரூடர் (காளை வாகனத்தில் சிவன் உமை அமர்ந்த வடிவம்), கல்யாண சுந்தரர் (சிவன், உமை திருமணக்கோலம்), சந்திரசேகரர் (பிறை சூடிய வடிவம்), பிட்சாடனர் (தாருகா வனத்து முனிவர்களின் செருக்கை அழிக்க எடுத்த வடிவம்), காமதகனர் (மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்த வடிவம்), காலசம்ஹாரர் (இயமனைக் காலால் உதைத்த வடிவம்), சலந்தரவதர் (சலந்திராசுரனை வென்ற வடிவம்), திரிபுராரி (முப்புரங்களை அழிக்க எடுத்த வடிவம்), கஜசம்ஹாரர் (யானையுரி போர்த்திய வடிவம்), வீரபத்திரர் (தக்கன் யாகத்தை அழிக்க எடுத்த வடிவம்), தெட்சணாமூர்த்தி (ஆலமர் செல்வன்), திருநீலகண்டர் (ஆலகால விஷம் அருந்திய வடிவம்), கிராதர் (அருச்சுனனோடு போரிட்ட வேடராகிய வடிவம்), கங்காளர் (எலும்பு மாலை அணிந்த வடிவம்), சக்கரதானர் (திருமாலுக்குச் சக்கரம் அருளிய வடிவம்), கங்காதரர் (கங்கையைத் தலையில்

தாங்கிய வடிவம்), சண்டேச அனுக்ரகர் (சண்டேசுவர நாயனாருக்கு அருளிய வடிவம்), ஏகபாதர் (மகா பிரளய காலத்தில் ஒரு காலராய் விளங்கும் வடிவம்), இலிங்கோத்பவர் (அரிக்கும், அயனுக்கும் காணா வடிவாய் அண்ணாமலையாய் நின்ற வடிவம்), சுகாசனர் (உமைக்கு வேத, சிவாகமங்களை உபதேசித்த வடிவம்), அரியர்த்தர் (திருமாலுக்கு இடப்பாகம் கொடுத்த வடிவம்), அர்த்தநாரி (உமையொரு பாகர், உமாமகேசர் (உமையுடன் அமர்ந்த வடிவம்) எனும் 25 மகேஸ்வர வடிவங்களும், சரபர், தியாகராசர், சதாசிவம், மகாசதாசிவம், சிம்ம லக்ன மூர்த்தி, பைரவர், பாசுபத மூர்த்தி, இராவண அனுக்ரக மூர்த்தி என்னும் வடிவங்களும் சுட்டிப் பாடப்பட்டுள்ளன.[36] இவ் வடிவங்களை எல்லாம் மூவர் தேவாரத்துள் புராண வரலாறுகளுடன் காணமுடிகிறது.

சிவ வடிவங்களைத் தவிர, யானை முகம் கொண்ட விநாய்கர் வடிவையும் (கைவேழ முகத்தவன்),[37] முருகனுடைய வடிவையும் (ஆறுகொலாம் அவர்தம் மகனார் முகம், கோழிக் கொடியோன்),[38] உமை (ஏலவார் குழலாள் உமை நங்கை),[39] திருமால்,[40] பிரமன்[41] முதலிய தெய்வங்களின் வடிவங்களையும் மூவர் தேவாரத்தில் காணலாம்.

அறிவுறுத்தல்

தேவார மூவர் பக்தியை வலியுறுத்தினர்; வழிபாட்டை எப்படிச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டனர்; அன்பில்லாத வழிபாடு பயனற்றது என்றும் அறிவுறுத்தியுள்ளனர். பக்தியில் நம்பிக்கையே மிகவும் முக்கியமானது என்று வற்புறுத்தினர்.

நம்பிக்கையூட்டல்

நம்பிக்கையே வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தும். இதனை நன்குணர்ந்த தேவார மூவர் பலவிடங்களில் நம்பிக்கை யூட்டும் விதமாகப் பாடி அறிவுறுத்தினர். சான்றுகளாக,

"ஏதுக்களானும் எடுத்த மொழியானும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி"[42]

"மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்"[43]

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவது மில்லை"[44]

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்"[45]

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே"[46]

"ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே"[47]

"ஓடிப் போகும் நம் மேலை வினைகளே"[48]

"திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே"[49]

"நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பந் தழைக்க இருக்கலாம்"[50]

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்"[51]

"மண்பாதலம் புக்கு மால்கடல் மூடி மற்றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே"[52]

"........ தருமனார் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்"[53]

என வரும் பாடலடிகளைக் குறிப்பிடலாம். இங்ஙனம் மக்கட்கு நம்பிக்கை யூட்டும் விதத்தில் விதந்தோதி வாழ்க்கையில் பிடிப்பை ஏற்படுத்தியுள்ளனர் தேவார மூவர். இப்பாட லடிகளின் மூலம்,

இறைவழிபாட்டில் நம்பிக்கை கொள்ள வேண்டும், ஆய்வு செய்யக் கூடாது, எப்பேர்ப்பட்ட இடர் வந்தாலும் நிலை தடுமாறக் கூடாது, அருவினைகள், தொல்லை தரும் வல் வினைகள், பகைகள் இறை வழிபாடு செய்தால் அகன்று விடும். ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது எனும் ஒன்பது கோள்களும்இறையடியார்களுக்கு நன்மையே செய்யும், இறைவனை வழிபட்டால் மரண பயம் நீங்கும், இறைவனைப் பாடி வழிபடும் அடியார்களுக்கு வீடுபேறு கிடைக்கும் என்ற கருத்துக்களை உணர முடியும்.

அன்பு வழிபாடு

'அன்பே ஈசன்' என்பார் திருமூலர்.[54] அவ்வகையில் அன்பு வழிபாடே உயர்ந்தது; ஈசனுக்கு விருப்பமானது என்று வலியுறுத்துகின்றது தேவாரம். சான்றுகளாக,

"அன்பலாற் பொருளுமில்லை ஐயன் ஐயாறனார்க்கே"[55]

"தமக்கன்பு பட்டவர் பாரமும் பூண்பார்"[56]

"நச்சுவார்க் கினியர்"[57]

"கைப்போது மலர்தூவிக் காதலித்து"[58]

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது"[59]

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்"[60]

எனவரும் பாடலடிகளைக் காட்டலாம்.

அன்பில்லா, ஆரவார வழிபாட்டின் இழிவு

அன்பில்லாமல் செய்யப்பெறும் ஆரவாரமான வழிபாடு இழிவானதாகும். ஆணவத்தை வெளிப்படுத்தும் வழிபாடு போற்றத்தக்கது அல்ல என்பது தேவார மூவர் கருத்தாகும். இக்கருத்தை,

"பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே"[61]

"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசனெ னாதவர்க் கில்லையே"[62]

"வேதம் ஓதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமொ ராறு முணரிலென்
ஈசனையுள்கு வார்க்கன்றி யில்லையே"[63]

"கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்"[64]

எனவரும் பாடல்கள் விளக்குகின்றன. 'பாவநாசத் திருக்குறுந் தொகை' என அழைக்கப்பெறும் இப்பதிகம் முழுவதும் அன்பற்ற ஆரவார வழிபாட்டால் பலன் இல்லை என்பதையே வலியுறுத்தி யுள்ளார்.

அச்சுறுத்தி அறிவுறுத்தல்

வாழ்க்கையில் நம்பிக்கையூட்டுமாறு பாடிய தேவார மூவர், நெறி தவறும் மனிதர்களை நல்வழிப்படுத்த முனைந்து உள்ளனர். பாவம், பழி முதலியவற்றிலிருந்து மக்களைக் காக்கவும், காமம், சினம் முதலியவற்றிலிருந்து மக்கள் விடுபடவும் நிலையாமையையும், தவறினால் அடையப் போகும் தண்டனைகளையும் வலியுறுத்திப் பாடி மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ அறிவுறுத்தினர். சான்றுகளாக,

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்(று)
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே"[65]

"காமி யஞ்செய்து காலங் கழியாதே"[66]

"நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்"[67]

"பொக்கம் பேசிப் பொழுது கழியாதே"[68]

"தீதவை செய்து தீவினை வீழாதே"[69]

"நில்லா வாழ்வு நிலைபெறு மென்றெண்ணிப்
பொல்லா வாறு செயப்புரி யாதுநீர்"[70]

"கரப்பவர் தங்கட் கெல்லாங் கடுநர கங்கள் வைத்தார்"[71]

எனவரும் பாடலடிகளைச் சுட்டலாம். இப்பாடலடிகளால்,

- இறைவன் மக்களைக் கண்காணிக்கின்றான்
- பாவ புண்ணியங்களைக் கணக்கெடுக்கின்றான்
- காமத்தால் காலத்தை வீணடிக்கக் கூடாது
- மக்கள் தத்தம் கொள்கைதாம் சரியானவை என்று வாதிடல் கூடாது. நாத்திகம் பேசக் கூடாது. பேசினால் படைகளைப் போல பஞ்ச பூதங்களான நிலம், நீர, தீ, காற்று, ஆகாயம் என்பன வந்து துன்புறுத்தும்
- வாழ்வு நிலையில்லாதது. எனவே, இதனை நிலை என நினைத்துப் பொல்லாத செயல்களைச் செய்யக் கூடாது.
- தீதவை செய்தால் தீவினையில் வீழ நேரிடும்
- தீமை செய்பவர்களுக்கு நரக வாழ்வுதான் கிடைக்கும்

எனத் தேவார மூவர் அச்சுறுத்தி அறிவுறுத்தும் கருத்துக்கள் புலப்படும்.

மனித நேயமும், சம நோக்கும்

தேவார மூவரும் மனித நேயத்தைப் பெரிதும் வலியுறுத்தினர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கொள்கையை மக்களிடம் அறிவுறுத்திய தோடு, "என்கடன் பணிசெய்து கிடப்பதே"[72] என்று தாமும் வாழ்ந்து காட்டினர். மனிதர்களிடம் இனம், மொழி, நாடு என்ற வேறுபாடு பார்க்கக் கூடாது என்றும், பக்தி இருந்தால் அவர்கள் யாராக இருந்தாலும் உயர்ந்தவர்களே என்றும், ஊர் ஊராகச் சென்று வலியுறுத்தினர். குலம், கோத்திரம், சாத்திரம் என்று மனிதர்களைப் பாகுபடுத்துவதை வன்மையாக எதிர்த்தனர். சான்றுகளாக,

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்கு லமுங்கொண் டென்செய்வீர்"[73]

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்-அவர்
கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே"[74]

"ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி அவரவர் உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே"[75]

"குலமில ராகிலும் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே"[76]

என்ற பாடல்களைச் சுட்டலாம். இப்பாடலடிகள்,

- ❖ மனிதர்களைச் சாதி, மதம் என்ற பெயரால் பிரிக்கக் கூடாது.
- ❖ சாத்திரம் மனிதனை மனிதர்களோடு ஒன்றுபடுத்தப் பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, பிளவு செய்யப் பயன்படக் கூடாது.

- ❖ கோத்திரம் குலம் இவை கொண்டு ஒன்றும் செய்ய முடியாது.
- ❖ அங்கங்கள் எல்லாம் குறைந்து, அழுகி நாற்றமெடுக்கும் உடம்பையுடைய தொழுநோயாளராக இருந்தாலும், புலால் உண்ணும் தன்மையராய் வாழ்ந்தாலும், இம்மனிதர்கள் கங்கையைச் சடையில் அணிந்த சிவபெருமானை வழிபடும் அடியாராக இருந்தால் அவர்கள் வணங்கத்தக்கவர்கள்.
- ❖ எதையும் அறியாத அறிவிலிகளாக உள்ளவர்களும் வழிபாடு செய்யலாம். அஞ்செழுத்து ஓதினால் அவர்கட்கும் இறைவன் அருள் புரிவான்

போன்ற கருத்துக்களை விளக்குகிறது.

தயாமூல தன்மம்

திருநாவுக்கரசர் அறிவுறுத்தியதில் முதன்மையானது தயாமூல தன்மமாகும். தயை என்றால் அருள்; மூலம் என்றால் தோன்றும் இடம்; தன்மம் என்றால் அறம் என்று பொருள். இதனை விளக்கினால், பேதமின்றி அனைத்து உயிர்களிடத்தும் அருள்காட்டி ஒழுகுபவர்க்கு இறையருள் கிட்டும் என்பது இதன் கருத்தாகும். திருவருட்பிரகாச வள்ளலார் இத்தயாமூல தன்மத்தையே தம் வாழ்நாளில் உயிர்மூச்சாகக் கொண்டு முத்தி பெற்றார் என்பது நினைக்கத்தக்கது.

"தயாமூல தன்மமெனும் தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க் கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பி"[77]

"……… தயாமூல தன்மவழி யெனக்கு நல்கி,
மனந்திருத்தும் மழபாடி வயிரத் தூணே"[78]

என்ற பாடல்களில் தயாமூல தன்மத்தைத் திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார். தயாமூல தன்மத்தை இறைவனே தமக்கு நல்கி, நல்வழிப்படுத்தினான் என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளமை நோக்கத்தக்கது. தயாமூல தன்ம வழி நிற்றலே முத்திக்கு அடிப்படையாகும்.

சிறுதெய்வ வழிபாடு வேண்டாம்

மக்கள் சிறுதெய்வ வழிபாட்டில், அக்காலத்தில் ஈடுபட்டு இருந்தனர். எனவே, சிறுதெய்வங்களை வழிபட வேண்டாம் என்றும், பரம்பொருளாகிய சிவபெருமானை மட்டுமே வழிபடுங்கள் என்று அறிவுறுத்தினர். தேவார ஆசிரியர் தம் பாடல்களில் உமை, விநாயகர், முருகன், திருமால், திருமகள், பிரமன், கலைமகள், ஒன்பது கோள்கள், தேவர்கள் எனப் பலரைக் குறிப்பிட்டாலும் சிவபெருமான் ஒருவனை மட்டுமே பரம்பொருளாகவும், வல்லமை நிறைந்தவனாகவும் காட்டு கின்றனர். சிவன் குடும்பத்துத் தெய்வங்களாகவே உமை, விநாயகர், முருகன் முதலியோர் குறிக்கப்பட்டு உள்ளனர்.

> "வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
> கடிகண பதிவர அருளினன், மிகுகொடை"[79]

> "நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்"[80]

> "செல்வியைப் பாகங் கொண்டார்
> சேந்தனை மகனாக் கொண்டார்"[81]

என வருவனவற்றைக் காட்டலாம். சிறுதெய்வ வழிபாட்டைப் பொதுவாக,

> "அங்கதி ரோனவனை அண்ணலாக் கருதவேண்டா"[82]

> "சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
> சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"[83]

> "செத்து செத்துப் பிறப்பதே தேவென்று
> பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ"[84]

> "நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
> ஆறு கோடி நாராயண ரங்ஙனே
> ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
> ஈறி லாதவன் ஈச னொருவனே"[85]

என்றெல்லாம் கூறி அறிவுறுத்தினர். மேலும், இவ்வளவு கருத்துக் களையும் உள்ளடக்கி,

"பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில்ஆ ரூரா என்றே போற்றி நில்லே"[86]

என்ற பாடலைத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். இப்பாடலின் மூலம்,

நெஞ்சே நான் சொல்வதனைக் கேட்பாயாக. நம்மைப் பற்றி நிற்கும் பாவங்களை அழிக்க வேண்டினால், மேம்பட்ட வழிக்குச் செல்ல வேண்டும் தன்மையை விரும்பினால், உன்னைச் சுற்றி நிற்கும் வினைகளைப் போக்க நீ விரும்பினால் செயலற்று இராமல் நான் சொல்வதைக் கேள், எனக்கு உறவினரும் துணையும் நீயே, உன்னைத் தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் நான் பரம்பொருளாக நினையேன். புற்றில் வாழத் தக்க பாம்பினைக் கச்சாக அணிந்த தூயானே! சோலைகள் சூழ்ந்த ஆரூரனே என்று எம்பெருமானைப் பலகாலும் துதிப்பாயாக[87]

என்ற கருத்துக்கள் பெறப்படுகின்றன.

பொய்ம்மையாளரைப் பாடிய சூழலும் அறிவுறுத்தலும்

தேவாரம் பாடப்பட்ட காலத்தில், புலவர்கள் மன்னர்களைப் பாடிப் பரிசு பெற்று வாழ்ந்தனர். பல்லவர் காலத்தில் இப்புலவர்கள் 'உத்தரக்காரணிகள்' என்று அழைக்கப்பட்டனர்.[88] இவ்வாறு பாடப்பட்ட பாடல்களில் பரிசுக்காக, பொய்ம்மையாளரைப் பாடிய பாடல்களும் உண்டு. இந்நிலையை,

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்"[89]

என்று சுந்தரர் பாடி, அறிவுரை கூறியுள்ளார். இப்பாடல் இடம் பெற்றுள்ள பதிகம் முழுவதும் இக்கருத்தை வலியுறுத்தி, பரம்பொருளான சிவபெருமான் ஒருவனை மட்டுமே பாடுங்கள் என்று புலவர்களை ஆற்றுப்படுத்துவது குறிக்கத்தக்கது.

பாடல் பாடுவதொன்றே முழுமையான வழிபாடு

பாடல் பாடி இறைவனை நினைத்தலே முழு வழிபாடாகும் அது ஒன்றே வழிபாட்டின் முழுப் பயனையும் அளிக்கவல்லது. பதிகந்தோறும் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளனர். சான்றுகளாக,

"........................ சொல்
வழிபா டிவைகொண் டடிவாழ்த் தவல்லார்க்
கெழியார்இமையோ ரொடுகே டிலரே"[90]

"பண்ணியல் பாடல்வல் லார்கள்
பழியொடு பாவமி லாரே"[91]

"சந்தம்மலி பாடல்சொலி ஆடத் தவமாமே"[92]

"பாட லாந்தமிழ் பத்திவை வல்லார்
முத்தி யாவது பரகதிப் பயனே"[93]

எனவரும் பாடலடிகளைக் காட்டலாம். இவ்வாறு இடம்பெறும் பாடலடிகளின் மூலம் இன்பம், செல்வம், மகிழ்ச்சியான வாழ்வு, வழிபாடு, தவம், வீடுபேறு முதலியவை எல்லாம் பாடலாலே கிடைத்துவிடும் என்பது புலனாகிறது. திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பதிகங்கள் தோறும் கடைசிப் பாடலில் பதிகத்தை ஓதுவதால் கிடைக்கும் பலனையும் இணைத்துப் பாடியுள்ளனர்.

தொகுப்புரை

- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவரும் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சுந்தரர் காலம் கி.பி.எட்டாம் நூற்றாண்டு ஆகும்.
- தேவார மூவர் காலத்தில் வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியர் களும் ஆட்சி செய்தனர். சோழர்கள் வலிமை குன்றி இருந்தனர்.
- பல்லவரும், பாண்டியரும் சமண சமயத்தை ஆதரித்தனர். சமணம் அரசர்கள் ஆதரித்தமையால் செல்வாக்குப் பெற்றது.
- தேவார மூவர் காலத்தில் சமயப் பூசல்கள் அதிகம் இருந்தன. சமண, பௌத்த சயமங்களுக்கிடையில் போராடி நிலைபெற வேண்டிய நிலை சைவ சமயத்திற்கு இருந்தது.
- தமிழகம் அக்காலத்தில் சமண பௌத்தத் தாக்கத்தால் நிலைதடுமாறி நின்ற நிலையில் தமிழகத்துச் சமயச் சான்றோர் கண்டது பக்தி இயக்கம் ஆகும்.
- பக்தி இயக்கம், இறைவன் அனைவருக்கும் பொது வானவன், அவனை எவரும், எப்படியும் தொழலாம். தொழிலால், குலத்தால், மொழியால் வேறுபட்டாலும் பக்தியால் ஒன்றுபடலாம் எனப் பரப்பியது.
- பக்தி இயக்கப் படைப்புகளாகத் தேவார, திருவாசக, திவ்விய பிரபந்த நூல்கள் மலர்ந்தன.
- பக்தி இயக்கம், மனிதப் பிறவி உயர்வானது என்றும், இறை வழிபாடும், பக்தியும் இருந்தால் இல்லறத்திலேயே முக்தி பெற முடியும் என்பதை வலியுறுத்தியது.
- தமிழகத்தில் பக்தி இயக்கம் கண்ட தேவாரக் கவிஞர்கள் சமண, பௌத்த தாக்கங்களிலிருந்து தமிழகத்தை

மீட்டனர். தமிழரின் பண்டை வழிபாட்டு முறைகளையும் திருக்கோயில் வழிபாட்டையும் மீட்டுருவாக்கம் செய்தனர்.

❖ தேவார மூவர் காலத்தில் மக்களே திருக்கோயில்களுக்குள் சென்று நேரிடையாக இறைத்திருமேனியை வழிபாடு செய்துள்ளனர்.

❖ உருவ வழிபாடு அக்காலத்தில் மிகுதியாக இருந்தது. சிவலிங்க வழிபாடும் உருவ வழிபாட்டிற்கு அடிப்படையாக இருந்தது. மூவர் தேவாரத்தில் பல்வேறு சிவ வடிவங்கள் சுட்டப்பட்டுள்ளன.

❖ சிவ வடிவங்களைத் தவிர விநாயகர், முருகன், உமை, பிரமன், திருமால் முதலிய தெய்வங்களின் வடிவங்களையும் மூவர் தேவாரத்தில் காணமுடிகிறது.

❖ தேவார மூவர் பக்தியையும், வழிபாட்டையும் எப்படிச் செய்ய வேண்டும் என்று சுட்டியுள்ளனர். அன்பில்லாத வழிபாடு பயனற்றது என்று அறிவுறுத்தியுள்ளனர்.

❖ வாழ்க்கையில் நம்பிக்கையூட்டுமாறு பதிகங்கள்தோறும் பாடியுள்ளனர். நெறி தவறும் மனிதர்களை நல்வழிப் படுத்த தேவார ஆசிரியர்கள் பெரிதும் முயன்றுள்ளனர்.

❖ மனித நேயத்தை மிகவும் போற்றியுள்ளனர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கொள்கையை மக்களிடம் அறிவுறுத்தியதோடு "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று தாமும் வாழ்ந்து காட்டினர்.

❖ திருநாவுக்கரசர் அறிவுறுத்தியதில் முதன்மையானது தயாமூல தன்மமாகும். வேறுபாடின்றி அனைத்து உயிர்களிடத்தும் அருள்காட்டி ஒழுகுபவர்க்கு இறையருள் கிட்டும் என்பது தயாமூல தன்மமாகும்.

❖ சிறுதெய்வங்களை வழிபட வேண்டாம் என்றும், பரம்பொருளாகிய சிவபெருமான் மட்டுமே வழிபடத்

தக்கவன் என்றும் புலப்படுத்தி உள்ளனர். சிவபெருமான் ஒருவனை மட்டுமே பரம்பொருளாகவும், வல்லமை நிறைந்தவனாகவும் காட்டியுள்ளனர் தேவார மூவர்.

- ❖ சிவபெருமான் ஒருவனை மட்டுமே பாடுங்கள் என்றும், பொய்மையாளரைப் பாடவேண்டாமென்றும் புலவர்களை ஆற்றுப் படுத்தியுள்ளனர்.
- ❖ இறைவனைப் பாடுவது ஒன்றே வழிபாட்டின் முழுப் பயனையும் அளிக்கவல்லது என்ற கருத்தைப் பதிகந்தோறும் வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்புகள்

1. ம.சா. அறிவுடைநம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், ப.17.
2. மா. சிவகுருநாதப் பிள்ளை, தேவார மூவர் தலயாத்திரை, ப.8.
3. மேலது, ப.7.
4. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் வழிபாடு, ப.4.
5. மணிமேகலை, காதை 27.
6. ஐம்பெருங்காப்பியங்கள், வர்த்தமானன் பதிப்பு, ப.514.
7. திருஞானசம்பந்தர் தேவாரம், காசி மடப் பதிப்பு, ப.i.
8. த.கோ. பரமசிவம், தமிழ் உணர்த்தும் பக்தி ஆய்வு மாலை, தொகுதி 1, பதிப்புரை, ப.32.
9. மேலது, ப.33.
10. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:பந்தணைநல்லூர்:1.
11. மேலது, 1:கோலக்கா:1.
12. மேலது, 3:திருப்பனந்தாள்:8.
13. மேலது, 1:எருக்கத்தம் புலியூர்:3.
14. திருநாவுக்கரசர் தேவாரம், 6:60:6.

15. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:திருவைகாவூர்:1.
16. திருமந்திரம், பா.252.
17. திருநாவுக்கரசர் தேவாரம், 5:2:1.
18. மேலது, 5:38:1.
19. மேலது, 4:81:5.
20. மேலது, 4:81:4.
21. சோ.ந. கந்தசாமி, திருமுறை இலக்கியம், ப.215.
22. மேலது
23. திருநாவுக்கரசர் தேவாரம், 6:31:3.
24. திருஞானசம்பந்தர் தேவாரம், பா.339.
25. மேலது, பா.858.
26. மேலது, பா.3647.
27. திருநாவுக்கரசர் தேவாரம், பா.4179.
28. மேலது, பா.5532.
29. மேலது, பா.5770.
30. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:வீழிமிழலை:4.
31. ம. பாலசுப்பிரமணிய முதலியார், (பதி.ஆ.), தேவாரம் அடங்கன் முறை, ப.88.
32. மு. தமிழ்க்குடிமகன், தமிழில் வழிபாடு, ப.49.
33. பெரியபுராணம், திருநாவுக்கரசர் புராணம், ப.297.
34. கு.ச. ஆனந்தன், தமிழ் வழிபாடு தமிழர் பிறப்புரிமை, ப.29.
35. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் வழிபாடு, ப.148.
36. மேலது, ப.149.
37. திருநாவுக்கரசர் தேவாரம், 6:53:4.
38. மேலது, 4:18:6, 6:89:2.
39. சுந்தரர் தேவாரம், 7:கச்சியேகம்பம்:1.
40. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:14:9.
41. மேலது, 1:16:9.

42. மேலது, 3: திருப்பாசுரம்: 5.
43. திருநாவுக்கரசர் தேவாரம், 5:91:5.
44. மேலது, 4:2:1.
45. மேலது, 5:1:4.
46. திருஞானசம்பந்தர் தேவாரம், கோளறு பதிகம், பா.1.
47. மேலது, பா.11.
48. திருநாவுக்கரசர் தேவாரம், 5:5:4.
49. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:14:11.
50. திருநாவுக்கரசர் தேவாரம், 5:42:1.
51. மேலது, 6:98:1.
52. மேலது, 4:94:6.
53. சுந்தரர் தேவாரம், 7:1:1.
54. திருமந்திரம், பா.270.
55. திருநாவுக்கரசர் தேவாரம், 4:40:6.
56. மேலது, 4:17:2.
57. மேலது, 4:66:1.
58. மேலது, 4:7:3.
59. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:49:1.
60. திருநாவுக்கரசர் தேவாரம், 5:90:9.
61. மேலது, 5:90:9.
62. மேலது, 5:99:2.
63. மேலது, 5:99:2.
64. மேலது, 5:99:9.
65. மேலது, 5:21:8.
66. மேலது, 5:22:8.
67. மேலது, 5:31:6.
68. மேலது, 5:43:2.
69. மேலது, 5:59:4.
70. மேலது, 5:69:7.

71. மேலது, 5:38:10.
72. மேலது, 5:19:9.
73. மேலது, 5:60:3.
74. மேலது, 6:96:10.
75. மேலது, 5:60:1.
76. மேலது, 4:11:6.
77. மேலது, 6:20:6.
78. மேலது, 6:40:6.
79. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:123:5.
80. திருநாவுக்கரசர் தேவாரம், 5:19:9.
81. மேலது, 4:43:8.
82. மேலது, 4:4:8.
83. மேலது, 6:98:5.
84. மேலது, 5:100:2.
85. மேலது, 5:100:3.
86. மேலது, 6:31:7.
87. திருநாவுக்கரசர் தேவாரம் ஆறாந்திருமுறை, தருமையாதீனம் பதிப்பு, ப.674.
88. தமிழ்நாட்டு வரலாறு, ப.370.
89. சுந்தரர் தேவாரம், 7:திருப்புகலூர்:1.
90. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:5:11.
91. மேலது, 1:3:11.
92. மேலது, 1:172:11.
93. சுந்தரர் தேவாரம், 7:65:10.

வழிபாடும் கலைகளும்

இறைவழிபாடும், திருக்கோயில் நடைமுறைகளும் கலைகளோடு தொடர்புடையதாக உள்ளன. வழிபாட்டில் ஆர்வமாய் ஈடுபட, இசை, ஆடல் முதலிய கலைகள் உதவின. இறைவனையே அறுபத்து நான்கு கலைகள் ஆனவனாகப் பாடியுள்ளனர்.

"எட்டெட்டிருங் கலையுமா னானான் கண்டாய்"[1]

என்ற திருநாவுக்கரசர் வாக்கு நோக்கத் தக்கது. எனவே, தேவாரத்தின் மூலம் வழிபாட்டில் தொடர்புடையதாக உள்ள கலைகளையும் பின்னர் வளர்ச்சிபெற்ற கலைகளையும் காண்பது இவ்வியலின் நோக்கமாகும்.

வழிபாட்டில் இசைக்கலை

தேவாரம் உணர்த்தும் வழிபாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது இசையும் அதற்குத் துணை நிற்கும் இசைக் கருவிகளும் ஆகும். பாடல் வழி, திருக்கோயில் வழிபாட்டைச் செய்தலை மூவரும் சிறப்பித்துக் கூறுகின்றனர். பாடல் பாடி வழிபடுதலே எல்லா நன்மைகளையும் ஒருங்கே பெறவும், வினைகளைக் கழிக்கவும் ஆன எளிய வழி என்பது, தேவார மூவரின் நம்பிக்கையாகும். இக்கருத்தையே பதிகங்கள் தோறும் விதந்தோதுகின்றனர். இசை பற்றிய குறிப்புக்களும், இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்களும் மூவர் தேவாரத்தில் நிறைய உள்ளன.

இசைக்குறிப்புக்கள்

மூவர் தேவாரப் பாடல்கள் பண் சுமந்த பாடல்களாகும். பண் என்ற சொல் தற்காலத்தில் கர்நாடக சங்கீத இராகத்தில் அடக்கப்பெறுகிறது. 'பண்' என்பதைச் சேந்தன் திவாகரம் என்னும் நூல்,

"நிறைநரம் பிற்றே பண்ணென லாகும்"[2]

என்று ஏழு நரம்புடைய அமைப்பைக் கொண்டதாக விளக்க மளிக்கிறது.

பண் என்பதற்குத் தமிழ்ப்பேரகராதி பதினெட்டு வகையான பொருள் களைத் தந்துள்ளது. இவற்றுள் இசையோடு நான்கு பொருள்கள் தொடர் புடையன. அவை இசை, ஏழு சுரமுள்ளது, இசைப்பாட்டு, ஓசை என்பனவாம்.[3] எனவே, பண் என்பது இசைப்பாட்டு என்பது இவ்விளக்கங்கள் மூலம் புலனாகிறது.

மூவர் தேவாரத்தில் பண் குறித்தசெய்திகள் இடம்பெறுகின்றன.

"பண்ணிலாவும் மறை பாடலினான்"[4]

"பண்ணுறு வண்டறை சொன்றை யலங்கள்"[5]

"பண்ணொன்ற இசை பாடும் அடியார்கள்"[6]

"பண்டனை வென்ற இன்சொற் பாவை"[7]

"பண்ணார் பாடல்"[8]

"பண்ணார் இசைகளது கொண்டு"[9]

இவற்றில் திருஞானசம்பந்தர் பாடிய முதல் திருமுறை வரிகட்கு "இசை தாமே விளங்கும் வேதம், இசையை எழுப்புகின்ற வண்டு"[10] என்று விளக்கம் எழுதியுள்ளார் ச. தண்டபாணி தேசிகர். திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையில் வரும் 'பண்ணினார்' என்பதற்குப் பண்ணில் மிக்க பாடலையுடையவர், சாமகீதர் என்றும், 'பண்டனை' என்பதற்குப் 'பண்ணிசை இனிமையை' என்றும் குறிப்புரை தந்துள்ளார் சு. மாணிக்கவாசக முதலியார்.[11] சுந்தரரின் ஏழாம் திருமுறையில் இடம்பெறும் 'பண்ணார்' எனும் சொல்லிற்குப் 'பண்நிறைந்த', 'பண்பொருந்தி' என்று சி. அருணைவடிவேல் முதலியார் குறிப்புரை எழுதி யுள்ளார்.[12]

பண் குறித்து ஆபிரகாம் பண்டிதர், "*Isai is so called because it has to be hormoniously joined with many pats, pun is so called (பண் = Make) because it is the combined result of the Eight organs of vaoice production as well as of the Eight different kinds of adjustment of these Chords*" என்று விளக்கியுள்ளார்.[13] விபுலானந்தர், "நிறம் என்னும் தமிழ் மொழியோடு ஒத்த பொருளினது 'இராகம்' எனும் வடமொழி, நிறத்தினை பாவோடு இசைத்தலால் இஃது இசை எனப்பட்டது. பண்ணுதல் என்னும் வினையடியாகப் பிறந்தது 'பண்" என்று புலப்படுத்தி உள்ளார்,[14] அறிவனார், பெருந்தானம் எட்டிலிருந்து பண் பிறத்தலை ,

"பாவோ டிணைத்தல் இசைஎன்றார் பண்என்ற
தோவாப் பெருந்தானம் எட்டானும் - பாவாய்
எடுத்தல் முதலாய் இருநான்கும் பண்ணில்
படுத்தமையால் பண்ணென்று பார்"[15]

என்று தெளிவாக்கியுள்ளார்.

மீ.ப. சோமசுந்தரம் "தமிழ் நாட்டில் மிகப் பழங்காலத்தி லிருந்தே இராக முறையைப் பண் முறை என்றும், இராகங்களைப் பண்புகள் என்றும் அழைத்து வந்திருக்கிறார்கள். முழு வடிவமும் முழுமையான அகல நீளமும் கொண்ட இராகங்களைப் பண்கள் என்றும், இவற்றிலிருந்து தோன்றுகின்ற சேய் இராகங்களைப் பண்திறம் என்றும், பண் திறத்திறம் என்றும் தமிழர்கள் தொன்றுதொட்டு அழைத்து வந்திருக்கிறார்கள். எனவே, பண்முறை என்பது தமிழரின் இசை முறைக்கு மற்றொரு பெயர்" எனக் கூறும் விளக்கமும்,[16] அ. இராகவன் "இசையும் யாழும்" எனும் நூலில், "பண் இனிமை நல்குவதும் தனியோசை யுடையதும் ஆளத்தி செய்வதற்கு இடந்தருவதுமான ஒரு இசைக் கூட்டம். பண் என்பது பண்ணப்படுவது. இராகம் என்பது விரும்பப்படுவது"[17] எனக் குறிப்பிடும் விளக்கமும் கொள்ளத் தக்கனவாகும்.

பண் குறித்த ஆராய்ச்சியில் வீ.ப.கா. சுந்தரம், க. வெள்ளை வாரணனார், இ. அங்கையற்கண்ணி, து.ஆ. தனபாண்டியன், எஸ். செயலட்சுமி, கு. கோதண்டபாணி பிள்ளை, எஸ். இராமநாதன், ஞானாகுலேந்திரன், புலவர் செந்துரை முத்து, எம்.கே.எம். பொன்னுசாமிப் பிள்ளை, எஸ்.கே. சிவபாலன் முதலியோரும் ஈடுபட்டுப் பல விளக்கங்களை அளித்துள்ளனர்.

தொல்காப்பியர் காலந்தொட்டுப் பண் என்ற சொல் வழக்கில் இருந்து வருகிறது. இதனைத் தொல்காப்பியர் 'பண்ணத்தி' என்ற சொல்லால் குறித்து உள்ளார்.[18] சங்க இலக்கியங்களிலும் பண் குறித்துப் பல செய்திகள் பெறப் படுகின்றன. ஆம்பல் பண், காமரப்பண், குறிஞ்சிப்பண், காஞ்சிப்பண், செவ்வழிப்பண், நைவளப்பண், பஞ்சுரப்பண், பாலைப்பண், படுமலைப்பண், மருதப்பண், விளிப்பண் முதலிய பண்களைக் குறிப்பிடலாம்.

பண்ணுக்கு அடிப்படை

பண்ணுக்கு அடிப்படை ஏழிசையாகும். இவை முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என அழைக்கப்படுகின்றன. இவற்றை இசையுலகில் ஷட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பர். சுருக்கமாக ஸ ரி க ம ப த நி என்பர். இவ்வேழிசை பற்றிய குறிப்புகள் தேவாரத்தில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சான்றுகளாக,

"ஏழிசை ஏழ்நரம்பின் ஓசை"[19]

"பண்ணும் பதம்ஏழும் பலவோசைத் தமிழிவையும்"[20]

"ஏழிசையாய் இசைப்பயனாய்"[21]

"ஏழிசை பாடுவார்"[22]

"ஏழிசை யின்தமிழால் இசைந்தேத்திய"[23]

என்பனவற்றைக் காட்டலாம்.

தேவாரப் பண்கள்

இன்று மூவர் தேவாரத்தில் இடம்பெறும் பண்களாகக் கிடைத்தவை 23 ஆகும். 'யாழ்முரி' என்பதையும் பண்ணாகக் கொண்டால் 24 ஆகும். 'யாழ்முரி' என்பது காரணப் பெயராய் வந்தது. இவற்றில் சில பண்களின் பெயர்களை மூவர் தேவாரத்தில் காணமுடிகிறது.

காந்தாரம் என்னும் பண்,

"காந்தாரம் இசையமைத்து காரிகையார் பண்பாட"[24]

என்ற பாடலடியிலும், **கொல்லி** என்னும் பண்,

"கொல்லியாம் பண்ணுகந்தார் குறுக்கை வீரட்டனாரே"[25]

என்ற பாடலடியிலும், **சீகாமரம்** என்னும் பண்,

"காரடைந்த சோலை சூழ்ந்த காமரம் வண்டிசைப்ப"[26]

என்ற பாடலடியிலும், **தாரம்** என்னும் பண்,

"பாடுகின்ற பண் தாரமே"[27]

என்ற பாடலடியிலும், **செவ்வழி** என்னும் பண்,

"குருந்தம் ஏறிச் செவ்வழி பாடுங்குற்றாலம்"[28]

என்ற பாடலடியிலும், **துத்தம்** என்னும் பண்,

"துத்தநல் லின்னிசை வண்டு பாடும்"[29]

என்ற பாடலடியிலும், **பஞ்சுரம்** என்னும் பண்,

"தேன்பஞ்சுரம் பயின்று பைஞ்ஞீலி"[30]

"பஞ்சுரம் பாடி வண்டியாழ் முரலும் பரிதி நியமம்"[31]

என்ற பாடலடிகளிலும் இடம்பெறுகின்றன.

இவை தவிர, காஞ்சிப்பண், மருட்பண், செந்துறைப்பண், பாலைப்பண், மருதப்பண், நேரிசை முதலிய பண்கள் குறித்த குறிப்புக்களும் மூவர் தேவாரத்தில் காணப்படுகின்றன.

சந்தம்

சந்தம் என்பது பாடலின் ஓசை ஒழுங்கைக் குறிப்பிடுவதாகும். திருஞானசம்பந்தர் தம் பாடல்களைச் 'சந்தமலி பாடல்' என்றே பலவிடங்களில் குறிப்பிடுகிறார். சந்தத்தினை 'ஓசை அளவு' என்றும் கூறலாம். இச் சந்தத்தைத் 'தாளம்' உள்நின்று இயக்குகிறது என்கிறார் திருஞானசம்பந்தர்.

"பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்
உண்ணின்ற தொர்சுவையும் உறுதாளத் தொலிபலவும்"[32]

என்ற பாடலடி குறிக்கத்தக்கதாகும்.

சந்தம் இசையோடும் இயலோடும் தொடர்புடையது என்பது,

"சந்தமாலைத் தமிழ்"[33]

"சந்தம்மலி பாடல்"[34]

"சந்தம் இசையொடும்"[35]

"சந்தமார் தமிழ்கேட்ட"[36]

என்ற பாடலடிகளின் மூலம் தெளிவாகிறது.

கீதம்

கீதம் என்பது சங்கீதப் பாடத்தில் ஓர் இசைப்பாடல் வகையாகும். சங்கீத பாலபாடத்தில் 'சரளி வரிசை', 'ஜண்ட வரிசை', 'மேல்ஸ்தாயி வரிசை', 'கீழ்ஸ்தாயி வரிசை' என்ற அடிப்படைப் பாடங்களைத் தொடர்ந்து ஸ்வரங்க ளோடு பாடல் வரிகளும் (இயல்) சேரும் தொடக்கநிலை இசைப்பாடல் கீதமாகும். ஆனால் தேவாரத்தில் இடம்பெறும் 'கீதம்' என்ற சொல் பொதுவாகப் பக்தியிசைப் பாடல்களையே குறிக்கிறது. பாடலைக் குறிக்கும் 'கீதம்' என்ற சொல் மூவர் தேவாரத்தில்,

"கீதமுமை பாட"[37]

"கீதம் வந்த வாய்மையால்"[38]

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள்"[39]

"பாடினாய் மறையோடு பல் கீதமும்"[40]

"கீதங்கள் பாட வைத்தார்"[41]

"வேத கீதங்கள் பாடலுற"[42]

என இடம்பெற்றுள்ளது.

தாளக் குறிப்பு

தாளம் என்பது இலயம் எனப்படும். இசைப்பாடலுக்குத் தாளம் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. ஒரு பாடலை அதன் கட்டமைப்பு குறையாமல் கடைசிவரை நடத்திச் செல்வது தாளமே ஆகும். அதனால்தான் இசைப் பாடலுக்குச் 'சுருதி மாதா; இலயம் பிதா' என்று முன்னோர் வகுத்துள்ளனர். இப்பழமொழி மூலம் இலயம்/தாளம் என்பது ஒரு பாடலுக்குத் தந்தையைப் போன்றது என்பது புலனாகிறது. சங்கீத உலகில் ஏழு தாளங்களும், ஒவ்வொன்றுக்கும் ஐந்து வகைகளுமாக மொத்தம் முப்பத்து ஐந்து தாளங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, அங்க தாளம், உபாங்க தாளம், பங்கதாளம், விபாங்க தாளம், சுத்த தாளம், அனுதாளம், துருவம், அடதாளம், ஏகதாளம், திரிபுடை, உரூபகம், சம்பை, மட்டிய தாளம், அரும, செம, சித்திர, நிவர்த்த, துருவ, சய, படிம, விட,அரி, சதுரசிரம், திரிசிரம், மிசிரம், கண்டம், சங்கீரணம் என்பனவாகும்.[43]

இத்தாளப் பெயர்கள் மூவர் தேவாரத்தில், பண்களின் பெயர்கள் குறிப்பிடப் பெறுவது போல, தனித்தனியாகப் பெயர்கள் குறிப்பிட்டுப் பதிவு செய்யப்படவில்லை. 'தாளம்' என்றோ, இலயம் என்றோ பொதுவாகக் காணப்படுகிறது. சான்றுகளாக,

"உள்நின்ற தோர் தாளத்தொலி"[44]

"தாளமும் குழலும்"[45]

"உலகவர்முன் தாளம் ஈந்தவன்"[46]

"இலயம் சிதையா கொள்கை"[47]

"ஆடலில் இலயம் உடையார்"[48]

என வருவனவற்றைச் சுட்டலாம்.

'தாளம்' என்பது உலோக இசைக் கருவிகளுள் ஒன்றாகும். இக் கருவிக்குக் காரணப்பெயராகவே 'தாளம்' என்பது அமைந்தது குறிக்கத்தக்கது.

இசைக்கருவிகள்

இசைக்கருவிகள் குரலிசைக்குத் துணையாகவும், தனித்த நிலையில் இசைக்கப்படுவனவாகவும் விளங்குகின்றன. இவ் இசைக்கருவிகள் திருக்கோயில்களில் பண்டு தொட்டு இசைக்கப்பட்டு வருகின்றன. பண்ணமைத்து யாழில் இசை கூட்டும் மரபினரைப் பாணர்கள் என்று அழைக்கும் வழக்கம், சங்க காலத்திலிருந்தே இருந்து வருகிறது. பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை முதலின இம்மரபினரைச் சுட்டுகின்றன.

திருஞானசம்பந்தரின் பாடல்களுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவர் அவருடனே பல தலங்களுக்கும் சென்று யாழின் மூலம் பண் அமைத்தார் என்ற செய்தி திருஞானசம்பந்தர் வரலாறு மூலம் அறிய முடிகிறது.[49]

மூவர் தேவாரத்தில் பல இடங்களில் இசைக்கருவிகள் குறித்த செய்திகளும், பெயர்களும் இடம்பெறுகின்றன. இசைக்கருவிகளைத்,

1. தோற்கருவிகள்
2. துளைக் கருவிகள்
3. நரம்புக் கருவிகள்

எனப் பொதுவாக மூன்று வகையாகவும், உலோகக் கருவிகள் எனச் சிறப்பு நிலையில் தனியாகவும் பிரிப்பர். துளைக்கருவி களைக் 'காற்றுக் கருவிகள் என்று அழைப்பதும் உண்டு.

தோற்கருவிகள்

மூவர் தேவாரத்தில் இடம்பெறும் தோற்கருவிகள் பின்வருமாறு:-

1.முழவு, 2. பேரிகை, 3. துடி, 4. சல்லரி, 5. முரசு, 6. துந்துபி, 7. உடுக்கை, 8. தமருகம், 9. தண்ணுமை, 10. சச்சரி, 11. தக்கை, 12. மத்தளம் 13. கரடிகை, 14. குடமுழா, 15. கல்லலகு, 16. கல்லவடம் 17. கொடுகொட்டி, 18. இடக்கை, 19. கத்திரிகை, 20. பறை, 21. பிடவம், 22. முரவம், 23. மொத்தை, 24. துந்துமிதுந்துபி, 25. பம்பை என்பனவாகும்.

முழவு

சங்க காலந்தொட்டுப் பயன்படுத்தப்பட்ட தோற்கருவிகளுள் ஒன்று முழவு ஆகும். இருமுகத் தோல் கருவி எனவும், மென்மைக்கருவி எனவும் இதனைக் குறிப்பர்.[50] முழக்கப்படுவதால் முழவெனப்பட்டது. அடியார்க்கு நல்லார் இம் முழவின் வகைகள் ஏழு என்று குறிப்பிட்டுள்ளார். அவை, 1. அகமுழவு, 2. அகப்புற முழவு, 3. புறமுழவு, 4. புறப்புறமுழவு, 5. பண்ணமை முழவு, 6. நாண்முழவு, 7. காலை முழவு என்பதாகும்.[51]

மூவர் தேவாரத்தில் முழவு என்ற கருவி குறிக்கப் பெறுகிறது.

"முழவோ டிசைநடமுன் செயும்"[52]

"கொட்டமா முழவோங்க"[53]

"துடிகளோடு முழவம் விம்ம"[54]

"பாராரு முழவம்"[55]

"பண்முழவும் பலவோசையும்"[56]

என்பன சான்றுகளாகும்.

பேரிகை

பேரிகை என்பது போர்ப்பறைகளுள் ஒன்றாகும். இது பதினைந்து வகையான வன்மைக் கருவிகளுள் ஒன்றாகும்.[57] பேரிகை பற்றி,

"கொண்ட லைத்திகழ்பேரி முழங்க"[58]

"பெருமேதை மறையொலியும்
பேரிமுழ வொலியும்"[59]

என்ற தேவாரப் பாடலடிகளில் காணலாம்.

துடி

துடி என்பது இருமுகத் தோற்கருவியாகும். இதனை இடைக்கருவி என்று குறிப்பிடுகிறார் அறிவனார்.[60] இஃது இடை சுருங்கிய பெரும்பறை எனவும் கூறப்படுகிறது. துடியைக்,

"கறங்குதுடி"[61]

"துடிகொண்ட கையும்"[62]

"துடி கைகொண்டார் போலும்"[63]

என்று தேவாரம் சுட்டுகிறது. துடியின் வகைகளுள் ஒன்றே 'இடக்கை' என்பதாகும். இதனை,

"துடி தக்கையோ டிடக்கை"[64]

எனத் தேவாரம் சுட்டுகிறது.

சல்லரி

சல்லரி என்பது தோலால் மூடிய ஒருமுகப் பறையாகும். இது சல்லி, சல்லிகை, எல்லரி என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. வட்ட வடிவமான அமைப்புடையது ஆகும்.[65] தேவாரத்தில்,

"சல்லரி யாழ் முழவு மொந்தை குழல்தாள மதியம்ப"[66]

என்று திருஞானசம்பந்தர் இதைக் குறிப்பிடுகிறார்.

முரசு

முரசு என்பது முழவில் ஒரு வகையாகும். வீரமுழவு என்பர். இவ்வீர முழவு நான்கு வகைப்படும். அவை, 1. முரசு, 2. நிசாளம், 3. துடுமை, 4. திமிலை என்பதாகும்.[67] தேவாரத்தில்,

"முரசதிர்ந் தெழுத"[68]

"முரசதிர்ந்து"[69]

"வார்கொள் நன்முரசம்"[70]

என முரசு இடம்பெறுகிறது.

துந்துபி

துந்துபியைத் தேவலோகப் பறை என்றும், மன்மதனது இசைக் கருவி என்றும் உரையாசிரியர்கள் குறிக்கின்றனர்.[71] துந்துமி என்றும் பாடல்களில் இது சுட்டப்படுகிறது.

"காலையொடு துந்துமி"[72]

"கொட்டிப் பாடுமித் துந்துமியொடு"[73]

என்ற தேவார வரிகளில் 'துந்துமி' என்ற வழக்கைக் காணலாம்.

உடுக்கை

துடியினைப் போன்றதே உடுக்கையாகும். இதன் சுற்றுப் புறத்தில் சிறு துவாரங்களும் அதில் கயிறுகளும் இறுகக் கட்டப் பட்டிருக்கும். இதனைத் தமருகம் என்று தேவாரம் குறிக்கிறது.

"தண்டுடுக்கை... சாரநடம் பயில்வார்"[74]

"தமருகமும் எரியகலும் கரிய பாம்பும்"[75]

என்பன உடுக்கை/தமருகம் குறித்த தேவாரத்தொடர்களாகும். தண்ணுமையும் இதனோடு இணைத்தே சுட்டப்பெறுகிறது.

"தண்டுந் தாளமும் குழலும் தண்ணுமைக் கருவியும்"[76]

என்பது சம்பந்தர் பாடலடியாகும்.

தக்கை

இது இடைக்கருவிகளுள் ஒன்று. இக்கருவியை வைத்துக் கொண்டு கதைப்பாடல்களைப் பாடுவர்.[77] தேவாரத்தில்,

"மேனி நீறது பூசித் தக்கை கொள்"[78]

"தக்கை தண்ணுமை..."[79]

என இக்கருவி இடம்பெறுகிறது.

குடமுழா

ஒரு முக முழவு வகைகளுள் ஒன்று குடமுழவாகும். உலோகக் குடத்தின் வாயில் தோல் சுற்றப்பெற்ற வாத்தியக் கருவியாகும். தேவாரத்தில்,

"கொடுகொட்டி குடமுழா"[80]

"குடமுடை முழவம் ஆர்ப்ப"[81]

"குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்"[82]

"குடமுழா நீர் மகிழ்வீர்"[83]

எனக் குடமுழா சுட்டப்பெறுகிறது.

கல்லலகு, கல்லவடம்

இக்கருவிகள் குறித்து மூவர் தேவாரத்தில்,

"கல்லலகு பாணி பயின்றார் போலும்"[84]

"......... கல்லவடமிட்டுத்
திசை தொழுதாடியும் பாடுவார்"[85]

"கல்லவடப் பரிசு"[86]

என்று குறிப்புகள் காணப்படுகின்றன.

கொடுகொட்டி

கொடுகொட்டி சங்க இலக்கியங்களிலேயே சுட்டப்பெறும் இசைக் கருவிகளுள் ஒன்றாகும். தேவாரத்தில்,

"கொடுகொட்டி கொண்டு ஒருகை"[87]

"கொடுகொட்டிக் கொக்கரை"[88]

"குரவனார் கொடுகொட்டியும்"[89]

"கொடுகொட்டியொர் வீணையுடையவனே"[90]

என இக்கருவி இடம்பெறுகிறது.

பறை

பழமையான இசைக்கருவிகளுள் ஒன்றாகப் பறை கருதப் படுகிறது. இதன் வகைகளாக, தொண்டகப்பறை, ஏறுகோட் பறை, நெல்லரிப்பறை, நாவாய்ப்பறை, துடிப்பறை என்று தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்குரிய கருப்பொருள்களுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறார். தேவாரத்தில்,

"பறையும் சங்கும்"[91]

"பறையார் ஒலிசெய் பனையுரே"[92]

"பறையும் ஆர்ப்ப"[93]

"பறையொடு சங்கம் இயம்ப"[94]

"பறையின் ஒலி பெருக"[95]

"பறையொடு பூதங்கள் பாட"[96]

எனச் சுட்டப்பெறுகிறது. இக்கருவிகள் தவிர,

"..... பிடவம் மொந்தை"[97]

"பாராரு முழவ மொந்தை"[98]

"முரவ மொந்தை முழா வொலிக்க"[99]

"கொட்டிபாடு மித்துந்துமியொடு"[100]

எனவரும் தேவாரப் பாடலடிகளால் பிடவம், மொந்தை, முரவம் முதலிய தோல் இசைக்கருவிகளையும் அறியமுடிகிறது.

துளைக்கருவிகள்

மூவர் தேவாரத்தில் சங்கு, தாரை, கொக்கரை, வங்கியம், குழல் எனும் ஐந்து துளைக்/காற்றுக் கருவிகள் இடம்பெறுகின்றன.

சங்கு

சங்கு மிகவும் பழமையான இசைக்கருவியாகும். திருக்கோயில் களிலும் பிற இடங்களிலும் மங்கல இசைக் கருவியாக இது விளங்குகிறது. சங்கு இயற்கையான இசைக் கருவியாகும். சங்கின் தலைப்பகுதியின் நடுவில் ஒரு துளையிட்டு இதனை இசைப்பர். தேவாரத்தில்,

"பறையொடு சங்கம் இயம்ப"[101]

"விருப்பினொடு வெண்சங்கம் ஊதா ஊரும்"[102]

"பறையும் சங்கொலி ஓவாப் படிறன்தன்"[103]

"ஊரா ருவரிச் சங்கம்"[104]

எனச் 'சங்கு' குறித்து இடம்பெறுகிறது.

கொக்கரை

கொக்கரை என்பது சங்கில் ஒரு வகையாகும். இதனை 'வலம்புரிச் சங்கு' என்பர்.[105] தேவாரத்தில்,

"விட்டிசைப்பன கொக்கரை"[106]

"கொக்கரையொடு பாடல் உடையான்"[107]

என இச்சங்கு வகை இசைக்கருவி இடம்பெறுகிறது.

குழல்

காற்றுதுளைக் கருவிகளில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவது குழலாகும். வேய்ங்குழல் என்றும் இது குறிக்கப் பெறுகிறது. குழல் மூங்கிலால் செய்யப்பெறுவது ஆகும். குழல் குறித்துத் தேவாரத்தில்,

"துளைபயிலும் குழல்"[108]

"தாளங்கள் கொண்டும் குழல் கொண்டும்"[109]

"பாடல் வீணை முழவம் குழல்"[110]

என்ற குறிப்புகள் காணப்படுகின்றன.

நரம்புக் கருவிகள்

பழங்காலக் கருவிகளுள் நரம்புக் கருவிகளும் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. யாழ் என்ற நரம்புக் கருவி சங்க காலந்தொட்டுப் பதிவு செய்யப்பெறும் தகைமையதாகும். இது தவிர வீணை, விபஞ்சி, சகோடம், தந்திரி முதலான நரம்புக் கருவிகளும் தேவாரத்தில் இடம்பெறுகின்றன.

யாழ்

யாழ் பல நரம்புகளைக் கொண்ட ஒரு இசைக்கருவி யாகும். ஆயிரம் நரம்புகளைக் கொண்ட 'பெருங்கலம்' என்னும் பேரியாழ் குறித்து வேங்கடேசன் ஞானத்தமிழில் குறிப்பிடுகிறார்.[111] சகோடயாழ், செங்கோட்டுயாழ், மகரயாழ், வில்யாழ் எனப் பலவகைகளாக யாழ் சுட்டப்பெறுகிறது. மூவர் தேவாரத்தில் வகைமை பற்றிச் சுட்டப்படாமல் யாழ் என்று குறிக்கப்பெறுகிறது. சான்றுகளாக,

"இன்னிசை யாழ்மொழி யாளோர் பாகம்"[112]

"இன்குர லிசைகெழும் யாழ்முரல"[113]

என்பனவற்றைக் காட்டலாம்.

வீணை

யாழ் என்பதே வீணை எனும் கருவியாயிற்று என்பர். ஆனால் மூவர் தேவாரத்தில் இரண்டுமே தனித்தனியே சுட்டப் பெறுகின்றன. திருவாசகத்திலும்,

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்"[114]

என்று யாழும் வீணையும் தனித்தனியே குறிப்பிடப்பெறுகின்றன.

தேவாரத்தில்,

"…..எம்மிறை நல்வீணை வாசிக்குமே"[115]

"….மிகநல்ல வீணை தடவி"[116]

"மாசில் வீணையும்"[117]

"வீணைதான் அவர் கருவியோ"[118]

"வித்தக வீணையோடும்"[119]

"வீணை விடங்கராக"[120]

என வீணை இடம்பெறுகிறது.

உலோகக் கருவிகள்

வெண்கலம், பித்தளை முதலிய உலோகங்களால் செய்யப் பெறும் கருவிகள் உலோகக் கருவிகளாகும். பொன்னால் ஆகிய தாளத்தை இறைவன் திருஞானசம்பந்தருக்கு வழங்கினான் என்ற செய்தி அவரது வரலாறு வழி உணர முடிகிறது.[121] இவ்வுலோகக் கருவிகளுள், கஞ்சக்கருவி, கிண்கிணி இரண்டும் குறிக்கத் தக்கதாகும்.

கஞ்சம்

கஞ்சக் கருவி என்பது உலோகத் தாளமாகும். கஞ்சம் என்றால் வெண்கலம் என்று பொருள். எனவே, வெண்கலத்தால் செய்யப்படும் தாளங்களைக் கஞ்சக் கருவிகள் என்றனர். இதன் வகைகளாக, உலோகத்தாளம், இசைமணி, பாண்டில், இலைத்தாளம் முதலியன குறிக்கப்படுகின்றன.[122] தேவாரத்தில்,

"உறுதாளத் தொளி பலவும்"[123]

"கொண்டபாணி கொடிகொட்டி தாளங்கள்"[124]

எனவருவதைச் சுட்டலாம்.

திருஞானசம்பந்தர் கையில் இத்தாளமே உள்ளது. இத்தாளக் கருவியைச் சிவபெருமான், திருஞானசம்பந்தர்

குழந்தையாக இருந்தபோது கைத்தாளமிட்டுப் பாடியதைக் கண்ணுற்று, பொற்றாளமாக வழங்கினான் என்றும், இந்நிகழ்ச்சி திருக்கோலக்காவில் நடைபெற்றது என்றும் பெரியபுராண வரலாற்றின் மூலம் தெரிகிறது.[125] மேலும், பொற்றாளத்திற்கு ஓசையின்மையால் உமையம்மை அதற்கு ஓசை கொடுத்தாள் எனவும், இதன் காரணமாகவே அவ்வூர் உமையம்மைக்கு ஓசை கொடுத்த நாயகி என்ற பெயர் ஏற்பட்டது எனவும், தாளம் கொடுத்ததால் சிவபெருமான் திருத்தாளமுடையார் என வழங்கப்பட்டார் எனவும் தலபுராணங்கள் குறிக்கின்றன.[126] இந் நிகழ்ச்சியைச் சுந்தரர் தம் தேவாரத்தில்,

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞான சம்பந்தனுக்கு உலக வர்முன்
தாளம் ஈந்தவன்..."[127]

என்று பதிவு செய்துள்ளார்.

கிண்கிணி

கிண்கிணி எனும் உலோகக் கருவியும் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிக்கப்பெறுகிறது.

"...கிண்கிணியான் கையதோர்"[128]

என்பது சம்பந்தர் பாடலடியாகும்.

வழிபாட்டில் ஆடல்கலை

இறையன்பர்கள் திருக்கோயில்களில் ஆடியும் பாடியும் வழிபாடு செய்துள்ளனர். இறைவழிபாட்டில் மனம் ஒன்றிடப் பாடலுடன் ஆடலும் துணைபுரிகின்றது. மூவர் தேவாரத்தில்,

"ஆடிப்பாடி அழுது நெக்கங்கு
அன்புடை யவர்க்கு இன்பம்"[129]

"பன்னாளும் பாடி ஆடி"[130]

"ஆடுமாறு வல்லார் அவரே அழகியரே"[131]

"பாரார் புகழால் பத்தர் சித்தர்
பாடி ஆடவே"[132]

"பண்ணிடைச் சுவைகள் பாடி
ஆடிடும் பத்தர்க்கு"[133]

"தொண்டர்கள் பாடியாடித்
தொழுகழல் பரமனார்"[134]

எனவரும் பாடலடிகளால் தேவார மூவர் காலத்தில் ஆடி வழிபாடு செய்ததை உணரலாம்.

திருக்கோயில்களில் ஆடல் என்பது வழிபாட்டில் ஒரு அங்கமாக விளங்கிய காரணத்தால், ஆடல் மகளிரை அக்கால அரசுகள் திருக்கோயில்களில் நியமித்திருந்தன. இதற்கென இறையிலி நிலங்கள் ஆடல் மகளிர்க்குத் தானமாக வழங்கப் பட்டன. இச்செய்திகளைப் பல கல்வெட்டுக்கள் தெரிவிக் கின்றன. இவ் ஆடல் மகளிர் திருக்கோயில்களில் நாடோறும் பூசைக் காலங்களிலும், விழாக் காலங்களிலும் நடனமாடுவர். இச்செய்தி மூவர் தேவாரத்தில்,

"வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர"[135]

"கோல விழாவின் அரங்கது ஏறிக்
கொடி இடை மாதர்கள்"[136]

"அடியிணையே பரவும்
நிருத்தர் கீதர்......."[137]

"........தேன்மொழியார்
வந்துவலம்செய்து மாநடம்
ஆட மலிந்த"[138]

"மண்ணார் முழவும் குழலும் இயம்ப
மடவார் நடமாடும் மணியரங்கில்"[139]

எனவரும் பாடல் வரிகளில் கூறப்பட்டுள்ளது.

இறைவனையே ஆடல் வல்லானாகச் (நடராசர்) சுட்டு கின்றன சைவ சமய இலக்கியங்கள். அம்பலம், சபை, அரங்கு போன்ற சொற்கள் தேவாரத்துள் ஆடற்கலையோடு இணைத்தே சுட்டப்படுகின்றன. சிவபெருமான் ஆடிய பஞ்ச சபைகளான, இரத்தினசபை (ஆலங்காடு), பொற்சபை (சிதம்பரம்), வெள்ளிசபை (மதுரை), தாமிரசபை (நெல்லை), சித்திரசபை (குற்றாலம்) ஆகியனவும், ஆனந்த தாண்டவம், ஞான தாண்டவம், சுந்தர தாண்டவம், அசபா தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், பிரம்ம தாண்டவம், மயூர தாண்டவம், அஞ்சித பாதகரண தாண்டவம், கடிசம தாண்டவம், சதுர தாண்டவம், லதா விருச்சிக தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரி தாண்டவம், காளிகா தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம் ஆகியனவும் ஆடற் கலையின் சிறப்பையும் வகைகளையும் சுட்டுவனவாகும்.[140]

ஆடல் என்பது தேவாரத்துள் 'கூத்து' என்ற சொல்லாலும் தாண்டவம் என்ற சொல்லாலும் குறிக்கப்பெறுகிறது. 'கூத்து' என்ற சொல்,

"குடமுழவம் வீணைதாளம் குறுநடைய சிறுபூதம்
முழக்க மாக்கூத்து
ஆடுமே...."[141]

"நடமாட வல்லானே ஞானக் கூத்தா"[142]

"அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாததொர் கூத்து"[143]

"நாடற் கரியதொர் கூத்து"[144]

எனவரும் தொடர்களிலும், ஆடல் என்ற சொல்,

"ஆடினார் காளிகாண ஆலங்காட் டடிகளாரே"[145]

"அரிஅயன் தலைவெட்டி வட்டாடினார்"[146]

"இவர் ஆடுமாறும் இவள் காணுமாறும் இதுதா(ன்)
இவர்க் கொரியல்பே"[147]

"முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே"[148]

எனவரும் தொடர்களிலும் சுட்டப்பெறுகின்றன.

மலர் தொடுத்தல் கலை

பூ-செய் என்பதே பூசை --> பூஜை ---> பூஜா என்று ஆனது. வழிபாட்டில் மலர்கள் மிக முக்கியமான இடத்தைப் பெற்ற காரணத்தால் மலர்களைப் பறிப்பதும் அதனை வகை வகையாக வழிபாட்டில் பயன்படுத்துவதும் ஒரு கலையாகவே வளர்ந்தது. மலர்களைத் தொடுத்தல் தேவார காலத்தில் சிறந்த கலையாகவே இருந்துள்ளமை புலனாகிறது. தேவார மூவர் பலவிதமான மலர்மாலை வகைகளைச் சுட்டியுள்ளனர். சான்றுகளாக, 1. வடம் (2:105:5), 2. தார் (3:87:7), 3. தொடை (1:36:6), 4. இண்டை (2:114:1), 5. வார் (1:69:1), 6. கண்ணி (4:43:8), 7. தொடுத்த நன்மாலை (4:55:2), 8. பிணையல் (4:64:6), 9. அலங்கல் (1:59:7), 10. தாமம் (1:30:6), 11. துணையல் (2:118:2), 12. தொங்கல் (1:51:1), 13. படலை (4:28:4), 14. தொடையல் (1:46:1, 51:1) என வரும் வகைகளைக் குறிப்பாகச் சுட்டலாம்.

மாலைகளில் பல வகைகளைக் குறிப்பாகச் சுட்டி யிருப்பதை நோக்கும் பொழுது மலர்தொடுத்தல் தொழிலாக மட்டும் இல்லாமல் தேவார மூவர் காலத்தில் மிகச் சிறந்த கலையாகவும் விளங்கியிருந்தமை தெற்றென விளங்குகிறது.

பதினாறு வகை உபசாரங்களில் கலைகள்

பிற்கால, திருக்கோயில் வழிபாட்டில் பதினாறு வகையான உபசாரங்களை வரையறுத்தனர். இதனை, சோடச உபசாரம் என்று வடமொழியில் அழைப்பர். சோடசம் என்றால் பதினாறு என்று பொருள். இவற்றை அபிதான சிந்தாமணி எனும் நூல், 1. ஆவாஹனம், 2. ஆசனம், 3. அர்க்கியம், 4. பாத்தியம், 5. ஆசமனீயம், 6. ஸ்நானம், 7. வஸ்திரம், 8. எஞ்ஞசூத்திரம், 9. பூஷணம், 10. கந்தம், 11. அக்ஷரை, 12. புஷ்பம், 13. தூபம், 14. தீபம், 15. நைவேத்யம், 16. அமுத வாசனம் என்பதோடு,

1. நீராசனம், 2. தர்ப்பணம், 3. பலார்ப்பணம், 4. தாம்பூலம், 5. பிரதக்ஷிணம், 6. நமஸ்காரம், 7. ஸ்தோத்திரம், 8. புராண படனம், 9. சத்திரம், 10. சாமரம், 11. விசிறி, 12. மஞ்சம், 13. சங்கீதம், 14. நிருத்தம், 15. வாத்யம், 16. ஆம்மாரோபணம்[149] என்பனவற்றையும் வரிசைப்படுத்துகிறது.

இதில் தேவாரம் குறிப்பிடும் இசை (சங்கீதம்), ஆடல் (நிருத்தம்), இசைக்கருவிகள் (வாத்யம்), பாடுதல் (ஸ்தோத்திரம்) ஆகிய கலைகளும் இடம்பெற்றுள்ளமை ஈண்டு குறிக்கத்தக்கது.

தேவார காலத்தில் இருந்த நடைமுறைகள் பல பிற்கால வழிபாட்டில் சோடச உபசாரம் என்ற பெயரில் இடம்பெற்று உள்ளன.

பாடல் சிற்பமாதல்

தேவார மூவர் பாடியுள்ள வழிபாட்டுப் பாடல்களில் வருணிக்கப்படும் இறைவடிவங்கள் பிற்காலங்களில் சிற்பமாக உருவெடுத்துள்ளன. சிற்பக் கலைக்கு மூவரின் தேவாரப் பாடல் களில் பல தியான சுலோகங்களாக விளங்கு கின்றன என்பர்.[150] தேவாரம் குறிப்பிடும் மகேஸ்வர வடிவங்களைப் பிற்காலச் சிற்பிகள் தங்கள் மனக்கண்ணால் கண்டு பல்வேறு இறைத் திருமேனிகளை உருவாக்கினர்/உருவாக்கி வருகின்றனர். சான்றுகளாக,

சிவபெருமானைத் தேவார மூவர் வருணிக்கும் போது, வலக்காதில் வெண்குழை (7:27:5), இடக்காதில் வெண்தோடு (7:88:2), வெண்முறுவல் (5:56:5), வெண்ணகை (5:45:6), கேழல் வெண்மருப்பு (5:97:9), வெண்ணீறு (7:40:9), வெண்ணூல் (1:47:1), வெண்மழு (7:22:2), வெண்டலை (5:55:3), தீ (7:87:5), அரவம் (2:28:5), மான் (3:116:1), உடுக்கை (1:19:4), வெள்விடை (7:34:4), சந்திரன், கங்கை, கொன்றை, ஊமத்தம், அரவம் (3:2:1) எனவரும் சொற்களில் காதணிகள், புன்முறுவல், மார்பில் அணிந்தவை, கையில் உள்ள ஆயுதங்கள், வாகனம், தலையில் அணிந்தவை என்றெல்லாம் குறிப்பிட்டுப் பாடியுள்ளனர்.

இவையெல்லாம் இன்றளவும் சிற்பிகளுக்கு மிகப்பெரிய கையேடாக உள்ளன.[151] இவற்றை மூலமாக வைத்துக்கொண்டே தேவார மூவர் குறிப்பிடும் மகேஸ்வர வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன. சான்றுகளாக,

சிற்பிகள் உருவாக்கும் வடிவம்	தேவாரச் சான்றுகள்
கஜசம்ஹாரர்	-"பனைக்கைம்மா உரி போர்த்தவன்"(4:115)
சந்திரசேகரர்	-"வளைந்த திங்கள் சூடினார்"(4:354)
	"சந்திரன் சடையில் வைத்த சங்கரன்"
அர்த்தநாரீசர்	-"பாதிப்பெண் உருவமானார்" (4:360)
தட்சிணாமூர்த்தி	-"ஆலின்கீழ் அறங்களெல்லாம் அன்றவர்க்கு அருளினார்" (4:359)
காலாந்தகர்	-"காலின்கீழ்க் காலன் தன்னைக் கடுத்தான்" (4:359)
கங்காதரர்	-"கங்கைவார் சடைமேல் தரித்தவர்"(4:836)
கிராதகர்	-"வில்லாடி வேடன்" (6:379)

முதலிய வடிவங்களைக் குறிப்பிடலாம்.

திருநாவுக்கரசர் தம் எண்பத்தோராம் அகவையில் திருப்புகலூரில் முக்தி பெற்றார். அப்போது அவர் பாடிய நிறைவான பதிகம் 'எண்ணுகேன்...' எனத் தொடங்கும் பதிகமாகும்.[152] இப்பதிகப் பாடலொன்றில்,

"சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்"[153]

என்று பாடியுள்ளார். இதனைக் கொண்டு இறைவன் திருநாவுக்கரசரைச் சிங்கமாக வந்து விழுங்கினான் என்று தவறாகப் புரிந்து கொண்டனர். இச்செய்தியைக் கொண்டு சிற்பமாகவும் திருப்புகலூரில் கோபுர முகப்பில் செய்து வைத்துவிட்டனர். பின்னர் பல அறிஞர்கள், சமய ஈடுபாடுடைய

வர்களின் விளக்கமும், எதிர்ப்பும் தோன்றிய நிலையில் அச்சிற்பம் அகற்றப்பட்டது.[154]

இந்நிகழ்ச்சி போன்று பலவிடங்களில் பாடல்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதும், அதன் காரணமாக ஓவியம் மற்றும் சிற்பம் போன்ற கலைகளில் அவை வெளிப்படுவதும் நடைபெறுவது உண்டு.

பாடல் ஓவியமாதல்

பாடல்கள் சிற்பமாதலைப் போன்றே ஓவியமாகவும் உருவெடுத்து உள்ளன. இருபத்தைந்து மகேஸ்வர வடிவங்கள், ஓவியங்களாகத் தில்லைப் பெருங்கோயிலில் திருமூலட்டானர் சன்னதியின் வெளிச்சுற்றுச் சுவரில் இடம்பெற்று உள்ளமையும், திருவிடைமருதூர், மதுரை, காஞ்சிபுரம், பனைமலை முதலிய தலங்களில் தீட்டப்பட்ட ஓவியங்களையும் குறிப்பிடலாம்.

சீர்காழிப் பதிகங்களைத் திருஞானசம்பந்தர் அத்தலத்தின் பன்னிரு பெயர்களில் அமைத்துப் பாடியுள்ளார். இப்பன்னிரு பெயர்களும் அத்தலத்துப் புராண வரலாற்றின் அடிப்படையில் உருவானவை. இத்தலப் பெயர்களுக்குரிய புராணச் சம்பவங்கள், காட்சிகள் சீர்காழியில் உள்ள சம்பந்தர் கோயில் உட்சுவரில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. அவ் ஓவியங்கள்,

	தலப்பெயர்		காரணம்
1.	பிரமபுரம்	-	பிரமன் வழிபட்டமை
2.	வேணுபுரம்	-	இறைவன் மூங்கில் வடிவில் தோன்றி அருளியமை
3.	புகலி	-	அசுரர்களிடமிருந்து தப்பிய தேவர்கட்குப் புகலிடமானமை
4.	வெங்குரு	-	தேவகுரு வியாழன் (பிரகஸ்பதி) வழிபட்டமை

5.	தோணிபுரம்	-	பிரளய காலத்தில் ஈசன் சீர்காழியை மூழ்காமல் தோணியாய் மிதக்கச் செய்தமை
6.	பூந்தராய்	-	பூமியைப் பிளந்த இரணியாக்கதனை வதைத்த வராக அவதாரத் திருமால் சிவனை வழிபட்டமை
7.	சிரபுரம்	-	இராகு கிரகம் சிவனைப் பூசித்தமை
8.	புறவம்	-	புறா வடிவில் வந்த அக்னி தேவனால் சிபிச் சக்கரவர்த்தி இத்தலத்தில் முக்தி பெற்றமை
9.	சண்பை	-	சண்பை எனும் கோரைப்புல்லால் மடிந்த தம் குலத்தினால் தமக்கு நேர்ந்த பழியானது பற்றாதிருக்கத் திருமால் கண்ணனாக இத்தலத்தில் வழிபட்டமை
10.	காழி	-	சக்தி வழிபட்டமை
11.	கொச்சை வயம்	-	மச்சகந்தியை விரும்பிய பழிச்சொல் நீங்க பராசரர் வழிபட்டமை
12.	கழுமலம்	-	மும்மலங்கள் விலகும் வண்ணம் உரோமச முனிவர் வழிபட்டமை[155]

இவ்வோவியங்களுக்கு மூலமாக உள்ள தேவாரச் சான்றுகளாக,

> "ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
> பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே"[156]

> "..... வானுளோர்
> அடுத்தடுத்துப் புகுந்தீண்டும் அந்தண் புகலியதே"[157]

"வெங்குரு விளங்கி உமைபங்கர்சர
ணங்கள்பணி வெங்குரு வதே"[158]

"துறையாருங் கடல்தோணி புரத்தீசன்"[159]

"கருமை பெற்ற கடல்கொள்ள மிதந்ததோர்
காலம் இதுவென்ன"[160]

".... பராயண வராகவுருவா
தராயனை விராயெரி பராய்மிகு"[161]

"மச்சமத நச்சிமத மச்சிறுமியைச்
செய்த வவச்சவிரதக்
கொச்சைமுர வச்சர்பணி யச்சுரர்கள்
நச்சுமிமை கொச்சை நகரே"[162]

"முழுதுடலில் எழுமயிர்கள் தழுவுமுனி
குழுவினொடு கெழுவு சிவனைத்"[163]

"தொழுதுலகில் இழுகுமலம் அழியும்வகை
கழுவுமுரை கழுமலநகர்"[164]

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடலடிகளைக் காட்டலாம்.

தஞ்சைப் பெரியகோயில் ஓவியங்கள்

சுந்தரர் தம் அவதார நோக்கம் நிறைவேறியவுடன் சிவபெருமான் கயிலாய மலையிலிருந்து வெள்ளை யானையை அனுப்பி அழைத்துவரப் பணித்தான். இச்செய்தியைச் சுந்தரர் தம் நிறைவுப் பதிகத்தில் குறிப்பிடுகிறார். மேலும், இப்பதிகத்தில் இறைவன் தம்மை இந்திரன், பிரமன், திருமால், முப்பத்து முக்கோடி தேவர்களையெல்லாம் அனுப்பி எதிர்கொண் டழைத்தான் என்ற செய்தியையும் குறிபிடுகிறார். அப்பாடல்,

"இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து

மந்திர மாமுனிவர் இவனார்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான் மலை உத்தமனே"[165]

என்பதாகும். இப்பாடலை ஓவியமாகத் தஞ்சைப் பெரிய கோயில் கருவறைக்கு மேலுள்ள விமானத்தின் உட்புறச் சுவரில் மாமன்னன் இராசராசன் வரைந்து உள்ளான். இவ்வோவியத்தில் சுந்தரருடன் சேரமான் பெருமாள் நாயனாரும் குதிரையில் கயிலாயம் செல்வதும் மிகக் கலைநயத்துடன் வரையப்பட்டு உள்ளது. இவ் ஓவியத்திற்குச் சுந்தரர் பாடலே அடிப்படையாகும். ஓர் ஓவிய உருவாக்கத்திற்குச் சுந்தரர் பாடல் வழிகோலி யுள்ளமை நோக்கத்தக்கது.

இவ்விரு ஓவியங்களுடன், தேவாரப் பாடல்கள் குறிப்பிடும் இராவணன் கயிலாய மலையை எடுத்த நிகழ்வும் ஓவியமாக்கப்பட்டுள்ளது.

தொகுப்புரை

- இறைவழிபாடு கலைகளோடு தொடர்புடையதாக உள்ளது. வழிபாட்டில் ஆர்வமாய் ஈடுபட இசைக்கலை, ஆடற்கலை முதலியன உதவின.
- மூவர் தேவாரத்தின் மூலம், வழிபாட்டில் தொடர்புடையதாக இசைக்கலை, ஆடற்கலை, மலர்தொடுத்தல் முதலிய கலைகள் உள்ளமையை உணரமுடிகின்றது.
- வழிபாட்டில் இசைக்கலை முக்கிய இடம்பெற்றுள்ளது. இறை வழிபாட்டில் ஒன்றி ஈடுபட இசைக்கலை பெரிதும் உதவுகின்றது.
- தேவாரப் பாடல்கள் பண்கள் பற்றியும், பாடலுக்குத் துணைபுரியும் இசைக்கருவிகள் பற்றியும் நிறைய உணர்த்துகின்றன.
- காந்தாரம், கொல்லி, சீகாமரம், தாரம், செவ்வழி, துத்தம், பஞ்சுரம், செந்துறை, பாலை, மருட்பண், காஞ்சி, மருதப் பண், நேரிசை முதலிய பண்களையும், தோற்கருவிகள்,

துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், உலோகக் கருவிகள் என வகைப்படுத்தப்படும் இசைக்கருவிகள் பற்றியும் உணர முடிகிறது.

- இறையடியார்கள் பாடுவதோடு ஆடியும் இறைவழிபாட்டில் ஈடுபட்டதையும், இறைவனையே ஆடல் வல்லவனாகக் கண்டமையும் தேவாரப் பாடல்கள் சுட்டுகின்றன.
- ஆடலுடன் பாடல் பிரிக்க முடியாத வண்ணம் உள்ளமையைத் தேவாரப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.
- இறைவனுக்கு மாலை சூட்டி வழிபடுவது அன்பர்கள் வழக்கம். வழிபாட்டில் பயன்படும் மாலைகளில் பல வகைகள் உள்ளன. பல வகைகளாகத் தொடுப்பது ஒரு கலையாகும்.
- தார், வடம், மாலை, பிணையல், இண்டை, துணையல், படலை, கண்ணி முதலிய பல்வேறு மாலை வகைகளைத் தேவாரம் மூலம் உணரமுடிகிறது.
- மூவரும் சுட்டும் இறைவடிவங்கள், புராணச் செய்திகள் பிற்கால்லத்தில் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் உருவாயின.

குறிப்புகள்

1. திருநாவுக்கரசர் தேவாரம், 6:73:6.
2. சேந்தன் திவாகரம், ஒலிபெயர்த்தொகுதி, ப.236.
3. தமிழ்ப்பேரகராதி, தொகுதி IV, ப.2448.
4. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:2:3.
5. மேலது, 1:39:5.
6. மேலது, 2:16:8.
7. திருநாவுக்கரசர் தேவாரம், 4:63:2.
8. சுந்தரர் தேவாரம், 7:86:3.
9. மேலது, 7:52:6.
10. ச. தண்டபாணி தேசிகர்,(கு.ஆ.), தேவாரம், தொகுதி 1, ப.13.
11. சு. மாணிக்கவாசக முதலியார் (கு.ஆ.), தேவாரம், தொகுதி 4, ப.270.
12. சி. அருணைவடிவேல் முதலியார் (கு.ஆ.), தேவாரம், தொகுதி 7, ப.705.
13. ஆபிரகாம் பண்டிதர், கருணாமிர்த சாகரம், ப.533.
14. விபுலானந்தர், யாழ்நூல், ப.12.
15. அறிவனார், பஞ்சமரபு, ப.223.
16. மீ.ப. சோமசுந்தரம், தமிழிசை வெள்ளிவிழா மலர், ப.14.
17. அ. இராகவன், இசையும் யாழும், ப.172.
18. தொல்காப்பியம், செய்யுளியல், நூ.173.
19. சுந்தரர் தேவாரம், 7:83:6.
20. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:11:4.
21. சுந்தரர் தேவாரம், 7:23:10.
22. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:36:1.
23. சுந்தரர் தேவாரம், 7:100:10.
24. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:30:6.
25. திருநாவுக்கரசர் தேவாரம், 4:49:6.
26. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:47:3.
27. மேலது, 3:374:3.

28. மேலது, 1:99:10.
29. மேலது, 3:358:3.
30. மேலது, 3:272:3.
31. மேலது, 3:362:4.
32. மேலது, 1:11:4.
33. மேலது, 2:121:11.
34. மேலது, 1:16:11.
35. சுந்தரர் தேவாரம், 7:73:11.
36. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:47:11.
37. மேலது, 1:46:7.
38. மேலது, 1:310:7.
39. மேலது, 2:43:5.
40. மேலது, 3:1:1.
41. திருநாவுக்கரசர் தேவாரம், 4:38:9.
42. சுந்தரர் தேவாரம், 7:22:7.
43. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, பக்.1036-1037.
44. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:11:4.
45. மேலது, 2:230:6.
46. சுந்தரர் தேவாரம், 7:628.
47. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:315:2.
48. மேலது, 2:203:4.
49. திருஞானசம்பந்தர் வரலாறு, திருஞானசம்பந்தர் தேவாரம், காசிமடப் பதிப்பு, ப.VII.
50. அறிவனார், பஞ்சமரபு, ப.329.
51. அடியார்க்கு நல்லார் (உரை), சிலப்பதிகாரம், அரங்கேற்றுக் காதை, ப.106.
52. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:12:7.
53. திருநாவுக்கரசர் தேவாரம், 5:754.
54. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:28:6.
55. மேலது, 2:148:3.

56. மேலது, 2:145:10.
57. இ. அங்கயற்கண்ணி, பஞ்சமரபில் இசைமரபு, ப.328.
58. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:174:2.
59. சுந்தரர் தேவாரம், 7:16:2.
60. அறிவனார், பஞ்சமரபு, ப.329.
61. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:76:5.
62. திருநாவுக்கரசர் தேவாரம், 4:786.
63. மேலது, 6:530.
64. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:334:5.
65. ஏ,என். பெருமாள், தமிழர் இசை, ப.144.
66. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:81:2.
67. அடியார்க்கு நல்லார் (உரை), சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை, ப.106.
68. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:357:1.
69. திருநாவுக்கரசர் தேவாரம், 4:4:33.
70. மேலது, 5:59:6.
71. ஆர். ஆளவந்தார், தமிழர் தோற்கருவிகள், ப.17.
72. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:330:3.
73. சுந்தரர் தேவாரம், 7:49:6.
74. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:65:10.
75. சுந்தரர் தேவாரம், 7:1:1.
76. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:94:6.
77. வீ.ப.கா. சுந்தரம் (உரை), பஞ்சமரபு, செ.99.
78. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:75:5.
79. சுந்தரர் தேவாரம்,7:36:9.
80. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:75:4.
81. திருநாவுக்கரசர் தேவாரம், 4:643.
82. மேலது, 6:96:11.
83. சுந்தரர் தேவாரம், 7:49:6.
84. திருநாவுக்கரசர் தேவாரம், 6:21:1.
85. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:9:6.

86. சுந்தரர் தேவாரம், 7:84:5.
87. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:361:2.
88. திருநாவுக்கரசர் தேவாரம், 4:111:8.
89. மேலது, 5:51:7.
90. சுந்தரர் தேவாரம், 7:42:9.
91. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:67:3.
92. மேலது, 1:37:5.
93. மேலது, 1:70:4.
94. மேலது, 2:204:4.
95. மேலது, 3:531:6.
96. திருநாவுக்கரசர் தேவாரம், 4:82:4.
97. மேலது, 6:10:2.
98. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:12:3.
99. மேலது, 3:74:8.
100. சுந்தரர் தேவாரம், 7:49:6.
101. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:68:4.
102. திருநாவுக்கரசர் தேவாரம், 6:95:5.
103. சுந்தரர் தேவாரம், 7:86:2.
104. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:59:2.
105. வீ.ப.கா. சுந்தரம் (பதி.), தமிழிசைக் கலைக்களஞ்சியம், தொகுதி 2, ப.204.
106. சுந்தரர் தேவாரம், 7:49:6.
107. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:59:4.
108. மேலது, 1:5:6.
109. திருநாவுக்கரசர் தேவாரம், 4:104:7.
110. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:6:1.
111. வேங்கடேசன், ஞானத்தமிழ், ப.41.
112. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:4:3.
113. மேலது, 1:55:1.
114. திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, பா.4.
115. திருநாவுக்கரசர் தேவாரம், 4:112:7.

116. திருஞானசம்பந்தர் தேவாரம், கோளறு பதிகம், பா.1.
117. திருநாவுக்கரசர் தேவாரம், 5:204:1.
118. சுந்தரர் தேவாரம், 7:33:5.
119. மேலது, 7:85:6.
120. மேலது, 7:46:4.
121. திருஞானசம்பந்தர் வரலாறு, திருஞானசம்பந்தர் தேவாரம், காசிமடம் வெளியீடு, ப.VII.
122. வீ.ப.கா. சுந்தரம், தமிழிசைக் கலைக்களஞ்சியம், தொகுதி 2, ப.1.
123. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:11:4.
124. திருநாவுக்கரசர் தேவாரம், 5:92:2.
125. திருஞானசம்பந்தர் வரலாறு, திருஞானசம்பந்தர் தேவாரம் காசிமட வெளியீடு, ப.VI.
126. மேலது
127. சுந்தரர் தேவாரம், 7:62:8.
128. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:61:3.
129. சுந்தரர் தேவாரம், 7:ஓணகாந்தன் தளி:5.
130. மேலது, 7:கருப்பறியலூர்:8.
131. மேலது, 7:பனையூர்:1.
132. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:நறையூர்:5.
133. திருநாவுக்கரசர் தேவாரம், 4:31:2.
134. மேலது, 4:36:3.
135. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:40:5.
136. மேலது, 1:ஐயாறு:1.
137. மேலது, 1:நெடுங்களம்:6.
138. மேலது, 1:65:3.
139. சுந்தரர் தேவாரம், 7:வெஞ்சமாக்கூடல்:4.
140. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் வழிபாடு, ப.485.
141. திருநாவுக்கரசர் தேவாரம், 6:4:5.
142. மேலது, 6:44:5.
143. மேலது, 4:2:6.

144. மேலது, 4:2:8.
145. மேலது, 4:68:8.
146. மேலது, 5:85:2.
147. மேலது, 4:8:3.
148. மேலது, 4:23:1.
149. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப.239.
150. மோகன்ராஜ் ஸ்தபதி, சுவாமிமலை (நேர்காணல்). நாள்:16.03.2005.
151. மேலது, நாள்.19.06.2005.
152. திருநாவுக்கரசர் தேவாரம், 6:99:1.
153. மேலது, 6:99:2.
154. ஜி. கலியாணம் பிள்ளை, திருப்புகலூர் தலவரலாறு, ப.17.
155. சிவ. திருச்சிற்றம்பலம், சிவபெருமான் வழிபாடு, ப.179.
156. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:14:1.
157. மேலது, 2:22:10.
158. மேலது, 3:67:4.
159. மேலது, 1:60:10.
160. மேலது, 1:14:5.
161. மேலது, 3:67:5.
162. மேலது, 3:67:11.
163. மேலது, 3:67:12.
164. மேலது, 3:67:12.
165. சுந்தரர் தேவாரம், 7:நொடித்தான்மலை: 9.

வழிபாடும் சமூகமும்

சமூகத்தில் வாழும் மக்களின் நலன்களுக்காகவே திருக்கோயில்களும், வழிபாட்டு முறைகளும் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டன. மனிதனைப் பண்படுத்தவும், மனிதநேயச் சிந்தனைகளை வளர்க்கவும், பொதுநல உணர்வை நிலைபெறச் செய்யவும் வழிபாடும், திருக்கோயில்களும் பயன்பட்டன. உண்மையான வழிபாட்டு உணர்வின் முதிர்ச்சி சமூகத்திற்கு உதவுவதேயாகும். தேவார ஆசிரியர்கள் காலத்தில் திருக்கோயில் வழிபாடு, சமூகத்தின் நன்மைக்கு எங்ஙனம் பயன்பட்டது என்பதைப் புலப்படுத்துவது இவ்வியலின் நோக்கமாகும்.

பணி செய்தல்

திருக்கோயில் செல்லவேண்டும்; இறைவனை வழிபட்டு முத்தி பெறவேண்டும் என்பதோடு தம் ஆன்மீக உணர்வைச் சுருக்கிக் கொள்ளாமல், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற சிந்தனையைத் தேவார மூவரும் விரிவாக்கிக் கொண்டனர். மக்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்று நம்பினர். திருநாவுக்கரசர்,

"என்க டன்ப ணிசெய்து கிடப்பதே"[1]

என்று பணிசெய்வதைக் கடமையெனவே பாடியுள்ளார். திருமூலரும் அடியார்களுக்குச் செய்யும் தொண்டு நேரடியாக இறைவனையடையும் என்ற கருத்தில் பாடியுள்ளார்.

"படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே"[2]

என்பது திருமூலர் திருமந்திரப் பாடலாகும்.

திருநாவுக்கரசர், வழிபாட்டோடு நிற்காமல் திருப்பணிகளும் செய்தார் என்பதைப் பெரியபுராணம்,

"மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடியும்
மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும்
செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும்
தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்"[3]

".... தைத்தொண் டாகும் படிமையினால்
வாசி இல்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்"[4]

"........ பாதம் போற்றிப் பணிசெயு நாள்"[5]

என்று பாடுகின்றது. மேலும், திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் மடம் ஒன்றை அமைத்துச் சிலகாலம் பொதுத்தொண்டு புரிந்த செய்தியை,

"தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரா னார்அருள் பெற்றுத்
திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஆங்கொன்று செய்தார்"[6]

என்ற பாடலடி மூலம் பெரியபுராணம் விளக்குகின்றது.

இத்திருத்தொண்டைத் தாம் முத்திபெறும் நிலையிலும் (81 வயதிலும்) தொடர்ந்து விடாது செய்தார் திருநாவுக்கரசர் என்பது ஈண்டு குறிக்கத்தக்கது.[7]

சிவஞான சுவாமிகள் திருநாவுக்கரசரைப் போற்றுகையில்,

"இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவா ரத்திண்
படையறாத் திருக்கரமும்..."[8]

என்று உழவாரமாம் தொண்டைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார்.

திருநாவுக்கரசர், திருக்கோயில் செல்லும் வழிகளைத் தூய்மை செய்து புல், புதர், முட்களை நீக்கி மக்கள் எளிதில் வழிபாட்டைச் செய்வதற்கு ஏதுவாகத் துப்புரவுப் பணிகளை மேற்கொண்ட காரணத்தாலே சேக்கிழார் திருநாவுக்கரசர் வரலாற்றை,

"திருநாவுக்கரசு வளர்திருத் தொண்டின் நெறிவாழ"[9]

என்று தொடங்கியுள்ளார்.

பஞ்சம் நீக்குதல்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழி மிழலையில் தங்கி யிருந்த காலத்தில் மழையின்மையால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. இதனைக் கண்ட திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் மிகவும் துயருற்று இறைவனை வேண்டிப் பாடினர். அன்றிரவு இறைவன் கனவில் தோன்றிப் பஞ்சம் நீங்கும் காலம் வரை ஆலயத்தின் கிழக்குப் பலிபீடத்திலும், மேற்குப் பலிபீடத்திலும் இருவருக்கும் பொற்காசு அளிக்கின்றோம் எனக் கூறி மறைந்தார். மறுநாள் விழித்தெழுந்த இருவரும் தத்தமக்கு இறைவன் கூறிய இடத்தில் காசு இருப்பது கண்டு மகிழ்ந்தனர். இருவரும் தத்தம் திருமடங்களுக்குத் திரும்பிப் பஞ்சம் நீங்கும் காலம் வரை அன்னதானம் செய்தனர்.[10] தம் முத்திநெறிக்கு மட்டும் வழிபாடு என்று நினையாமல், தம்மைச் சுற்றியுள்ள மானிடரின் இடர்தீர்த்து நன்மை செய்வதற்கும் வழிபாடு முக்கியம் என்று நினைத்த உணர்வின் வெளிப்பாடு இந்நிகழ்ச்சியாகும். சுந்தரர் வாழ்க்கையிலும் இதுபோன்று பஞ்சம் தீர்த்த நிகழ்ச்சியொன்று இடம்பெறுகிறது.

சுந்தரர் இறைவனை வேண்டி, குண்டையூர் கிழார் மூலம் தாம் பெற்ற நெல் குவியலைத் திருவாரூரில் மக்கள் வாழும் தெருக்களில் மலை மலையாக வந்து குவியுமாறு செய்ததோடு, மக்கள் தத்தம் வீடுகளின் முன் உள்ள நெற் குவியலைத் தாம் உரிமையோடு அள்ளிச் செல்லலாமெனவும் அறிவித்தார்.[11] இதன் மூலம் தமக்குக் கிடைத்த பொருளைத் தாம் மட்டும்

அனுபவிக்காது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பொதுநலச் சிந்தனையுடன் சுந்தரர் செயல் பட்டமை தெளிவாகிறது. இந்நிகழ்ச்சிக்கு அகச்சான்றாக,

"நீள நினைந்தடியேன் உமை
 நித்தலும் கைதொழு வேன்
வாளன கண்மடவாள் அவள்
 வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமாள் குண்டை
 யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
 அட்டித் தரப்பணியே"[12]

என்ற சுந்தரர் தேவாரம் விளங்குகிறது.

விடந்தீர்த்தல்

திருஞானசம்பந்தர் திருமருகல் எனும் தலத்திற்கு வந்து சிலநாள் தங்கியிருந்தார். அந்நாளில் வணிகன் ஒருவன், தான் மணந்து கொள் வதற்காக, கன்னி ஒருத்தியை அழைத்துக் கொண்டு திருமருகல் வழியாகச் சென்றான். இருள் சூழ்ந்த காரணத்தால் திருமருகலில் ஒரு மடத்தில் இருவரும் தங்கினர். அப்போது அவ்வணிகனை அரவம் ஒன்று தீண்ட, அவன் இறந்துபட்டான். அப்பெண் அலறித் துடித்து அழுதாள். திருஞானசம்பந்தர் திருமருகல் திருக்கோயிலுக்கு வழிபாட்டிற்குச் செல்லும்போது, அவ்வணிகப் பெண்ணின் அழுகுரல் கேட்டு அவ்விடத்திற்கு வந்தார். செய்தியறிந்து அவ்வணிகனைக் கோயிலின் முன் கிடத்தி, 'சடையாயெனுமால்' எனத் தொடங்கும் பதிகம் பாடினார். அவ்வணிகன் விடம் நீங்கி உயிர்த்தெழுந்தான். அக்கணமே அவ்விருவருக்கும் திருஞானசம்பந்தர் இறைவன் திருமுன்பு மணம் செய்து வைத்தார்.[13]

தனிமனிதத் துயர் நீக்குதல்

சுந்தரர் தலயாத்திரையாக, அவிநாசி எனும் தலத்தை அடைந்தபோது ஒரு இல்லத்தில் மங்கல ஒலியும், மற்றொரு

இல்லத்தில் அழுகையொலியும் கேட்டார். அருகில் இருந்தவர்களை வினவினார், அவர்கள், மங்கல ஒலி கேட்ட இல்லத்தின் பிள்ளையும், அழுகையொலி கேட்ட இல்லத்தின் பிள்ளையும் ஒன்றாகப் பிறந்து வளர்ந்தவர்கள் என்றும், ஒருநாள் மடு ஒன்றில் இருவரும் குளிக்கச் சென்றபோது ஒரு பிள்ளையை முதலை விழுங்கிவிட்டது என்றும், இன்று உயிருடன் இருக்கும் ஒரு பிள்ளையின் உபநயனச் சடங்கு நடைபெறுவதால் அவ்வில்லத்தில் மங்கல ஒலியும், தம்பிள்ளை இருந்தால் அவனுக்கும் இன்று உபநயனம் நடந்திருக்குமே என்ற துக்கத்தில் இறந்த பிள்ளை இல்லத்தில் அழுகை ஒலியும் கேட்கிறது என்றும் கூறினர். இதனைக் கேட்டறிந்த சுந்தரர், இறந்த பிள்ளையின் இல்லத்திற்குச் சென்று அவர்களை அழைத்துக் கொண்டு, முதலையுண்ட மடுவிற்குச் சென்றார். "எற்றான் மறக்கேன்" எனத் தொடங்கும் பதிகம் பாடிப் பரமனை வேண்டினார்.

"உரைப்பார் உரைஉகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"[4]

என்ற நான்காவது திருப்பாடலைப் பாடி முடியும் முன்பே, இயமன் நிலத்தில் இருந்து வளர்ந்தது போலக் கழிந்த வருடங்களில் வளர்ச்சியும் உடையதாகத் தோற்றுவித்து, முதலை வாயில் வரச்செய்தான், பெற்றோர் மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சி பெரியபுராணத்தில் வெள்ளானைச் சருக்கத்தில் இடம் பெறுகிறது.

"உரைப்பார் உரைஎன் றெடுத்ததிருப்
 பாட்டு முடியா முன்னுயர்ந்த
வரைப்பான் மையில்நீள் தடம்புயத்து
 மறலி மைந்தன் உயிர்கொணர்ந்து,
திரைப்பாய் புனலின் முதலையிற்
 நுடலிற் சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப
 முதலை வாயில் தருவித்தான்"[5]

என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

வழிபாட்டை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல் சமூகத் துயர் தீர்த்தலும் முக்கியம் என்று சம்பந்தரும் சுந்தரரும் தாமாகவே சென்று மக்களுக்கு நன்மை செய்தது ஈண்டு நோக்கத் தக்கது.

முயலகன் நோய் தீர்த்தல்

திருஞானசம்பந்தர் தலயாத்திரையில் பாச்சிலாச்சிராமம் எனும் தலத்தை அடைந்தார். அப்போது அந்நகரில் வாழும் குறுநில மன்னனாக இருந்தவன் கொல்லி மழவன் என்பான். அம்மன்னனின் மகளுக்கு 'முயலகன்' என்னும் நோய் ஏற்பட்டுப் பெரிதும் வருத்தமுற்றிருந்தாள். திருஞானசம்பந்தர் இதனை அறிந்து, "துணிவளர் திங்கள்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி அந்நோயை நீக்கினார் என்பது வரலாறு. திருஞான சம்பந்தரின்,

"................................... பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோஇவர் மாண்பே"[16]

என்ற பாடலடி இதற்குச் சான்றாகும். பெரியபுராணத்தில் இந்நிகழ்ச்சி சுட்டப் பெற்றுள்ளது.

பனிநோய் தீர்த்தல்

திருஞானசம்பந்தர் தலயாத்திரையாக பைஞ்ஞீலி, ஈங்கோய்மலை முதலான தலங்களை வழிபட்டு, கொங்கு நாட்டிலுள்ள கொடிமாடச் செங்குன்றூரைச் சென்றடைந்தார். அங்கு ஒரு திருமடத்தில் தம் அடியார்களுடன் தங்கினார். அக்காலம் பனிக்காலம் ஆனதால் அந்நிலத்தின் இயல்புப் படி பனிநோய் என்னும் குளிர் காய்ச்சல் அடியார்களை வருத்தியது. அதனை அறிந்த ஞானசம்பந்தர் அந்நோய் தீருமாறு 'திருநீலகண்டப் பதிகம்' பாடினார். அக்கணமே கொங்கு நாடெங்கும் அந்நோய் வாராது நீங்கியது. அப்பாடல்,

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும:.தறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்"[17]

என்பதாகும். பெரியபுராணமும் இந்நிகழ்ச்சியைப் பதிவுசெய்து உள்ளது.[18]

வழிபாட்டிற்குத் துணைசெய்தமை

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இணைந்து சில தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டனர். அவ்வாறு அவர்கள் திருமறைக்காடு என்னும் தலத்திற்கு வந்தார்கள். அப்போது வேதங்களால் பூசிக்கப்பெற்றுத் திருக்காப்பிடப் பெற்ற அத்திருக்கோயில் கதவுகள் திறக்கப்படாது இருத்தலையும், மக்கள் வேறோர் பக்கத்தில் வாயில் ஒன்றை அமைத்து அதன் வழி சென்று வழிபட்டு வருவதையும் கண்டனர். திருஞானசம்பந்தர், மக்கள் நேர்வழியே சென்று இறைவனை வழிபட வேண்டும் எனக் கருதி, திருநாவுக்கரசரைப் பணிந்து, மறைக்கதவம் திறக்கப் பாடுமாறு வேண்டினார். திருநாவுக்கரசர், "பண்ணி னேர்மொழி" என்று தொடங்கும் பதிகம் பாடினார்.[19] இறைவன் அருளால் கதவு திறந்தது. மக்கள் மகிழ்ச்சியுடன் இறைவனை அவ்வாயிலின் வழியே சென்று வழிபட்டனர். திருஞான சம்பந்தர் "சதுரம் மறைதான்" எனத் தொடங்கும் பதிகம் பாடி மீண்டும் அக்கதவுகள் முடவும் திறக்கவும் வழிசெய்தார்.[20] பொது மக்கள் இறை வழிபாடு குறைவின்றிச் செய்ய வழிசெய்தனர்.

பழையாறை வடதளி நிகழ்ச்சி

தேவார ஆசிரியர்கள் வழிபாட்டிற்குத் துணைசெய்த நிகழ்ச்சிகளில் மற்றொன்று பழையாறை வடதளியில் நிகழ்ந்ததாகும். திருநாவுக்கரசர் பழையாறை வடதளி எனும் தலத்திற்கு வந்தபோது சமணர்கள் அவ்வூர் சிவன் கோயிலை மூடிக் காப்பிட்டிருந்தனர். இதனால் மக்கள் வழிபாடு செய்ய முடியாத நிலை இருந்தது. இதனைக் கண்ணுற்ற திருநாவுக்கரசர்,

அத்திருக்கோயில் திறக்கப்பட்டு மக்கள் வழிபாடு செய்யும் வரை உண்ணாவிரம் மேற்கொண்டனர். திருநாவுக்கரசர் உண்ணா விரதம் இருப்பதைக் கேள்வியுற்ற சோழ மன்னன் திருநாவுக்கரசரின் கருத்தையேற்றுக் கோயிலைத் திறக்கச் செய்து பொதுமக்கள் வழிபாடுமாறு செய்தான். இவ்வரலாற்று நிகழ்ச்சியிலும் சமூக அக்கறையே மேலோங்கி உள்ளமை புலப்படுகிறது. இதனைப் பெரியபுராணம்,

"வண்ணங் கண்டு நான்உம்மை வணங்கி
யன்றிப் போகேன் என்று
எண்ண முடிக்கும் வாகீசர்தாம் இருந்தார்
அமுது செய்யாதே"[21]

"மேன்மை அரசன் ஈசர்க்கு விமான மாக்கி விளக்கியபின்
ஆன வழிபாட் டர்ச்சனைக்கு நிபந்தம் எல்லாம் அமைத்திறைஞ்ச
ஞான அரசும் புக்கிறைஞ்சி நாதர் முன்பு போற்றுவார்"[22]

என்ற பாடல்களில் குறிப்பிடுகிறது.

முத்தி பெறுவதிலும் சமூக அக்கறை

திருஞானசம்பந்தர் பதினாறு வயது அடைந்ததும் அவருடைய தந்தையார் சிவபாத இருதயர் அவருக்கு மணம் செய்ய எண்ணினார். திருஞானசம்பந்தரும் அதற்கிசைந்தார். திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்) எனும் தலத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மிகப்பெரிய சிவஜோதி ஒன்று தோன்றியது. அச்சிவஜோதி திருஞான சம்பந்தரை வீடுபேறு அடையச் செய்யத் தோன்றியதாகும். ஆனால் திருஞான சம்பந்தர் தாம் மட்டும் முக்தியடைய விரும்பாமல், தம் திருமணத்திற்கு வந்த அனைவரையும் அழைத்துக் கொண்டு ஜோதியுள் புகுந்து அனைவருக்கும் முக்தி கிடைக்கச் செய்தார்.[23] இச்செயலிலும் சமூக அக்கறையும் பொது நலமும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

மனிதநேயச் சிந்தனைகள்

தேவார ஆசிரியர்கள் வழிபாட்டோடு மனிதநேயச் சிந்தனைகளைச் சமூகத்தில் வளர்ப்பதிலும் மிகுந்த அக்கறை செலுத்தினர். இனம், மொழி, பண்பாடு, நாடு என்று பலவாறு வேறுபட்டுள்ள மனிதர்களை ஒன்று படுத்துவதில் பக்தியையும் திருக்கோயில் வழிபாட்டையும் பயன்படுத்தினர்; வெற்றி கண்டனர். மனிதர்களுக்குள் வேறுபாடுகள் இல்லை எனவும்; ஆன்மாவிற்கு ஆண், பெண், அஃறிணை என்ற தன்மைகள் இல்லை என்றும், பக்தியும், இறைவழிபாடும் அனைவர்க்கும்; அனைத்திற்கும் பொதுவானது என்றும் நாடெங்கும் வலியுறுத்தினர். திருமூலர் குறிப்பிடும்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"[24]

என்ற கருத்து ஈண்டு குறிக்கத்தக்கது. இக்கருத்தின் அடிப்படையிலே தேவார ஆசிரியர்கள் தலயாத்திரை மேற்கொண்டு பலதேய மக்களையும் சந்தித்து, மனித நேயத்தை வளர்த்தனர். மனிதன் இறைவனுக்குச் செய்யும் தொண்டை விட, மனிதன் மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்கும் செய்யும் தொண்டையே பெரிதும் போற்றி ஆதரித்தனர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் எனும் பாணர்குலத்து அடியாரைக் குல வேறுபாடு கருதாது தாம் செல்லும் தலங்கள் அனைத்திற்கும் உடன் அழைத்துச்சென்றவர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தர் பாடல்களுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணரே பண்ணமைத்து யாழில் இசைத்தார்.[25]

தண்டித்தலிலும் மனிதநேயம்

திருஞானசம்பந்தர்,பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் அழைப்பை ஏற்று மதுரை வந்து ஒரு திருமடத்தில் தங்கினார். இதனை அறிந்த சமணர்கள், அவர் தங்கியிருந்த மடத்திற்கு இரவு தீ வைத்தனர். இதனை அறிந்த திருஞானசம்பந்தர் இச்செயலுக்குக் காரணம் அரசனே என உணர்ந்து அத்தீயை வெப்பு நோயாகப் பாண்டிய மன்னனைப் பற்றுமாறு செய்தார்.[26]

இந்நிகழ்ச்சியிலும் பாண்டிய மன்னனை அத்தீ அழிக்கக் கூடாது என்ற மனிதநேயச் சிந்தனையுடனும், தவறுக்குத் தண்டனை என்ற நிலையில் வருத்தமுறச் செய்து, அம்மன்னன் திருந்தப் பயன்பட வேண்டும் என்ற நிலையிலும்,

"செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே"[27]

என்று பாடினார். திருஞானசம்பந்தர் இப்பாடலில் 'பையவே' என்று திருஞான சம்பந்தர் குறிப்பிடும் தன்மையை நோக்கும் போது தண்டிப்பதிலும் ஒரு மென்மையைக் கடைபிடித்து உள்ளமை வெளிப்படுகிறது. வழிபாடு, மனித நேயத்திற்குத் துணைபுரிய வேண்டும் என்ற அடிப்படையைச் செயல்கள் மூலம் அருளாளர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

மாசுக்கட்டுப்பாடு குறித்த சிந்தனைகள்

மனிதன் நோயற்ற வாழ்வில் வாழ்வதற்கு, நிலம், நீர், காற்று என்ற மூன்றும் தூய்மையாக இருத்தல் மிக அவசியம். இம்மூன்றையும் மாசுபடாமல் பாதுகாத்தல் என்பது ஒவ்வொருவரின் கடமையாகும். இதனை நன்குணர்ந்த தேவார ஆசிரியர்கள் மாசுக்கட்டுப்பாடு குறித்தும் திருக்கோயில் வழிபாட்டில் குறிப்பாகச் சுட்டியுள்ளனர்.

அலகிடுதலும், மெழுகிடுதலும்

திருக்கோயில் என்பது பலரும் வந்துசெல்லும் இடம். எனவே, எளிதில் தூய்மைக்கேடு அடையும் வாய்ப்பு அதிகம் உண்டு. இதனைக் கருத்தில் கொண்ட தேவார மூவர், திருக்கோயில் வழிபாட்டில் அலகிடுதலையும், மெழுகிடுதலையும் முதற்கண் வைத்துப் பாடியுள்ளனர். அலகிடுதலினாலும், மெழுகிடுதலினாலும் இறைவனுக்கு எவ்விதப் பயனும் இல்லை. இச் செயல்களுக்குள் மக்கள் நலனே பொதிந்துள்ளது எனலாம். இவை குறித்து,

"...
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டு"[28]

"விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்"[29]

என வரும் பாடலடிகள் விதந்துரைக்கின்றன.

அக்காலத்திலிருந்தே பசுவின் சாணம் கொண்டு மெழுகும் வழக்கம் இருந்துள்ளமை,

"ஆப்பி நீரோ டலகுகைக் கொண்டு"[30]

என்ற பாடலடியின் மூலம் தெளிவாகிறது. இன்றைய விஞ்ஞானிகள் பசுவின் சாணம் சிறந்த 'கிருமிநாசினி' என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே, இதனை வலியுறுத்துவதன் மூலம் நிலம் மாசுபடுவதைத் தடுக்க முற்பட்டுள்ள தேவார ஆசிரியர்களின் முயற்சி வெளிப்படுகிறது.

காற்று மாசுபாட்டைக் குறைத்தல்

மனிதனுக்குத் தூய்மையான உயிர்க்காற்று அவசியம். இதனைத் தருவன தாவரங்கள் தாம். இதனையுணர்ந்த தேவார மூவர் மலர் வழிபாட்டை மிகவும் விதந்தோதுகின்றனர். மலர் வழிபாட்டிற்கு அடிப்படை நந்தவனம் அமைத்தலாகும். நந்தவனத்தில் கோட்டுப்பூ, நிலப்பூ, நீரப்பூ எனப் பல நிலைகளில் தாவரங்கள் வளர்க்கப்பட்டால் காற்று மாசுபடுதலைப் பெருமளவு தவிர்க்க முடியும் என்ற சிந்தனை அவர்களுக்கு இருந்தது. எனவே, தூய்மை யான உயிர்க்காற்றைப் பெறத் தாவரங்கள் துணைசெய்யும் என்பதை *'மலர் வழிபாடு'* என்பதன் மூலம் குறிப்பில் உணர்த்தியுள்ளனர்.

நீர் நிலைகளைப் போற்றல்

தேவார ஆசிரியர்கள் தலங்கள் தோறும் மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான நீரையும் அதற்கு அடிப்படையான நீரநிலைகளையும் போற்றிப் பாடியுள்ளனர். இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்யப் பயன்படக் கூடிய

பொருள்களில் முதன்மையானது நீராகும். மேலும் 'நீர்' மட்டுமே முழுமையான திருமஞ்சனப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு உள்ளமை பல பாடல்களில் சுட்டப்பெற்றுள்ளது. திருமஞ்சன நீர் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்று கூறுவதும், நீரால் திருமஞ்சனமாட்டுதல் உயர்வானது என்று கூறுவதும் நீர் நிலைகளைப் பேணிப் பாதுகாப்பது அவசியம் என்ற பொது நலச் சிந்தனையைக் குறிப்பில் உணர்த்துகிறது. நீர் நிலைகளின் தூய்மை பாதுகாக்கப்பட்டால் நீரால் பரவும் பெருமளவு நோய்களைத் தடுக்க முடியும் என்பதும் பொதிந்துள்ளது.

திருவிழாக்களின் நோக்கம்

திருவிழாக்களைத் தேவாரம் பாடிய ஆசிரியர்கள் மிகவும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். சான்றுகளாக, தேர்த்திருவிழா, ஐப்பசி ஓணம், கார்த்திகை விளக்கீடு, மார்கழி திருவாதிரை, தைப்பூசம், மாசிக்கடலாட்டு, பங்குனி உத்திரம், அட்டமிநாள், பொன்னூசல், அன்னம்பாலிப்பு, பெருஞ்சாந்தி முதலியனவற்றைக் குறிப்பாகச் சுட்டிப் பாடியுள்ளனர். திருவிழாக்கள் இறைவன் பெயரல் எடுக்கப்பட்டாலும் அவ்விழாக்கள் மக்களை ஒன்று படுத்தும் நோக்கத்திலேயே அமைந்தது ஆகும். ஏனெனில், இறைவன் வேண்டுதல் வேண்டாமை இலானாக உள்ளான். எனவே, இறைவனுக்குத் திருவிழாக்கள் எவ்விதப் பயனும் நல்கவில்லை. அவை மக்களுக்காக, மக்கள் வேறுபாடின்றி ஒன்றுபட்டுக் கூடுதற்காக ஏற்படுத்தப்பட்டவை. இதனைக் குறிப்பாக உணர்த்தவே தேவார மூவர் திருவிழாக்களைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றனர். மேலும், திருவிழாக்களினால் பல தொழில் புரிவோரும் பயன்பெறுகின்றனர். சான்றாக, பூ மாலை தொடுப்போர், மங்கல வாத்தியங்கள் இசைப்போர், ஆடுவோர், பாடுவோர், அலங்காரம் செய்வோர் முதலிய அனைவரும் பயன்பெறுதலைக் காட்டலாம்.

எனவே, தேவார மூவர் திருவிழாக்களைப் பாடுவதிலும் சமூக அக்கறையும், பொதுநலனுமே மேலோங்கி உள்ளன. தனி

வழிபாட்டை விடவும் கூட்டு வழிபாடே மனித மனத்தைப் பண்படுத்தும் என்ற நோக்கிலே கூட்டு வழிபாட்டில் ஒன்றாகிய திருவிழா கொண்டாடுதலை விதந்தோதினர்.

"பாரார் புகழால் பத்தர் சித்தர்
பாடி ஆடவே
தேரார் வீதி முழவார் விழவின்
ஒலியும் திசை செல்ல"[31]

"கொந்து அணை யுங்குழ லார்விழவில்
கூட்டம் இடையிடை சேரும் வீதி"[32]

என்ற பாடலடிகள் மக்கள் கூட்டம் கூட்டமாக ஒருங்கிணைவதற்கு விழாக்கள் பயன்பட்டதை உணர்த்தும்.

சுயமரியாதையை வளர்த்தல்

மனிதன் தன்னை முழுமையாக நம்பினால் மட்டுமே அவனுடைய வாழ்வில் ஒரு பிடிப்பு இருக்கும். தாழ்வு மனப்பான்மை வாழ்க்கையில் வெறுமையை ஏற்படுத்தி மனிதனை நிலைகுலையச் செய்துவிடும். இத்தாழ்வு மனப்பான்மையை அகற்றவும், மனிதப் பிறவியின் பெருமையை உணர்த்தும் வகையிலும் தேவாரம் பாடிய கவிஞர்கள் பல இடங்களில் கருத்துக்களைச் சுட்டியுள்ளனர்.

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்"[33]

என்ற பாடிலடியைக் காட்டலாம். மேலும் தன்னம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக,

"மலையே வந்து விழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்"[34]

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை"[35]

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே

ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே"[36]

என்றெல்லாம் பாடி மனிதனுக்கு வாழ்வில் ஊக்கமளித்தனர்.

சமூக வாழ்வு சிறக்க அறிவுரைகள்

தேவார ஆசிரியர்கள் மக்கள் தம் வாழ்வில் சிறந்து விளங்கவும், வீடுபேறு அடையவும் பல அறிவுரைகளைக் கூறியுள்ளனர். அவற்றுள் வஞ்சம் இல்லாமை, கொலை, களவு இல்லாமை, வாய்மை முதலியனவற்றைச் சிறப்பாகக் கூறலாம்.

வஞ்சம் கூடாது

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் வஞ்சம் எனப்படும். இத்தீய குணம் இல்லாத மனத்தையே இறைவன் விரும்புவான் எனக் கூறி மனிதனை ஆற்றப்படுத்தியுள்ளனர். சான்றாக,

"வஞ்சம் கொண்டார் மனம் சேரகில்லான்"[37]

"வஞ்சம் மனத்து இறையும் நெஞ்சணு காதவன்"[38]

"கள்ள நெஞ்சே வஞ்சகக் கருத்தை விட்டு அருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்து உளன்"[39]

என வருவனவற்றைச் சுட்டலாம்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதும், நம்பிக்கைத் துரோகம் செய்வதுமாகிய வஞ்சச் செயல்களை மனதில் எண்ணுதல் கூடாது என்பதை இப்பாடலடிகள் பெரிதும் வலியுறுத்துகின்றன. இதில் இறைவனை உட்படுத்தினால்தான் மக்கள் நல்வழிப்படுவார்கள் என்ற கருத்தில் இப்பாடலடிகள் அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

வாய்மை

வள்ளுவர், ஒருவன் வாய்மையைக் கடைபிடித்தால் வேறு அறங்கள் செய்ய வேண்டியதில்லை என்கிறாரா. இக்கருத்தையும்

தேவார ஆசிரியர்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர்.

"பொய்யாத வாய்மையால் பொடிபூசிப் போற்றிசைத்து"[40]

என்பது சுந்தரர் பாடல் ஆகும்.

ஈதல்

சங்க காலந் தொட்டே ஈதலறம் பெரிதும் போற்றப் படுகிறது. "ஈதல் இசைபட வாழ்தல்" என்றார் திருவள்ளுவர். சங்கப்புலவர் நக்கீரரும் "செல்வத்துப் பயனே ஈதல்"[41] என்று வலியுறுத்தியுள்ளார். பக்தி இயக்கப் பாவலர்களாகிய தேவார மூவர் ஈதலறத்தை நேர்மறையாகவும், செய்யாவிடில் ஏற்படும் துன்பத்தை எதிர்மறையாகவும் கூறி வலியுறுத்தியுள்ளனர். சான்றுகளாக,

"இரப்பவர்க்கு ஈய வைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்"[42]

"தாழாது அறம் செய்ம்மின்"[43]

"அறம் புரிந்து நினைப்பது ஆண்மை"[44]

என வருவனவற்றைக் கூறலாம். இறைவன் அறம் செய்பவர் களுக்குப் பொருளை வாரி வழங்குவான் என்பதும், கள்ளத்தால் பொருளைப் பதுக்கினால் நரகமே அவர்கட்கு மிஞ்சும் என்பதும் இதன் மூலம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும், ஊக்கத்தோடு அறம் செய்ய வேண்டும் என்பதையும் இது பற்றி நிற்கிறது.

கொலை, களவு இல்லாமை

பஞ்சமா பாதகங்களில் இரண்டு கொலையும், களவும் ஆகும். இவ்விரண்டையும் நீக்கினால்தான் இறையருள் கிட்டும் எனக் குறிப்பிட்டு மக்களை நல்வழிப்படுத்த முயன்றுள்ளனர்.

"குற்றொருவரை கூறை கொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம்

செற்றொருவரைச் செய்த தீமைகள்
இம்மையே வரும் திண்ணமே"[45]
"உள்ளத்தின் உள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப்போக்கி"[46]

எனவரும் பாடலடிகளைச் சுட்டலாம்.

இதன்மூலம் கொலை, களவு முதலிய பாவங்களுக்கான தண்டனை இப்பிறவியிலேயே கிடைக்கும் என்று அச்சுறுத்தி அறிவுறுத்தியுள்ளனர்.

"பிறர்க் கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"[47]

என்ற குறட்பா ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

சாதி ஒழிப்பு

தீண்டாமை எனும் கொடுஞ்செயலை அன்றே தேவார மூவரும் வன்மையாக எதிர்த்துள்ளனர். சாதி ஒழிப்பு குறித்த சிந்தனைகளும், 'ஒன்றே குலம்' என்ற கொள்கை குறித்த பாடலடிகளும் மூவர் தேவாரத்தில் இடம்பெறுகின்றன. சான்றுகளாக,

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்கு லமுங்கொண் டென்செய்வீர்"[48]

"சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே"[49]

என்ற பாடல்களைக் காட்டலாம். மேலும் இறைவனை வழிபடு வதற்கு அறிவு கூட அவசியமானது அல்ல; அன்புதான் அவசியம் என்றும் வலியுறுத்திப் பாடியுள்ளனர்.

"ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி அவரவர் உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே"[50]

என்ற பாடல் இதனைத் தெளிவுபடுத்துகிறது.

சமூக வாழ்விற்கு வழிபாட்டின் தேவை

மக்கள் அமைதியாக வாழ்வதற்கு வழிபாடு மிகவும் அவசியமானதாகும். அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனதை ஒருமுகப்படுத்தவும், நல்வழிக்கண் அதனை மடைமாற்றம் செய்யவும் வழிபாடு துணை செய்கிறது. பரபரப்பான சூழ்நிலையில் இயந்திர கதியில் அலைந்து கொண்டிருக்கும் மனித வாழ்வை நிலைப்படுத்த வழிபாடு எவ்வெவ்வாறெல்லாம் உதவி செய்கிறது என்பதைத் தேவார ஆசிரியர்கள் குறிப்பில் உணர்த்தியுள்ளனர்.

அவ்வகையில் திருக்கோயிலைத் தூய்மை செய்தல், விளக்கிடுதல், அலகிடுதல், மெழுகிடுதல், பூமாலைகள் புனைந்தேத்தல், புகழ்ந்து பாடுதல், கூத்தாடுதல் முதலிய வழிபாட்டுச் செயற்பாடுகள் அமைதியான வாழ்விற்கு வழி செய்வன என்னும் கருத்தில்,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடி"[51]

என்ற பாடலைப் பாடியுள்ளார் திருநாவுக்கரசர்.

தொகுப்புரை

- மனிதனைப் பண்படுத்தவும், மனித நேயச் சிந்தனைகளை வளர்க்கவும், பொதுநல உணர்வை நிலைபெறச் செய்யவும் வழிபாடும், திருக்கோயில்களும் பயன்பட்டன. உண்மையான வழிபாட்டு உணர்வின் முதிர்ச்சி சமூகத்திற்கு உதவுவதேயாகும்.
- திருக்கோயில் வழிபாட்டோடு, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற சிந்தனை தேவாரம் பாடிய மூவருக்கும் இருந்தது. மக்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்று நம்பினர்.
- திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் செய்த சமுதாயப் பணிகளையும் பெரியபுராணம் குறித்துள்ளது.
- தேவார மூவர் செய்த சமுதாயப் பணிகளுள் பஞ்சம் நீக்கியமை, விடந்தீர்த்தமை, தனிமனிதத் துயர் தீர்த்தமை, முயலகன் நோய் தீர்த்தமை, பனிநோய் தீர்த்தமை, வழிபாட்டிற்குத் துணை செய்தமை முதலியன குறிப்பிடத்தக்கவை.
- தேவார மூவர் பாடல்களில் மனித நேயம், சாதிமத ஒழிப்பு, மாசுக்கட்டுப்பாடு, சுயமரியாதை குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.
- சமூக வாழ்வு சிறக்க தேவாரப் பாடல்களில் பல அறிவுரைகள் காணப்படுகின்றன. அவற்றுள் பஞ்சம் இல்லாமை, கொலை, களவு இல்லாமை, வாய்மை, ஈதல் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.
- அமைதியான சமூகத்தில் வாழ்வதற்கு வழிபாடு அவசியம் என்பது தேவாரப் பாடல்கள் வழி உணரமுடிகிறது.

குறிப்புகள்

1. திருநாவுக்கரசர் தேவாரம், 5:19:9.
2. திருமந்திரம், பா.1857.
3. பெரியபுராணம், தி.நா.பு., பா.225.
4. மேலது, பா.260.
5. மேலது, பா.314.
6. மேலது, பா.389.
7. மேலது, பா.417 மற்றும் 418.
8. திருநாவுக்கரசர் தேவாரம், சைவசித்தாந்த மகாசமாஜப் பதிப்பு, ப.1.
9. பெரியபுராணம், தி.நா.பு., பா.1.
10. மேலது, பா.259.
11. மேலது, ஏ.கலி. நா.பு., பா.17.
12. சுந்தரர் தேவாரம், 7:24:1.
13. பெரியபுராணம், தி.ஞா.பு., பா.482.
14. சுந்தரர் தேவாரம், 7:அவிநாசி.:4.
15. பெரியபுராணம், வெள்ளானைச் சருக்கம், பா.11.
16. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:153:1.
17. மேலது, 1:திருநீலகண்டப்பதிகம்:1.
18. பெரியபுராணம், தி.ஞா.பு., பா.335.
19. திருநாவுக்கரசர் தேவாரம், 5:10:1.
20. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:மறைக்காடு:1.
21. பெரியபுராணம், தி.நா.பு., பா.296.
22. மேலது, பா.299.
23. பெரியபுராணம், தி.ஞா.பு., பா.1248.
24. திருமந்திரம், பா.2104.
25. சோ.ந. கந்தசாமி, திருமுறை இலக்கியம், ப.229.
26. பெரியபுராணம், தி.ஞா.பு., பா.704.
27. திருஞானசம்பந்தர் தேவாரம், பா.3339.
28. திருநாவுக்கரசர் தேவாரம், 6:31:1.
29. மேலது, 4:79:3.
30. மேலது, 5:95:3.

31. திருஞானசம்பந்தர் தேவாரம், *1:நறையூர்:5.*
32. மேலது, *1:ஆவூர்:5.*
33. திருநாவுக்கரசர் தேவாரம், *4:81:5.*
34. மேலது, *5:91:5.*
35. மேலது, *4:2:1.*
36. திருஞானசம்பந்தர் தேவாரம், கோளறு பதிகம்:*1.*
37. சுந்தரர் தேவாரம், *7:19:5.*
38. மேலது, *7:84:7.*
39. திருஞானசம்பந்தர் தேவாரம், *2:10:6.*
40. சுந்தரர் தேவாரம், *7:30:6.*
41. புறநானூறு, பா.*189.*
42. திருநாவுக்கரசர் தேவாரம்,*4:ஐயாறு:10.*
43. சுந்தரர் தேவாரம், *7:78:11.*
44. மேலது, *7:35:3.*
45. மேலது, *7:35:4.*
46. திருநாவுக்கரசர் தேவாரம், *4:5:3.*
47. திருக்குறள், பா.*319.*
48. திருநாவுக்கரசர் தேவாரம், *5:60:3.*
49. மேலது, *6:95:10.*
50. மேலது, *5:60:1.*
51. மேலது, *6:31:3.*

வழிபாடும் யாத்திரையும்

திருக்கோயில் வழிபாட்டில் தலயாத்திரை என்பதும் ஒன்றாகும். "இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள்தோறும் சென்று, அவ்வத் தலங்களில் எழுந்தருளியுள்ள சிவபரம் பொருளைப் பாடிப் பரவி, வாழ்வு குறித்த நம்பிக்கையையும், பக்தி உணர்வையும் வளர்ப்பது தலயாத்திரையின் நோக்கங்களில் ஒன்றாகும்"[1] என்பர். தேவார ஆசிரியர்கள் தலயாத்திரை வாயிலாகவே திருக்கோயில் வழிபாட்டைச் செய்தனர்; சைவத்தைப் பரப்பினர். தம் சுற்றம், தம் ஊர் என்ற கட்டுகளி லிருந்து விடுபட்டு, ஆன்மநேய ஒருமைப்பாட்டை, மனிதநேயப் பண்பை வளர்ப்பதற்குத் தலயாத்திரை செய்து வழிபாடு செய்வதையே தேவார ஆசிரியர்கள் பெரிதும் போற்றினர். அதனைக் காண்பது இவ்வியலின் நோக்கமாகும்.

யாத்திரை

திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் முதலிய அருளாளர்கள் தல யாத்திரை மேற்கொண்டு வழிபாடு செய்தனர். எனவே, பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவோர் தலயாத்திரை மேற்கொள்ள வேண்டும். தல யாத்திரை செய்யாதவர், ஆன்மீக வாழ்வில் அரை மனிதன் என்றும், அவர் பிணத்துக்குச் சமமானவர் என்றும் பெரியோர்கள் கூறியுள்ளனர்.[2]

வழிபாடு என்பது இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் சென்று வணங்குவதுடன் முழுமை பெறுகிறது. தேவார மூவருக்குப் பின்வந்த தாயுமானவர், தலயாத்திரை மேற்கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றையும் முறைப்படிச் செய்தால் தான் இறைவன் ஞானத்தை அருள குருநாதரை அனுப்புவான் என்று குறிப்பிட்டுள்ளார்.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"[3]

என்பது தாயுமானவர் பாடலாகும். எனவே, ஞானம் பெறுவதற்கும் தல யாத்திரையே அடிப்படை என்பது இதன் மூலம் புலனாகிறது.

புராணங்களிலும், இதிகாசங்களிலும், வரலாறுகளிலும், அகத்தியர், அருச்சுனன், இராமன் முதலியோர் செய்த தல யாத்திரைகளும், ஆதிசங்கரர், பட்டினத்தார், அருணகிரிநாதர், குமரகுருபரர் முதலியோர் செய்த தல யாத்திரைகளும், சிலப்பதி காரத்தில் குறிப்பிடப்பெறும் மாடல மறையோன் யாத்திரையும் நோக்கத்தக்கது.

யாத்திரையின் தொன்மை

யாத்திரையின் தொன்மை குறித்து வித்துவான் மா. சிவகுருநாதப் பிள்ளை, "இம்மண்ணுலகில் சிவனுறையும் செழும்பதிகள் தோறும் யாத்திரையாகச் சென்று, வழிபட்ட நெறியின் தொன்மை, சூரபதுமனை வென்று தேவர் சிறை மீட்க, திருக்கயிலைமால் வரையினின்று புறப்பட்ட கந்தவேள், செந்திற்பதிவரை பல தலங்களைத் தரிசித்து வந்தார் என்பதைக் கந்தபுராணமும், பாண்டவருள் சிவபூசகனாகிய வில் விசயன், இமயம் முதல் குமரி வரை தலங்கள் பலவற்றை யாத்திரையாய்ச் சென்று தரிசித்த செய்தியை,

'பக்திக்கு வரம்பாகிய பார்த்தன் பலதீர்த்தம்
அத்திக்கிக்னும் எத்திக்கினுமா மென்றவை நாடிச்
சித்திக்கொரு விதையாகிய தென்னாட்டினை அணுகித்
தத்திச் சொரியரு வித்தர வக்கிரி சார்ந்தான்'[4]

என வில்லி பாரதம் கூறுதலானும், கயிலைமால் வரையில், நந்தியருள் பெற்றுத் திருமூலர் என்று பின்னர் சிறப்பிக்கப்பெற்ற சிவயோகி, வட புலத்திலிருந்து தென்னகப் பதியான திருவாவடுதுறை வரும் வரை, வழியிடைப் பல தலங்களை வணங்கிப் போநததைப் பெரியபுராணமும், நில உலகைச் சமன்

செய்ய வேண்டி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி யாத்திரையாகச் செந்தமிழ் முனிவர் அகத்தியர் வந்ததைப் புராணங்கள் பலவும் கூறுவதிலிருந்து தல யாத்திரையின் தொன்மையினை நாம் நன்குணரலாம்." என்று குறிப்பிட்டுள்ளார்.[5]

இன்றுள்ள பயண வசதிகள் இல்லாத காலத்தில் யாத்திரை முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாத்திரையின் சிறப்பு

யாத்திரையின் சிறப்பும், அவசியமும் குறித்துத் திருமூலர் திருமந்திரத்தில்,

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே"[6]

என்று குறிப்பிட்டுள்ளார். பத்தி இயக்கத்தின் வேராக இருக்கும் தலப் பயணத்தை இப்பாடல் வலியுறுத்துகிறது. இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால், மனித்த பிறவியும் வேண்டத் தக்கதாகவே நம் சமயாச்சாரியார்கள் பாடுவது யாத்திரையை மனதிற் கொண்டேயாகும். மேலும் அகவழிபாடு செய்து வீடுபேறு அடைவதற்கும் அடிப்படை பல தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டு செய்யும் புறவழிபாடேயாகும் என்பதும் திருமூலரின் திருமந்திரம் தரும் விளக்கமாகும். 16 வயது வரை மண்ணுலகில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும் 81 வயதுவரை வாழ்ந்த திருநாவுக்கரசரும், 18 வயது வரை வாழ்ந்த சுந்தரரும் தம் வாழ்நாள் முழுவதையும் யாத்திரையிலேயே கழித்தனர் என்பது அவர்கள் பாடல்கள் வழியும், அவர்கள் வரலாறு கூறும் பெரியபுராணத்தின் வழியும் உணரமுடிகிறது.

"இந்நாளில் திருப்பணிகள் செய்கின்ற இன்றமிழ்க்கு
மன்னான வாகீசத் திருமுனியும் மதிச்சடைமேல்
பன்னாகம் அணிந்தவர்தம் பதிபலவும் சென்றிறைஞ்சிச்
சொன்மாமத் தமிழ்புனைந்து தொண்டுசெய்வான் தொடர்ந்தெழுந்தார்"

எனவரும் பெரியபுராணப் பாடல்வழி, திருநாவுக்கரசர் கைத்திருத் திருத்தொண்டு செய்ததுடன், சொற்றமிழ்ப் பாமாலைகள் புனைந்து பாடியும், தமிழகம் முழுவதும் யாத்திரை செய்தமை புலனாகிறது. அவர் பாரதம் முழுவதும் மேற்கொண்ட யாத்திரையும், குறிப்பாக, கயிலாய யாத்திரையும் சேக்கிழாரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்திரத்திசை, கானியாறு, மானவிஞ்சையர்கள், வான நாடர்கள், வான் இயக்கர்கள், சித்தர்கள், கான இன்னரர், பன்ன காதியர் எனப் பலரும் வந்திறைஞ்சும் பருப்பதம் பணிந்தபின் ஆந்திரம், கன்னடம், பல அருஞ்சுரங்கள், நதிகள் கடந்து மாளவம் அடைந்து, இலாடபூமி, மத்திய பைதிரம், வாரணாசி, கற்சுரங்களைக் கடந்து இமயத்து அடிவாரம் அடைந்தார் திருநாவுக்கரசர் என்று,

"அன்னநாடு கடந்து கங்கை
அணைந்து சென்று வலங்கொள்
மின்னு வேணியர் வாரணாசி
விரும்பி னோடு பணிந்துடன்
பின்ன டைந்தவர் தம்மை
அங்கண் ஒழிந்து கங்கை கடந்துபோய்
மன்னு காதல்செய் நாவின்
மன்னவர்வந்து கற்சுரம் முந்தினார்"[8]

என்ற பாடலில் விளக்கியுள்ளார். யாத்திரை வழித்தடத்தைச் சுட்டுவது நோக்கத்தக்கது. "திருநாவுக்கரசர் திருவதிகையில் தொடங்கிய யாத்திரை கால்நடையாகவே இப்பாரத பூமி எங்கணும் நிகழ்ந்தது. அவர் சைவத்துக்கு மீண்டு வந்து வாழ்ந்த காலம் சுமார் 30 ஆண்டுகளே. இக்காலத்தில் அவர் யாத்திரை செய்த தூரம் 5000 மைல்களுக்கும் மேல். அன்றும் இன்றும் என்றும் இது ஒரு உலக சாதனையாகவே அமைதல் கூடும். அந்த அளவுக்கு அவரது யாத்திரை வாழ்க்கை அமைந்து சிறந்தது காணத் தகுவதாம்"[9] என்பார் த.கோ. பரமசிவம்.

திருநாவுக்கரசரைப் போலவே திருஞானசம்பந்தரும், மூன்று வயதுக் குழந்தையாக இருந்த போதே யாத்திரையைத் தொடங்கித் தம் தந்தையின் தோளிலும், இறைவன் அருளிய பல்லக்கிலும், திருநாவுக்கரசரோடு இணைந்து கால்நடையாகவும் பல தலங்களுக்குச் சென்று பாடினார் என்று அவர்தம் வரலாறு தெரிவிக்கிறது.[10]

சுந்தரரும் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டபின் திருக்கயிலாயம் வரை யாத்திரை மேற்கொண்டார் என்பதும் பெரியபுராணம் வழி புலப்படுகிறது.[11]

தேவாரத்தில் தலயாத்திரை

தேவார ஆசிரியர்கள் தங்கள் பதிகங்களில் தல யாத்திரையின் சிறப்புக்களைப் பலவாறாக எடுத்தோதி, தல யாத்திரையின் இன்றியமையாமையை வலியுறுத்தியுள்ளனர். திருஞானசம்பந்தர் தல யாத்திரை, இறைவழிபாட்டுக்கு முக்கியமானது என்பதைக் குறிப்பில் சுட்டிப் பாடியுள்ளார். சான்றுகளாக,

"ஆமாத்தூர் அம்மானைக் காணாத
கண்ணெல்லாம் காணாத கண்களே"[12]

"ஆமாத்தூர் அம்மானைக் கூறாத
நாவெல்லாம் கூறாத நாக்களே"[13]

"ஆமாத்தூர் அம்மான்எம் பெம்மான் என்று
ஏத்தாதார் பேயரிற் பேயரே"[14]

"ஆமாத்தூர் அம்மானைக் கேளாச்
செவியெல்லாம் கேளாச் செவிகளே"[15]

என வருவன யாத்திரை செய்து ஆமாத்தூர் அடைந்து வணங்க வேண்டும் என்பதையே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

இன்னின்ன தலங்களில் உள்ள இறைவனைச் சென்று தொழவல்லவர் பெறும் நலன்களை நேர் நிலையிலும், சென்று

தொழாதவர் பெறும் பழிகளை எதிர் நிலையிலும் எடுத்து இயம்பி யாத்திரை வழிபாட்டை வலியுறுத்தி உள்ளனர்.

"செங்கண்மால் விடையார் செம்பொன் பள்ளியார்
அங்கணா யடைந்தார் வினை தீர்ப்பரே"[16]

"நாலூர் மயானத்து நம்பான்தனடி நினைந்து
மாலூருஞ் சிந்தையார் பால்வந்துரா மறுபிறப்பே"[17]

"............ சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே"[18]

"............... வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே"[19]

".................. மழ பாடியைத்
தங்கை யால்தொழு வார்தக வாளரே என்றும்"[20]

"கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே"[21]

"சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலம்"[22]

"சென்றுநீ தொழுதுய் கண்டாய் திருஇராமேச்சுரமே"[23]

"... கச்சி ஏகம்பம்
இருள்கெடச் சென்று கைதொழுது ஏத்துமே"[24]

"தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்"[25]

"சென்றுநீர் திருவேட்களத்து உள்ளுறை
துன்றுபொற் சடையானைத் தொழுமினே"[26]

எனவரும் திருநாவுக்கரசர் பாடலடிகளும்,

"சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்"[27]

"............................ பனங் காட்டூர்
சடையில் கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே"[28]

"தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறில் அன்றே
குளியீர் உளங்குருக் கேத்திரம் கோதாவரி குமரி
தெளியீர் உளம்சீர்ப்பதஞ் தெற்கு வடக்காகக்
கிளிவாழை ஒண்கனி கீறிஉண் கேதாரம் எனீரே"[29]

எனவரும் சுந்தரர் தேவாரப் பாடலடியும் இறைவன் எழுந்தருளி யுள்ள தலங்கள் தோறும் சென்று வழிபடவேண்டும் என்பதைச் சுட்டுகின்றன.

தலங்கள் தோறும் சென்று, இறைவனைப் பாடவேண்டும்; வழிபட வேண்டும் என்பதை வலியுறுத்துவதன் மூலம் வழிபாட்டில் தல யாத்திரையின் முக்கியத்துவத்தைத் தேவார ஆசிரியர்கள் குறிப்பில் உணர்த்தியுள்ளனர்.

நிலையாமையைக் கூறி வலியுறுத்தல்

வாழ்க்கையின் நிலையாமையை எடுத்துக்கூறி, உடல், மனம் இரண்டும் நல்ல நிலையில் உள்ளபோதே யாத்திரை செய்ய ஆற்றுப் படுத்தியுள்ளனர் தேவார ஆசிரியர்கள். சான்றுகளாக,

"கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியுளான் கழல் சேர்மினே"[30]

"காலனார் வருவதன்முன் கருவிலிக்
கோலவார் பொழிற் கொட்டிட்டை சேர்மினே"[31]

"... அயலவர்
சிரிச்சுற்றுப் பலபேசப்படா முன்னம்
திருச்சிற்றம்பலம் சென்றடைந் துய்ம்மினே"[32]

"பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
....
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே"[33]

"உரைத ளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை - யானிடம் நல்லமே

பரவு மின்பணி மின்பணி வாரொடே
விரவு மின்வர வாரை விடுமினே"[34]

என வருவனவற்றைக் காட்டலாம். இதன் மூலம், இளமை இருக்கும் போதே யாத்திரை செய்ய வேண்டும் என்பதும், உடலைப் பிணிகள் பற்றுவதற்கு முன்னர் யாத்திரை செய்வது அவசியம் என்பதும் புலனாகிறது.

தலயாத்திரை நோக்கமும் பயன்களும்

மனிதர்கள் குலத்தால், மொழியால், சிந்தனையால் செயலால் வேறுபட்டுள்ளனர். இவர்களையெல்லாம் இணைக்கும் பாலமாக, தல யாத்திரை செய்வதும் வழிபாடு செய்வதும்தான் விளங்கும் என்றும் தேவார மூவர் முழுமையாக நம்பினர். பொதுநல உணர்வை மக்களிடையே வளர்த்து, மனித நேய மாண்பை உணரச் செய்வதற்கும் இவ் யாத்திரை துணைசெய்யும் என்பதும் அவர்களின் கருத்தாகும். எனவே, அவர்கள் மூவரும் பல தலங்களை அடைந்து மக்களைச் சந்தித்தனர்; அவர்களிடம் அளவளாவினர்; அம் மக்களிடம், அவர்கள் வாழும் ஊர்ச்சிறப்பு மிக்கது; கோயில் பெருமை மிக்கது, இறைவன் கருணை மிக்கவன் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினர்.

யாத்திரையின் பயன்

பலதரப்பட்ட பண்பாடுகள், வழிபாடுகள் இவற்றை அறிந்து கொள்ளுதல், பரந்த அறிவு பெறல், ஆன்ம ஈடேற்றம் அடைதல், மக்கள் சேவையே மகேசன் சேவை என உணர்தல் முதலியன தல யாத்திரை செய்வதால் ஏற்படும் பயன்கள் ஆகும். இவை தவிர வினைகள், பாவங்கள் நீங்கவும், வீடுபேறு எய்தவும் யாத்திரைஅவசியமானது என்று தேவார ஆசிரியர்கள் பற்பல இடங்களில் எடுத்துக் கூறியுள்ளனர்.

"கொன்றுசெய்த கொடுமையாற்பல சொல்லவே
நின்றபாவம் வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே"[35]

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டும் மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே"[36]

"...................................... பைஞ்ஞீலியுள்
சடையில் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்வர்க் கில்லை அவலமே"[37]

"........................ படிக்கரையுள்
பற்றரைப் பற்றி நின்று
பழிபா வங்கள் தீர்மின்களே"[38]

என்ற பாடல்களின் மூலம் யாத்திரையின் பயன்கள் குறிப்பில் விளக்கப் பட்டுள்ளன.

யாத்திரை செய்யாதவர் இழிவு

யாத்திரையின் நோக்கமும் பயன்களும் குறித்துப் பாடிய தேவார மூவர் 'யாத்திரை செய்யாதவர்கள் பிறவியின் பயனை அடைய முடியாது; வினைகளைக் கழிக்க முடியாது; யாத்திரை செய்யாத கால்களால் பயன் இல்லை என்று குறிப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். சான்றுகளாக,

"கால்களாற் பயனென் கறைக்கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்க ளாற்பயனென்"[39]

"திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத்து ஈசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே"[40]

"திருவீழி மிழலை யானைச் சேராதார்
தீநெறிக்கே சேர்கின்றாரே"[41]

"ஆனைக் காவில் எம்மானை அணைகிலார்
ஊனைக் காவி யுழிதர்வர் ஊமரே"[42]

"..........வன்பார்த்தான் பனங்காட்டூர்
சடையில் சங்கை தரித்தானைச் சாரார் சார்பென்னே"[43]

என்ற பாடலடிகளைக் காட்டலாம். வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாகச் சுட்டியுள்ளனர். திருவீழிமிழலை சேராதார், ஆனைக்கா அணைகிலார், பனங்காட்டூர் சாராதார் என்று பாடுவதால் யாத்திரை செய்து தரிசிக்காதார் என்று பொருள் கொண்டு பார்க்க வேண்டும்.

தொகுப்புரை

- திருக்கோயில் வழிபாட்டில் தலயாத்திரை என்பதும் ஒன்றாகும். தேவார ஆசிரியர்கள் தலயாத்திரை வாயிலாகவே திருக்கோயில் வழிபாட்டைச் செய்தனர்.
- பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவோர் தலயாத்திரை மேற்கொள்ள வேண்டும், தலயாத்திரை செய்யாதவர் ஆன்மிக வாழ்வில் அரைமனிதன் ஆவார்.
- வழிபாடு என்பது இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் சென்று வணங்குவதுடன் முழுமை பெறுகிறது.
- புராணங்களிலும், இதிகாசங்களிலும் பலர் செய்த யாத்திரைகள் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. யாத்திரையின் சிறப்பு குறித்துத் திருமூலர் குறிப்பிட்டு உள்ளார். தேவார மூவரும் தம் வாழ்நாள் முழுவதும் தலயாத்திரையிலேயே கழித்தனர் என்பது அவர்கள் பாடல்கள் வழியாகப் புலனாகிறது.
- தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடவேண்டும், வழிபடவேண்டும் என்பதை வலியுறுத்துவதன் மூலம் வழிபாட்டில் தலயாத்திரையின் முக்கியத்துவத்தைத் தேவார ஆசிரியர்கள் குறிப்பில் உணர்த்தியுள்ளனர்.

- வாழ்க்கையின் நிலையாமையை எடுத்துக் கூறி உடல், மனம் இரண்டும் நல்ல நிலையில் உள்ள போதே யாத்திரை செய்ய ஆற்றுப்படுத்தியுள்ளனர்.
- பல்வேறுபட்ட மனிதர்களை இணைக்கும் பாலமாக யாத்திரையைக் கண்டுள்ளனர். மனித நேயத்தை வளர்க்கவும், பொதுநலச் சிந்தனை களைப் பரப்பவும் யாத்திரைதான் ஒரே வழி என்று குறிப்பில் சுட்டியுள்ளனர்.
- மக்களின் பலதரப்பட்ட பண்பாடுகள், வழிபாடுகள், இவற்றை அறிந்து கொள்ளவும், பரந்த அறிவு பெறல், ஆன்மநேய ஈடேற்றம் அடைதல், மக்கள் சேவையே மகேசன் சேவை என உணர்தல் முதலியனவும் யாத்திரையின் பயன்களாகும்.
- யாத்திரை செய்யாதவர்கள் பிறவியின் பயனை அடைய முடியாது என்றும், வினைகளைக் கழிக்க முடியாது என்றும் தேவாரத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன.

குறிப்புகள்

1. ந. முருகேசன், திருநாவுக்கரசர் பங்களிப்பு, திருநாவுக்கரசர் ஆய்வு மாலை தொகுதி 1, பக்.470-471.
2. த.கோ. பரமசிவம் (பதி.ஆ.), திருநாவுக்கரசர் ஆய்வுமாலை, தொகுதி 1, ப.748.
3. தாயுமானவர், பராபரக் கண்ணி, பா.156.
4. வில்லிபாரதம் (மேற்கோள் - சிவகுருநாதப்பிள்ளை.மா., மூவர் தலயாத்திரை - ஓர் ஆய்வு, ப.9.)
5. மா. சிவகுருநாதப் பிள்ளை, மூவர் தலயாத்திரை - ஓர் ஆய்வு, முன்னுரை.
6. திருமூலர் திருமந்திரம், பா.1445.
7. பெரியபுராணம், திருநாளைப்போவார் புராணம், பா.147.
8. மேலது, பா.353.
9. த.கோ. பரமசிவம் (பதி.ஆ.), திருநாவுக்கரசர் ஆய்வுமாலை, தொகுதி 1, ப.750.
10. மா. சிவகுருநாதப்பிள்ளை. மூவர் தலயாத்திரை - ஓர் ஆய்வு, ப.9.

11. மேலது, ப.11.
12. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:44:4.
13. மேலது, 2:44:7.
14. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:14:2.
15. மேலது, 2:14:8.
16. திருநாவுக்கரசர் தேவாரம், 5:36:8.
17. திருஞானசம்பந்தர் தேவாரம், 2:75:1.
18. மேலது, 2:சாய்க்காடு:3.
19. மேலது, 2:வெண்காடு:2.
20. மேலது, 3:மழபாடி:1.
21. மேலது, 2:கோடிகா:1.
22. திருநாவுக்கரசர் தேவாரம், 4:81:2.
23. மேலது, 4:61:4.
24. மேலது, 5:47:6.
25. மேலது, 5:5:5.
26. மேலது, 5:42:1.
27. சுந்தரர் தேவாரம், 7:கழுக்குன்றம்:1.
28. மேலது, 7:வன்பார்த்தான் பனங்காட்டூர்:1.
29. சுந்தரர் தேவாரம், 7:கேதாரம்:6.
30. திருநாவுக்கரசர் தேவாரம், 5:84:2.
31. மேலது, 5:69:2.
32. மேலது, 5:1:3.
33. மேலது, 5:43:2.
34. மேலது, 5:43:2.
35. மேலது, 7:கழுக்குன்றம்:1.
36. திருநாவுக்கரசர் தேவாரம், 6:71:5.
37. மேலது, 5:41:1.
38. சுந்தரர் தேவாரம், 7:பழமண்ணிப் படிக்கரை:9.
39. திருநாவுக்கரசர் தேவாரம், 4:9:8.
40. திருஞானசம்பந்தர் தேவாரம், 1:25:1.
41. திருநாவுக்கரசர் தேவாரம், 6:50:1.
42. மேலது, 5:31:1.
43. சுந்தரர் தேவாரம், 7:வன்பார்த்நான் பனங்காட்டூர்:1.

பயன்பட்ட நூல்கள்

1. அடியார்க்கு நல்லார்(உ.ஆ.), சிலப்பதிகாரம், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 1920, முதற் பதிப்பு.

2. அநங்கன், ஆலய வழிபாடு, அழகு பதிப்பகம், சென்னை, 2004, முதற் பதிப்பு.

3. அருணாச்சலம்.ப., பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973, முதற் பதிப்பு.

4. அருணைவடிவேல் முதலியார்.சி. (கு.ஆ.), திருநாவுக்கரசு நாயனார் ஆறாம் திருமுறை, தருமை ஆதீனம்,தருமபுரம், 1963, முதற் பதிப்பு.

5. அருணைவடிவேல் முதலியார்.சி. (கு.ஆ.), மெய்கண்ட சாத்திரம், தருமை ஆதீனம், தருமபுரம், 1998, மூன்றாம் பதிப்பு.

6. அருணைவடிவேல் முதலியார்.சி., சிவஞானபோத மாபாடிய பொருள்நிலை விளக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1997, முதற் பதிப்பு.

7. அருணைவடிவேல் முதலியார்.சி. (உ.ஆ.), திருமந்திரம், தருமை ஆதீனம், தருமபுரம், 1997, மூன்றாம் பதிப்பு.

8. அறிவனார், பஞ்சமரபு, வே.இரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் பதிப்பகம், ஈரோடு, 1975, முதற் பதிப்பு.

9. அறிவுடைநம்பி.ம.சா., சைவத்தமிழ், கருமணிப் பதிப்பகம், மதுரை, 1992, முதற் பதிப்பு.

10. அறிவுடைநம்பி.ம.சா., திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், கருமணிப் பதிப்பகம், மதுரை, 1986, முதற் பதிப்பு.

11. ஆளவந்தார்.ஆர்., தமிழர் தோற்கருவிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981, முதற் பதிப்பு.

12. ஆனந்தன்.கு.ச., தமிழ் வழிபாடு தமிழர் பிறப்புரிமை, தங்கம் பதிப்பகம், கோபிசெட்டிப்பாளையம், 2000, முதற் பதிப்பு.

13. இரத்தினசபாபதி.வை., திருமுறைப் பெருமை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991, முதற் பதிப்பு.

14. இராகவன்.அ., இசையும் யாழும், கலைநூற் பதிப்பகம், திருநெல்வேலி, 1971, முதற் பதிப்பு.

15. இராசமாணிக்கம்.தி., தென்னிந்திய சிற்பங்களும் கோயில்களும், கழக வெளியீடு, சென்னை, 1992, முதற் பதிப்பு.

16. இராசமாணிக்கனார்.மா., சைவ சமயம், செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1955, முதற் பதிப்பு.

17. இராசமாணிக்கனார்.மா., வழிபாடு, செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1957, முதற் பதிப்பு.

18. இராசமாணிக்கனார்.மா., கால ஆராய்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1957, முதற் பதிப்பு.

19. இராமசேஷன்.ஆர் & கிருஷ்ணன். ரா., மாகேச்சர வடிவங்கள், திருப்புகழ் பதிப்பகம், சென்னை, 1992, முதற் பதிப்பு.

20. இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1986, முதற் பதிப்பு.

21. இளமுருகனார் மயிலை (ப.ஆ.),தேவாரம் அடங்கன் முறை, திருவருளகம், சென்னை,1953, முதற் பதிப்பு.

22. உமாபதி சிவாச்சாரியார், திருமுறைகண்ட புராணம், தருமை ஆதீனம், தருமபுரம், 1967, முதற் பதிப்பு.

23. கந்தசாமி.சோ.ந., திருமுறை இலக்கியம் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995, முதற் பதிப்பு.

24. கந்தசாமித் தம்பிரான் (ப.ஆ.), திருநாவுக்கரசர் தேவாரம், தருமை ஆதீனம், தருமபுரம், 1997, 2ம் பதிப்பு.

25. கந்தையா.ந.சி., தமிழர் சமயம், அமிழ்தம் பதிப்பகம், சென்னை, 2003, முதற் பதிப்பு.

26. கலியாணம் பிள்ளை.ஜி., திருப்புகலூர் தலவரலாறு, திருப்புகலூர் தேவஸ்தானம், திருப்புகலூர், 1942, ப.வி.இ.

27. கிருபானந்த வாரியார், ஆலயம் ஏன்?, குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை, 2000, ப.வி.இ.

28. குமாரசாமித் தம்பிரான் (ப.ஆ.), பதினோராம் திருமுறை, காசித் திருமடம், திருப்பனந்தாள்,2000, நான்காம் பதிப்பு.

29. குளத்தூரான்.க., காஞ்சிக் கோயில்கள், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 2004, முதற் பதிப்பு.

30. சங்கசார்ங்க தேவர்.ஸ்ரீ.நி., சங்கீத ரத்னாகரம், கலா ஷேத்திரம், சென்னை, 1952, முதற் பதிப்பு.

31. சதாசிவ செட்டியார் (ப.ஆ.), அகத்தியர் தேவாரத் திரட்டு, கழக வெளியீடு, சென்னை, 1976, மூன்றாம் பதிப்பு.

32. சதாசிவ பண்டாரத்தார்.தி.வை., தமிழிலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1977, முதற் பதிப்பு.

33. சித்தலிங்கம்.டி.பி., சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும், திருவரசு புத்தக நிலையம், சென்னை, 1998, முதற் பதிப்பு.

34. சிவகுருநாதப் பிள்ளை.மா., தவமுதல்வர் சம்பந்தர், திருவரசு புத்தக நிலையம், சென்னை, 2003, முதற் பதிப்பு.

35. சிவகுருநாதப் பிள்ளை.மா., தேவார மூவர் தலயாத்திரை, யு. சுப்பிரமணியன் அறக்கட்டளை, தஞ்சாவூர், 1990, முதற் பதிப்பு.

36. சுந்தரம்.வீ.ப.கா., தமிழிசை வளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1985, முதற் பதிப்பு.

37. சுந்தரம் வீ.ப.கா., தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1994, முதற் பதிப்பு.

38. சுந்தரம்,பி.எம்., ஆலய வழிபாட்டில் இசை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990, முதற் பதிப்பு.

39. சுந்தரர் , சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், காசித் திருமடம், திருப்பனந்தாள், 2004, பத்தாம் பதிப்பு.

40. சுப்பிரமணியன்.யு., தமிழர் சமயம் & தமிழகத்துக் கோயில்கள், சுப்பிரமணியன் அறக்கட்டளை, தஞ்சாவூர், 1990, முதற் பதிப்பு.

41. சுப்புரெட்டியார்ந, நாவுக்கரசர், பாரி நிலையம் சென்னை, 1986, முதற் பதிப்பு.

42. சுப்பையா முதலியார். சொ.(ப.ஆ.), இம்மையே நன்மை தரும் பதிகங்கள், காசித் திருமடம், திருப்பனந்தாள், 2004, ஐந்தாம் பதிப்பு.

43. செங்கல்வராய பிள்ளை.வ.சு., தேவார ஒளிநெறிக் கட்டுரை, கழக வெளியீடு, சென்னை, 1962, முதற் பதிப்பு.

44. செந்துறைமுத்து, திருமுறையும் திருக்கோயில்களும், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1998, திருத்திய பதிப்பு.

45. செந்துறைமுத்து, திருமுறையும் தமிழிசையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995, முதற் பதிப்பு.

46. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், காசித் திருமடம், திருப்பனந்தாள், 2004, ஒன்பதாம் பதிப்பு.

47. சைவ எல்லப்ப நாவலர், திருவருணைக் கலம்பகம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1968, முதற் பதிப்பு.

48. ஞானசம்பந்தன்.அ.ச., பெரியபுராணம் ஓர் ஆய்வு, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை, 1994, முதற் பதிப்பு.

49. தங்கவேலனார்.இரா.ப., தேவார வைப்புத் தலங்கள், மாநில திருமுறை மாநாடு வெளியீடு, ஈரோடு, ஆ.இ.

50. தண்டபாணி தேசிகர் (கு.ஆ.), தேவாரம் - தொகுதி 1, தருமை ஆதீனம், தருமபுரம், 1980, முதற் பதிப்பு.

51. தமிழ்க்குடிமகன்.மு., தமிழில் வழிபாடு - தடை என்ன நமக்கு?, அறிவொளி பதிப்பகம், மதுரை, 2003, முதற் பதிப்பு.

52. தனபாண்டியன்.து.ஆ., மூவர் திருமுறைப் பாடல்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988, முதற் பதிப்பு.

53. தனபாண்டியன்.து.ஆ., இசைத்தமிழ் வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994, முதற் பதிப்பு.

54. தாயுமானவர், ஸ்ரீதாயுமானசுவாமி பாடல்கள், ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, 1998, முதற் பதிப்பு.

55. தியாகராசன்.க. (ப.ஆ.), சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 2001, முதற் பதிப்பு.

56. திருஞானசம்பந்தர், திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், காசித் திருமடம், திருப்பனந்தாள், 2003, எட்டாம் பதிப்பு.

57. திருச்சிற்றம்பலம்.சிவ., திருத்தலங்களும் விரதங்களும், இராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை, 2002, முதற் பதிப்பு.

58. திருச்சிற்றம்பலம்.சிவ.,சிவவடிவங்களும் தொகை யகராதியும், இராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை, 2002, முதற் பதிப்பு.

59. திருமூலர், திருமந்திரம், காசித்திருமடம், திருப்பனந்தாள், 2003, எட்டாம் பதிப்பு.

60. திருவள்ளுவர் , திருக்குறள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985, முதற் பதிப்பு.

61. துரைசாமிப்பிள்ளை.ஔவை. (உ.ஆ.), புறநானூறு, கழக வெளியீடு, சென்னை, 1956, முதற் பதிப்பு.

62. தேவநேயப் பாவாணர், தமிழர் மதம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2000, முதற் பதிப்பு.

63. நச்சினார்க்கினியர் (உ.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986, முதற் பதிப்பு.

64. நலங்கிள்ளி.அ., அப்பர் தேவாரத்தில் வாழ்வியலும் இறையியலும், அருட்கவி பதிப்பகம், திருச்சி, 2001, முதற் பதிப்பு.

65. பக்தவச்சலம்.ஆ.(ப.ஆ.), தமிழ்வேதத் திரட்டு, சிவனடியார் திருக்கூட்டம், குடியேற்றம், 1991, முதற் பதிப்பு.

66. பட்டுச்சாமி ஓதுவார்.தி.(உ.ஆ.), திருத்தொண்டர் புராணம், காசித் திருமடம், திருப்பனந்தாள், 2003, இரண்டாம் பதிப்பு.

67. பதிப்பாசிரியர் குழு, தமிழ்நாட்டு வரலாறு - பல்லவர் பாண்டியர் காலம், தமிழ்வளர்ச்சி இயக்ககம், சென்னை, 2000, முதற் பதிப்பு.

68. பரிமேலழகர்(உ.ஆ.), பரிபாடல் மூலமும் பரிமேலழக ருரையும், டாக்டர் உ.வே. சா. நூல் நிலையம், சென்னை, 4ம் பதிப்பு 1956.

69. பவணந்தி முனிவர், நன்னூல் காண்டிகையுரை - எழுத்தும் சொல்லும், ஆறுமுக நாவலர் பதிப்பு, வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, 1929, நான்காம் பதிப்பு,.

70. பார்த்தசாரதி ஐயங்கார்(ப.ஆ.), நாலாயிரத் திவ்விய பிரபந்தம், பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1929, முதற் பதிப்பு.

71. பாலசாரநாதன்.சு.(ப.ஆ.), திருத்தலங்கள் வரலாறு, டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1990, முதற் பதிப்பு.

72. பாலசுப்பிரமணியன்.கு.வெ., ஆய்வியல் நெறிகள், உமா நூல் வெளியீட்டகம், தஞ்சாவூர், 2001, முதற் பதிப்பு.

73. பாலசுப்பிரமணியன். ம. (ப.ஆ.), திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1941, முதற் பதிப்பு.

74. பாலன்.பொ., தேவாரத் திருத்தலங்கள், ஸ்ரீவராகி பதிப்பகம், சென்னை, 2002, முதற் பதிப்பு.

75. பெருமாள்.ஏ.என்., தமிழரிசை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984, முதற் பதிப்பு.

76. பொன்னுசாமிப்பிள்ளை, எம்.கே.எம்., பூர்வீக சங்கீத உண்மை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1997, முதற் பதிப்பு.

77. மாணிக்கம்.அ.(உ.ஆ.), வில்லிபாரதம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2002, முதற் பதிப்பு.

78. மாணிக்கம்.அ. (உ.ஆ.), புறநானூறு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999, முதற் பதிப்பு.

79. மாணிக்கவாசகர், திருவாசகம், காசித் திருமடம், திருப்பனந்தாள், 2003, பன்னிரண்டாம் பதிப்பு.

80. முத்துக்குமாரசாமித் தம்பிரான் (ப.ஆ.), திருஞானசம்பந்தர் தேவாரம், தருமை ஆதீனம், தருமபுரம், 1997, இரண்டாம் பதிப்பு.

81. வரதராசன்.மு., தமிழிலக்கிய வரலாறு, சாகித்ய அக்காதமி, புது தில்லி, 1989, ஏழாம் பதிப்பு.

82. வள்ளலார், திருவருட்பா, திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையம், வடலூர், 1997, முதற் பதிப்பு.

83. விபுலானந்த அடிகள், யாழ் நூல், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 1947, முதற் பதிப்பு.

84. வெள்ளைவாரணன். க., பன்னிரு திருமுறை வரலாறு - தொகுதி 1, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், மறுபதிப்பு 1994.

85. வேங்கடசாமி நாட்டார்.ந.மு. (உ.ஆ.), சிலப்பதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1956, முதற் பதிப்பு.

86. வைத்தியநாதன் (உ.ஆ.), சிவஞான சித்தியார் சுபக்கம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1999, முதற் பதிப்பு.

87. வைத்தியநாதன் (உ.ஆ.), சிவஞான சித்தியார் பரபக்கம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1999, முதற் பதிப்பு.

88. வைத்தியநாதன் (உ.ஆ.), சித்தாந்த அட்டகம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1998, முதற் பதிப்பு.

89. வைத்தியநாதன் (உ.ஆ.), சைவசித்தாந்தத் தடைகளும் விடைகளும், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1998, முதற் பதிப்பு.

91. வைத்தியநாதன் (உ.ஆ.), திருமுறைகளில் சைவ சித்தாந்தம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1999, முதற் பதிப்பு.

92. வைத்தியநாதன் (உ.ஆ.), சைவ சமய வரலாறும் பன்னிரு திருமுறை வரலாறும், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1998, முதற் பதிப்பு.

93. வைத்தியலிங்கன்.செ., தமிழகக் கவின்கலை மாட்சி, செல்லமுத்தகம், பரங்கிப்பேட்டை, 1980, முதற் பதிப்பு.

94. ஜயசெந்தில்நாதன்.பு.மா., திருமுறைத் தலங்கள், தமிழ் நிலையம், சென்னை, 1997, முதற் பதிப்பு.

95. ஜெயராமன்.ந.வீ., திருமுறைச் செல்வம், மலர்விழி வெளியீடு, சிதம்பரம், 1966, முதற் பதிப்பு.

96. ஸ்ரீசந்திரன்.ஜெ., ஐம்பெருங்காப்பியங்கள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1998, இரண்டாம் பதிப்பு.

97. ஸ்ரீநிவாச பிள்ளை.கே.எஸ்., தமிழ் வரலாறு, வெற்றிவேல் பவர் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர், 1949, முதற் பதிப்பு.

98. ....., கோயிற்கலை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, 2000, மறுபதிப்பு.

அகராதிகள்

99. கதிரைவேற் பிள்ளை, தமிழ்ச்சொல்லகராதி, தமிழ்ச்சங்க முத்திராசாலை , மதுரை, 1923, முதற் பதிப்பு.

100. சண்முகம்பிள்ளை. மு., தமிழ்-தமிழ் அகரமுதலி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1985, முதற் பதிப்பு.

101. பதிப்பாசிரியர் குழு, தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982, மறுபதிப்பு.

நிகண்டுகள்

102. சேந்தன் திவாகரம், கழக வெளியீடு, சென்னை, 1958, முதற் பதிப்பு.

103. பிங்கல நிகண்டு, கழக வெளியீடு, சென்னை, 1978, முதற் பதிப்பு.

கலைக்களஞ்சியங்கள்

104. சிங்காரவேலு முதலியார்.ஆ., அபிதான சிந்தாமணி, ஏசியன் எஜிகேஷனல் சர்வீசஸ், புது தில்லி, 1983, 3ம் பதிப்பு.

105. சுந்தரம். வீ.ப.கா., தமிழிசைக் கலைக்களஞ்சியம் முதல் தொகுதி, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, 1992, முதற் பதிப்பு.

106. திருச்சிற்றம்பலம்.சிவ., சிவபெருமான் - கலைக்களஞ்சியம், பாலாஜி பதிப்பகம், கும்பகோணம், 2000, முதற் பதிப்பு.

ஆய்வு மாலைகள்

107. பரமசிவம்.த.கோ., முருகேசன்.ந., நல்லசிவம்.கோ.ப. (ப.ஆ.), திருஞானசம்பந்தர் ஆய்வு மாலை, திருஞானசம்பந்தர் இலக்கிய ஆய்வு மாநாடு, குமாரசாமித் திருமடம், வாரணாசி, 2002, முதற் பதிப்பு.

108. பரமசிவம்.த.கோ., முருகேசன்.ந., நல்லசிவம்.கோ.ப. (ப.ஆ.), திருநாவுக்கரசர் ஆய்வு மாலை, திருநாவுக்கரசர் இலக்கிய ஆய்வு மாநாடு, குமாரசாமித் திருமடம், வாரணாசி, 2003, முதற் பதிப்பு.

109. பரமசிவம்.த.கோ., நல்லநாயகி.ப., நல்லசிவம்.கோ.ப. (ப.ஆ.), சுந்தரர் ஆய்வு மாலை, சுந்தரர் இலக்கிய ஆய்வு மாநாடு, குமாரசாமித் திருமடம், வாரணாசி, 2005, முதற் பதிப்பு.

110. பரமசிவம்.த.கோ., நல்லநாயகி.ப., நல்லசிவம்.கோ.ப. (ப.ஆ.), தமிழ் உணர்த்தும் பக்தி ஆய்வு மாலை, தமிழ் உணர்த்து பக்தி ஆய்வு மாநாடு, சுவாமி தயானந்த சரஸ்வதி ஆசிரமம், ரிஷிகேசம், 2005முதற் பதிப்பு.

ஆய்வேடுகள்

111. பரிமணம்.அ.மா., அப்பர் தேவார ஆய்வு, முனைவர் பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,. மதுரை, 1974.

112. வசந்தமாலை.இரா., திருமுறைகளும் இசையியலும் முனைவர் பட்ட ஆய்வேடு, புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை, 2001.

ஆங்கில நூல்கள்

113. Abragam Pandithar.M., *Karunamirta Sagaram*, A.E.S., New Delhi, 1984, First Print.

114. Dorai Rangaswamy.M.A., *The Religion and Philosophy of Tevaram*, University of Madras, Madras, 1958, First Print.

115. Hultzsh.E. (ed), *South Indian Inscriptions*, vol.iv, Naurang, New Delhi, Reprint 1987.

116. Narayana Ayyar.C.V., *Origin and Early History of Saivism in South India*, University of Madras, Madras, 1974, First Print.

117. Swaminathan.S., *South Indian Devotional Legends on Lord Siva*, Sri saiva Mahapeetam, Vijayawada, ஆ.இ.

118. ...., CollectedLectures on Saiva Siddhanta, Annamalai University, Annamalai Nagar, 1978, First Print.

பின்னிணைப்பு - 1

தேவார மூவர் பாடல் பெற்ற தலங்கள்

சோழ நாட்டுத் தலங்கள் (191)

காவிரிக்கு வடகரையில் உள்ள தலங்கள் (63)

1. கோயில்
2. திருவேட்களம்
3. திருநெல்வாயில் (சிவபுரி)
4. திருக்கழிப்பாலை
5. திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாள்புரம்)
6. திருமயேந்திரபள்ளி
7. தென்திருமுல்லைவாயில்
8. திருக்கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை)
9. திருச்சாய்க்காடு (சாயாவனம்)
10. திருப்பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம்)
11. திருவெண்காடு
12. கீழைத் திருக்காட்டுப்பள்ளி
13. திருக்குருகாவூர்
14. சீகாழி
15. திருக்கோலக்கா
16. திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்)
17. திருக்கண்ணார்கோயில் (குறுமணக்குடி)
18. திருக்கடைமுடி (கீழயூர்)
19. திருநின்றியூர்
20. திருப்புன்கூர்
21. திருநீடூர்
22. அன்னியூர்.
23. வேள்விக்குடி
24. எதிர்கொள்பாடி (மேலைத்திருமணஞ்சேரி)

25. திருமணஞ்சேரி (கீழைத்திருமணஞ்சேரி)
26. திருக்குறுக்கை
27. கருப்பறியலூர் (மேலைக்காழிதலைஞாயிறு)
28. குரக்குக்கா
29. திருவாழ்கொளிபுத்தூர்
30. மண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு)
31. ஓமாம்புலியூர்
32. காணட்டு முள்ளூர்
33. திருநாரையூர்
34. கடம்பூர் (மேலைக்கடம்பூர்)
35. பந்தணைநல்லூர்
36. கஞ்சனூர்
37. திருக்கோடிக்கா
38. திருமங்கலக்குடி
39. திருப்பனந்தாள்
40. திருஆப்பாடி
41. திருச்சேய்ஞ்ஞலூர்
42. திருந்துதேவன்குடி
43. திருவியலூர்
44. கொட்டையூர்
45. இன்னம்பூர்
46. திருப்புறம்பயம்
47. திருவிசயமங்கை
48. திருவைகாவூர்
49. வடகுரங்காடுதுறை
50. திருப்பழனம்
51. திருவையாறு
52. திருநெய்த்தானம்
53. பெரும்புலியூர்
54. திருமழபாடி
55. திருப்பழுவூர்

56. திருக்கானூர்
57. அன்பிலாலந்துறை (அன்பில்)
58. திருமாந்துறை
59. திருப்பாற்றுறை
60. திருவானைக்கா (ஜம்புகேஸ்வரம்)
61. திருப்பைஞ்ஞீலி
62. திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி)
63. திருஈங்கோய்மலை

காவிக்குத் தென்கரையில் உள்ள தலங்கள் (128)

1. திருவாட்போக்கி (ரத்தினகிரி)
2. கடம்பந்துறை (குளித்தலை - கடம்பர்கோயில்)
3. திருப்பராய்த்துறை
4. கற்குடி (உய்யக்கொண்டான் மலை)
5. மூக்கீச்சுரம் (உறையூர்)
6. திருச்சிராப்பள்ளி
7. எறும்பியூர்
8. நெடுங்களம்
9. மேலைத்திருக்காட்டுப்பள்ளி
10. திருவாலம்பொழில்
11. திருப்பூந்துருத்தி
12. கண்டியூர்
13. திருச்சோற்றுத்துறை
14. திருவேதிகுடி
15. தென்குடித்திட்டை (திட்டை)
16. திருப்புள்ளமங்கை
17. சக்கராப்பள்ளி (அய்யம்பேட்டை)
18. திருக்கருகாவூர் (திருக்களாவூர்)
19. திருப்பாலைத்துறை
20. திருநல்லூர்
21. ஆவூர்

22. திருச்சத்தி முற்றம்
23. பட்டீச்சுரம்
24. பழையாறை வடதளி
25. திருவலஞ்சுழி
26. குடமூக்கு (கும்பகோணம்)
27. குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகேஸ்வரன் கோயில்-கும்பகோணம்)
28. குடந்தைக்காரோணம் (காசிவிஸ்வநாதர் கோயில் - கும்பகோணம்)
29. திருநாகேச்சுரம்
30. திருவிடைமருதூர்
31. தென்குரங்காடுதுறை (ஆடுதுறை)
32. திருநீலக்குடி (தென்னலக்குடி)
33. வைகன்மாடக்கோயில்
34. திருநல்லம் (கோனேரிராஜபுரம்)
35. கோழம்பம்
36. திருவாவடுதுறை
37. திருத்துருத்தி (குற்றாலம்)
38. திருவழுந்தூர்
39. திருமயிலாடுதுறை (மாயூரம்)
40. திருவிளநகர்
41. திருப்பறியலூர் (பரசலூர்)
42. திருச்செம்பொன்பள்ளி
43. திருநனிபள்ளி (புஞ்சை)
44. திருவலம்புரம்
45. தலைச்சங்காடு
46. ஆக்கூர்
47. திருக்கடவூர்
48. திருக்கடவூர் மயானம்
49. திருவேட்டகுடி
50. திருத்தெளிச்சேரி

51. தருமபுரம்
52. திருநள்ளாறு
53. கோட்டாறு
54. அம்பர்பெருந்திருக்கோயில்
55. அம்பர்மாகாளம்
56. திருமீயச்சூர்
57. திருமீயச்சூர் இளங்கோயில்
58. திலதைப்பதி (மதிமுத்தம்)
59. திருப்பாம்புரம்
60. சிறுகுடி
61. திருவீழிமிழலை
62. திருவன்னியூர்
63. கருவிலி
64. பேணுபெருந்துறை (திருப்பந்துறை)
65. நறையூர்ச் சித்தீச்சுரம்
66. அரிசிற்கரைப்புத்தூர்
67. சிவபுரம்
68. கலயநல்லூர் (சாக்கோட்டை)
69. கருக்குடி (மருதாநல்லூர்)
70. திருவாஞ்சியம்
71. நன்னிலம்
72. திருக்கொண்டீச்சுரம்
73. திருப்பனையூர்
74. திருவிற்குடி
75. திருப்புகலூர்
76. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்
77. இராமனதீச்சுரம்
78. திருப்பயற்றூர்
79. திருச்செங்காட்டாங்குடி
80. திருமருகல்
81. திருச்சாத்தமங்கை

82. நாகைக்காரோணம் (நாகப்பட்டினம்)
83. சிக்கல்
84. கீழ்வேளூர்
85. தேவூர்
86. பள்ளியின் முக்கூடல் (அரியான்பள்ளி)
87. திருவாரூர்
88. திருவாரூர் அரநெறி
89. திருவாரூர்ப் பரவையுண்மண்டளி
90. திருவிளமர்
91. கரவீரம்
92. பெருவேளூர்
93. தலையாலங்காடு
94. குடவாயில்
95. திருச்சேறை
96. நாலூர்மயானம்
97. கடுவாய்க்கரைப்புத்தூர்
98. இரும்பூளை
99. அரதைப்பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்)
100. அவளிவநல்லூர்
101. பரிதிநியமம்
102. வெண்ணி
103. பூவனூர்
104. பாதாளீச்சுரம் (பாமணி)
105. திருக்களர்
106. சிற்றேமம்
107. திருவுசாத்தானம்
108. இடும்பாவனம்
109. கடிக்குளம்
110. தண்டலைநீணெறி
111. கோட்டூர்
112. திருவெண்டுறை

113. கொள்ளம்பூதூர்
114. பேரெயில்
115. திருக்கொள்ளிக்காடு
116. திருத்தங்கூர்
117. திருநெல்லிக்கா
118. திருநாட்டியத்தான்குடி
119. திருக்காறாயில்
120. கன்றாப்பூர்
121. வலிவலம்
122. கைச்சினம்
123. திருக்கோளிலி
124. திருவாய்மூர்
125. திருமறைக்காடு (வேதாரண்யம்)
126. அகத்தியான்பள்ளி
127. திருக்கோடி (குழகர்கோயில்)
128. திருவிடைவாய்

ஈழ நாட்டுத் தலங்கள் (2)

1. திருக்கோணமலை
2. திருக்கேதீச்சுரம்

பாண்டி நாட்டுத் தலங்கள் (14)

1. திருஆலவாய் (மதுரை)
2. திருஆப்பனூர்
3. திருப்பரங்குன்றம்
4. திருவேடகம்
5. கொடுங்குன்றம்
6. திருப்புத்தூர்
7. திருப்புனவாயில்
8. இராமேஸ்வரம்
9. திருஆடானை

10. திருக்கானப்பேர் (காளையார் கோயில்)
11. திருப்பூவணம்
12. திருச்சுழியல்
13. திருக்குற்றாலம்
14. திருநெல்வேலி

சேரநாட்டுத் தலம் (1)

1. திரு அஞ்சைக் களம்

கொங்கு நாட்டுத் தலங்கள் (7)

1. அவிநாசி
2. திருமுருகன் பூண்டி
3. திருநணா (பவானி)
4. திருக்கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு)
5. வெஞ்சமாக்கூடல்
6. திருப்பாண்டிக் கொடுமுடி
7. கருவூர்

நடு நாட்டுத் தலங்கள் (22)

1. திருநெல்வாயில் அரத்துறை
2. பெண்ணாகடம்
3. கூடலையாற்றூர்
4. எருக்கத்தம்புலியூர்
5. திருத்தினைநகர்
6. திருச்சோபுரம்
7. திருவதிகை
8 திருநாவலூர்
9. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
10. திருவெண்ணெய்நல்லூர்
11. திருக்கோவலூர்
12. அறையணி நல்லூர்

13. இடையாறு
14. துறையூர்
15. வடுகூர் (ஆண்டார்கோயில்)
16. திருமாணிகுழி
17. திருப்பாதிரிப்புலியூர்
18. திருமுண்டீச்சுரம்
19. புறவார் பனங்காட்டூர் (பனையபுரம்)
20. திருவாமாத்தூர்
21. திருவண்ணாமலை
22. திருக்கிளியன்னவூர்

தொண்டை நாட்டுத் தலங்கள் (32)

1. திருக்கச்சியேகம்பம் (காஞ்சீபுரம்)
2. திருக்கச்சிமேற்றளி (காஞ்சீபுரம்)
3. ஓணகாந்தன்தளி (காஞ்சீபுரம்)
4. திருக்கச்சி அநேகதங்காபதம்
5. திருக்கச்சி நெறிக்காரைக்காடு
6. குரங்கணில் முட்டம்
7. மாகறல்
8. திருவோத்தூர்
9. திருப்பனங்காட்டூர்
10. திருவல்லம்
11. திருமாற்பேறு
12. திருவூறல் (தக்கோலம்)
13. இலம்பையங்கோட்டூர்
14. திருவிற்கோலம்
15. திருவாலங்காடு
16. திருப்பாசூர்
17. திருவெண்பாக்கம்
18. திருக்கள்ளில்
19. திருக்காளத்தி
20. திருஒற்றியூர்

21. திருவலிதாயம் (பாடி)
22. வடதிருமுல்லைவாயில்
23. திருவேற்காடு
24. மயிலாப்பூர்
25. திருவான்மியூர்
26. திருக்கச்சூர்
27. திருவிடைச்சுரம்
28. திருக்கழுக்குன்றம்
29. அச்சிறுபாக்கம்
30. திருவக்கரை
31. அரசிலி
32. இரும்பைமகாளம்

துளு நாட்டுத் தலம் (1)

1. கோகர்ணம்

வட நாட்டுத் தலங்கள் (6)

1. திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம், மல்லிகார்ச்சுனபுரம்)
2. இந்திரநீலப் பருப்பதம்
3. அனேக தங்காபதம்
4. திருக்கேதாரம்
5. திருக்கயிலை
6. திருநொடித்தான்மலை

பின்னிணைப்பு - 2.

தேவார வைப்புத் தலங்கள்

சோழ நாடு

1.	அக்கீச்சுரம்	6:71:8
2.	அரிச்சந்திரம்	6:51:10
3.	அளப்பூர்	6:51:3; 6:70:4; 6:71:4; 7:47:4.
4.	அசோகந்தி	6:70:9; 6:7:10
5.	ஆழியூர்	6:70:7; 7:12:7
6.	ஆறைமேற்றளி	7:35:1
7.	பழையாறை	2:39:5
8.	ஆடகேச்சுரம்	6:71:8
9.	இடைக்குளம்	6:71:10
10.	இடவை	6:70:3
11.	இடைத்தானம்	6:7:8
12.	இடைப்பள்ளி	2:39:4
13.	இராப்பட்டீசுரம்	6:25:10
14.	இளங்கோயில்	6:71:5
15.	இளமர்	6:70:4
16.	இறைக்காடு	7:47:3
17.	இரும்புதல்	6:51:6
18.	இறையான் சேரி	6:70:4
19.	ஈசனூர்	7:31:8
20.	ஊற்றத்தூர்	6:70:10; 6:71:4
21.	ஏர்	6:51:6; 6:70:3
22.	கஞ்சாறு	6:70:8
23.	கடம்பை இளங்கோயில்	6:70:5
24.	கடங்களூர்	7:31:3

25.	கருந்திட்டைக்குடி	6:71:3
26.	கருப்பூர்	7:98:3
27.	களந்தை	
28.	காட்டூர்	2:39; 7:47:1
29.	கள்ளக்குடி	7:12:7
30.	கீழையில்	7:12:6
31.	குண்டையூர்	7:20:1
32.	குந்தாய்பு	2:39:10
33.	குன்றியூர்	2:39:1; 6:70:5
34.	குமரிக் கொங்கு	6:70:9
35.	கூந்தலூர்	6:70:9
36.	கொண்டல்	6:51:9;7:12:2
37.	கோவிந்தபுத்தூர்	5:71:3
38.	சடைமுடி	6:70:3
39.	சிவப்பள்ளி	6:71:1
40.	சூலமங்கை	6:70:10
41.	செம்பங்குடி	6:70:3
42.	செந்துறை	
43.	ஆலந்துறை	
44.	சேலூர்	
45.	சோமேச்சுரம்	6:70:10
46.	தக்களூர்	6:21:6; 6:10:3;7:12:1
47.	தஞ்சை	6:21; 7:12:9
48.	தஞ்சைத் தளிக்குளம்	6:51:8
49.	தண்டங்குறை	7:12:2
50.	தண்டந்தோட்டம்	7:12:2
51.	தவத்துறை	6:71:11
52.	தளிச்சாத்தங்குடி	6:25:10
53.	திங்களூர்	6:25:3;7:31:6
54.	திண்டீச்சுரம்	6:7:8; 6:70:9
55.	திருவாதிரையான் பட்டினம்	7:31:6
56.	துடையூர்	6:71:4

57.	தேனூர்	*1:61:9; 6:41:9*
58.	நல்லக்குடி	*6:71:3*
59.	நாகளேச்சுரம்	*6:71:8*
60.	நாங்கூர்	*7:1:24; 7:47:6*
61.	நியமம்	*6:13:4*
62.	நெய்தல் வாயில்	*6:71:7*
63.	நெற்குன்றம்	*2:39:9*
64.	பஞ்சாக்கை	*6:70:8*
65.	பாற்குளம்	*6:13:1*
66.	பிடவூர்	*6:7:6; 6:70:2*
67.	பிரம்பில்	*6:70:6*
68.	புலிவலம்	*6:51:11; 6:70:11*
69.	பேராவூர்	*6:70:2; 6:71:4*
70.	மணற்கால்	*6:25:10*
71.	மந்தாரம்	*6:70:6*
72.	மாந்துறை	
73.	மூவலூர்	*5:55:8*
74.	முழையூர்	*6:70:1; 6:41:9*
75.	வரிஞ்சை	*7:39:7*
76.	வழுவூர்	*6:70:1; 3:71:2*
77.	நல்லூற்றூர்	*6:71:4*
78.	ஏமப்பேறூர்	*6:70:3*
79.	விளத்தொட்டி	*6:70:6*

பாண்டிய நாடு

1.	அக்கீச்சுரம்	*6:71:8*
2.	அண்ணல் வாயில் *(சித்தண்ணவாசல்)*	*6:71:7*
3.	அத்தீச்சுவரம் *(சிவச்சைலம்)*	*6:71:8*
4.	அகத்தீச்சுரம்	*6:71:8*
5	அயனீச்சுரம்	*6:71:6*

6.	இளையான்குடி	7:39:1
7.	கந்தமதான மலை	6:71:8
8.	செந்தில்	6:23:4
9.	தஞ்சாக்கை (தஞ்சாக்கூர்)	7:12:9
10.	தென்களக்குடி	6:71:3
11.	தேவீச்சுரம்	6:7:5
12.	பொதியின்மலை (பாபநாசம்)	6:70:2; 6:71:11
13.	பெருந்துறை (பாபநாசம்)	6:7:6
14.	வாதவூர்	2:39:7
15.	மிழலை	7:12:5
16.	வெற்றியூர்	2:39:6

கொங்கு நாடு

1.	ஆன்பட்டி பேரூர்	6:7:10
2.	ஏழூர்	6:70:5
3.	தோழூர்	6:70:5
4.	குரக்குத்தளி	7:42:2
5.	கொல்லி அறப்பள்ளி	6:70:1
6.	தகடூர்	7:12:1
7.	பரப்பள்ளி	6:71:1
8.	பூந்துறை	3:92:8
9.	மாட்டூர்	2:39:7
10.	கொங்குகுமரித்துறை	

சேர நாடு

1.	திருச்செங்குன்றூர்	6:70:5
2.	கொடுங்கோளூர்	6:70:5
3.	திருக்குணவாயில்	6:71:7
4.	ஏறனூர்	7:31:9

தொண்டை நாடு

1.	உருத்திரகோடி	6:70:8
2.	எழுமூர்	6:70:6
3.	கச்சிப்பலதளி	6:70:4
4.	கரபுரம்	6:71:9
5.	கச்சிமயானம்	6:97:10
6.	கழுநீர்குன்றம்	6:13:4
7.	காம்பீலி	6:70:2
8.	காரிக்கரை	7:31:3
9.	குக்குடேச்சுரம் -	6:71:8
10.	திருத்தெள்ளாறு	6:71:10
11.	திண்டீச்சுரம்	6:7:8
12.	புரிசை	7:12:6
13.	வளைக்குளம்	6:50:8
14.	திருவேட்டி	6:7:7

நடு நாடு

1.	கண்ணை	6:70:6
2.	சித்தவடம்	4:2:3
3.	மாறன்பாடி	2:39:3

வடநாடு

1.	குருக்கேத்திரம்	7:78:6
2.	திரிபுராந்தகம்	6:7:5
3.	நந்திகேச்சுரம்	6:71:6
4.	மாகாளம்	6:51:7; 7:47:5
5.	வாரணாசி (காசி)	2:39:7; 6:70:6
6.	விவீச்சுரம்	6:70:8

சொல்லடைவு

(எண்கள் : பக்க எண்)

அக்காரப்பட்டியல் 45
அகவழிபாடு 86
அங்கப்பிரதட்சணம் 81
அட்டபத்திரம் 59
அடியார் தொண்டு 86
அதிட்டானம் 43
அர்ச்சனை 89
அறிவுரைகள் 192
அறிவுறுத்தல் 130
அஃறிணை உயிர்கள் 102
அன்பு வழிபாடு 132
அஷ்டாங்க விமானம் 43
ஆகமம் 34
ஆடல்கலை 162
ஆடிப்பாடி வழிபடல் 74
ஆலக்கோயில் 33
ஆலமர் செல்வன் 33
ஆறு ஆதாரங்கள் 41
ஆன்மார்த்தம் 52
ஆன்மார்த்த மூர்த்தம் 12
ஆனைந்து 68
இசைச் கருவிகள் 153
இசைக்கலை 146
இண்டை 63
இராகங்கள் 13
இராசராசேச்சுரம் 2
இளங்கோயில் 32
இன்றுள்ள பாடல்கள் 7
இஷ்டக நியாசம் 42
ஐந்தமுதம் 71
உத்தமசோழ சதுர்வேதி மங்கலம் 30
உருவ வழிபாடு 129
உற்சவம் 39
கண்ணி 63
கணங்கள் 30
கர்ப்ப விந்யாசம் 42
கரக்கோயில் 29
கலைப்பாணி 25
கற்றளிகள் 27
கஜ பிருஷ்டம் 31
கிரீவம் 43
கிருகம் 24
கீதம் 151
குடபோகம் 39
குடவரைக்கோயில்கள் 23

கும்ப பஞ்சரம்	44	சோடச உபசாரம்	165
கூட்டு வழிபாடு	87	சோமாஸ்கந்தர்	26
கொகுடிக் கோயில்	31	ஞாழற் கோயில்	31
கொடிப்பூ	59	தயாமூல தன்மம்	136
கொடிமரம்	42	தலமரம்	34
கோசங்கள்	41	தலயாத்திரை	203
கோசாலை	45	தனிமனிதத்துயர் நீக்குதல்	182
கோட்டம்	22	தார்	63
கோட்டுப்பூ	59	தாளம்	152
கோபுரம்	44	திக்பரிச்சேதம்	42
கோயில்	20	திரிகள்	73
கோயில் புற உறுப்புகள்	45	திராவிடம்	40
கோவில்	21	திருக்கோயில் தத்துவம்	41
கோஷ்ட பஞ்சரம்	44	திருப்பதிகம்	2
சகஸ்ரநாமம்	89	திருமஞ்சனம்	66
சங்கீத ரத்னாகரம்	11	திருமுறை	1
சந்தம்	151	திருமுறைகண்ட சோழன்	2
சமயப் பூசல்கள்	121	திருமுறைகண்ட புராணம்	6
சாதி ஒழிப்பு	194	திருமுறைக் கவிஞர்கள்	4
சாலை	45	திருவாசி	26
சிகரம்	43	திருவிசைப்பா	3
சுக முனிவர்	104	திருவிழாக்கள்	90
சுசும்னா நாடி	42	தீபதூப வழிபாடு	72
சுயமரியாதை	191	தீப நூல்கள்	73
சுற்றாலைகள்	38	துவார பாலகர்	25
செப்பேட்டுப்பணி	12	தூங்கானைமாடக்கோயில்	40
சைத்தியகாரி	25	தேவாரம்	10

தேவார காலம் 120
தேவாரம் சுட்டும் மலர்கள் 58
தேவார தேவர் 12
தேவாரப் பண்கள் 12
தேவாரப் பதிப்புகள் 14
தேவார வர்த்தநீ 11
தொண்டுநெறி 51
தோத்திரம் 1
தோன்றியம் 34
நடமாடும் கோயில் 56
நம்பிக்கையூட்டல் 130
நமிநந்தி அடிகள் 74
நவக்கிரகங்கள் 101
நாகரம் 40
நால்வகை நெறிகள் 51
நால்வகை நெறிகளின்சாரம் 54
நால்வகை நெறிகளின் விரிவு 53
நாவிவாய்ச் சாந்து 70
நிர்மால்யம் 60
நிலப்பூ 59
நிலையாமை 205
நீரப்பூ 59
நீராட்டுதல் 66
பக்தி இயக்கம் 122
பகுப்பு முறை 3
பஞ்சகவ்யம் 63
பஞ்சம் நீக்குதல் 181
பஞ்சரம் 44
பஞ்சாட்சரம் 83
பண்ணடைவு 2
பணிசெய்தல் 179
பதஞ்சலி 104
பதவிந்யாசம் 42
பதினாறுவகை தீபங்கள் 72
பரமாணு 43
பலிகர்மவிதானம் 42
பழையாறை வடதளி 185
பன்னிரு திருமுறைகள் 4
பன்னிரு பூமிகள் 42
பற்றாசு 66
பாகசாலை 45
பாடல் ஓவியமாதல் 167
பாடல் சிற்பமாதல் 166
பாடல் தொகை 5
பாலாலயம் 32
பிட்டி 43
பிணையல் 103
பிரபந்தங்கள் 8
பிரஸ்தரம் 43
பூக்களின் நிலைகள் 60
பூவை நிலை 36
பெருங்கோயில் 28
பெருவுடையார் 2
பொல்லாப்பிள்ளையார் 2

மண்டளிகள் 39
மணிக்கோயில் 32
மலர் வழிபாடு 57
மனித நேயம் 135
மாகேசுவர வடிவங்கள் 39
மாசுக்கட்டுப்பாடு 188
மாடக்குழிகள் 27
மாடக்கோயில் 31
மானாங்குலம் 43
மீட்டுருவாக்கம் 126
முக்தி நிலைகள் 54
முழுமையான வழிபாடு 139
யாத்திரை 199
யாத்திரையின் பயன் 206
யாழ்ப்பாணர் 3
ரதங்கள் 24
லிங்கோத்பவர் 44
வழிபடாதோர் இழிவு 106
வழிபடும் காலம் 89
வழிபாட்டின் பயன் 105
வழிபாட்டு முறைகள் 79
வழிபாடு 1 11
வழிபாடு 2 52
விடந்தீர்த்தல் 182
விமானம் 39
வியாக்கரபாதர் 104
விளக்கு வகைகள் 73
வெறிநீர 70
வேசரம் 40
ஸ்தூபி 43
ஸ்நானம் 60
ஷடாங்க விமானம் 43



நூலாசிரியர் : **முனைவர் கோ.ப. நல்லசிவம்**

பெற்றோர் : அமரர் பேராசிரியர்
முனைவர் த.கோ. பரமசிவனார்
திருமதி ப. நல்லநாயகி அம்மையார்

பிறந்த நாள் : 08.06.1979

பிறந்த ஊர் : திருக்கோவிலூர்

பெற்ற விருதுகள் : தேவார இசைமணி, சித்தாந்தரத்தினம், இளந்தமிழறிஞர்

கல்வித் தகுதிகள் : தமிழ் இளங்கலை
தமிழ் முதுகலை
தத்துவம் முதுகலை
வணிகவியல் நிர்வாகம் (MBA) முதுநிலை
இளம் முனைவர் (M.Phil.,) 'திருநாவுக்கரசர் தேவாரத்தில் சரியை நெறி'
முனைவர் (Ph.D.) – 'தேவாரம் உணர்த்தும் திருக்கோயில் வழிபாடு'
சைவ சித்தாந்தம் – 'சித்தாந்தரத்தினம்'
யு.ஜி.சி. நெட் தேர்ச்சி
கோயிற்கலை (PGDTA)
மனிதவள மேம்பாடு (PGDHRM)
சோதிடவியல் (D.A)
பிரவீண் (இந்தி மொழி)

சான்றிதழ் படிப்புகள் : மராத்தி மொழி, கல்வெட்டியல் பயிற்சி, சைவ சமயப் பயிற்சி, சுவடியியல், சுவடிப் பதிப்பியல், சுற்றுலாவியல், ஹோமியோபதி, மூலிகை மருத்துவம், காந்தியச் சிந்தனைகள், விவேகானந்தர் சிந்தனைகள்.

ஆய்வுக் கட்டுரைகள் : 68 (அனைத்துலக, தேசிய அளவில்)

பதிப்பாசிரியர் :

பெரியபுராண ஆய்வு மாலை	– 2001 காசித்திருமடம்
திருஞானசம்பந்தர் ஆய்வு மாலை	– 2002 காசித்திருமடம்
திருநாவுக்கரசர் ஆய்வு மாலை	– 2003 காசித்திருமடம்
சிவப்பிரகாசர் ஆய்வு மாலை	– 2003 பேரூராதினம்
சுந்தரர் ஆய்வு மாலை	– 2005 காசித்திருமடம்
தமிழ் உணர்த்தும் பக்தி ஆய்வு மாலை	– 2005 ஸ்ரீ தயானந்த ஆசிரமம் & காசித்திருமடம்
மாணிக்கவாசகர் ஆய்வு மாலை	– 2006 காசித்திருமடம்
ஒன்பதாம் திருமுறை ஆய்வு மாலை	– 2007 காசித்திருமடம்
திருமந்திர ஆய்வு மாலை	– 2007 காசித்திருமடம்
இந்திய மெய்ஞ்ஞானம், பண்பாட்டு ஆய்வு மாலை	– 2008 ஸ்ரீ தயானந்த ஆசிரமம் & காசித்திருமடம்